
முத்துலட்சுமி ராகவன்
எங்கிருந்தோ ஆசைகள்...
பாகம் - 1

முத்துலட்சுமி ராகவன்
எழுதிய

# எங்கிருந்தோ ஆசைகள்...

பாகம் - 1

**லட்சுமி பாலாஜி பதிப்பகம்**

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி. நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் : bchandar24@yahoo.com

website : www.muthulakshmiraghavan.com

**முத்துலட்சுமி ராகவன் எழுதிய**

*எங்கிருந்தோ ஆசைகள்... பாகம் - 1*

உரிமை : **ஆசிரியருக்கு**

| | | |
|---|---|---|
| பொருள் | : | நாவல் |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2013 |
| வெளியீடு | : | **லட்சுமி பாலாஜி பதிப்பகம்**<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி. நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |
| நூலின் அளவு | : | 1x8 கிரவுன் |
| தாள் | : | 11.6 kg புக் பிரிண்ட் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| மொத்தப்பக்கங்கள் | : | 400 |

**விலை : ₹ 200/-**

லேசர் டைப் செட் : விஜி கிராஃபிக்ஸ், மதுரை.

அச்சிட்டோர் : **பாரதி அச்சகம்,** சென்னை–**6**

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது.... இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்...

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ... திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்...

இப்படிக்கு

முத்துலட்சுமி ராகவன்

# ஆசிரியர் கடிதம்...

## கடவுளுக்கு ஒரு கடிதம்...

இது எனது நூறாவது நாவல்.. ஆகஸ்ட் – 2009 ல் முதன்முதலாக எனது தொடுவானமும்.. நிலாவெளியிலும் வெளியாகின.. இந்த ஆகஸ்ட் – 2013 ல் என் நூறாவது நாவலை நான் எழுதிக் கொண்டிருக்கிறேன்.. நான் கடந்து வந்த இந்த நான்கு வருடங்களைத் திரும்பிப் பார்த்ததில்லை.. நிற்காமல் கண்ணைக் கட்டிக் கொண்டு சாலையில் ஒரே திசையைப் பார்த்துக் கொண்டு ஓடும் குதிரையாக ஓடிக் கொண்டிருக்கிறேன்...

எதற்காக இந்த வேகம்..? எதைத் தொடுவதற்காக இந்த ஓட்டம்...?

எனக்குத்தான் தெரியும்.. எனது எழுத்தும் நானும் தனிமையில் இருந்தோம்.. காகிதத்தில் நான் எழுதும் வரிகளுக்கு முகவரியில்லாத போது எனக்கும் எனது அடையாளம் மறைந்து.. புதைந்து போயிருந்தது.. பத்து வயதில் பேனா பிடித்தேன்.. எனக்கான அத்தனையும் என் எழுத்தாக மாறிப் போனேன்.. இருந்தும் நான் பயணிக்க எனக்கொரு களம் கிடைக்கவில்லை...

நான் காத்திருந்த காலங்கள்... நாள்களல்ல... பல வருடங்கள்...

ஒரு சமயம்.. என் டைரியில் நான் எழுதினேன்...

‘சரித்திரத்தில் இடம் பெறாமல்

மரித்திட எண்ணமில்லை...’ யென்று..

அப்போது நான் அடையாளமில்லாமல் எனது வாழ்க்கையில் தொலைந்து கொண்டிருந்தேன்.. மற்றவர்களிடமிருந்து மாறுபடாமல் அவர்களுடன் கலந்து விட போராடிக் கொண்டிருந்தேன்..

இந்த வரிகளை நான் எழுதும் போது நினைத்தும் பார்த்ததில்லை.. என் நூறாவது கதையில் இதை நினைவு கூர்வேனென்று...

கடவுளே..! உனக்கு நன்றி...!

உன்னால் மட்டுமே எனக்கு இது சாத்தியப்பட்டது.. இது போதும்.. இந்த நூறு கதைகளில் நான் வாழ்வேன்.. அவற்றில் என் முகம் தெரியும்.. என் முகவரி தெரியும்.. அடையாளமில்லாமல் வாழ்ந்த எனது அடையாளம் தெரியும்.. வருடங்கள் கடந்து வாய்ப்புக் கிடைத்த போது.. பொங்கிவரும் அருவியாக கொட்டித் தீர்த்த எனது எழுத்தே..! அதில் கலந்த எனது கற்பனையே..! உங்களை எனக்குத் தந்த அந்த கலைமகளுக்கு என் நன்றியைச் சொல்கிறேன்..

இந்த நூறு கதைகளில்

2 பாகம் (போர்க்களத்தில் ஓர் பூவிதயம்..)

3 பாகம் (என்னவென்று நான் சொல்ல..?)

4 பாகம் (மைவிழியே மயக்கமென்ன..?)

5 பாகம் (அம்மம்மா கேளடி தோழி..)

6 பாகம் (எங்கிருந்தோ ஆசைகள்..)

என்ற கதைகள் அடங்கியுள்ளன.

என்றேனும் ஒர்நாளில் முத்துலட்சுமி ராகவன் என்ற படைப்பாளி ஒருத்தி இருந்தாள்.. அவள் அவளுடைய படைப்புக்களை விட்டுச் சென்றாள் என்று இந்த உலகம் என்னை நினைவு கூர்ந்தால் போதும்.. எனக்கு வேறு எதுவும் வேண்டாம் கடவுளே..! அதுவே சரித்திரத்தில் நான் இடம் பெறும் பதிவு...!

நான் சாம்பலான தருணங்கள் பல உண்டு.. அவற்றிலிருந்து ஃபீனிக்ஸ் பறவையாக மீண்டு வந்தது எதற்காக என்று இத்தருணத்தில் நான் உணர்கிறேன்...

நான் சாய்வதற்கு மடி கொடுத்து தாங்கிய என் தெய்வங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்...

நீங்கள் தந்த நலத்தினால் நான் நலம்.. உங்களின் அருள் தந்த வரத்தினால் என் கதைகளும்.. கற்பனையும்.. எழுத்தும்.. நலமாக இருக்கின்றன.. இதுவரை என்னைப் பதிவு செய்து விட்டேன்.. இனியும் இது தொடர.. உங்களின் அருளையும்.. துணையையும் வேண்டி நிற்கிறேன்...



– நட்புடன் –

**முத்துலட்சுமி ராகவன்**

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
website : www.muthulakshmiraghavan.com

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய நாவல்கள்

1. தொடுவானம்
2. நிலா வெளியில்
3. நிழலோடு நிழலாக
4. நிலவே நீ சாட்சி
5. அக்கினிப் பறவை
6. காதலின் பொன்வீதியில்
7. நதியோரம் நடந்தபோது
8. காத்திருந்தேன் காற்றினிலே
9. வென்றுவிடு என் மனதை
10. உயிரே உனைத் தேடி
11. ஊஞ்சலாடும் உள்ளம்
12. மௌனத்தின் குயிலோசை
13. பூக்கோலம் போடவா
14. உன்னோடு ஒருநாள்
15. இதயத்தின் சாளரம்
16. மனதில் ஓர் ஓவியம்
17. நெஞ்சமடி நெஞ்சம்
18. ஏதோ ஒரு நதியில்
19. நிலாக்கால நினைவுகள்
20. சொன்னது நீதானா
21. பூவே மயங்காதே
22. தென்றலைத் தேடி
23. நீதானே எந்தன் வெந்நிலவு
24. நீங்காத நினைவுகள்
25. இனிதாக ஒரு விடியல்
26. கல்லூரி காலத்திலே
27. மலர்ந்தும் மலராமல்
28. உன்னை விட ஓர் உறவா..?
29. நீ சொன்ன வார்த்தை
30. கடலில் கலந்த நதி
31. நெஞ்சத்திலே நீ நேற்று வந்தாய்
32. முகில் மறைத்த நிலவு
33. தீயாக உனைக் கண்டேன்
34. எனக்கென்று ஓர் இதயம்
35. பனித்திரை
36. காற்றோடு தூது விட்டேன்
37. சந்தித்தேன் சிந்தித்தேன்
38. யார் அந்த நிலவு?
39. யாரோடு யாரோ
40. மாறியது நெஞ்சம்
41. ஊமையின் ராகம்
42. நேசம் மட்டும் நெஞ்சினிலே
43. கனாக் காண்கிறேன்
44. அன்றொரு நாள் இதே மழையில்
45. பூவொன்றைக் கண்டேன்
46. கீதையின் ராதை
47. உறங்காத உள்ளம்
48. நீயின்றி நானில்லை
49. வார்த்தை மாறியது ஏனோ?
50. உன் மனதைத் தந்துவிடு
51. கனல் வீசும் காதல்
52. என்னவென்று நான் சொல்ல? (3 பாக நாவல்)
53. தன்னந் தனிமையிலே

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய நாவல்கள்

54. அந்தி மழை பொழிகிறது
55. நீதானே எனது நிழல்
56. காதலாகி கசிந்துருகி
57. ஒற்றையடிப் பாதையிலே
58. பூவும்.. புயலும்..
59. ஆற்றங்கரை அருகினிலே
60. இமையோரம் உன் நினைவு
61. வசந்தமென வந்தாய்
62. மௌனத்திரையின் மறைவினிலே
63. தூங்காத கண்ணென்று உண்டு
64. புலர்கின்ற பொழுதினில்
65. மௌனமான நேரம்
66. வேரென நீயிருந்தாய்
67. வானம் வசப்படும்
68. அந்திவானம்
69. ஆராதனை
70. மௌனமே காதலாய்
71. வந்ததே புதிய பறவை
72. கானல் வரிக் கவிதை
73. மன்னிப்பாயா..?
74. மை விழியே மயக்கமென்ன..? (4 பாக நாவல்)
75. வைகறையே வந்துவிடு
76. சங்கமித்த நெஞ்சம்
77. இளவேனிற் காலம்
78. ஓரவிழிப் பார்வையிலே
79. தென்னம் பாளை
80. புதிய பூவிது பூத்தது
81. கன்னி ராசி
82. சொல்லத்தான் நினைக்கிறேன்
83. உன்னோடு நான்
84. நதி எங்கே போகிறது?
85. தேடினேன் வந்தது
86. மாலை நேரத்து மயக்கம்
87. ஆசையா கோபமா.?
88. அம்மம்மா கேளடி தோழி (5 பாக நாவல்)
89. கை தொட்ட கள்வனே
90. பொன் மகள் வந்தாள்
91. மின்னலாக வந்தவளே
92. ஜனனீ ஜகம் நீ
93. கண்ணாமூச்சி ரே..ரே..
94. நதியோரம்
95. மழைச்சாரலாய் மனம் நனைத்தாய்
96. காலைநேரக் காற்று
97. அலைபாயும் மனது
98. போர்க்களத்தில் ஓர் பூவிதயம் (2 பாக நாவல்)
99. பூமிக்கு வந்த நிலவு
100. எங்கிருந்தோ ஆசைகள் (6 பாக நாவல்)

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# ‘எங்கிருந்தோ ஆசைகள்’

பாகம் - 1

## 1

எங்கிருந்தோ காதல் வந்து...
உன்னைத் தொட ஆசை கொண்டேன்...

**அ**லாரமில்லாமலே விழித்துக் கொண்டாள் காவ்யா.. உள்ளங்கையை விரித்து முகம் பார்த்தவள்.. கட்டிலை விட்டு இறங்கினாள்.. ஜன்னலைத் திறந்தாள்.. அவளிருந்த மாடியறையின் ஜன்னலில் இருந்து மதுரையின் இயக்கம் தெளிவாகத் தெரிந்தது...

‘ம்ஹீம்.. இந்த ஊர் தூங்கினாத்தானே முழிக்கறதுக்கு...’

மதுரை மாநகரைப் பற்றி அறிந்தவர்கள் அதைத் ‘தூங்காநகரம்...’ என்றுதான் அழைப்பார்கள்.. அந்நகரின் ஏதாவது ஒரு மூலையில் இரவு முழுவதும் நடமாட்டம் இருந்து கொண்டேயிருக்கும்...

காவ்யாவிற்கு மதுரையைத்தான் பிடிக்கும்...

“பிறந்த ஊர் பெருமை..” என்பாள் பாவனா...

அவள் ஓசூரில் பிறந்து.. மதுரையில் வசிக்க வந்தவள்..

பாவனா சொன்னது உண்மையாக இருந்தாலும்... மதுரை மாநகரம்.. தினமும் திருவிழாக் கோலத்தைப் பூண்டிருப்பது என்னவோ உண்மைதானே...

காவ்யா ஒருமுறை அவளுடைய தோழியின் ஊருக்குப் போயிருந்தாள்.. அங்கே இரவானால் என்னவோ ஊரடங்குச் சட்டத்தைப் போட்டிருப்பதைப் போல தெருக்களில் ஆள் நடமாட்டமே இல்லாமல் இருளடைந்திருந்தது.. தெரு விளக்குகளின் ஒளியில் ஏழுமணிக்கே சப்தமில்லாமல் அடங்கிப் போயிருந்த தெருக்களைப் பார்த்தபோது இனம் புரியாத பயம் வந்து அவள் நெஞ்சில் குடி கொண்டதை இன்னும் அவள் மறக்கவில்லை...

மதுரையில் அப்படியில்லை... இரவில் இங்கே ‘ஜேஜே’ என்று இருக்கும்.. தெருவோர இட்டிலிக் கடைகளும்.. தள்ளுவண்டியில் இருக்கும் பலகாரக் கடைகளுமாக.. சாலைகள் களை கட்டும்...

“மல்லி... மல்லி...” என்று மாலையில் ஆரம்பிக்கும் பூக்காரியின் சப்தம்.. விடிந்த பின்னால்தான் நிற்கும்...

மல்லிகைக்குப் பெயர் வாங்கியது மதுரை.. மீனாட்சி ஆள்கின்ற ஊர் என்பதால் மதுரை மல்லிகைக்கு மணம் அதிகம்...

நான்மாடக் கூடலைச் சுற்றிப் பிரிந்து சொல்லும் ரதவீதிகளில் நெருக்கியிருக்கும் கடைகளில் இரவு.. பகல் என்றில்லாமல் கூட்டம் நிறைந்திருக்கும் மர்மத்தை இதுவரை யாரும் கண்டறிய முடியவில்லை..

அதைப்போல.. ஒரு வீட்டில் பெண்ணின் கை ஓங்கியிருந்தால்...

‘என்னப்பா.. வீட்டில மதுரையின் ஆட்சியா...’ என்று கேட்காதவரும் இருந்ததில்லை...

மதுரை.. மீனாட்சி சொக்கநாதனின் சாம்ராஜ்யம்.. எவரிடமும் மயங்காத மீனாட்சி.. சோமசுந்தரேஸ்வரராக வந்த சொக்கநாதரிடம் மயங்கிப் போனாள் என்கிறது புராணம்...

என்னதான் மயங்கினாலும்.. அரியணையை கணவனுக்கு விட்டுக்கொடுக்காமல் ஆட்சி புரிந்தவள் மீனாட்சி.. அந்த மீனாட்சியின் திருக்கோவிலில் கொண்டாடப் படும் சித்திரைத் திருவிழாவைப் பார்க்க எட்டுத் திக்கிலிருந்தும் ஜனங்கள் வந்து மதுரையில் கூடுவார்கள்...

ஒருமாதம் முழுவதும் நீண்டிருக்கும் திருவிழாவில்.. மீனாட்சியின் அண்ணனான அழகர் ஆற்றில் இறங்குவார்.. அதைக் காணக்கண்கோடி வேண்டும் என்று காவ்யா சொல்லுவாள்...

“ஏய்.. உங்க ஊரே திருவிழாக் கொண்டாடற ஊர்தானடி.. பாரு.. தெருவுக்கு ஒரு கோவில் இருக்கு.. ஒவ்வொரு தெருவிலயும் அந்த தெய்வத்துக்கு திருவிழா கொண்டாடறாங்க.. ஒரு திருவிழா முடிஞ்சா இன்னொரு திருவிழா ஆரம்பிக்குது.. வருசம் முழுக்கத் திருவிழா கொண்டாடற ஒரே ஊரு.. உன் ஊருதாண்டி...” என்பாள் பாவனா...

அவள் சொன்னது உண்மைதான்.. மதுரை தூங்காநகரம் மட்டுமல்ல.. அது திருவிழா நகரமும் கூட....

சித்திரைப் பொருட்காட்சியில் வாங்க முடியாத பொருள்களே இல்லை எனலாம்.. அப்படிக் கடைகளும்.. கலையரங்குகளும் நிறைந்திருக்கும்.. சுற்றி வருபவர்களின் கால் கடுத்தால்.. பரந்திருக்கும் மணல்வெளியில் ஜமுக்காளத்தை விரித்து ஓய்வெடுத்துக் கொள்ளலாம்...

“ஆயிரம்தான் சொல்லுடி.. எங்க மதுரைக்கு நிகரா உங்கஊர் இருக்காது...”

பாவனாவை வம்புக்கு இழுப்பாள் காவ்யா.. அவள் அலட்டிக்கொள்ளவே மாட்டாள்...

“அப்ப.. நீ மதுரையிலதான் மாப்பிள்ளையைத் தேடிக்குவன்னு சொல்லு...” என்பாள்...

“மாப்பிள்ளையைத் தேடிக்கிறதா..? சீச்சி...”

இதைச் சொல்லும்போதே கள்ளச்சிரிப்பில் காவ்யாவின் கண்கள் மலரும்... அவளுக்கும் பாவனாவிற்கும் இடையிலான பரிபாஷையை அவளின் கண்கள் பேசும்.. அந்த நயனங்களின் பாஷையை கண்டு கொண்டவளாய் அவள் ரகசியச் சிரிப்பை சிரிப்பாள்..

எந்தவொரு நெருங்கிய தோழமையிலும் இந்த ரகசிய பாஷைகள் உண்டு.. கள்ளனை கள்ளனே அறிவார்.. அதேபோல்தான்.. கள்ளியை கள்ளி அறிவதும்...

பாவனா காவ்யாவை அறிந்தவள்...

“அப்ப.. நீயா மாப்பிள்ளையைத் தேடிக்க மாட்ட..?”

“அப்பா.. அருவாளைத் தூக்கிடுவார்.. இது மதுரை மண்ணும்மா.. நினைப்பிருக்கட்டும்.. இது வீரம் விளைஞ்ச மண்ணு...”

“ஓசூர் மண்ணும் வீரம் விளைஞ்சதுதான்.. உன் அப்பாவே பேனா பிடிக்கிற தாலுகா ஆபிஸ் கிளார்க்.. அவரப் போயி ஏண்டி அருவாளைப் பிடிக்கச் சொல்ற...?”

“நீ சொன்னதைச் செஞ்சா அவர் அதைத்தான் செய்வார்...”

“அப்ப.. அவருக்கு பயந்துதான் நீ அடக்கி வாசிக்கற..?”

திரும்பவும் ஒர் ரகசிய சிரிப்பை இருவரும் சிந்துவார்கள்...

நட்பும்.. சிநேகிப்பதும்.. போதை தரும் விசயம்தான்.. இது இலக்கியத்தைப் போன்றது.. சிநேகிக்க.. சிநேகிக்க.. ஆழமும்.. நேசமும் கூடும்.. வாழ்வின் மீதான ஒன்றுதல் அதிகமாகும்... அது அறிமுகப்படுத்தும் புதுப்புது அர்த்தங்களில் மனம் லயிக்கும்...

நட்பு உருவாக்கும் பரிணாமங்களை.. சிநேகிப்பரே அறிவார்கள்...

காவ்யாவின் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும்.. ஒவ்வொரு தோழிகள் வந்து போயிருக்கிறார்கள்...

எல்.கேஜி யில் காவ்யாவின் ரப்பரைத்திருடி.. காவ்யா அழுத அழுகையில் அரண்டு போய் திருப்பிக் கொடுத்து.. அதனால் ஆத்மார்த்தமான தோழியான மெஹருன்னிஷா தான் காவ்யாவின் முதல் தோழி...

மூன்றாம் வகுப்பு வரை கூட வந்த மெஹருன்னிஷா.. ஒரு ஜீலை மாதத்தில் பிரிந்து போனாள்...

“அப்பாவுக்கு டிரான்ஸ்பர்...”

அந்த மழலை மாறாத பருவத்திலும் அவர்கள் இருவரும் கட்டிப் பிடித்து அழுதார்கள்.. மெஹருன்னிஷா.. ‘டாட்டா’ காட்டி விட்டுப் போன பின்பு வெகுநாள்கள் வரை காவ்யா யாரையும் ஆழமாக சிநேகிக்கவில்லை...

ஒரு மழைநாளின் மாலைப் பொழுதில் அவள் நனையாமல் குடை பிடித்த ரோஸி அவளுக்கு அடுத்த தோழியானாள்.. அதன்பின்னால் அந்த ரோஸி கடைசி பெஞ்சிலிருந்து இடம் மாறி.. முதல் பெஞ்சில் காவ்யாவின் அருகில் அமர்ந்தாள்...

இருவரும் ‘காக்காய் கடி’ கடித்து மிட்டாயை பங்கிட்டுக் கொண்டார்கள்.. மதிய உணவை பங்கிட்டுக் கொண்டார்கள்.. பென்சிலை இரண்டாக ஒடித்துக் பங்கிட்டுக் கொண்டார்கள்.. ரப்பரை பிளேடால் வெட்டிப் பங்கிட்டுக் கொண்டார்கள்...

இப்படிப் பங்கிட்டுக் கொண்டிருந்த நட்பை பங்கிட்டுக் கொள்ள வில்லியாக ஊடே வந்தாள் லில்லி...

லில்லிக்கும் காவ்யாவுக்கும் இடையே தீராத பகையொன்று இருந்தது.. வகுப்பு ஆசிரியை ஒர்முறை பாடம் நடத்த புத்தகத்தை கேட்டபோது லில்லியை முந்திக் கொண்டு போய் காவ்யா புத்தகத்தை கொடுத்து விட்டாள்...

‘மகளே..! இருக்குடி உனக்கு..’

வன்மம் வைத்த லில்லி.. காவ்யாவுக்காக அவள் மனதிலிருந்த வன்மத்தை இறக்கி வைக்க.. ரோஸியுடன் சிநேகிதமானாள்...

காவ்யா ‘காக்காகடி’ கடித்துக் கொடுத்த திண்பண்டங்களை விட.. லில்லி.. ‘உனக்கே உனக்கு’ என்று கொண்டு வந்த திண்பண்டங்களின் அளவும்.. ருசியும்.. அதிகமாக இருந்ததில் ரோஸி லில்லியுடன் ஐக்கியமாகிப் போனாள்...

‘போடி.. நீயுமாச்சு.. உன் பிரண்ட்ஷிப்புமாச்சு...’ என்று ரோஸியுடனான பிரண்ட்ஷிப்பை தூக்கி கடாசி விட்டாள் காவ்யா...

பள்ளியிறுதியில் ராதா தோழியாளாள்.. ப்ளஸ்டூ வரை தொடர்ந்து வந்த அவள் நட்பில்தான் காவ்யா புதிய வடிவம் பெற்றாள்...

ராதாவிடம் அதிகமான நல்ல குணங்கள் இருந்தன.. பகைவரையும் சிரித்துக் கொண்டே ஸ்நேகிக்க வைத்தவள் அவள்தான்..

“உன் மனசுக்கு இது சரின்னு பட்டா.... அவ மனசுக்கு அது சரின்னு படுது காவ்யா.... இதில தப்பொன்னுமில்லையே...”

எதிர்மறைத் துருவங்களையும் இணைத்து வைக்கும் திறமை ராதாவிடம் இருந்தது.. அவளுடனான நட்பில் இன்னல்களை எதிர்நோக்கும் வல்லமையைக் கற்றுக் கொண்டாள் காவ்யா...

"குடை கொண்டு வரலைன்னா என்ன..? மழையில நனைந்துக்கிட்டே வீட்டுக்குப் போனா ஆகாதா...?"

"டிரெஸ்ஸெல்லாம் நனையாதா ராதா..?"

"குடைபிடிச்சா மட்டும் டிரெஸ் நனையாம இருக்குமா..? குடை தலையைத்தான பாதுகாக்கும்..? உடம்பு பூராவுமா பாதுகாக்கும்..?"

"புக் நனையுமே..."

"ஜரிகைப் பையில புத்தக பேக்கைப் போடு..."

மழையைக் கண்டு பயந்து நடங்கும் காவ்யா மழையை நேசிக்க கற்றுக் கொண்டது அந்தப் பொழுதில்தான்...

அன்று அவள் மழையில் நனைந்தாள்.. கொட்டுகிற மழைத்துளிகளில் உடல் நனைய நடப்பது அவளுக்கு பிடித்தமானதாக மாறிப்போனது...

ராதா கல்லூரிவரை கூடவே வந்தாள்.. பி.எஸ்.ஸி. கம்யூட்டர் சயின்சை அக்கறையாகப் படித்தாள்.. தேர்வு

முடிந்ததும் திருமண அழைப்பிதழை நீட்டினாள்.. காவ்யா திகைத்தாள்..

"உன்க்குக் கல்யாணமா ராதா..?"

"ம்ம்ம்.. மாப்பிள்ளை வெளிநாட்டில் வேலைபார்க்கிறார்..."

'அடச்சே...' சலித்துப் போனது காவ்யாவிற்கு...

எந்த நட்பும் நிலைக்காதென்றால்.. சிநேகிக்க வேண்டிய அவசியம்தான் என்ன..?

"ரிசல்ட் வரைக்கும் வெயிட் பண்ணலாமேடி..."

"எதுக்கு..? மேலே படிக்கிறதா இருந்தா வெயிட் பண்ணலாம்.. இங்கேதான் அதுக்கு வழியில்லையே.. பொண்ணு பார்க்க வந்தாங்க.. பொண்ணைப் பிடிச்சிருக்குன்னாங்க.. உடனே கல்யாணத்தை வைச்சிட்டாங்க..."

"உனக்குப் பிடிச்சிருக்குல்ல..."

"ம்ம்ம்.. உடனே கல்யாணம்கிறதுதான் பிடிக்கல.. ஆனா காவ்யா.. எப்பன்னாலும் கல்யாணம் பண்ணிக்கிட்டுத்தான ஆகனும்...?"

ராதா திருமணம் என்ற பெயரில் பிரிந்து போய் விட்டாள்.. காவ்யாவைச் சுற்றித் தோழிகள் என்ற பெயரில்

ஒரு கூட்டமே இருந்தது... ஆனாலும்.. ஆத்மார்த்தமான தோழிக்காக காவ்யா ஏங்கிப்போனாள்...

அந்தக்குறை தீர்க்க அடுத்து வந்தவள்தான் பாவனா...

காவ்யா வேலைக்குச் சேர்ந்திருந்த கம்யூட்டர்களை கொள்முதல் செய்து விற்பனை செய்யும் கடையில் காவ்யாவைப் போலவே அலுவலகப் பிரிவில் வேலை செய்ய வந்தவள்தான் பாவனா.. வந்த முதல் நாளிலேயே காவ்யாவுடன் சிநேகிதமாகி விட்ட கெட்டிக்காரி...

“ஹாய்.. ஐ ஆம் பாவனா...”

“இது மதுரைங்க...”

“தெரியுமே...”

“சங்கத்தமிழ் வளர்த்த இடம்...”

“ஓ.. அதனால இங்கிலிஷை துரத்தச் சொல்றிங்க.. செய்துட்டாப் போச்சு.. ஓசுரில இங்கிலிஷில் பேசினாத்தான் மதிப்புங்கறதால.. பீட்டரை கட்டிப் பிடிச்சுக்கிட்டு இருந்தேன்...”

“பீட்டரா..? யார் அது..?”

காவ்யாவின் முகச்சுளிப்பில் விழுந்து விழுந்து சிரித்தாள் பாவனா...

“அம்மாடி.. கதையையே மாத்தி யோசித்து.. என் கேரக்டரை ஸ்பாயில் பண்ணிடாத தாயி.. பீட்டர்ன்னா ஆளில்ல.. இங்கிலீஷைத்தான் அப்படிச் சொன்னேன்.. நல்ல வேளையா ஆண்குலம் யாரும் இன்னும் வந்து சேரலை... அதனால பிழைச்சேன்.. இதை கேட்டுட்டு ஆளாளுக்கு நூல்விட ஆரம்பிச்சிருந்தாங்கன்னா என் கதி என்னாகும்ன்னு கொஞ்சமாவது யோசிச்சுப் பேசறியா..?”

பாவனா இயல்பாக ‘வா.. போ’ என்று பேச்சின் திசையில் மாறினாள்.. இப்போது காவ்யா விழுந்து விழுந்து சிரித்தாள்.. அவளுக்கு பாவனாவைப் பிடித்துப் போனது...

“அப்பா சென்ட்ரல் கவர்ண்மென்டில் வேலை செய்கிறார்.. இங்கே டிரான்ஸ்பர் ஆகியிருக்கு.. அங்கே வேற ஒரு கம்பெனியில வேலை செய்தேன்.. அதைவிட்டுட்டேன்.. இங்கே வந்து இந்த வேலையைப் பிடிச்சிட்டேன்...”

சுய அறிமுகத்தை செய்து கொண்டாள் பாவனா...

# 2

*உன்னைத் தொட்ட காதல் வந்து...*
*என்னைத் தொடவே ஆசை கொண்டேன்..*

“**எ**ன் அப்பா.. ஸ்டேட் கவர்ண்மென்டில் வேலை பார்க்கிறார்...”

“இதைப் பாருடா.. சென்டரலும்.. ஸ்டேட்டும் இங்கே ஒன்னாச் சேர்ந்திருக்கா..? இதைக் கொண்டாடனுமே...”

“ஆபிஸ் கேண்டின் காபி படு கேவலமா இருக்கும்..”

“கப்புன்னு பிடிச்சுக்கிட்டு துப்பு சொல்லிட்ட பாரு.. கற்பூரபுத்திதான் உனக்கு.. ஐ லக் இட்...”

“இங்கிலிஷை விடவே மாட்டியா...?”

“பிறந்ததில இருந்து பீட்டர்தாம்மா.. அவ்வளவு சீக்கிரமா அவன் ஓடிற மாட்டான்.. மெதுவாத்தான் துரத்தனும்...”

“அடச்சீ.. நீ அடங்கவே மாட்டியா.. ஆள் வர ஆரம்பிச்சாச்சு....”

வெகுநாள்களாய் பழகிய சிநேகிதிகளைப் போல இருவரும் ரகசியக் குரலில் பேசிச் சிரித்துக் கொண்டார்கள்...

அது எப்படித்தான் பழகிய சில நிமிடங்களிலேயே பாவனாவுடன் ஒட்டிக்கொள்ள முடிந்தது என்று இன்று வரை ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறாள் காவ்யா...

“என்னடி.. அந்த தொங்குமீசை உன்னையே முறைச்சுப் பார்த்துக்கிட்டு இருக்கான்..? சைட்டா..?”

“என்னைச் சொல்றியா..?”

“அவனைச் சொல்றேன்...”

“அதானே பார்த்தேன்.. உன்கூடப் பிரண்டானது தப்போன்னு ஃபீல் பண்ண வைச்சுராதே...”

“அதெல்லாம் செய்ய மாட்டேன்.. உன்னைப் பார்த்தவுடனே கண்டு பிடிச்சுட்டேனே...”

“நான் சைட்டெல்லாம் அடிக்காத அக்மார்க் நல்ல பொண்ணுன்னுதானே...?”

“ஊஹூம்.. உன் டேஸ்ட் இவ்வளவு மட்டக் கேவலமாயிருக்காதுன்னுதான்.. நீ இவனைப் போய் சைட் அடிப்பியா..? மாட்டவே.. மாட்ட...”

பாவனா பேசிய விதத்தில் காவ்யாவிற்குச் சிரிப்புத்தான் வந்தது.. அவளுக்கு பாவனாவை பிடித்து விட்டது.. அதுநாள்வரை வெற்றிடமாக இருந்த அவளது அந்தரங்கத் தோழிக்கான இடத்தை பாவனா நிரப்பி விட்டாள்.. அவளுடனான நட்பில் காவ்யா உயிர்த்தெழுந்தாள்..

“ஏன் காவ்யா.. எனக்கொரு சந்தேகம்...”

“ஒழுங்கான சந்தேகம்தான..?”

“உனக்கு நான எதைப் பேசினாலும் சந்தேகம்தான்.. என்னை நம்பவே கூடாதுங்கிற முடிவோட இருக்கியா..?”

“நம்பற மாதிரி நீ பேசிப் பழகனும்..”

“உன் கூடல்லாம் என்னால பழகிப் பார்க்க முடியாது.. அதுக்கான ஆளே வேற...”

பாவனாவின் ரகசிய கண்சிமிட்டலில் அவள் கையைக்கிள்ளி வைப்பாள் காவ்யா...

“இப்பப் புரியுதா..? ஏன் நான் உன்னைச் சந்தேகப் படறேன்னு...?”

“அதைவிடு.. இதுக்கு வா...”

“எதுக்கு...?”

"கம்ப்யூட்டர்கள் விக்கிற கடைக் கணக்கைப் பார்க்கிறவங்களும் கம்யூட்டரைப் பத்தித்தான் படிச்சிருக்கனும்னு ஏதாச்சும் சட்டமிருக்கா என்ன...?"

"ஏன் இந்த சந்தேகம்..?"

"இல்ல... நீயும் பி.எஸ்.ஸி கம்யூட்டர் சயின்ஸ்.. நானும் அதேதான்.. அதனால கேட்டேன்..."

"ஆக்சுவலா எனக்கு எம்.ஸி.ஏ படிக்கனும்கிற ஆசை.. அதனாலதான் கம்யூட்டர் சயின்ஸை எடுத்தேன்..."

"படிச்சிருக்க வேண்டியதுதான..?"

"அப்பா விடலை பாவனா..."

"ஏண்டி..."

"அதிகம் படிச்சா.. அதுக்கேத்த மாதிரி மாப்பிள்ளை தேட முடியாதாம்..."

கன்னம் சிவக்காமல் எரிச்சலுடன் சொன்னாள் காவ்யா.. எப்போது கல்யாணம் என்று சொல்லி ராதா அவளை விட்டுப் பிரிந்து போனாளோ.. அன்றிலிருந்தே காவ்யாவிற்கு கல்யாணம் என்ற வார்த்தையைக் கேட்டால் பிடிக்காமல் போய்விட்டது.. அதிலும் அவள் ஆசைப்பட்ட படிப்பைப் படிக்க முடியாமல் போனதற்கு

கல்யாணமே காரணமாகிப் போனதில் இன்னும் அதிகமாக கல்யாணத்தின் மீது வெறுப்பைக் கொண்டாள்...

"ஓ.. அதான் இந்த காண்டா...?"

"நீயேன் மேலே படிக்கலை...?"

"எங்க வீட்டில இந்த மாதிரியெல்லாம் அப்பா யோசிக்கலை.. எனக்குத் தான் படிச்சது போதும்ன்னு ஆகிப் போச்சு..."

"அடிப்பாவி..! படிப்பு போதும்ன்னு நினைச்சியா..? கற்றது கைம்மண் அளவு.. கல்லாதது உலக அளவு பாவனா.."

"மதுரையின்னா.. எதுக்கெடுத்தாலும் செந்தமிழில் பேசிச் சோதிக்கனுமா..? ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான பிடித்தம் இருக்கும்.. எனக்கு புருசன் வேலைக்குப் போய் சம்பாதிச்சுக் கொண்டு வந்து கொட்ட... ஹாயாய் பிள்ளை குட்டிகளைப் பெற்று.. வளர்த்து.. குடும்பத் தலைவியாய் குடும்பம் நடத்தத்தான் பிடிக்கும்.. மேலே படிச்சா.. படித்த படிப்பு வீணாகிப் போயிரக் கூடாதுன்னு வேலைக்குப் போகத் தோணும்.. தேவையா..?"

இப்படிப் பேசுகிற ஒருத்தியை அப்போதுதான் முதன்முதலாக பார்த்தாள் காவ்யா.. அவளவள்.. வானத்தைத் தொட்டு வர நினைத்துக் கொண்டிருக்க..

இங்கே விட்டுச் சிறகடிக்க வாய்ப்பிருந்தும்.. சிறகடிக்க மாட்டேனென்று பிடிவாதமாக இறக்கையை இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பவளை என்னவென்று காவ்யா சொல்லுவாள்...?

“எனக்கெல்லாம் உன்னைப் போல வீடு கிடைச்சிருந்தா சாதிச்சிருப்பேண்டி...” அவள் பெருமூச்சு விட்டாள்..

“ரொம்பத்தான் ஏங்கிப் போகாதே.. ஓசூரில் எங்க பக்கத்து வீட்டு அக்காவுக்கு கல்யாணமாச்சு.. குழந்தை பிறக்கிற வரைக்கும் அவங்க சந்தோசமாத்தான் வேலைக்குப் போனாங்க.. குழந்தை பிறந்து ஆறு மாசமானதும் லீவு முடிஞ்சு வேலைக்கு அவங்க கிளம்பினப்ப.. அந்தக் குழந்தையும்.. அவங்களும் பட்ட பாடு இருக்கே.. அப்பப்பா.. சொல்லில் அடங்காது காவ்யா.. அப்பவே முடிவு பண்ணிட்டேன்.. என் குழந்தையை வேலையைக் காரணம் சொல்லி நான் பிரிய மாட்டேன்னு..”

“எத்தனை நாளைக்கு பாவனா..? அந்தக் குழந்தை படிக்கப்போகும்.. வேலைக்குப் போகும்.. கல்யாணம் பண்ணிக்கிட்டு குடும்பம் நடத்தப் போகும்.. அந்தச் சமயத்தில இந்தப் பெண் அடையாளமில்லாம தன்னோட அடையாளத்தைத் தொலைச்சிட்டு.. இன்னாரோட

பெண்டாட்டி.. இன்னாரோட அம்மான்னு நிப்பா.. அப்ப இவ அடையாளத்தைத் தேடிப் போனாலும் அது திரும்பக் கிடைக்காது...”

“இதுவும் சரிதான்.. ஆனா அவங்கவங்க வாழ்க்கை அவங்கவங்களுக்கு காவ்யா.. மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கையில அடையாளம் தேவையில்லன்னு நான் நினைக்கிறேன்.. இது என்னோட விருப்பம்...”

பாவனா சில விசயங்களில் மிகத் தெளிவாக இருந்தாள்.. அவளது வாழ்வின் நல்லது.. கெட்டதை அவளே தீர்மானித்தாள்.. இது இன்னொரு வகையான வாழ்க்கைப்பாடம்.. இந்தப் பாடத்தை பாவனாமிடமிருந்து கற்றுக் கொண்டாள் காவ்யா...

“விடிஞ்சு எழுந்திருச்சா.. வானத்தையும்.. பூமியையும் வேடிக்கை பார்த்துக்கிட்டுத்தான் நிக்கனுமுன்னு ஏதாச்சும் சட்டமிருக்கா..?”

அன்னபூரணியின் குரலில் திரும்பினாள் காவ்யா.. கையில் காபித்தம்ளரோடு மாடியேறி வந்த கோபம் அன்னபூரணியின் முகத்தில் தெரிந்தது...

“இப்பத்தான் எழுந்திருச்சேன்ம்மா..”

“எழுந்திருச்சா.. கீழே இறங்கி வந்து காபியை வாங்கிக் குடிக்கனும்.. உன் அண்ணன் வரல..? அவன்

ஆம்பளை..! அவனே கீழே வந்து காபிய குடிக்கிறான்.. நீ என்னடான்னா தினமும் என்ன மாடியேற வைக்கிற.. எனக்கென்ன வயசா திரும்புது...?”

ஒருவாய் காபிக்கு இத்தனை பாட்டா என்றிருந்தது காவ்யாவிற்கு.. அவளால் அதை அன்னபூரணியிடம் சொல்லி விட முடியாது.. ஆய்ந்து விடுவாள் ஆய்ந்து... எந்த அளவுக்கு மகள்மீது பாசத்தைப் பொழிகிறாளோ.. அந்த அளவுக்கு அவள் கோபத்தையும் காட்டுவாள்...

“காலையில என்னடி வானிலை ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்க..? வேலைக்குப் போகலியா...?”

“போகனும்மா...”

“எப்ப..?”

“இப்பம்மா...”

“மணி என்னன்னு தெரியுமா..? தினமும் இதே கதைதான்.. உச்சிப் பொழுது வார வரைக்கும் தூங்க வேண்டியது.. அப்புறமா கண்முழிச்சு.. அரக்கப் பரக்க கிளம்பி ஓட வேண்டியது.. உன் அண்ணனைப் பாரு...”

‘பாத்தாலும்.. கழுதையில..’ எரிச்சல் மண்டியது காவ்யாவிற்கு...

எதற்கெடுத்தாலும்.. அண்ணனைப் பாரு.. அண்ணனைப் பாருதானா..? அதைவிட்டால் வேறு பேச்சே அன்னபூரணியின் வாயிலிருந்து வராதா..?

“அண்ணனை எதுக்கும்மா பார்க்கச் சொல்ற...?”

“அவனைப் பாத்தாலாவது உனக்குப் புத்தி வருதான்னு பாக்கத்தான்... சோம்பேறி.. எட்டுமணி வரைக்கும் பொம்பளப்புள்ள தூங்கலாமாடி..? நாளைக்கு வாக்கப்பட்டுப் போன இடத்திலும் இதே மாதிரிதானே தூங்கி என் மானத்தை வாங்குவ..?”

“ஏம்மா.. என் தூக்கத்துக்கும்.. நான் வாழ்க்கைப் பட்டுப் போகிறதுக்கும் என்ன சம்பந்தம்...?”

“அதை உன் அப்பாகிட்ட வந்து கேளு.. விளங்கச் சொல்லுவாரு...” இடக்காக பேசிவிட்டு இடத்தைக் காலி பண்ணினாள் அன்னபூரணி...

அன்னபூரணி தங்கம்..! பேச ஆரம்பித்தால்.. அரை மணியோடு நிறுத்திக் கொள்ளுவாள்.. காவ்யாவைப் பெற்றெடுத்த அப்பா சிவதாணு அப்படியல்ல.. அவரிடம் பேச்சைக் கொடுத்தால் கையில் மைக் இல்லாத அரசியல்வாதியைப் போல நாள் முழுவதும் பேசித்தள்ளி விடுவார்.. விட்ட விடிகாலையில் அவரிடம் போய் பேச்சைக் கொடுத்து.. விளக்கம் கேட்க காவ்யா என்ன முட்டாளா..?

அவள் குளியலறைக்குள் ஓடிப் போய் விட்டாள்.. குளித்து மஞ்சள் வண்ண சுடிதாருக்குள் புகுந்து.. முதல்நாள் வேலை முடிந்ததும தூக்கிக் கடாசிய ஹேண்ட்பேக் எந்த மூலையில் ஒளிந்திருக்கிறது என்பதைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்துக் கொண்டு அவள் மாடிப்படியில் கால் வைத்தபோது.. கண்ணதாசன் அவன் அறையிலிருந்து வெளிப்பட்டான்...

மடிப்புக் கலையாத பேன்ட்.. சர்ட்டும்.. மிடுக்கான தோற்றமுமாக இருந்தவனைப் பார்த்தபோது காவ்யாவின் மனதில் பொறாமை பொங்கி எழுந்தது...

அவளால் படிக்க முடியாத மேற்படிப்பை படித்து முடித்தவன் கண்ணதாசன்.. டி.என்.பி.எஸ்.சி பரிட்சையை எழுதி.. மாநில அரசாங்கத்தில் முக்கிய பதவியை வசித்து.. கை நிறைய சம்பளம் வாங்குபவன்.. காவ்யாவின் குடும்பம் குடியிருக்கும் இந்த மாடிவீடு அவன் சம்பாதித்து.. அவன் பெயரில் லோன்போட்டுக் கட்டியது.. சிவ தாணுவின் பழைய வீட்டை வாடகைக்கு விட்டிருந்தார்கள்...

மகனால் உயர்ந்திருந்த வாழ்க்கைத் தரத்தில்.. அன்னபூரணிக்கு அவன் பெருமையை விட்டால் வேறு பேச்சைப் பேசத் தெரியாது...

“குட் மார்னிங் காவ்யா...”

“இந்தா பாருண்ணே.. நான் உன் தங்கச்சி...”

“ஸோ..?”

“உன் ஆபிஸில அலப்பறையை போடறதைப் போல என்கிட்டயும் போடாத.. நான் ஒன்னும் அம்மா இல்ல.. நீ எதைப் பேசினாலும்.. ஜிஞ்சா.. ஜால்ரா.. அடிக்கறதுக்கு..”

காவ்யாவின் படபடப்பை அவன் லட்சியமே பண்ணிக்கொள்ளவில்லை.. கழுத்து டையை சரிசெய்தபடி தங்கையைப் பார்த்துச் சிரித்தான்...

சித்திரை மாசத்து கத்தரி வெயிலில இவனுக்கு எதுக்கு டை..? அதற்கும் வயிறெரிந்தாள் காவ்யா...

“உன்னோடது பிரைவேட் ஆபிஸாச்சே..” கண்ணதாசன் கேட்டான்...

“உனக்கு இப்பத்தான் அது தெரியுமா..? நீ பெரிய ஸ்டேட்கவர்ண்மென்டு ஆபிசர்ன்னு குத்திக்காட்டறியா..?”

“ரிலாக்ஸ் காவ்யா...”

“இங்கிலிஷை எடுத்து விடாதே...”

“உன் ஆபிஸில லேட்டாப் போனாக் கோவிச்சுக்க மாட்டாங்களா..? கவர்ண்மென்ட் ஆபிசில ஸ்ட்ரிக்டா இருக்கோம்.. அதனால கேட்டேன்...”

“நீ வேணும்னா போனைப் போட்டு போட்டுக்குடு..”

என்னதான் மிளகாயின் காரத்தை விட அதிகமான காரத்தோடு காவ்யா பதில் சொன்னாலும் கண்ணதாசன் கண்டு கொள்ளாமல் புன்னகை மன்னனாகவே இருந்தான்..

அவள் பெண்ணாக பிறந்து விட்ட கொடுமையினையும்.. அதனால் மேலே படிக்க முடியாமல் போய்விட்ட துயரத்தையும் வாய்க்குள் முணுமுணுத்தபடி.. வேகமாக படியிறங்கினாள் காவ்யா...

“ஏண்டி இப்படி ஓடி வர்ற.. உன் அண்ணனைப் பாரு.. எப்படி நிதானமா நடந்து வர்றான்.. உனக்குத்தான் எதுவும் தெரியலைன்னாலும்.. அவனப் பாத்தாவது கத்துக்கலாமில்ல...?”

அன்னபூரணி.. அதற்கும் கடிந்து கொண்டாள்...

“விடும்மா.. சின்னப் பொண்ணுதானே.. போகப்போக கத்துக்குவா...”

‘ஆமாண்டா அண்ணா.. நான் இதைத்தான் கத்துக்கனும்.. எம்.ஸி.ஏ யை கத்துக்கக் கூடாது...’ பல்லைக் கடித்தாள் காவ்யா...

# 3

*ஊரடங்கும் வேளையிலே...*
*உனைப்பார்க்க ஆசை கொண்டேன்..*

**க**ண்ணதாசன் அப்படியொன்றும் அடக்கு முறையைப் பிரயோகிக்கும் அண்ணனல்ல.. தங்கைமீது அன்பான அண்ணன்.. விட்டால் பாசமலர் சிவாஜியைப் போல.. பாட்டுப்பாடி விடும் குணமுள்ளவன்.. காவ்யாதான் அவனுடைய தங்கைக்கொரு கீதத்தை காது கொடுத்தும் கேட்க மாட்டாள்.. அவளுக்கு கிடைக்காத மேல் படிப்பும் உயர்பதவியும் அவனுக்குக் கிடைத்திருப்பதில் கடலளவு பொறாமையை அவன் மீது கொண்டிருந்ததால்.. அவன் பறக்கவிடும் பாசப் பறவையை 'சூ..சூ...' என்று விரட்டி விடுவதிலேயே அவள் குறியாக இருந்தாள்..

கண்ணதாசன் சொல்லித்தான் பார்த்தான்.. ஆனால் அவனைப் பெற்றவர்கள் காவ்யாவின் மேல்படிப்பு விசயத்தில் பிடிவாதமாக இருந்து விட்டார்கள்..

"பாருய்யா.. நம்ம ஆளுகள்ல ஆம்பளைப் பையன் படிக்கிறதும் பொம்பளப்புள்ள அடக்க

ஒடுக்கமா வீட்டுக்குள்ளே இருக்கறதும்தானே வழக்கம்..?"

"அம்மா.. அது அந்தக்காலம்..."

"அதனாலதான் உந்தங்கச்சியை பட்டப்படிப்பு படிக்க வைச்சோம்.. அவ பார்க்க நினைச்ச வேலைக்கும் அனுப்பி வைச்சோம்..."

"அவ மேலபடிக்க ஆசைப்படறாப்பா..."

"படிக்க வைக்கலாம்.. முடியாதுனில்ல.. அதுக்கப்புறம்..? அவ அந்த படிப்புக்கேற்ற வேலையைப் பார்க்கனுமுன்னு ஆசைப்படுவா.. அந்த வேலை மதுரைக்குள்ள கிடைக்குமா..? நீயே சொல்லு.. இவ சென்னைக்கோ.. பெங்களூருக்கோ போயாகனும்.. வீட்டுப் பொண்ணைவேலை பார்க்க வெளியூருக்கு அனுப்பி வைச்சிட்டு.. நாங்க மடியிலே நெருப்பைக் கட்டிக்கிட்டு இருக்கனும்..."

"அப்பா.. நம்ம பொண்ணுதான் வெளியூரில வேலைக்குப் போகுதா..? இந்தக் காலத்திலே எங்கே வேலை கிடைச்சாலும் போகத்தானே வேணும்.. ஊருக்கு ஊரு லேடிஸ் ஹாஸ்டல் இருக்கு.. இவ அதில தங்கிக்கிட்டு வேலை பார்த்தா ஆகாதா...?"

“பாக்கட்டும்.. தாராளமா பாக்கட்டும்.. எப்பத் தெரியுமா..? இவள ஒருத்தன் கையில பிடிச்சுக் கொடுத்துரலாம்.. அவன் அனுமதிச்சா தாராளமா வேலை பார்க்கட்டும்... நான் வேணாம்ன்னு சொல்லல...”

கண்ணதாசன் போராடி ஓய்ந்துவிட்டான்.. பெற்றவர்களை மீறி எதையும் செய்து பழகியிராதவனுக்கு இந்த விசயத்தில் தங்கைக்கு உதவிக்கரம் நீட்ட முடியவில்லை.. அவனுக்கே காவ்யாவின் கோபம் நியாயமானதுதான் என்று தோன்றிவிட்டது...

அவளுக்காக அவளுடைய அண்ணன் பேசியதை அவளும் அறிவாள்தான்... இருந்தும் பிடிவாதமாக அண்ணன் எதிர்ப்புக் கொள்கையை கைவிடாமல் இருந்தாள்...

தங்கையைச் சமாதானப் படுத்த முயன்ற கண்ணதாசன் திரும்பத்திரும்பத் தோல்வியைத் தழுவி கஜினி முகமதுவாக ஆனாலும் அவன் முயற்சியில் சற்றும் மனம் தளராமல் விக்கிரமாதித்தனைப் போல.. தினமும் சமாதானப் புறாவை காவ்யாவை நோக்கிப் பறக்க விட்டுக் கொண்டேயிருந்தான்...

ஏதோ அவனால் ஆனது.. காவ்யாவின் திருமணப் பேச்சை கொஞ்ச நாள்களுக்கு தள்ளிப் போட்டதுதான்..

அவள்தான் அவனிடம் கண்டிப்பாகச் சொல்லிவிட்டாளே...

“பாருண்ணே.. நீ உங்கம்மா.. அப்பாவுக்கு தவப்புதல்வனாவே இரு.. ஆனா.. அவங்க சொல்றதைக் கேட்டுக்கிட்டு உடனடியா எனக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சேன்னு வைய்யி.. நான் பத்ரகாளியாவே.. மாறிருவேன்.. சொல்லிட்டேன்.. மேலே படிக்கத்தான் விடலை.. கொஞ்ச நாளைக்கு வேலைபார்க்கவாவது விட்டுத் தொலைங்க.. கல்யாணத்தைப் பண்ணிவைச்சு.. என்னை அடுப்படியில அடைச்சு வைக்கிறதை லேட்டாப் பண்ணித்தொலைங்க.. அதுக்கொன்னும் அவசரமில்ல...”

அதனால் சிவதாணு எந்த மாப்பிள்ளையைப் பற்றிச் சொன்னாலும் அவன் அதில் குறை கண்டுபிடிக்க ஆரம்பித்தான்...

“என்னய்யா.. எல்லா சம்பந்தத்தையும் தட்டி விடற.. நல்ல சம்பந்தம் கை நழுவிப் போகுதேய்யா...”

சிவதாணு புலம்பும்போது கண்ணதாசனின் மனச்சாட்சி உறுத்தும்தான்.. ஆனால்.. நல்ல சம்பந்தம் என்று அவர்களுக்கு மட்டும் தோன்றினால் போதுமா..? காவ்யாவுக்கும் தோன்ற வேண்டாமா..? என்னதான் அருமையான மாப்பிள்ளையாக இருந்தாலும்.. அவள்

மனதுக்குள் பிடிக்காமல் போய்விட்டால் அவள் திரும்பிப் பார்ப்பாளா...?

காவ்யா விரும்பாத மணவாழ்வை அவள்மீது திணிக்கக் கூடாது என்பதில் மட்டும் கண்ணதாசன் உறுதியாக இருந்தான்..

அவன் என்ன செய்து என்ன பண்ண..? காவ்யா அதற்கும் அவன்மீது குற்றம் கண்டு பிடித்தாள்...

"அதென்ன.. மாப்பிள்ளை எவனாவது பொண்ணு கேட்டு வந்தா என்ன விட்டுட்டு உங்கிட்ட சம்மதம் கேட்கறாங்க..? கட்டிக்கப் போறது நீயா.. இல்ல நானா...?"

அவள் கேட்பதிலும் அர்த்தம் இருந்ததுதான்.. சிவதாணுவும்.. அன்னபூரணியும் அதைத்தான் செய்து வந்தார்கள்.. காவ்யாவின் திருமணத்தை அவளிடம் பேசாமல் அவள் அண்ணனிடம் பேசி வைத்தார்கள்...

அவர்கள் பக்கம் அதற்கான நியாயம் இருந்தது.. குடும்பத்திற்கு மூத்தமகன்.. காவ்யாவின் அண்ணன்.. பொறுப்பான உயர் பதவியில் இருப்பவன்.. வீட்டுக்குத் தேவையானதை செய்து கொண்டிருப்பவன்...

அவனிடம் அவன் தங்கையின் திருமணத்தைப் பற்றிப் பேசாமல்.. வேறு யாரிடம் அவர்கள் பேசுவார்கள்..?

எது எப்படியோ.. கண்ணதாசனின் தயவில் காவ்யாவின் திருமணம் தள்ளிப் போடப் பட்டிருந்தது...

“அம்மா.. லேட்டாச்சு...”

“யாரால லேட்டாச்சு..? என்னாலயா..? இல்ல உங்கப்பாவாலயா..?”

இப்படியெல்லாம் இடக்காக கேள்வி கேட்க அன்னபூரணியால் மட்டுமே முடியும்...

“இப்ப அதாம்மா பிரச்னை...?”

“பின்னே..? அது பிரச்னை இல்லையா..? ஏழு கழுதை வயசாகியும் நீ எட்டு மணி வரைக்கும் தூங்கிக்கிட்டு இருப்ப.. உன்னை எழுப்பி விடறதுக்கு.. கையில காபித்தம்ளரோட.. நான் மாடிப்படியேறி வரனும்.. அதுக்கப்புறமா நீ அவசர அவசரமா குளிச்சு முடிச்சு ஓடி வரதுக்குள்ளே.. இட்லியை அவிச்சு.. மதியத்துக்கு சோறு கட்டி வைக்கனும்.. இத்தனையையும் நான் செஞ்சு வைச்சா.. நீ வந்து லேட்டாயிருச்சும்மான்னு சொல்லுவ... இப்ப என்னடி செய்யனும்..? இட்லியைப் பிய்ச்சு ஊட்டி விடனுமா...?”

“ஒன்னும் வேணாம்.. நானே முழுங்கிக்கறேன்...”

காவ்யா அவசரகதியில் பாத்திரங்களை உருட்ட.. அந்த சத்தத்தில் அன்னபூரணி அதட்டினாள்..

“எதுக்கு சாமான்ஜட்டை உருட்டுறவ..? நீ உருட்டி விட்டுட்டுப் போறத பொறுக்கி எடுத்து தேய்ச்சு வைக்க எனக்கென்ன எட்டுக் கையா இருக்கு...?”

“வேலைக்கு ஆள் இருக்கேம்மா...”

“அவ தானா பொறுக்கிக்க மாட்டா.. நான்தான் எடுத்துப் போடனும்...”

“அப்ப காலாகாலத்தில உன் செல்ல மகனுக்கு கல்யாணத்தை பண்ணி வைய்யி.. மருமக வந்து இதையெல்லாம் பாத்துக்குவா...”

“அந்தக் குடுப்பினைதான் எனக்கு இல்லாமப் போச்சே.. தொங்கச்சி கல்யாணம் நடக்காம நான் எவ கழுத்திலயும் தாலியக் கட்ட மாட்டேன்னு இவன் அடம் பிடிக்கிறானே...”

அன்னபூரணி.. அனல் பூரணியாக.. காவ்யா தமையனை முறைத்தாள்.. பல்லிடுக்கில் அடிக்குரலில் பேசினாள்...

“அண்ணா.. இப்படி பாசமலர் வேசம் கட்டாதேன்னு உனக்கு எத்தனை தரம் சொன்னாலும் உன் மண்டையில ஏறவே ஏறாதா..?”

“ஏறாது..” கண்ணதாசன் புன்னகை மன்னனாக ஆனான்..

“உனக்குத் தேவைன்னா நீ கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே...?”

“எனக்குத்தான் தேவையில்லையே...”

“இப்படிச் சொல்லிச் சொல்லியே உங்கம்மாகிட்ட என்னைத் வசவு வாங்க வைய்யி...”

“அது உனக்கும் அம்மாதான்...”

“எனக்கு முதல்ல.. உனக்குத்தான் அம்மா...”

தங்கையின் கோபத்தை செல்லமாக ரசித்தான் கண்ணதாசன்.. அவளோ உன் செல்லத்தை உன்னுடனே வைத்துக்கொள் என்று முகம் திருப்பிக் கொண்டாள்...

“போதும்மா...” என்று கிளம்பியவளை..

“இதாலயே ரெண்டு போடு போட்டிருவேன்..” என்று கரண்டியைக் காட்டி மிரட்டி நிறுத்தி வைத்தாள் அன்னபூரணி...

“ஏம்மா...”

“ரெண்டு இட்டிலி போதுமா...? அதான் வத்திக்குச்சி போல வத்திக்கிடக்க.. இப்படிச் சாப்பிட்டா எப்படி உடம்பு ஊதும்..? ஊரு பூராவும் எங்கம்மா எங்கண்ணனைத்தான் தாலாட்டுது.. என்னப் பேயோட்டுதுன்னு சொல்லி வைச்சிருக்க.. அவங்கள்ளாம் என்னப் பாத்து.. பூரணி

பெத்த பொண்ணுக்கு ஒழுங்காய் சாப்பாடு கூடப் போடறதில்லன்னு பேசி வைக்கிறதுக்கா பிளான் போடற..?"

"அம்மா..."

"கத்தாம இன்னும் ரெண்டு இட்டிலியைப் பிய்ச்சு வாயில போட்டுக்கிட்டு ஓடு..."

"ஆபிஸீக்கு நேரமாகுதும்மா..."

"இதனால ஒன்னும் அதிக நேரமாகிறாது.. கண்ணா.. நீ போகிற வழியில உந்தங்கச்சியை விட்டுட்டுப் போப்பா..."

"வேணாம்..."

"ஏன் வேணாம்..? அவன் கார் வைச்சிருக்கான்.. அதில போக உனக்குக் கசக்குதா..?"

"கசக்குதுதான்.. நான் சாதாரண கிளார்க்.. ஆபிசரோட ஓசிக்கார் சவாரியெல்லாம் எனக்குத் தோதுப்படாது.. என்னோட ஓட்டை வண்டியே எனக்குப் போதும்..."

காவ்யா முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு மதிய உணவுடப்பாவைத் தேடி எடுத்து.. துரித கதியில் ஹேண்ட் பாக்கில் திணித்தாள்...

"இவளைத் திருத்தவே முடியாதுடா..." என்று சொன்ன தாயிடம்..

"சின்னப்புள்ளதானம்மா..." என்று கண்ணதாசன் சொல்லிக் கொண்டிருந்ததை காதில் வாங்கிக் கொள்ளாதவளாக வாசலுக்கு பாய்ந்தாள்.. வண்டியை எடுத்தாள்.. போக்குவரத்தில் கலந்தாள்...

நேரம் ஆகிவிட்டதே என்ற பதட்ட உணர்வில் ஏதோ ஒரு திரைப்படத்தில் விவேக்.. 'ஓடிப்போயிரு.. ஓடிப் போயிரு..' என்று ஜெபித்துக் கொண்டே வண்டியை ஓட்டுவதைப் போல...

"நேரமாகிருச்சே.. நேரமாகிருச்சே.." என்று முணுமுணுத்தபடி வண்டியை ஓட்டினாள்..

சிக்னலில் தாமதித்தவள்.. வண்டியைக் கிளப்பித் திருப்ப.. அவளுக்கு முன்னால் போய் கொண்டிருந்த காரும் அதே திருப்பத்தில் திரும்பியது...

காவ்யா அதை எதிர்பார்த்திருக்கவில்லை.. நேரமாகி விட்டது என்ற பதட்டத்தில் இருந்தவள் வேகத்தை குறைக்கும் முன்னால் அந்தக் காரில் மோதிவிட்டாள்...

"டங்..." என்ற பலத்த சப்தத்துடன் அந்தக் காரின் மீது அவள் வண்டி மோத.. காவ்யா அலறியடித்துக் கொண்டு பிரேக்கைப் பிடித்தாள்...

அவளைப் போலவே காரை ஓட்டிக் கொண்டிருந்தவனும் பிரேக்கில் கால் வைத்திருக்க

வேண்டும்.. காரும் அசையாமல் நின்று விட்டது.. அவன் கதவைத்திறந்து மிடுக்குடன் வெளிப்பட்டான்...

கூட்டம் கூடி விட்டது.. காவ்யா சுதாரித்து வண்டியைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து காலை ஊன்றிக் கொண்டதால் வண்டி குடைசாயாமல் தப்பித்து விட்டது...

ஆனால்.. காரின் மீது அது மோதிய வேகத்தில் காரின் பக்கக் கதவில் பெண்டு விழுந்து.. பெயிண்ட் உதிர்ந்து.. பார்க்கச் சசிக்காமல் காரின் வடிவம் மாறிப் போனது...

இறங்கி வந்தவன்.. அவளைக் கவனிக்காமல் சிதிலமடைந்து விட்டக் காரைக் கவனித்ததில் கூட்டம் கோபம் கொண்டது...

“ஏம்ப்பா.. ஏய்ய்.. எந்த ஊருக்காரன்ப்பா நீ..? இப்புடியா பொம்பளப் புள்ள மேல காரை ஏத்துவ..? கண்ணை என்ன பொடனியிலயா வைச்சுக்கிட்டு காரை ஓட்டின...?”

பெண்களுக்கு வக்காலத்து வாங்கும் மதுரை மண்ணின் மைந்தர்களைப் பற்றித் தெரியாத அவன் வியப்புடன் புருவங்களை உயர்த்தினான்...

# 4

*கிட்டவந்து கட்டிமுத்தம்...*
*நீ தரவே ஆசைகொண்டேன்...*

**பெ**ண்களுக்கான பாதுகாப்பையும்.. மரியாதை-யையும் கொடுப்பதில் மதுரை மக்களை யாரும் மிஞ்சிவிட முடியாது.. போருந்தில் பயணம் செய்யும் போது.. பெண்கள் வந்து விட்டால்.. புதுப்பெண்டாட்டியின் அருகில் உட்கார்ந்திருக்கும் புதுமாப்பிள்ளை கூட எழுந்து நின்று இடம் கொடுப்பான்...

இதுதான் மதுரை...!

‘பொம்பளப் புள்ளப்பா...’

இந்த வார்த்தையில் தொனிக்கும் வாத்சல்யத்தை மதுரை மண்ணில் வாழ்ந்து பார்த்தால்தான் புரிந்து கொள்ள முடியும்...

மீனாட்சி ஆட்சி செய்யும் மண் என்பதால் இந்த மரியாதை அவர்கள் மனதில் வந்ததோ.. இல்லை.. அழகர் கோவில் கொண்டுள்ள ஊரில் அவரின் தங்கைக்கு நிகரான

பெண்களைக் காப்பது மதுரை மண்ணின் தர்மம் என்பதால் அந்த வழக்கம் வந்ததோ.. தெரியாது...

மதுரை மக்கள்... பெண்களுக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள்..

"ஹலோ.. இவங்க மேல நான் காரை மோதல இவங்கதான் என்காரு மேல இவங்க வண்டியை மோத விட்டிருக்காங்க.. பாருங்க.. என் காருக்கு என்ன கதியாகி இருக்குன்னு..."

அவ்வளவுதான் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் பொங்கி விட்டார்கள்...

"உனக்கு அது ஒரு குறையாய் போச்சா..? ஏம்ப்பா.. இந்தப்புள்ள காயம் படாம தப்பிச்சிருச்சேன்னு சொல்லாம.. உன் காருல பெயிண்டு போனதப் பத்தியா கதை சொல்ற..? இந்தப் புள்ளயவிட உன் காருதான் உனக்குப் பெரிசா போச்சா...?"

'பின்னே..? இல்லையா..?' என்று கேட்கத்தான் அவனுக்குத் தோன்றியது....

கோடிக் கணக்கில் மதிப்புப் பெறும் வெளிநாட்டுக் காரைவிட அவள் பெரிதில்லை என்று சொன்னால் அந்த மக்கள் முதுகில் டின் கட்டி விடுவார்கள் போலத் தோன்றியதால் அவன் காவ்யாவிடமே நியாயம் கேட்டான்...

“ஏங்க.. உங்கமேல நானா மோதினேன்...?”

உன்மீது என் காரா மோதியது என்று அவன் கேட்டிருக்க வேண்டும்.. ஒரு வார்த்தை இடம் மாறியதில் அவளுக்கு கோபம் வந்துவிட்டது...

“எங்க வந்து.. யார்மேல மோதுவிங்க..? என்மேல மோதிருவீங்களோ..? இது மதுரை.. பாத்துப் பேசுங்க...”

அவளின் படபடப்பில் அதுவரை அவளைச் சரியாகப் பார்க்காதவன்... உச்சிமுதல் பாதம்வரை ஊன்றிக் கவனித்தான்...

பார்த்தால் உடனே மனதில் ஒட்டிக் கொள்வதைப் போல பளீரென்ற அழகுடன் இருந்தவளின் மீது அவனுக்குள் சுவராஸ்யம் ஏற்பட்டது..

“நீங்கதானே என்மேல மோதினிங்க...?”

இப்போது வேண்டுமென்றே அவன் காரை விட்டுவிட.. காவ்யா கொதிகலனானாள்...

“நீங்க பெரிய கள்ளழகரு.. உங்க மேல ஆசைப்பட்டு மோதிட்டேன்.. போவீங்களா...”

அவனுக்கு யார் அந்த கள்ளழகர் என்று தெரியவில்லை... அந்த கள்ளழகர் மன்மதனை விடப் பேரழகன் என்பதும்.. அந்தக் கள்ளழகரின் கண்ணழகுக்கு

ஈடான அழகு மூவுலகத்திலும் இல்லை என்பதும்.. அந்தக் கள்ளத்தனம் மிக்க கள்ளழகர் பெண்களின் மனதைக் கொள்ளையடிப்பதில் வல்லவன் என்பதும் அவனுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை...

அவன் சென்னைவாசி.. வெளிநாடுகளுக்கு பறந்து.. பறந்து வியாபாரம் செய்பவன்.. கள்ளழகரின் அழகின் பெருமையை அவன் அறிந்திருக்கவில்லை.. அதனால்..

“யார் அந்த கள்ளழகர்..,” என்று கேட்டு விட்டான்..

“கேட்டிங்களா அண்ணே.. நம்ம ஊருக்கே வந்து இவரு அழகரைத் தெரியலங்கிறாரு.. இவரைச் சும்மா விடலாமா..?” என்று காவ்யா கூடியிருந்த கூட்டத்தைத் தூண்டிவிட்டாள்...

“அதானே.. எந்தக் காட்டு மனுசனோ வந்து எங்க மதுரை அழகரை யாருன்னு கேட்பானா..? ஏம்பா... உனக்கு கள்ளழகரைத் தெரியலைன்னா.. மதுரைக்குள்ள எதுக்கு வந்த...?”

இது என்னடா வம்பாப் போச்சு என்று ஆகிவிட்டது அவனுக்கு...

‘கள்ளழகரைத் தெரியலைன்னா மதுரைக்குள்ள வரக்கூடாதா..?’

இந்த வியாக்கினத்தை வேறு எந்த ஊரிலும் அவன் கேட்டதில்லை.. அவனுக்கு என்ன தெரியும்..? அண்ணனும்.. தங்கையுமான.. அழகரும்.. மீனாட்சியும்... மதுரை மண்ணின் சுவாசக்காற்று என்பது...

“அழகர் ஆத்தில இறங்கறப்ப வந்து பாருப்பா.. அவரு யாரு.. எப்பேற்பட்டவருன்னு உனக்கு அப்பப் புரியும்..”

அழகர் எதற்காக ஆற்றில் இறங்க வேண்டும் என்று அவனுக்குப் புரியவில்லை.. அவர் மீனாட்சியின் அருமை அண்ணன்.. மீனாட்சி கல்யாணத்தின்போது சீர் கொண்டுவர வைகை ஆற்றில் இறங்கினார்... அவர் இறங்கும் போது மழை கொட்டோ கொட்டென்று கொட்ட. வைகையாற்றில் வெள்ளம் வந்தது...

இந்தக் கதையெல்லாம் அவனுக்குத் தெரியுமா..? அழகர் ஆற்றில் இறங்கும் அந்த வைபவத்தைக் காணக் கண்கோடி வேண்டும் என்று காவ்யா மெய் சிலிர்ப்பதை அவனால் புரிந்து கொள்ளத்தான் முடியுமா..? இன்றும் அழகர் ஆற்றில் இறங்கினால் மழை கொட்டோ கொட்டென்று கொட்டி விடும் தெய்வச் செயலை அவன் கண்டிருக்கிறானா...?

எதுவும் தெரியாதவனை நிற்க வைத்து கேள்வி கேட்டால் அவன்தான் என்ன பதிலைச் சொல்லுவான்...?

“விடுப்பா.. ஏய்.. வெளியூர்காரனுக்கு நம்ம ஊரு அழகரைப் பத்தி என்ன தெரியும்..? ஏம்ப்பா.. மதுரைக்குள்ள காரை ஓட்டறப்ப சூதானமா ஓட்டனும்னு உனக்குத் தெரியாதா...?”

‘சூதானம்..’ என்றால் ‘பத்திரம்..’ என்று மதுரையில் அர்த்தமென்றும் அவனுக்குத் தெரியவில்லை...

அதனால் அவன் சாட்சிக்காரர்களை விட்டுவிட்டு சண்டைக்காரியிடமே பேச்சு வார்த்தையை தொடர்ந்தான்..

“லுக் மேடம்...”

‘மேடமா..? இவனுக்கு என்னைப் பார்த்தால் மேடம் போலத் தெரியுதா..?’

காலையில் கண்ணாடி பார்க்காமல் வந்து விட்ட மாபெரும் தவறை நினைத்து வெகுவாக கவலைப்பட்டுப் போனாள் காவ்யா... இப்படி விளிக்கிறவனை ‘லுக்’ விடாமல் இருக்கக் கூடாது என்று இப்போது அவள் அவனை உச்சி முதல் உள்ளங்கால்வரை பார்த்தும் வைத்தாள்...

‘நல்லாத்தான் இருக்கான்...’

அவன் நன்றாகத்தான் இருந்தான்.. வாட்டசாட்மாய்.. ஆறடி உயரத்தில்.. அளவான மீசையோடு கம்பீரமாக இருந்தான்.. அவள் பார்வையிடுவதைக் கவனித்த ரகசிய மின்னல் அவன் கண்களில் வந்தது...

"நீங்களே சொல்லுங்க மேடம்..."

மேடத்தை விடாமல் தொடுத்துக் கொண்டிருந்தவனை என்ன செய்தால் தேவலாம் என்ற கொலை வெறிக்கு ஆளான காவ்யா...

"என்னத்தைச் சொல்லுறது..?" என்று வெடுவெடுத்தாள்...

"நான் காரைத் திருப்பினேன்.. நீங்களும் உங்க வண்டியைத் திருப்புனீங்க..."

"உங்களுக்குத்தான் இந்தப் பக்கம் வேலையிருக்குதா..? எங்களுக்கெல்லாம் இல்லையா..? நீங்க இன்னைக்கு வந்த ஆளு..."

"கரெக்டா கண்டு பிடிச்சிட்டிங்களே.. நான் காலையிலதாங்க மதுரைக்குள் என்ட்ரி ஆனேன்.. பாண்டியன் ஹோட்டலில் ரூமைப் போட்டு.. குளிச்சு சாப்பிட்டு விட்டு கிளம்பி வர்றேன்..."

"இந்தக் கதைய நான் கேட்டேனா..?" காவ்யா முறைத்தாள்...

"நீங்க கேட்கலைன்னாலும் நான் சொல்லனுமில்ல..? இது என் கடமைங்க..."

"உங்க கடமை உணர்ச்சியில புல்லரிச்சுப் போயிட்டேங்க.. போதுமா.. இத்தனை வருசமா.. இந்தத்

திருப்பத்திலதான் நானும் வண்டியைத் திருப்பறேன்.. ஒருநாளும் இதுபோல ஆனதில்ல...”

“ஹைய்யோ.. இதைத்தாங்க நானும் சொல்ல நினைச்சேன்.. இத்தனை நாளா.. நானும் எத்தனையோ ஊர்களுக்குப் போயிருக்கேன்.. ஆனா.. உங்களைப் போல யாரையும் நான் பார்த்ததில்லை...” அவன் விசமச் சிரிப்புடன் சொன்னான்...

“என்னது..?” காவ்யா வீரத் தமிழச்சியாகி முறைத்தாள்...

“உங்க மேல மோதினதைப் போல வேற யாரு மேலயும் நான் மோதினதில்லன்னு சொல்ல வந்தேங்க... டங் ஸ்லிப்பாகிருச்சு..”

“இப்பயும் உங்க நாக்கு பிறண்டுதான் பேசுது.. நீங்க என்மேல மோதலை சாரே.. என் வண்டிமேல உங்க காரு மோதுச்சு...”

“ஓ.. இதை அப்படிக்கூடச் சொல்லலாம்...”

“சொல்லுவீங்க.. சொல்லுவீங்க.. பூவை புய்ப்பம்னும் சொல்லலாம்.. நீங்க சொன்னதப் போலவும் சொல்லலாம்கிற மாதிரியில்ல உங்க கதை இருக்கு...”

“நம்ம கதையை விடுங்க...”

“நம்ம கதையா..? நீங்க யாரு..? நான் யாரு..? நமக்குள்ள என்ன கதை ஓடுது...?”

“எந்தக் கதையும் ஓடலை.. நாம சமாதானமாப் போயிரலாமே...”

“ஓஹோ.. நாங்க சண்டைக்கு வந்தோமாக்கும்..? கேட்டிங்களா அண்ணே.. இவரு பெரிய சீமைத்துரை.. சீமையில இருந்து காரை இறக்குமதி பண்ணியிருக்காரு.. இவரோட காரை நான் இடிச்சு நொறுக்கிட்டேன்னு என்மேல பழியப் போட்டுட்டு.. இப்ப ஒன்னுமே நடக்காத மாதிரி சமாதானம் பேச வர்றாரு...”

“ஏங்க.. இப்ப நீங்களும்.. நானும்தான பேசிக்கிட்டு இருக்கோம்.. எதுக்காக உங்க அண்ணண்களை ஜட்ஜ் மென்டுக்கு கூப்பிடறிங்க...?”

அவன் பேசிய விதத்தில் காவ்யாவுக்கு சிரிப்பு வந்து விட்டது.. அவனுடைய கார் சரியான அடி வாங்கியிருப்பதை முதல் பார்வையிலேயே அவள் கண்டு கொண்டிருந்தாள்.. அதை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டு வைத்தால்.. எங்கே அவன் அதற்கான செலவைக் கொடு என்று கேட்டு விடுவானோ என்ற பயத்தில்தான் அவள் மதுரை மாநகரின் அண்ணன் மார்களை துணைக்கு அழைத்துக் கொண்டிருந்தாள்...

அது தெரியாதவனாக.. அவன் அவளுடன் சமாதானம் பேச வந்து விட்டதில் அவளின் ரகசிய சிரிப்பு அதிகமானது...

“என்னசாரே... ஊருக்குப் புதுசா..?”

“ஆமாம்ன்னு உங்களுக்கும் தெரியும்.. உங்க அண்ணன்களுக்கும் தெரியும்.. நான் வெளியூர்தான்...”

“காரை விட்டு மோதிட்டு வியாக்கினம் பேசறிங்களா...?”

“மோதினதில யாருக்கு டேமேஜ் ஆகியிருக்கு..? உங்களுக்கா..? இல்லை.. உங்க வண்டிக்கா..?”

“கேட்டிங்களா அண்ணே.. எனக்கு அடி படலையாம்.. என் கை.. கால் உடையலியாம்.. என் எழும்பு நொறுங்கலையாம்... என் வண்டி சுக்கு நூறாகலையாம்..”

அவள் அடுக்கியதில் அவன் அயர்ந்து விட்டான்...

“ஏங்க.. நான் கேட்ட கேள்விக்கு இத்தனை அர்த்தமிருக்கா..?”

“கல்யாண வயசில இருக்கற பொம்பளப்புள்ள மேல காரை விட்டு மோதிட்டு.. எதுவும் ஆகலைன்னு பேசறாரு பாருங்கண்ணே...”

எத்தனை நேரம்தான் கூடியிருந்த கூட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்..? பஞ்சாயத்துக்கு பெயர் பெற்ற மதுரை மண்ணில் ‘கேட்டிங்களா அண்ணே...’ ‘பார்த்தீங்களா அண்ணே..’ என்ற காவ்யாவின் அபயக்குரலை கேட்ட பின்னாலும் அந்த அண்ணன்மார்கள் சும்மா இருந்தால் அழகர் கோவித்துக் கொள்ள மாட்டாரா..?

“ஏம்பா.. அதான் பஞ்சாயத்து பண்ண நாங்க கூடியிருக்கோமில்ல.. எங்கள விட்டுட்டு பொம்பளப் புள்ளைகிட்ட என்ன பேச்சு வார்த்தை நடத்திக்கிட்டு இருக்கிறவன்...?”

“ஹலோ... யாருங்க நீங்க...? முதல்ல பஞ்சாயத்துன்னா என்னன்னு சொல்லுங்க...”

“பாருடா.. இவன் நம்ம பஞ்சாயத்தைப் பத்தித் தெரியாம பேசறான்.. விட்டு விளாசுங்கடா...”

“நான் போலிசைக் கூப்பிடறேன்...”

அவன் செல்போனை கையில் எடுக்கவும் காவ்யா பயந்து போனாள்.. ராங் ரூட்டில் வந்து அவன் கார்மேல் மோதி அதைச் சேதாரம் பண்ணியது அவள்தான்.. விசாரணையில் அது வெளிவந்து விட்டால் அவள் நிலைமை என்ன ஆகும்...?

# 5

## *ஓரவிழிப் பார்வையிலே...*
## *நீ எனைத் தேட ஆசை கொண்டேன்..*

**கா**வ்யா தடாலடியாக பேச்சை மாற்றினாள்...

“விட்டுங்க அண்ணே... பிழைச்சுப் போகட்டும்...”

அவளின் அந்தர் பல்டியை அவன் வெகுவாக ரசித்தான்...

‘இவ சொல்லலைன்னா நான் பிழைக்க மாட்டேனாமா..? என்னமா பல்டி அடிக்கிறா..! யார் பிழைக்கிறாங்களோ.. இல்லையோ.. இவ பிழைச்சுக்குவா..’

“பாவம்.. வெளியூர்காரரு...”

‘வெளியூர்காரன்னா.. பாவப்பட்டவனா..?’

“இப்பத்தான் காரை ஓட்டப் பழகியிருப்பாரு போல..”

‘பிறந்ததில இருந்து பழகிப்பார்த்தவன் நான்...’

“ஓட்டத் தெரியாம ஓட்டி.. என் வண்டி மேல மோதிட்டாரு..”

‘இதை நான் சொல்லனும்...’

“நம்ம ஊருக்கு வந்தவர.. நாமதான் மன்னிக்கனும்..”

‘ஆஹா.. என்னே.. இவ பெருந்தன்மை..!’

காவ்யாவின் பேச்சில் பஞ்சாயத்துக்கு வந்த அண்ணன்மார்கள் மனம் மாறினார்கள்... மீசையை முறுக்கியபடி அவனைப் பார்த்து

“தங்கச்சி.. சொல்றதாலே விட்டுட்டுப் போறோம்.. இல்லைன்னா நடக்கறதே வேற.. இனியாச்சும் பாத்து காரை ஓட்டு...” என்று அறிவுரை சொல்லி விட்டு கலைந்து போனார்கள்...

அதற்கு மேலும் அங்கே நின்றால் அவன் சேதாரத்திற்கான பணத்தைக் கேட்டு விடுவான் என்ற பயத்தில் காவ்யாவும் கிளம்ப யத்தனித்தாள்..

“ஹலோ...” என்ற அவன் குரல் அவளை நிறுத்தியது...

“இது மதுரை சாரே... எதுவா இருந்தாலும் நெத்தியடியா நேராப் பேசித்தான் எங்களுக்குப் பழக்கம்.. இந்தப் போன் போடற வேலைய எல்லாம் வேற யாருகிட்டயாவது வைச்சுக்கறிங்களா...?”

“நேராப் பேசனும்னா பெயர் தெரிய வேணாமா..?”

"உங்க பேரை நான் கேட்டேனா..?"

சிலுப்பிக் கொள்ளும்போதே... இவன் பெயர் என்னவாக இருக்கக் கூடும் என்ற எண்ண இழை அவள் மனதில் ஓடியது...

அதை அறிந்து கொண்டவனைப் போல.. விசமமாக சிரித்தவன்...

"என் பெயர் அர்ஜீன்.." என்றான்..

'அர்ஜீன மகராஜனாக்கும்.. ஆளைப் பாத்தா ஊருக்கு ஒரு பொண்ண லுக் விட்டு கணக்கு பண்ணுகிறவனப் போலத்தான் தெரியுது...'

அவள் ஒரு மார்க்கமாக அவனைப் பார்த்துவிட்டு வண்டியைக் கிளப்பப் போனாள்..

"பார்த்தீங்களா... நெத்தியடியைப் பத்தியெல்லாம் விளாசித் தள்ளிட்டு ஒன்னும் சொல்லாம போறிங்களே..."

'இவனுக்கு நான் என்னத்தைச் சொல்றது..?' குழப்பமாக அர்ஜீனைப் பார்த்தாள் காவ்யா...

"என் பெயரை மட்டும் கரெக்ட் பண்ணினீங்களே.."

"கரெக்ட் பண்ணினேனா..? நானா..?"

"நீங்கதான்.. பின்ன அந்த ரெட்கலர் ஸாரி கட்டிட்டுப் போற பொண்ணா வந்து கரெக்ட் பண்ணுச்சு..?"

'இவன் என்ன இப்படிப் பேசி வைக்கிறான்..?'

கலவரமான காவ்யா சுற்று முற்றும் பார்த்து வைத்தாள்.. அவர்கள் சண்டை போடுவதற்கு வசதியாக.. காரையும்.. கைனடிக் ஹோண்டாவையும் ஓரம் கட்டியிருந்ததால்.. சாலையில் போக்குவரத்து பாதிக்காமல் கார்களும்.. சைக்கிள்களும்.. இருசக்கர வாகனங்களும்.. நடந்து செல்பவர்களுமாக இருந்தது...

'இவங்களில யார் காதிலயாவது இவன் பேசி வைக்கிறது விழுந்து வைச்சா.. என் கதி.. என்னத்துக்கு ஆகிறது...'

"ஊஹீம்.. நீங்க அடங்கவே மாட்டிங்க.. திரும்பவும் அண்ணன்களை பஞ்சாயத்துப் பண்ண அழைச்சுர வேண்டியதுதான்..."

"அது எதுக்குங்க.. உங்க அண்ணன்களுக்கு வீண் சிரமத்தைக் குடுக்கறிங்க...?"

"அதை அவங்க சொல்லனும்.. நீங்க சொல்லாதீங்க. கரெக்ட் பண்றதைப் பத்தி என்கிட்டப் பேசறிங்களா..?"

"ஓ.. நீங்க அப்படி வருகிறீங்களா...?"

"எப்படியும் வரலை.. தேமேன்னு இந்தத் திருப்பத்திலதான் திரும்பினேன்..."

“தடால்ன்னு என் கார்மேல மோதி.. கோடு போட்டு பெயிண்டை சுரண்டிட்டீங்க...”

‘இவன் அதை விடவே மாட்டானா..? இல்ல.. இதைச்சொல்லியே கரெக்ட் பண்ணப் பார்க்கிறானா...?’

அர்ஜீனின் கள்ளப் பார்வையைப் பார்த்தால் ஆமாம் என்பது போலத்தான் இருந்தது...

“அர்ஜினன்னு சரியாத்தான் பேரு வைச்சிருக்காங்க..”

“நீங்க வைச்சிங்களா...?”

“ஓ.. அந்த நினைப்பு வேற மனசில இருக்கா..? ஆளைப் பாத்தா பதினைஞ்சு கழுதை வயசாகிருக்கும் போலத் தெரியுது.. இதில இவரு பிறந்தப்ப.. நான் பக்கத்தில நின்னு பெயரை வைச்சேனாம்... பப்பான்னுதான் மனசில நினப்பு...”

அவள் படபடக்க.. அவன் அலட்டிக் கொள்ளாமல் அவளை உற்றுப் பார்த்தான் காவ்யா பல்லைக் கடித்தாள்...

“பார்வையென்ன வேண்டிக்கிடக்கு...”

“உங்களைப் பார்த்தா பாப்பா மாதிரி தெரியலையே..”

“இது வேறயா..? நான் பப்பான்னு சொன்னது உங்களை... என்னையில்ல...”

“ஓ.. ஆமாம்.. அதென்ன.. பதினைந்து கழுதை வயசுன்னு சொல்கிறிங்க.. எங்க பாட்டி ஏழு கழுதை வயசுன்னுதான் சொல்லுவாங்க.. இங்கே கணக்கு இடிக்குதே...”

‘கணக்கு’ என்ற வார்த்தையைச் சொல்லியவனின் கண்கள் மின்னி அவனைக் காட்டிக் கொடுத்தன...

‘இவன் கணக்கு பண்றதிலேயே குறியாய் இருக்கானே...’ காவ்யாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது...

“ஏழு கழுதை வயசையெல்லாம் ஏற்கனெவே என்னப் பாத்து எங்க அம்மா சொல்லியாச்சு.. நீங்களும்.. நானும் என்ன ஒரே வயசா...?”

“அது இருக்காது...” அர்ஜீன் பெருந்தன்மையாக ஒப்புக் கொண்டான்...

அத்தோடு நிறுத்தாமல் அவளை உச்சி முதல் உள்ளங்கால் வரை திரும்பவும் பார்வையிட்டான்...

‘ம்ஹீம்.. பொண்ணு பாக்க வந்த மாப்பிள்ளைகூட இப்படிப் பாக்க மாட்டான்...’

காவ்யா எரிச்சல்பட்டுக் கொண்டிருக்கும் போதே அந்தக் கேள்வியைக் கேட்டான்...

“என்ன.. உங்களுக்கு.. பதினாறு.. பதினேழு வயது இருக்குமா..?” காவ்யாவுக்கு தூக்கிவாரிப் போட்டது...

‘ஆத்தாடி.. இம்புட்டு நேரமும் இவன் என் வயசைத்தான் கணக்குப் பண்ணிக்கிட்டு இருந்தானா..?’

ஆனாலும் அவன் அநியாயத்திற்கு அவளை பதினாறு வயது பருவ மங்கையாக்கியதில் காவ்யாவுக்குள் லேசான சிரிப்பு குமிழிட்டது...

‘ஆளு.. பக்கா கில்லாடிதான்...’

“என்னங்க.. நான் சொன்னது சரிதானே...?”

“பின்னே..? நீங்க சொன்னா பொய்யாவா இருக்கும்..? யாரு நீங்க..? அர்ச்சுனனில்ல.. கண்ணில படற பொண்ணுகளையெல்லாம் கணக்குப் பண்ணிக் கவிழ்க்கிறதில நீங்க.. மகாபாரத அர்ஜீன மன்னனாச்சே..”

“அப்படிங்கறிங்க...?”

இவனுடன் பேசிக் கொண்டிருந்தால் இப்படியே தான் பேச்சை இழுத்துக் கொண்டிருப்பான்.. இது வேலைக்கு ஆகாது என்ற முடிவுக்கு வந்திருந்த காவ்யா.. அப்படித்தான் என்று பதில் சொல்லாமல் நகர முனைந்தாள்...

“எந்த ஸ்கூல்...?”

அவன் கேட்ட கேள்வியில் அவளுடைய கைனடிக் ஹோண்டாவிற்கே கோபம் வந்து நகர மறுத்தது...

“ஸ்கூலா..?” விளக்கெண்ணையைக் குடித்தவளைப் போல முகத்தை வைத்துக் கொண்டு காவ்யா கேட்டாள்...

“ம்ம்ம்.. ஸ்கூல்தான்.. பதினாறு வயதில் ஸ்கூலில் தான படிப்பாங்க..? அதான்.. எந்த ஸ்கூலில் படிக்கறிங்கன்னு கேட்டேன்...” அவன் பொறுமையாக விளக்கம் சொன்னான்...

‘நிஜமாவே இவன் என்னை ஸ்கூலுக்குப் போகிற பொண்ணுன்னுதான் நினைக்கிறானா..?’

சந்தேகத்துடன் அவன் முகத்தை ஊன்றிக் கவனித்து ஆராய்ச்சி பார்வை பார்த்தாள் காவ்யா... அவன் முகத்தில் சலனமேயில்லை.. உணர்வுகளை துடைத்து வைத்ததைப் போலவும் ஒரு முகம் இருக்கக்கூடும் என்பதை இப்போது தான் நேரடியாக காவ்யா பார்க்கிறாள்...

அவளைச் சுற்றியிருந்தவர்கள் அதுபோன்ற இயல்புடன் இருந்ததில்லை.. அடுத்தது காட்டும் பளிங்கைப் போல.. நெஞ்சு கடுத்ததை உடனடியாக முகத்தில் காட்டி விடுவார்கள்...

“அடியாத்தி.. இந்தாளு என்ன முகத்திலே முள்ளைக் கட்டி வைச்சிருக்காரு...”

அன்னபூரணி கோபம் கொண்ட சிவதாணுவை வர்ணிக்கும் வார்த்தைகள் இவை.. அவ்வபோது இந்த வார்த்தைகள் காவ்யாவை நோக்கியும் பாய்ந்து வரும்.. கண்ணதாசன் மட்டும் இதில் விதிவிலக்கு... அவன் புன்னகை மன்னன்..! முகத்தில் முள்ளைக் கட்டிக் கொள்ளும் கோபத்தை அவன் காட்டியதேயில்லை...

அப்படிப் பட்டகுண இயல்புடைய மக்களைப் பார்த்து பழகிய காவ்யாவிற்கு.. இப்படிக்கூட உணர்வுகள் துடைத்த முகத்துடன் ஒருவன் இருப்பானா என்றிருந்தது..

காவ்யாவுக்கு ‘பள்ளிக்கூடம்’ என்று பெயரை எழுதிவைத்து படிக்கக்கூடப் பிடிக்காது.. அவள் படித்தது கட்டுக் கோப்பை உயிராய் நினைக்கும் பள்ளியில்... அதைத்தவிர வேறு எந்தப் பள்ளியில் படித்தாலும் காவ்யாவை வழிக்கு கொண்டு வரமுடியாது என்று அன்னபூரணி அபிப்ராயப்பட்டு விட்டதால்.. மேல்நிலைப் பள்ளிக் கல்வி வரை அதே பள்ளியில்தான் காவ்யா படிப்பைத் தொடர வேண்டியிருந்தது...

மேல்நிலைப் பள்ளியின் தேர்வை எழுதி முடித்து விட்டு வீட்டுக்கு வந்தவள்.. மொட்டை மாடிக்குப் போய்.. கொட்டும் மழையில் நனைந்தபடி.. இரண்டு கைகளையும் விரித்து..

*“விடுதலை... விடுதலை...*
*விடுதலை...”*

என்று உற்சாகப் பாடல் பாடியதை அர்ஜீன் அறிவானா..? அறிந்திருந்தால் அவள் பள்ளியில் படிக்கிறாளா என்று கேட்டிருப்பானா..?

இவனை என்னதான் செய்வது என்று யோசித்தவளுக்கு.. எதுவும் செய்ய முடியாது என்ற ஞானோதயம் வந்தது.. ஏதாவது செய்யலாமா என்று நினைக்கக் கூட அவளுக்கு நேரமில்லை என்பதை அவளது அறிவு வலியுறுத்தியது...

ஆனாலும் இவனைச் சும்மா விடக்கூடாது என்ற கோபத்துடன் எதிரே தெரிந்த மழலையர் பள்ளியை கை காட்டினாள் காவ்யா..

“அதோ.. அந்த ஸ்கூல்தான்...”

திரும்பிப் பார்த்தவனின் கண்களில் மின்னல் வந்து போனது.. அவன் உதட்டை வளைத்து ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தபடி...

“ஓ.. எல்.கே.ஜி படிக்கிற பாப்பாவா நீங்க..?” என்று கேட்டான்...

“பாப்பா.. பீப்பான்னு சொன்னீங்க.. எனக்கு கெட்ட கோபம் வந்திரும்..”

“கோபமே கெட்டது.. இதில நல்ல கோபம்.. கெட்ட கோபம்ன்னு இரண்டு வகையிருக்கா என்ன..?”

“ரௌத்ரம் பழகுன்னு பாரதியாரே சொல்லியிருக்கார்.. நினைப்பில வையுங்க.. ரௌத்ரம் மனுசங்களுக்கு அழகு...”

“ஓ....” அவன் மீண்டும் உதட்டைச் சுழித்தான்...

*‘உசிரே போகுது.. உசிரே போகுது...*
*உதட்டை நீ கொஞ்சம் சுழிக்கையிலே..’*

தேவையில்லாமல் இந்தப் பாடல் எதற்காக வந்து மனதில் மையம் கொள்கிறது என்று தெரியாமல் திகைத்தாள் காவ்யா...

‘இவன் பண்ணும் அழும்பில் என்னால நேரத்துக்கு வேலைக்கு போக முடியலையில்ல.. அதனால இந்தப் பாட்டுத் தோணியிருக்கும்..’ மனதை சமாதானப் படுத்தி அடக்கி வைத்தாள்...

*‘மானே தவிக்கிறேன்...*
*மடிப்பிச்சை கேட்கிறேன்..*
*வழியை விடடா...*
*மாங்கா மடையா...’*

அவளைக் கேட்காமல் மனதில் பாடல் வந்து விட்ட கோபத்தில் அதே பாடலையே அவளின் விருப்பம் போல மனதுக்குள் மாற்றிப் பாடி வன்மம் தீர்த்துக் கொண்டாள் காவ்யா...

“பெயர் என்ன..?” என்றான் அவன்...

“ராணி மங்கம்மா...” என்றாள் அவள்...

“நினைச்சேன்..” அதற்கும் அவளை ஒருமார்க்கமாக பார்த்து வைத்தான் அவன்...

“நினைச்சுக்கிட்டே நில்லுங்க.. நினைப்பு பொழப்பக் கெடுக்குமாம்.. உங்களுக்குத்தான் பொழப்பில்ல... வேலை வெட்டியில்லாம.. விட்ட விடிகாலையிலே பொம்பளப் புள்ளகிட்ட வம்பு வளர்த்துக்கிட்டு இருக்கீங்க.. எனக்கு பொழப்பு இருக்கே.. அதனால.. நான் ஜீட் விடறேன்...” அவன் பதிலை எதிர்பார்க்காமல் கைனடிக் ஹோண்டாவில் பறந்துவிட்டாள் காவ்யா...

# 6

*சில்லென்ற மழைக்காற்றில்...*
*உன்முகம் வருட ஆசை கொண்டேன்...*

'இன்ட்ரெஸ்டிங்...!'

அவள் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்த அர்ஜீனின் முகத்தில் புன்முறுவல் வந்தது...

அதுநேரம்வரை அவன் மனதிலிருந்த எரிச்சல் மறைந்து.. ஓர் மயிலிறகு மனம் வருடுவதைப் போல உணர்ந்தான் அவன்..

'இவ யாராய் இருப்பா...?'

பெயர்கூடச் சொல்லாமல் பறந்து விட்டவளின் முகவரியை அறிந்து கொள்ள அவன் மனம் துடித்தது.. அவசரமாக காரில் ஏறி.. காவ்யா போன திசையிலேயே காரை ஓட்டினான் அவன்...

தூரத்தில் காவ்யா செல்வது அவன் பார்வை வட்டத்துக்குள் வந்தது...

'பிடிச்சிட்டேன்..' அவன் மனதில் வெற்றிப் பெருமிதம் வந்தது...

இடைவெளி விட்டுக் காரைப் பின்தொடர்ந்தான்.. அவளை அவன் தொடர்ந்து கொண்டிருப்பதை அறியாதவளாய் கைனடிக் ஹோண்டாவை புயல் வேகத்தில் விரட்டிக் கொண்டிருந்தாள் காவ்யா...

'இந்த வேகத்தில போனா.. காரில இடிக்க மாட்டாளா...?'

லேசாகச் சிரித்துக் கொண்டான் அர்ஜீன்.. செய்வதையும் செய்து விட்டு.. ஊரைக் கூட்டி நியாயம் கேட்ட அவளின் அடாவடியில் அவன் மனதின் சிரிப்பு அதிகமானது...

'ராணி மங்கம்மா..! சரியாத்தான் சொல்லியிருக்கா...'

அவளின் பெயர் பொருத்தத்தை ரசித்துச் சிரித்துக் கொண்டான் அவன்..

அன்று காலைவரை இந்தச் சிரிப்பு அவனிடம் வரவில்லை.. எரிச்சலுடன்தான் அவன் இருந்தான்...

'அவனவன் கம்யூட்டர் பிஸினெஸ்ஸை பெங்களூருக்கும்.. ஹைதராபாத்துக்கும் கொண்டு போய்க்கிட்டு இருக்காங்க.. இதில.. மதுரையில இருக்கிற கடையை விலைக்கு வாங்கனுமா..?'

அவனுக்கு சுத்தமாக இந்த வியாபாரத்தைப் பிடிக்கவில்லை.. அவன் சொல்வதை பார்த்தசாரதி கேட்டால்தானே...

“உனக்குப் புரியாது அர்ஜீன்.. இது தேவையான ஒன்று...” என்று சொல்லிவிட்டார்...

“எதுப்பா தேவை..? இது என்ன ஃபாரின் காண்ட் ராக்டா..? நாம் தேவைன்னு சொல்ல..?” அர்ஜீன் படபடத்தான்...

“இதில சில விசயங்கள் மறைந்திருக்கு அர்ஜீன்.. இப்போதைக்கு நாம அந்தக் கடையை டேக் ஓவர் பண்ணியாகனும்.. அங்கே இருக்கிறவங்களுக்கு புது முதலாளி யார் என்பதை தெரியப் படுத்தியாகனும்.. ஸோ.. நீ மதுரைக்கு போகிற...”

பேச்சுக்கு முற்றுப் புள்ளியை வைத்து விட்டார் பார்த்தசாரதி.. இதற்கு மேல் அவருடன் பேசப் பிடிக்காத கோபத்தில் சுந்தரியிடம் சப்தம் போட்டான் அர்ஜீன்...

“இதுக்குத்தான் நான் பாரினைவிட்டு வரமாட்டேன்னு சொன்னேன்.. நீங்க கேட்கலை.. கண்ணில தண்ணியா விட்டிங்க... இப்பப் பார்த்தீங்களா..? இவர்கூட நான் போராட வேண்டியதா இருக்கு...”

“டாடி சொல்றதிலயும் ஏதாச்சும் ப்ளஸ் பாயிண்ட் இருக்கலாமே அர்ஜீன்...”

“நீங்க இப்படித்தான் பேசுவீங்கம்மா.. உங்க கிட்டயெல்லாம் சொல்லிப் புரிய வைக்க முடியாது...”

அர்ஜீனின் கோபத்தை சுந்தரியால் எப்போதுமே எதிர்கொள்ள முடிந்ததில்லை.. அவன் கோபத்தை எதிர் நோக்கும் சக்தி படைத்த ஒரே ஜீவனான ஆனந்திக்கு போன் போட்டாள் அவள்...

ஆனந்தி.. அர்ஜீனின் அக்கா.. அவனைவிட மூன்று வயது பெரியவளாக இருந்த போதும் அவனுடைய இனிமையான சிநேகிதி.. அவனுக்கு நடக்கக் கற்றுக் கொடுத்தவளிடமிருந்து அவன் வளர்ந்து வாலிபனான தருணத்தில் பிரிந்தான் அர்ஜீன்...

மென்மையான ஆனந்திக்கும்.. வன்மையான அர்ஜீனுக்கும் குண இயல்புகள் வேறுபட்டவையாக இருந்தன.. அர்ஜீன் அவன் வயதுப் பையன்களுடன் நேரத்தை செலவிட ஆரம்பித்தான்.. அவன் உலகம் வேறானதாக மாறிப் போன போதிலும்.. அவனுக்கு ஆனந்திதான் கடிவாளம் போடுபவளாக இருந்தாள்...

“நைட் லேட்டா வந்தியா அர்ஜீன்...?”

“ம்ம்ம்.. பார்ட்டி...”

அவள் முகம் பார்க்காமல் முணுமுணுத்து வைக்கும் தம்பியின் மீது ஆனந்திக்கு பாசம் பொங்கும்...

"டாடி சத்தம் போட்டாருடா..."

"இப்பத்தான அவரைப் பார்த்தேன்... 'குட்மார்னிங் மை டியர் சன்' அப்படின்னாரே..."

"உன்னிடம் அப்படித்தான் சொல்லுவார்... அம்மாகிட்டத்தான் காய்ச்சு காய்ச்சுன்னு காய்ச்சுவார்..."

"வாட் கேன் ஐ டு ஃபார் தட்..? இவர் சப்தம் போடறாருங்கிறதுக்காக நான் பார்ட்டிக்குப் போகாம இருக்க முடியுமா..? இவர் பார்ட்டிக்கு போறதில்லையா...?"

"அது பிஸினெஸ் பார்ட்டிடா..."

"எனக்கும் அப்படித்தான் அக்கா... இவருக்காக என் பழக்கத்தை நான் மாத்திக்க முடியாது..."

"எனக்காக மாத்திக்கலாமில்ல..?"

இப்படிக் கேட்டவளிடம் முடியாது என்று சொல்ல முடியாமல் மௌனித்தான் அர்ஜீன்.. பார்த்தசாரதியிடம் முடியாது என்று அவன் சொல்லி விடுவான்.. சுந்தரி அவன் முகம் பார்த்துப் பேசவே நடுங்குவாள்.. தைரியமாக அவனிடம் பேசக்கூடியவள் ஆனந்தி மட்டும் தான்...

"பார்ட்டியை அவாய்டு பண்ண முடியாதுக்கா/"

“ஓகே.. சீக்கிரமா வீட்டுக்கு வரப்பார்...”

அவன் வந்தான்.. ஆனந்தி சொன்ன வார்த்தைக்காக.. பார்ட்டிகளில் கலந்து கொண்டாலும் நேரத்துக்கு வீட்டுக்கு வந்தான்...

அப்படிப்பட்ட ஆனந்தி சென்னையில்தான் வசித்தாள் வெளியூர்களில் இருந்து வந்த மாப்பிள்ளைகளைத் தட்டிக் கழித்து விட்டு சென்னையில் இருக்கிறான் என்ற ஒரே காரணத்திற்காக சத்திய மூர்த்தியை தேர்வு செய்தவள் ஆனந்தி...

“என்னால சென்னையை விட்டுப் போக முடியுமாடா..?”

அந்த வகையில் அவள் குந்தவை.. ராஜராஜ சோழனின் அன்பு அக்கா.. அவனை விட்டுப் பிரிய மனமில்லாமல்.. பழையாறையிலேயே தேங்கி நின்றதைப் போல.. அர்ஜீனை விட்டுப் பிரிய மனமில்லாமல் சென்னையில் தேங்கி நின்றவள் ஆனந்தி...

அர்ஜீன் உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும்.. ஆனந்தியிடமிருந்து போன் அழைப்பு அவனைச் சென்றடைந்து விடும்...

அந்தத்கால குந்தவைக்குத்தான் தம்பியிடம் தூது செல்ல வந்திய தேவன் தேவைப்பட்டான்..

இந்தக்கால ஆனந்தியின் கணவன் சத்தியமூர்த்தி அந்த வேலைகளையெல்லாம் செய்யக் கூடியவன் அல்ல என்பதோடு.. அதற்கான அவசியமே இல்லாமல் செல்போன் அவள் கையிலிருந்ததே..

“அர்ஜீன்...”

ஆனந்தியின் வாயிலிருந்து வரும் தம்பிக்கான இந்த அழைப்பில் ஒளிந்திருக்கும் பாசத்திலும்... பரிவிலும்.. வாத்சல்யத்திலும்.. சிநேகிதத்திலும் நெகிழ்ந்து போய்விடுவான் அர்ஜீன்...

அப்படி ஒற்றை அழைப்பில் தம்பியை கட்டுப்படுத்த முடிந்த ஆனந்தியிடம் அர்ஜீனனின் கோபத்தைப் பற்றிச் சொன்னாள் சுந்தரி...

“இவன் மதுரைக்கு போக மாட்டேன்கிறான்.. உன் டாடி என்னடான்னா இவன் மதுரைக்குப் போயே தீரனும்னு ஒற்றைக் காலில் நிற்கிறார்.. இவங்க இரண்டு பேருக்கும் இடையில மாட்டிக்கிட்டு படாதபாடு படறேன் ஆனந்தி...”

“அவன் காரணமில்லாம கோபப்பட மாட்டான்ம்மா.. டாடி இதைச் செய்கிறதுக்கு முன்னாலே அவனிடம் கன்சல்ட் பண்ணியிருக்கலாமே...”

இதுதான் ஆனந்தி.. அவள் சொன்னால் அர்ஜீன் கேட்டுக் கொள்வான் என்பதற்காக.. எதையும் யோசிக்காமல்

அவனிடம் சொல்லிவிட மாட்டாள்.. அர்ஜீன் பக்கத்தில் இருக்கும் நியாயங்களை எடுத்துச் சொல்லி வாதாடுவாள்..

“இதை அவரிடம் யார் சொல்றது..? நீயே சொல்லு..”

“நீங்கதான் சொல்லனும்...”

“நான் சொன்னாக் கேட்டுக்கிறவரா உங்க டாடி...?”

“அதுக்கு அர்ஜீன் என்ன பண்ணுவான்..? அவனைக் கேட்காம அவனுக்குப் பிடித்தமில்லாம.. ஒரு பிஸினெஸ் டீலிங்ஸை டாடி முடிச்சிருக்கார்.. அந்த பிஸினெஸ் டீலிங்கை அவன் ஏத்துக்கனும்னு கட்டாயப்படுத்தறது நியாயமில்லைம்மா.. டேக் ஓவர் பண்ண டாடிதான் போகனும்... அர்ஜீனைக் கட்டாயப் படுத்தக் கூடாது...”

“இதை உன் டாடிகிட்ட நீயே சொல்லு ஆனந்தி...”

“என்னம்மா நீங்க...?”

சலித்துக்கொண்ட ஆனந்தி பார்த்தசாரதிக்கு போன் போட்டாள்...

“இது அப்படியில்லை ஆனந்தி.. அது பெரிய கடை.. அதில இருக்கிற கம்யூட்டரெல்லாம் தரம் வாய்ந்தது.. பாரினில இருந்து இம்போர்ட் பண்றாங்க.. நம்ம பிஸினெஸ்ஸீக்கு அந்தக் கடையை வாங்கறது உதவியாயிருக்கும்..”

“இது மட்டும்தானா டாடி..?”

புத்திசாலியான ஆனந்தி.. தகப்பனாரை மிகச்சரியாக கணித்து விட்டாள்.. அவர் எக்ஸ்போர்ட் கம்பெனியை நடத்துகிறவர்.. கம்பூட்டர்களை விற்பனை செய்யும் கடையை நடத்துகிறவர் அல்ல...

அவர் எதற்காக வேலை மெனக்கெட்டு.. பாரம்பரிய பெருமைகளைக் கொண்ட கோவில் நகரமான மதுரையிலிருக்கும் கம்பூட்டர்களை விற்பனை செய்யும் கடையை விலைக்கு வாங்க வேண்டும்..?

‘எங்கேயோ இடிக்குதே...’

இடிக்கத்தான் செய்தது.. அதை பார்த்தசாரதியும் ஒப்புக் கொண்டார்...

“அந்தக் கடையின் ஓனரும்... நானும்.. மதுரையில ஒன்னாய் படிச்சவங்கம்மா.. அப்ப என்னோட தாத்தா மதுரையில தான் இருந்தாரு.. நம்ம பூர்விகம் திருநெல்வேலிப் பக்கம் ஆனா.. என் தாத்தா தொழில் பண்ண மதுரைக்கு வந்தாராம்...”

“ஓ...”

“அப்ப உன் தாத்தாவோட.. அதான்.. என் அப்பாவோட கம்பெனி நஷ்டத்தில ஓட ஆரம்பிச்சது..

அதைச் சமாளிக்க.. டவுனில் இருந்த பெரிய கடையை விற்கத் தீர்மானிச்சார் என் அப்பா..."

"சொல்லியிருக்கீங்க டாடி..."

"அதை பிரண்டாச்சேன்னு அவன்கிட்டப் பகிர்ந்துக் கிட்டேன்... அதுக்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா..?"

"என்ன சொன்னார்...?"

"கடையை விற்கிற அளவுக்கா உன் நிலைமை வந்துருச்சு..? இது தெரியாம நான் உன்கூட பழகிக்கிட்டு இருக்கேனேன்னு சொல்லிட்டான்ம்மா..."

எல்லா மனித ஜீவன்களும்.. வாழ்வின் ஏதாவது ஒரு காலகட்டத்தில் சொல்லடிகளால் மனக்காயமடையத்தான் செய்கிறார்கள்.. சொல்லடி வாங்காத மனித ஜீவன் உலகில் இல்லையோ...

ஆனந்தியினால் பார்த்தசாரதியின் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிந்தது...

அவர் நட்பை மதித்திருக்கிறார்.. நண்பனென்று நினைத்திருக்கிறார்.. தன் மனச்சுமையை அவனிடம் சொன்னால் சாய்ந்து கொள்ளத் தோள்கொடுப்பான் என்று நம்பியிருக்கிறார்...

ஆனால் அந்த நண்பன் அதைச் செய்யவில்லை.. வீழ்ந்து விட்டவனைத் தூக்கி விடக் கை கொடுக்காமல்... அவன் வீழ்ந்து விட்டானென இகழ்வாய் பேசும் நண்பனாக அவன் இருந்து விட்டான்...

இத்தனைவருடங்களாக அந்த நண்பன் சொன்ன சொல்லை அவர் நினைவில் வைத்திருக்கிறார் என்றால்.. அந்தக் காயம் மனதில் ஆறாமல் ரணமாக இருந்திருக்கிறது என்றுதானே அர்த்தமாகிறது...?

சும்மாவா சொன்னார்.. பொய்யா மொழிப் புலவர்...

*'தீயினால் சுட்டபுண் உள்ளாறும் -ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு'*

என்று...

"அவனும் நானும் அதுக்கப்புறமா பேசிக்கலை.. பிரிஞ்சுட்டோம்.. அவன் என் மனசைப் புண்படுத்தினது மில்லாம.. எங்ககூடப் படித்த மற்ற ஸ்டூடன்ஸ்கிட்டயும் இதைச் சொல்லிட்டான்.. அந்த வயதில் எனக்கு எப்படியிருந்திருக்கும்..? நீயே சொல்லு..."

"கஷ்டமாத்தான் இருந்திருக்கும்..." மனம் வலிக்கச் சொன்னாள் ஆனந்தி...

அவளும்.. அர்ஜீனும் இது போன்ற துன்பங்களை அனுபவித்ததில்லை.. அதைவிட.. அவர்கள் அப்படித் துன்பப்படும்படி பார்த்தசாரதி விட்டதில்லை...

அப்படிப்பட்டவருக்கு இளம்வயதில் இப்படியொரு துன்பமா..?

“எங்கப்பா கடையை விற்றார்.. நெருக்கடியை சமாளித்தார்.. என் வசதி கூடியது.. அந்த பிரண்ட் திரும்பவும் என்னுடன் பேச வந்தான்.. நான் முகத்தைத் திருப்பிக்கிட்டேன்.. நான் அங்கே படித்த காலத்தில் அதற்குப்பிறகு எப்போதும் அவனிடம் பேசியதில்லை...”

# 7

## *சிந்துகின்ற மழைத்துளிகள்.. என்மனதைச் சொல்ல ஆசைகொண்டேன்..*

**இ**ப்படியும் சிலர் உண்டு... வசதி வாய்ப்பு இருக்கும் போது கட்டித்தழுவி உறவு கொண்டாடுவார்கள்.. அதுவே சிறிதளவு குறைந்து விட்டால் திரும்பிக்கூடப் பார்க்க

மாட்டார்கள்... அப்படிப்பட்ட மனிதர்களுடன் நட்பு பாராட்டி.. ஒட்டி உறவாட முடியுமா..?

"அவன் கடை இப்ப விலைக்கு வருது ஆனந்தி.. என்னைச் சொன்னவனுக்கும் கடையை விற்க வேண்டிய நெருக்கடி வந்து விட்டது.. இந்தக் கடையை நான்தான் வாங்கப் போகிறேன்னு அவனுக்குத் தெரியாது... நான் தெரியவிடாம பார்த்துக்கிட்டேன்.. இந்தக்கடையை விலைக்கு வாங்கினால்தான் என் மனசில் எரியும் நெருப்பு அணையும்ன்னு தோன்னுச்சு.. வாங்கிட்டேன்.. தப்பாம்மா...?"

"இல்லை டாடி.." மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டாள் ஆனந்தி...

"என்னதான் அவனை ஜெயித்துட்டாலும்.. அவன் கடையை டேக் ஓவர் பண்ண என்னாலே போக முடியாதும்மா.. அப்புறம் அவனுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்...? நீயே சொல்லு..."

"வேண்டாம் டாடி.. நீங்க போக வேண்டாம்.. அர்ஜீனைப் போகச் சொல்றேன்..."

ஆனந்தி அர்ஜீனிடம் பேசினாள்..

"அர்ஜீன்.. நீ டாடியோட உணர்வுகளையும் புரிஞ்சுக்கனும்.."

“அவர் என் உணர்வுகளைப் புரிஞ்சுக்க மாட்டாரா…?”

“ஷ்யூர்.. அஃப்போர்ஸ்.. உன் எதிர்பார்ப்பு நியாயம் தான்.. பட்.. டாடிக்கு ஒன்றுன்னா தோள் கொடுக்க நீயும் நானும் ஓடனுமா வேணாமா…?”

“இதில் தோள் கொடுக்க என்ன இருக்கு…?”

“நிறைய இருக்கு.. உனக்குத் தெரியுமா அர்ஜீன்..? அந்தக்கடையை வித்திருக்கிறவர் நம்ம டாடி கூட ஒன்றாய் படித்தவராம்.. நாம பிறந்து வளர்ந்தது சென்னை.. ஆனா அப்பா பிறந்து வளர்ந்தது மதுரையாம்…”

ஆனந்தி தம்பியிடம் விளக்கினாள்.. அவள் சொன்னதைக் கேட்கக் கேட்க அர்ஜீனுக்கு கோபம் பொங்கியது…

“இவ்வளவு நடந்திருக்குதா…?”

“யெஸ்.. டாடி நிலைமையிலே யாராய் இருந்தாலும் இதைத்தான் செய்திருப்பாங்க.. நமக்கு அது வெறும் கடை.. டாடிக்கோ பல வருசங்களாய் அவர் மனதிலிருக்கிற ரணத்தை ஆற்றும் மருந்து…”

“ஐ ஃபீல் கில்ட்டிக்கா.. இது தெரியாம நான் அவர்மேல கோபப்பட்டுட்டேன்க்கா…”

“விட்டுத்தள்ளு.. நம்ம டாடிதானே.. அதையெல்லாம் கேர் பண்ணிக்க மாட்டார்.. அந்தக் கடையை வாங்கிட்டார்.. ஆனாலும் டேக் ஓவர் பண்ண அவரால போக முடியலைடா..”

“அங்கேதான் நம்ம டாடி நிற்கிறார்...”

“இதை நீ புரிந்துக்கிட்டாச் சரி...”

இப்படியாகத்தானே.. தந்தைக்காற்றும் கடமையாக வெளிநாடுகளுக்குப் பறந்து கொண்டிருந்த அர்ஜீன்.. மதுரைப்பக்கம் பார்வையைத் திருப்பினான்... அவன் வந்து விட்ட செய்தியை அறிந்ததும் அவரே அவனைப் பார்க்க வந்தார்.. முறைப்படி கடைக்கு வந்து கணக்குகளை வாங்கிக் கொள்ள அவன் கிளம்பியிருக்கிறான்...

‘காத்திருக்கட்டும்.. கூடப் படிக்கிறவன் பண நிலைமையை வைச்சு பழகறவனெல்லாம் என்ன மனிதன்..? இவனுக்கெல்லாம் ஓடிப் போய் நிற்கனுமா..? காத்துக்கிடக்கட்டும்...’

அவன் மனதில் கோபம் மையம் கொண்டிருந்தது.. பார்த்தசாரதியின் மனதில் இப்படியொரு வடு இருக்கக் கூடும் என்று அவனும் சரி.. ஆனந்தியும் சரி.. நினைத்தும் பார்த்ததில்லை..

அந்தக் கோபத்துடனே கிளம்பியவனின் காரைத்தான் காவ்யா கண்டம் பண்ணிவிட்டு.. அதற்காக வருத்தப் படாமல் சண்டையும் போட்டு விட்டாள்...

அதுநேரம் வரை அர்ஜீனின் மனதிலிருந்த எரிச்சலும் கோபமும் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து விட்டன..

அவன் மனதில் உல்லாசம் மையம் கொண்டது.. அதுநாள்வரை அவன் பார்த்த பெண்களிலிருந்து காவ்யா முற்றிலுமாக வித்தியாசப்பட்டாள்.. அவன் கவனத்தைக் கவர முயன்ற பெண்களையே பார்த்துப் பழகியிருந்தவனின் கவனத்தை முதன் முறையாக எந்தவித முயற்சியுமின்றி அவள் கவர்ந்து விட்டாள்...

முன்னால் போய் கொண்டிருந்த அவளின் வண்டியின் வேகத்தைப் பார்த்தவனுக்கு.. இவளுக்கேத்த வண்டி என்றே தோன்றியது...

‘இந்த ஓட்டை வண்டியையும் இந்த அளவுக்கு ஸ்பீடா ஓட்டறாளே...’ மனதுக்குள் பாராட்டிக் கொண்டான்...

அவன் பின்தொடர்வதைக் கவனிக்காதவளாக.. தன் போக்கில் வண்டியை விட்டவள் இறங்கி நின்ற இடத்தைப் பார்த்ததும் அவன் புருவங்கள் உயர்ந்தன..

'இவ இங்கேதான் வேலை பார்க்கிறாளா...?'

**பு**யல் போல உள்ளே வந்த காவ்யாவைக் கவனிக்காமல் கந்தசாமியிடம் கதையளந்து கொண்டிருந்தாள் பாவனா..

"ஈஸ் இட்..? ஐ கானட் பிலிவ் திஸ்..."

"அப்படின்னா..?" அந்த கந்தசாமி விழித்தார்..

அவருக்கு தமிழே தரிங்கனத்தோம் போட்டால்தான் கொஞ்சமாக வந்து சேரும்.. அதில் இப்படி இங்கிலிஷில் பாவனா பீட்டரை விட்டால் அவர் பாவம் என்னதான் பண்ணுவார்...?

"அப்படியா.. நம்ப முடியலையேன்னு சொன்னேன்.."

"இதை முதலிலேயே சொல்றதுக் கென்னம்மா..?"

"ஏன் கந்தசாமி.. உங்களுக்கு இங்கிலிஷ் தெரியாதா...?"

"அதை என்ன கழுதைக்கு தெரிஞ்சுக்கனும்..?"

"ஏன்..? நாங்கள்ளாம் தெரிஞ்சுக்கலையா..?"

"ஏம்மா..? நீங்களும் நானும் ஒன்னா..? நீங்கள்ளாம் கம்யூட்டரில கணக்கு எழுதிக்கிட்டு இருக்கீங்க.. நானோ..

கம்யூட்டர் விக்கிற கடையை காவல்காத்துக்கிட்டு இருக்கேன்... எனக்குத் தெரிஞ்சவரைக்கும் போதும்மா.."

"யு ஸீ மிஸ்டர் கந்தசாமி..."

"பாரும்மா.. என்னமோ கேக்கனும்னு கூப்பிட்டீங்க.. நானும் நம்ம ஆபிசிலே கணக்கு வழக்கைப் பாக்கற புள்ளையாச்சேன்னு நின்னு ஏன்னு கேட்டேன்... அது ஒரு குத்தமாம்மா...?"

"நோ.. நோ..."

"அப்புறம் எதுக்காகம்மா.. இந்த எழவெடுத்த இங்கிலிஷை அமிலத்தைக் காய்ச்சி என் காதில ஊத்தறதைப்போல பேசி வைக்கறிங்க..? உங்களுக்குத் தமிழ் தெரியாதா...?"

"ஏன் தெரியாது.. நல்லாத் தெரியுமே..."

"அப்ப.. அதில பேசித் தொலைக்கிறதுக் கென்னம்மா..?"

"என்னவோ போங்க கந்தசாமி.. உங்களைப் பார்த்தாலே எனக்கு இங்கிலீஷ்தான் வாயில வருது..."

"எனக்கு வேற என்னென்னமோ வாயில வருது.. பொம்பளைப் புள்ளையாச்சேன்னு பாக்கறேன்.. எங்க

வீட்டுப் பக்கம் இப்புடி யாராவது பேசியிருந்தாங்கன்னு வையுங்க.. நடக்கறதே வேற...”

ஆள் பார்க்கிறதற்கு நோஞ்சானைப் போல இருந்தாலும்.. அந்தக் கந்தசாமியின் மீசை அவரின் முகத்தில் பாதியை மறைத்து பெரியதாக இருந்து வைத்தது...

அந்தக் கடா மீசையை முறுக்கி விட்டபடி கந்தசாமி கொலைவெறிப் பார்வையை பார்த்ததில்..

‘ஆத்தி..’ என்று மனதுக்குள் அரண்டு போனாள் பாவனா...

எதனால் மதுரை மாநகரின் மக்கள்.. ஆங்கில மொழியைக் கேட்டால் கொலைவெறிக்கு ஆளாகிறார்கள் என்ற விவரம் அவளுக்கு பிடிபடவே இல்லை...

“இப்ப நான் என்னத்தைச் சொல்லிப்புட்டேன்னு நீங்க மீசைமேல கை போடறிங்க கந்தசாமி..? நாமள்ளாம் ஒரே ஆபிசில வேலை பார்க்கிறோம்.. ஒன்னுக்குள்ள ஒன்னு...”

“இதப்பாருடா.. அம்மாவுக்கு இம்புட்டு நேரமும் இங்கிலீஷா வாயில வந்துச்சு.. இப்ப மட்டும் தமிழ்ல பொளந்து கட்டறாங்க...”

“ஆயிரம்தான் இருந்தாலும் தமிழ் நம்ம தாய் மொழியில்லையா..?”

“அஃது.. அந்த நினைப்பு மனசில எப்பவும் இருக்கட்டும்...”

“எப்பவும் இருக்குதோ இல்லையோ.. உங்ககிட்ட பேசும்போது மட்டும் கண்டிப்பா நினைப்பில இருக்கும்...”

“சந்தோசம்.. ஆமா.. அங்கே எனக்கு சோலிக்கழுதை ஆயிரம் இருக்கு.. அதைப் பாக்க விடாம.. நீங்க என்னா கழுதைக்கு என்னை நிப்பாட்டி வைச்சிருக்கீங்க...?”

“கழுதையை விடுங்க கந்தசாமி.. அது வேலையைப் பார்க்கப் போகட்டும்.. நீங்க நான் கேட்கிற தகவலைச் சொல்லுங்க...”

“அதென்ன கழுதைத் தகவல்ம்மா...”

“கந்தசாமி.. உங்களுக்கு புண்ணியமாய் போகும்.. கழுதையை ஓட்டி விட்டுட்டு பேசுங்க...”

“அது கழுதை.. அது பாட்டுக்கு இருந்துட்டுப் போகுது.. நம்ம பேச்சுக் கழுதையில அந்தக் கழுதை எதுக்கு வரப் போகுது...?”

“கந்தசாமி.. தெரியாத்தனமா உங்ககிட்ட இங்கிலீஷில பீலா விட்டுட்டேன்.. அதுக்காக.. நாலு அடி

வேண்டும்னாலும் அடிச்சுக்கங்க.. ஆனா கழுதைக்கு மட்டும் டாட்டா சொல்லிருங்க...”

பாவனா கையெடுத்தே கும்பிட்டு விட.. அடர்ந்த மீசையின் இடையே பல் வரிசையே தெரியாமல் சத்தமாக சிரித்து வைத்தார் கந்தசாமி...

“இப்படித்தானே எனக்கும் இருந்திருக்கும்...”

“தௌசன்ட் டைம் ஸாரி சொல்லிடறேன்... அடச்சீ.. திரும்பவும் இங்கிலீஷே வந்து தொலைக்குது.. பாருங்க கந்தசாமி.. தெரியாம பேசிப் புட்டேன்.. இதுக்காக நீங்க மறுபடியும் கழுதையை கூப்பிட்டாராதீங்க... ப்ளீஸ்...”

“போகுது விடுங்க.. உங்களுக்கு இப்ப என்ன தகவல் வேணும்...?”

“நம்ம கடையை வித்துட்டாங்களாமே...”

பாவனா குரலைத் தாழ்த்தி வினவ.. அவளை விசித்திரமாகப் பார்த்தார் கந்தசாமி...

“ஏம்மா.. இது மதுரையே அறிஞ்ச விசயமாச்சே.. இதையென்ன கழுதைக்காக ரகசியப் பேச்சைப் போல கேட்கறிங்க...”

கழுதையை கந்தசாமியால் விடவே முடியாது என்று தெரிந்த பின்னால்.. அதை விடச் சொல்லும் வேலைக் கழுதையை வெட்டியாகச் செய்யாமல்.. கழுதையைக் கவனிக்காமல் பேச்சைத் தொடர்வதே சாலச்சிறந்தது என்ற முடிவுக்கு வந்தாள் பாவனா...

“நிஜமாவா.. இது மதுரைக்கே தெரிந்த நியுஸா..?” கண்களை விரித்தாள்...

“ஆமாம்மா.. ஆமாம்.. இதை வாங்கியிருக்கிறவரு பெருங்கொண்ட பணக்காரராம்...”

‘பெருங்கொண்ட’ என்ற வார்த்தைக்கான அர்த்தம்.. மிக அதிக அளவிலானது என்று தானாகப் புரிந்து கொண்ட பாவனா...

“ஓ..” என்று உதட்டைக் குவித்தாள்...

“அவங்க மெட்ராஸ்காரங்களாம்... லண்டனில படிச்சவங்களாம்...”

“இதைப் பாருடா...” என்று பேச்சு ஆர்வத்தில் சொல்லிவிட்ட பாவனா.. கந்தசாமியின் கை மீசையை முறுக்க ஆரம்பித்ததும்.. தவறை உணர்ந்து கொண்டவளாக அலறினாள்...

“ஆன்னா.. ஊன்னா.. மீசையிலேயே கவனமாகிடறேங்களே.. நீங்க மட்டும் இதைப்பாருடான்னு சொல்லலாம்.. நான் சொல்லக் கூடாதா...?”

"நீங்களும்.. நானும் ஒன்னாம்மா...?"

"அதெப்படி ஒன்னாக முடியும்..? உங்களுக்கிருக்க கெடாமீசை எனக்கு இருக்கா..? இல்லையே.. ஸோ.. நீங்க வேற.. நான் வேற..."

பாவனா தணிந்து பேசியதில் கந்தசாமி மீசையை மறந்துவிட.. அவள் நிம்மதிப் பெருமூச்சுடன் மீண்டும் அவர் வாயைக் கிளற ஆரம்பித்தாள்...

"லண்டனில படிச்சவரு எதுக்காக மதுரைப் பக்கம் ஒதுங்கறாரு..?"

"யாருக்குத் தெரியும்..? ஆனா.. ஆளு பார்க்கறதுக்கு வாட்டசாட்டமா.. அர்ச்சுன மகராசனைப் போலவே அம்புட்டு அழகா இருக்காரில்ல..."

"வாவ்..! சூப்பர் இன்பர்மேசன் கந்தசாமி.. இது போல முதலாளியிருந்தா.. வேலை பாட்டுக்கு ரேஸில ஓடற குதிரையைப் போல ஓடிரும்ல்ல... ஆமா.. இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"என்னம்மா இப்படிக் கேட்டுப்புட்டிங்க.. எனக்குத் தெரியாததும் இந்த மதுரையில இருக்கா..? அவரு நம்ம ஊரு பாண்டியன் ஹோட்டலில்தான் ரூம் போட்டுத் தங்கியிருக்காரு.. விடியக்காலமே அவரப் பார்க்க நம்ம

பழைய முதலாளி போனாரில்ல.. அப்ப நானும் கூடப் போனேன்...”

“வெல்.. நம்ம முதலாளி.. அதுக்குள்ள பழைய முதலாளியா ஆகிட்டாரா..? பிழைச்சுக்குவீங்க கந்தசாமி...”

“நீங்க பிழைக்க மாட்டிங்களா...?”

திரும்பவும் கந்தசாமியின் கை மீசையைத் தொடப்போக....

“கொஞ்ச நேரத்துக்கு உங்க மீசையை மறந்துருங்க கந்தசாமி..” என்று வேண்டிக் கேட்டுக் கொண்டாள் பாவனா...

“அது நீங்க பேசற விதத்துலதாம்மா இருக்கு..” கறாராய் சொல்லி விட்டார் கந்தசாமி...

“எதுக்கும் நான் யோசிச்சே பேசறேன்.. ஆமாம் கந்தசாமி.. ஆள் பார்க்க அம்சமா இருக்கார்.. ஓகே.. குணம் எப்படி..?”

“ஏம்மா.. பொண்ணு.. கிண்ணு கொடுக்கப் போறிங்களா...?”

“வாட் ஏ பிட்டி..! ஏன் கந்தசாமி என்னைப் பார்த்தா பொண்ணாத் தெரியலையா..? நான் அவருக்கு மேட்ச் ஆக மாட்டேனா...?”

அந்த கந்தசாமியின் பார்வையே ‘இல்லை’ என்று சொல்லி விட்டது...

# 8

## நானிருக்கும் இடம்தேடி...
## நீவரவே ஆசைகொண்டேன்...

**வே**லைக்கழுதைகளின் நினைவுகள் வந்து விட்டதால் கந்தசாமி அகன்று விட.. அப்போது தான் காவ்யாவைப் பார்த்த பாவனா..

“நீ எப்போ வந்தேடி..?” என்று கேட்டாள்...

“நீ கந்தசாமிகிட்ட பீட்டர் விட ஆரம்பிச்சப்பவே வந்திட்டேன்...”

“என்னமோ போடி.. இந்தக் கடைக்கான ஒரே இன்பர்மேசன் பீரோ அந்த ஆளுதான்.. ஆனாப்பாரு எதுக்கெடுத்தாலும் மீசையை முறுக்கியே ஆளை அலற விடறாரு.. எனக்கொரு சந்தேகம்டி...”

“நீ உருப்படியாய் சந்தேகப்பட மாட்டியே...”

“உனக்கு என்மேல நம்பிக்கையே வராதா காவ்யா..?”

“வராது...”

"ஓகே.. லீவ் இட்.. இந்தக் கந்தசாமியோட வெயிட்டில முக்கால்வாசி வெயிட் இவரோட மீசையோட வெயிட்டுத்தான்.. உரம் போட்டு வளர்த்திருப்பாரோ.."

பாவனா சந்தேகம் கேட்ட விதத்தில் காவ்யா பற்களை நறநறத்தாள்..

"விடுடி.. விடுடி.. இதெல்லாம் ஒரு மேட்டரா.. சப்பை மேட்டர்..." பாவனா உடனடியாக ஜகா வாங்கினாள்...

"காலையிலேயே கொலைவெறிக்கு ஆளாக்காதேடி.."

"அந்த ஆளும் அதைத்தான் சொன்னார்..."

"சொல்லியும் நீ திருந்தலை பாரு..."

"என்னவோ போடி காவ்யா.. இன்னையில இருந்து நம்ம ஆபிசில இளமை ஊஞ்சலாடப் போகுது.."

"என்னடி உளருகிற..?"

"உளரலா..? முக்காலும் உண்மை காவ்யா.. கந்தசாமி பேசினதை கேட்டியில்ல..."

"கேட்டேன்.. கேட்டேன்..."

"வந்திருக்கிற புது முதலாளி அர்ஜீனனாம்..."

"அப்போ.. நீதான் பவளக்கொடின்னு சொல்லு..."

“அல்லியை ஏண்டி விட்டுட்ட..? நீ அல்லியாகிற உத்தேசத்தில இருக்கியா...?”

“அடிச்சேன்னா அத்தனை பல்லும் உதிர்ந்து விடும்.. அவன் யாராய் இருந்தால் எனக்கென்ன...?”

“என்னடி இப்படிச் சொல்கிற..? அவன் நம்ம கடைக்கு முதலாளிடி...”

“இருந்துட்டுப் போகட்டுமே.. வேலை பார்க்கிறோம்.. சம்பளம் கொடுக்கப் போகிறான்.. அதுக்காக அவனைத் தலையில தூக்கி வைச்சுக்கிட்டு ஆடவா முடியும்..? முதலாளியா இருந்தா அவனென்ன பெரிய இவனா..?”

“வேண்டாம்டி.. ஆள் பார்க்கிறதுக்கு அழகாயிருந்து தொலைக்கிறானாம்.. நம்ம கந்தசாமியே சொல்கிறாருன்னா பார்த்துக்கயேன்...”

“நீயே பாரு...”

“யாரை..?”

“புது முதலாளியை...”

“அப்ப நீ பார்க்க மாட்ட..?”

“அது என்ன தேவைக்கு..?”

“எப்ப இருந்துடி இப்படிச் சைவப் பட்சிணியா மாறின..?”

“வேண்டாம் பாவனா.. கடுப்பைக் கிளப்பாதே.. எவனோ ஒரு திமிர் பிடிச்ச பணக்காரன்.. லண்டனில படிச்ச மமதையில நம்ம ஊருக்கு வந்து.. நம்ம கடையை விலைக்கு வாங்கியிருக்கான்..”

“நம்ம கடையா..? இது எப்போ...”

“நாம வேலை பாக்கற கடைடி..”

“சரியாச் சொல்லு.. புது முதலாளி கடைக்கான பணத்தை உன்கிட்டக் கொண்டு வந்து கொட்டிறப் போறான்.. ஆமா.. உனக்கெதுக்கு புது முதலாளி மேல இவ்வளவு காண்டு..? அந்த ஆளு பாரினுக்கெல்லாம் போயி படிச்சிருக்கான்னனா...?”

பாவனா.. காவ்யாவின் மனதைக் கணித்து விட்டதில் காவ்யாவுக்கு என்னவோ போல ஆகிவிட்டது... அதிகம் படித்த ஆண்களைக் கண்டால் அவள் மனதில் சூழும் எரிச்சலைப் பற்றி பாவனா அறிவாள் என்பதில் அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. பாவனா அவளை இரக்கத்துடன் பார்த்தாள்.. காவ்யா சுதாரித்துக் கொண்டாள்..

“எனக்கொன்னும் அந்த மாதிரியெல்லாம் நினைப்பில்ல...”

“நம்பிட்டேன்...”

நம்பாத பாவனையில் பாவனா சொல்லிய விதத்தில் காவ்யாவுக்கு கோபம் வந்து விட்டது..

“நீ என்னை யாருன்னுடி நினைச்சே..?” என்று பாவனாவுடன் சண்டைக்கு கிளம்பி விட்டாள்...

“ஏண்டி..? நீ காவ்யாதானே.. வேற யாருமில்லையே..”

“இப்போ என்ன ஆச்சு..?”

“உன்னை யாருன்னு நினைப்பேன்..? காவ்யான்னு தானே நினைப்பேன்...?”

“அதுக்குத்தான் இந்தக் கேள்வியா..? என்னவோ ஊரில இருக்கிற படிச்ச ஆம்பளைக மேலல்லாம் எனக்கு பொறாமைங்கிறதைப் போல பேசிக்கிட்டு வர்ற...?”

“பின்னே..? இல்லையா...?”

“வேணாம் பாவனா.. என்னைக் கொலைகாரியாக்கிறாதே.. சொல்லிட்டேன்.. அவனுக ஆம்பளையாப் பொறந்திருக்கானுக.. எம்புட்டு படிப்பை வேணும்னாலும் படிக்கிறதுக்கான உரிமையை வரமா வாங்கிப் பொறந்திருக்கனுக.. அவனுக எம்புட்டுப் படிச்சாலும் அவனுகளுக்கு எந்தப்பிரச்னையும் வரப் போறதில்ல.. அதில எனக்கென்னடி காண்டு..?”

“ஓ...”

“இப்ப என்ன வேலைக் கழுதைக்கு ‘ஓ’ போடற..?”

“நீயும் கழுதையைக் கூப்பிட்டுட்டியா..? இவ்வளவு நேரமா கந்தசாமிதான் கழுதையைக் கூப்பிட்டு சீராட்டிக்கிட்டு இருந்தாரு.. இப்ப உன் டெர்னா..? நடத்து.. நடத்து..”

“இந்தாப் பாரு.. இந்த ஆம்பளைகளுக்கு வக்காலத்து வாங்கற வேலையை இதோட நிறுத்திக்க...”

“அதாவது படிச்ச ஆம்பளைகளுக்கு நான் வக்காலத்து வாங்கற வேலையை நிறுத்திக்கனும்.. அப்படித்தானே..?”

பாவனா பிழைதிருத்தம் செய்ய.. காவ்யா தீப்பொறி பறக்கும் பார்வையொன்றை பார்த்து வைத்தாள்...

“இது நீ பிறந்த மதுரைடி காவ்யா...”

“அதுக்கு..?”

“இந்தப் பார்வையை கண்ணகிதான் மதுரையைப் பார்த்து வீசி வைச்சதா இளங்கோ சொல்லியிருக்காரு...”

“இளங்கோவடிகள்னு சொல்லு.. நீ சொல்கிறதைக் கேட்டுட்டு.. சேல்ஸ் செக்சனில இருக்கிற இளங்கோ என்னையா கூப்பிட்ட பாவனான்னு வந்து நிக்கப் போறான்...”

“அவனை ஏண்டி அவருன்னு சொல்லப் போறேன்.?”

“நீ சொன்னாலும் சொல்லுவ.. யாரு கண்டது..? நீதான் காலையில இருந்தே புது முதலாளியைக் காணப் போற மயக்கத்தில ஒரு மார்க்கமா உளறிக் கொட்டி கிளறி மூடிக்கிட்டு இருக்கியே...”

“அப்படிங்கறே...” விழி செறுக கேட்டாள் பாவனா..

“அமாங்கிறேன்..” கையில் எடுத்த ஃபைலால் அவள் தலையில் ஒரு போடு போட்டாள் காவ்யா...

“ம்ஹீம்.. கந்தசாமி வர்ணிச்சதை கேட்டதில இருந்து எனக்கும் எப்போ அந்த அர்ச்சன மகாராசாவைப் பார்ப்போம்ன்னுதாண்டி இருக்கு....” என்ற பாவனா.. கண்ணுக்கு மேல் கையைக் குவித்து வைத்துத் தேடுவதைப் போல பாவனை செய்தபடி...

***“உன்னைக் கண்தேடுதே – உன்***
***எழில் காணவே உள்ளம் வாடுதே...”***

என்று பாடினாள்..

“உன்னையெல்லாம் திருத்தவே முடியாதுடி...”

“இதை விட்டா வேற டயலாக்கே உன் வாயில இருந்து வராதா..?”

“வராது...”

காவ்யா டேபிளை ஒழுங்கு படுத்தினாள்.. டேபிள் டிராயரைத்திறந்து அதற்குள் இருந்த விநாயகரின் படத்தையும்.. பெருமாளின் படத்தையும் தொட்டுக் கும்பிட்டாள்...

“பூஜையை ஆரம்பிச்சிட்டியா...?” என்று கேட்ட பாவனாவை முறைத்தாள்..

“டேபிள் டிராயரை பூஜை ரூமாக்கின ஒரே ஆள் நீதாண்டி...”

“உனக்கு என்னை நோட் பண்றதை விட்டா வேற வேலைக்கழுதையே இல்லையாடி...?”

“இப்போதைக்கு இல்லை...”

பாவனா நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து விட.. எப்படியும் தொலைந்து போ என்று வாய்க்குள் முணுமுணுத்தபடி கம்யூட்டரைத் தொட்டுக் கும்பிட்டாள் காவ்யா...

“அடுத்து மௌசா..?” பாவனா குரல் கொடுத்தாள்...

அவளை முறைத்தபடி மௌசையும் தொட்டுக் கும்பிட்ட காவ்யா.. அதைக் கைப்பற்றி கம்யூட்டரை உயிர்ப்பித்தாள்...

“ஆக.. வெற்றிகரமா இன்னைக்கான வேலையை ஆரம்பிச்சிட்ட..?”

“ஆமாம்.. என்னைப் பார்த்தாவது நீ கத்துக்க...”

“எதை...?”

“வேலை செய்கிறதை...”

“நான்கூட சாமிக்கு பூப்போட்டு பூஜை செய்கிறதைச் சொன்னியோன்னு நினைச்சேன்..”

“நீதானே.. எதை வேணும்னாலும் நினைப்ப...”

உதட்டைச் சுழித்த காவ்யா அழகாக இருந்தாள்.. கொடி போன்ற உடலுடன் உயரமாக இருந்தாள்.. வட்ட முகத்தில் நீள்வடிவத்திலான பெரிய கண்களுடன் இருந்தாள்...

அவளுடைய கண்களின் அழகில் எப்போதும் பொறாமைப் படுகிற பாவனாவுக்கு அப்போதும் பொறாமை வந்தது..

“அதென்னடி.. மதுரையில பிறந்தா மீனைப் போலக் கண்கள் இருக்கனுமுன்னு எங்கேயும் எழுதியா வைச்சிருக்கு...?”

“எங்கேயும் எழுதலை.. உனக்கு இப்ப என்ன குறைச்சல்..? உன் கண் சிறிசா இருந்தாலும்.. நீ அழகுதாண்டி...”

“அப்படிங்கறே...?”

“ஆமாம்கிறேன்..”

“அப்ப.. அந்த அர்ச்சுன மகராஜா என்னைக் கண்டதும் சைட்டடிக்க ஆரம்பிச்சுருவானாடி..?”

காவ்யாவுக்கு கோபம் வந்து விட்டது.. பாவனாவை முறைத்தாள்..

“கண்டதும் காதலிச்சிருவானான்னு கேட்டாக் கூட அதைக் கேட்டுக்கலாம்.. இதென்னடி.. கண்டதும் சைட்டடிச்சுருவானான்னு கேட்டு வைக்கிற...?”

“ஹி.. ஹி...”

“சிரிக்காதே.. சகிக்கலை...”

காவ்யா பல்லைக் கடித்தபடி எழுந்து நின்று பீரோவைத் திறந்தாள்.. அதன் மேலடுக்கில் இருந்த ஃபைல்களை எடுத்து டேபிளில் அடுக்க ஆரம்பித்தாள்.. அவள் வேலை செய்த போது ஆடிய பின்னல் அசைந்து அசைந்து அவளின் முழங்கால்களைத் தொட்டுத் தொட்டுத் திரும்பியது..

“மதுரைத் தண்ணிக்கே நல்லா முடி வளரும் போல..” பாவனா வயிறெரிந்தாள்...

“முதல்ல கண்ணு.. இப்ப முடியா..? உன் முடிக்கென்ன குறைச்சல்..?”

“அதுவே குறைச்சல்தானேடி...”

“கொடுத்து வைச்சவ.. அதையே சாக்காச் சொல்லி அழகா முடியை வெட்டி விட்டிருக்கே.. எங்க வீட்டில அதுக்கெல்லாம் தடா சொல்லிட்டாங்க...”

“இவ்வளவு நீள முடியை வெட்டப் போறேன்னு சொன்னா ஓகேன்னா சொல்லுவாங்க...?”

“ம்ப்ச்.. எரிச்சலைக் கிளப்பாதே...”

“எனக்கும் எரிச்சல்.. எரிச்சலாத்தான் வருது...”

“எதுக்கு...?”

“இன்னும் அர்ச்சுன மகராசன் வந்தபாடா இல்லையே..”

பாவனாவின் எதிர்பார்ப்பில் காவ்யா உதட்டைச் சுழித்தாள்.. தோழியை நிமிர்ந்து பார்த்து தலையை ஆட்டினாள்...

“என்னடி..?” பாவனாவுக்கு புரியவில்லை...

“அவனே ஃபாரினுக்கெல்லாம் போயி படிச்சுட்டு வந்திருக்கான்.. அவன் பார்க்காத பொண்ணுகளா..? மதுரையில இருக்கிற பொண்ணுகளைத்தான் அவன் தேடறானா...?”

“தேடினாலும் தேடுவான்.. யார் கண்டது..”

“நீ கான்கலைல்ல.. அப்ப வாயை வைத்துக்கிட்டு சும்மா இரு... அவனோட காதல் லீலையெல்லாம் மதுரைப் பொண்ணுகிட்ட செல்லுபடியாகாது.. தெரிஞ்சுக்க அர்ச்சுனனாம்.. அர்ச்சுனன்...”

“நீயும் ஒன்னைத் தெரிஞ்சுக்க...”

“என்னத்தை தெரிஞ்சுக்கனும்..?”

“நான் மதுரைப் பொண்ணில்ல.. ஓசூர் பொண்ணு..”

“அதுக்கு..?”

“அர்ச்சுனனின் காதல் லீலை என்கிட்டச் செல்லுபடியாகும்...”

“அடிப்பாவி...”

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது அங்கே வந்த ஏகாம்பரம்.. பாவனாவுக்கு அடுத்த நாற்காலியில் அமர்ந்தபடியே...

“புது முதலாளியின் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்..?” என்று அவர்கள் இருவரையும் பார்த்துக் கேட்டு வைத்தார்...

“புது முதலாளியின் பெயரா..?”

அவர்கள் ஒரே குரலில் கேட்டுவிட்டு.. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்...

“ஆமா.. புது முதலாளியின் பெயர்தான்..” என்றார் ஏகாம்பரம்..

“அவர் பெயர் அர்ஜினனா..?”

“ஆமாம் பாவனா..”

ஏகாம்பரத்தின் பதிலைக் கேட்ட அந்தப் பெண்கள் இருவரும் எதற்காக ரகசியச்சிரிப்பை உதிர்த்தார்கள் என்று அவருக்குச் சுத்தமாக புரியவேயில்லை...

# 9

*உன் கண்ணிரண்டும் எனைத்தேடி...*
*அலைபாய ஆசை கொண்டேன்...*

**அ**ர்ஜீனின் கண்கள் மின்னின.. ரகசியச் சிரிப்பில் குழுங்கும் அந்தப் பெண்களைப் பார்த்தபோது அவன் உள்ளத்தில் பரவிய புத்துணர்வை அதற்கு முன்னால் அவன் உணர்ந்ததில்லை..

அவனுடைய உலகமே வேறு.. அங்கே இது போன்ற ரகசியப் பேச்சுக்களுக்கும்.. பொங்கும் சிரிப்பலைகளுக்கும் இடமே இருந்ததில்லை.. ஆசையோ.. கோபமோ.. எதுவாக இருந்தாலும் ஒன்று அதை நேரடியாக வெளிப்படுத்தி விடுவார்கள்.. இல்லையென்றால்.. அதுபோன்ற உணர்வே இல்லாததைப் போல உணர்வுகளை வெளிப்படுத்தாமல் நகர்ந்து விடுவார்கள்...

இதுபோல கள்ளமலர் சிரிப்பினில் மனதை நனைக்க மாட்டார்கள்...

காவ்யாவைப் பின் தொடர்ந்து வந்தவனுக்கு.. அவள் வண்டியை நிறுத்திவிட்டு.. இறங்கிச் சென்ற கடையைக் கண்டதும் ஆச்சரியமாகி விட்டது..

எந்தக் கடையை அவனுடைய அப்பா வாங்கியிருந்தாரோ.. அந்தக் கடைக்குள்தான் அவள் சென்று கொண்டிருந்தாள்...

'இந்தக் கடையைத்தானே நான் டேக் ஓவர் பண்ணனும்..?'

அவன் வந்த இடமும்.. அவள் சென்ற இடமும் ஒன்றாக இருந்ததில் அவனுக்குள் ஒர் ரகசிய சந்தோசம் உற்பத்தியானது...

‘இந்தக் கடைக்கு எதுக்கு வந்திருக்கா..? கம்யூட்டர் வாங்க வந்திருப்பாளோ.. பார்த்தா அப்படித் தெரியலையே..’

அவன் காரை விட்டு இறங்கிய போதே.. வாசலில் காத்திருந்த கந்தசாமி ஓடி வந்தார்...

“ஐயா.. வணக்கமுங்க...”

சென்னையின் ‘குட்மார்னிங்..’களுக்கு பழக்கப் பட்டிருந்தவனுக்கு மதுரை மண்ணின்.. ‘வணக்கம்’ வித்தியாசமானதாக இருந்தது...

‘இது மதுரை...’

சற்று முன்னால் அந்த சிறு பெண் அவனை மிரட்டிய மிரட்டலை நினைத்துக் கொண்டவன் லேசான சிரிப்புடன் தலையசைத்தான்...

“ஐயா சாவியைக் கொடுத்தீங்கன்னா.. நான் காரைக் கொண்டு போய் கடைக்கு பின்னால இருக்கிற காரை நிப்பாட்டற இடத்தில நிப்பாட்டிட்டு வர்றேனுங்க...” கந்தசாமி பவ்யத்துடன் கேட்டார்..

கார்சாவியை அவரிடம் கொடுத்து விட்டு.. கடையின் படிகளில் தாவி ஏறினான் அர்ஜீன்.. உள்ளே சென்றவனின் விழிகள் விற்பனைப் பகுதியில் அவளைத் தேடின..

அவனோ.. விற்பனைப் பிரிவில் இருந்தவர்களிடம் ஒரு புன்னகையை சிந்தியபடி கடையின் பின்பக்கக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் விட்டாள்..

அர்ஜீன் அவளைப் பின்பற்றிப் போக முயன்றபோது.. கடையில் நின்றிருந்த இளங்கோ அவனைத் தடுத்தான்..

"என்ன வேணும் சார்..?"

"இந்தக் கடைதான் வேண்டும்..."

மிடுக்காகச் சொன்ன அர்ஜீனை ஏற இறங்க பார்த்தவனின் விழிகளில் கேலி வந்தது...

"ஏன் சார்... இந்தக் கடையை விலைக்கு வாங்கப் போறிங்களா..?"

"ஆல்ரெடி வாங்கியாச்சு.. இப்ப இந்தக் கடையை டேக்ஓவர் பண்ண வந்திருக்கேன்.. வேர் இஸ் மிஸ்டர் துரியோதனன்...?"

அர்ஜீனின் அலட்சியமான கேள்வியில் இளங்கோவின் கண்களில் இருந்த கேலி மறைந்து பயம் கலந்த மரியாதை வந்தது...

அவன் அவசரமாக அர்ஜீன் உட்காருவதற்காக நாற்காலியை இழுத்துப் போட்டான்...

“வணக்கம் சார்.. உட்காருங்க சார்.. ஏஸியோட அளவைக் கூட்டி வைக்கவா சார்...”

“வேண்டாம்..” அர்ஜீன் மறுத்து விட்டு கைக்கடிகாரத்தைப் பார்த்தான்...

“துரியோதனன் எப்போ வருவார்...?”

“இதோ போன் போட்டுக் கேட்கிறேன் சார்.. நீங்க வந்துட்டிங்கன்னு சொல்றேன்...”

“ஓகே.. அவர் வருகிற வரைக்கும் நான் கடையைச் சுத்திப் பார்க்கிறேன்...”

மிடுக்காக சொல்லிவிட்டு... காவ்யா திறந்து கொண்டு போன கதவைத் திறந்து பார்த்தான் அர்ஜீன்... அங்கே அலுவலகப் பகுதி தெரிந்தது...

‘ஓ.. கடையோட பின்பக்கம்தான் ஆபிஸ் இருக்கா..?’

சத்தமில்லாமல் கதவை மூடியவன்.. அலுவலகப் பகுதிக்குள் சென்றான்.. வரிசையாக நிறுத்தப் பட்டிருந்த பழைய இரும்புப் பீரோக்கள்.. பாரம்பர்யத்தை மதிக்கும் மதுரையின் மரபைச் சுட்டிக் காட்டின...

அசைக்க முடியாத அந்த பீரோக்களின் பின்னால் மறைந்து நின்றான் அர்ஜீன்.. காவ்யாவும்.. பாவனாவும்

பேசிக் கொண்டிருந்த பேச்சுக்கள் தெளிவாக அவன் காதில் விழுந்தன.. அவர்களின் பேச்சை ரசித்துக் கொண்டிருந்த போது ஏகாம்பரம் வந்துவிட.. அவன் நகர வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானான்.. சத்தமில்லாமல் வெளியே வந்தபோது... துரியோதனன் பரபரப்புடன் கடைக்குள் வந்து கொண்டிருந்தார்...

“ஸாரி.. ஸாரி.. லேட்டாகிருச்சு...”

“இட்ஸ் ஆல்ரைட்...”

“வாங்க.. உங்க கேபினைக் காட்டறேன்...”

துரியோதனன் மரியாதையுடன் அவனை அழைத்துக் கொண்டு போய் முதல்நாள் வரை அவருடைய அறையாக இருந்த அந்த ஆடம்பரமான.. வசதி மிகுந்த அறையில் அமர வைத்தார்...

“நீங்களும் உட்காருங்க..” என்று அர்ஜீன் சொன்னவுடன் எதிரே அமர்ந்தார்...

நேற்று வரை அவருடைய உடமையாக இருந்தது.. இன்று வேறொருவரின் உடமையாகி விட்டதில் அவர் மனதில் இருந்த வருத்தத்தை அவரது முகம் பிரதிபலித்தது...

அர்ஜீன் டேபிள் வெயிட்டை உருட்டியபடி அவரின் முகம் சொல்லிய உணர்வுகளை அவதானித்தான்...

"காலம் மாறுது... இல்லையா மிஸ்டர் துரியோதனன்..?"

"யெஸ்.. யெஸ்..."

அந்த ஏஸியின் இதமான குளிரிலும் வியர்த்த முகத்தின் வியர்வைத் துளிகளை கைக்குட்டையால் ஒற்றி எடுத்தார் துரியோதனன்...

"அது தெரியாம நிறையப் பேர் ஆட்டம் போட்டிடறாங்க.." அர்ஜீனின் விழிகள் அவரைத் துளைத்தன...

"யெஸ்.. அஃகோர்ஸ்..."

அவன் எதற்காகச் சொல்கிறான் என்று புரியாதவராய் பூம்பூம் மாடு போல அதற்கும் தலையாட்டி வைத்தார் துரியோதனன்..

"நாங்க பரம்பரைப் பணக்காரங்கதான் மிஸ்டர் துரியோதனன்... கோடிஸ்வரக் குடும்பம்தான்.... இருந்தும் பாருங்க.. என் தாத்தா காலத்தில அவருக்கு தொழிலில் நஷ்டம் வந்ததாம்.. அதைச் சமாளிக்க அவர் டவுனில் இருந்த பெரிய கடையை விற்க வேண்டியதாய் போச்சாம்..."

அர்ஜீன் பேசப்பேச.. துரியோதனனின் களைத்த முகத்தில் வெளிச்சம் பரவியது... அவருக்கு அவன் ஆறுதல் சொல்கிறானென்று அவர் நினைத்து விட்டார்...

"அப்படியா..? உங்க குடும்பத்துக்கும் இப்படியொரு நிலைமை வந்துச்சா..? நான்கூட இந்தக் கடையை விற்க வேண்டி வரும்ன்னு நினைக்கவே இல்லைங்க..."

"நினைத்துப் பார்க்காததெல்லாம் நடப்பதுதானே வாழ்க்கை...?"

"அதைச் சொல்லுங்க..."

"பிஸினெஸ்ஸில் ஏற்ற தாழ்வுகள் சகஜமானது.. அதில் திடிர்ன்னு பணம் புரளும்.. திடிர்ன்னு பணம் வரளும்.."

"ஆமாமாம்..."

"அதைப் புரிஞ்சுக்காம என் டாடி கூடப் படிச்ச நண்பர் ஒருத்தர் கடையை விற்கப் போறியான்னு டாடியைத் தாழ்வாய் பேசினாராம்..."

"அடக்கடவுளே..! இப்படிக்கூட ஆளுக இருந்திருக்காங்க பாருங்க... அந்த மாதிரி மனுசங்களை யெல்லாம் கிட்டச் சேர்த்துக்கவே கூடாதுங்க..."

"நீங்க சொல்கிறதைத்தான் டாடியும் செய்தாராம்.. அதுக்குப் பின்னாலே.. அந்த நண்பரைக் கிட்டவே சேர்த்துக்கலையாம்.. விலக்கி வைச்சாராம்...."

"அதுதான் சரி.. அவனெல்லாம் ஒரு மனுசனா..?"

"இல்லேங்கறிங்களா...?"

"ஆமாம் தம்பி.. அவனெல்லாம் மனுசப் பிறவியிலே சேர்த்தியே இல்லை.. கூடப் படிச்ச நண்பன் கஷ்டத்தில இருந்தா சொல்லிக் காட்டறவனெல்லாம் ஒரு நண்பனா..?"

"அதுவும் இல்லைங்கறிங்களா..?"

"ஆமாம் தம்பி.. இப்ப என்னையே எடுத்துக்கங்க.. நாங்க பேராய் பொழைச்ச குடும்பம்.. திடிர்ன்னு பணமுடை வந்துருச்சு.. சமாளிக்க கடையை விற்க வேண்டியதாப் போச்சு.. இதுக்காக நான் குறைந்தவன்னு அர்த்தமாகிருமா..?"

"தெரிந்தால் சரி.. பை தி வே மிஸ்டர் துரியோதனன்.. எங்க டாடியோட பெயர் பார்த்தசாரதி..."

"வாட்..?"

துரியோதனனுக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது.. அந்தக்கடை அர்ஜீனின் பெயரில் வாங்கப்

பட்டிருந்தது.. அந்த அர்ஜீனின் அப்பாவும்.. அவர் கூடப் படித்த பார்த்தசாரதியும் ஒரே ஆளா..?

“அவரோட தாத்தா காலத்தில மதுரையில தொழில் பண்ணவந்தாங்களாம் அப்பா இந்த ஊரில்தான் ஸ்கூல் ஸ்டடிஸை முடிச்சாராம்.. அப்புறம்தான் சென்னை...”

துரியோதனனின் முகத்தையே ஊன்றிக் கவனித்தபடி பேசினான் அர்ஜீன்.. அவர் முகத்தில் வந்து போன ஓராயிரம் உணர்வலைகளை மதிப்பிட்டபடியே நிதானமாகப் பேசினான்...

“அப்ப அவர் கூடப் படிச்ச பிரண்டின் பெயர் துரியோதனனாம்... விசித்திரத்தைப் பார்த்தீங்களா மிஸ்டர் துரியோதனன் அவனெல்லாம் ஒரு மனிதனா..? அவனெல்லாம் ஒரு நண்பனான்னு நீங்க கேட்ட அந்த மனிதரின் பெயரும்.. உங்க பெயரும் ஒன்றுதான்...”

துரியோதனனின் முகத்தில் ஈயாடவில்லை.. அவர் சிரமப்பட்டுத் தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தார்.. அவனை ஏறிட்டுப் பார்த்தார்...

“நீங்க.. பார்த்தசாரதியோட மகனா...?”

“யெஸ்...”

“அவன்தான் இந்தக் கடையை வாங்கப் போகிறான்னு எனக்குத் தெரியாது...”

"ஆல்ரெடி... வாங்கிட்டார்..."

அர்ஜீன் அழுத்தமாகச் சொல்லியதில் துரியோதனனின் முகம் விழுந்து விட்டது...

"ஒருவேளை.. இது உங்களுக்குத் தெரிந்திருந்தா இந்தக் கடையை எங்களுக்கு கொடுத்திருக்க மாட்டிங்க இல்லையா...?"

அர்ஜீனின் கேள்வியில் துரியோதனன் நிமிர்ந்து பார்த்தார்...

"மத்தவங்களை விட நீங்க இந்தக் கடைக்கு அதிக விலை கொடுக்க முன் வந்தீங்க... நீங்க கொடுத்த விலையில பாதிக்குக்கூட மத்தவங்க இந்தக் கடையைக் கேட்கலை... இந்தக் கடையை விற்ற பணத்தில நான் என் கஷ்டங்களை சரி செய்துட்டு மேற்கொண்டு தொழில் தொடங்கவும் முடிந்திருக்கு.. ஆனாலும்கூட.. இந்தக் கடையை வாங்கறது என் கூடப் படித்த பார்த்த சாரதிதான்னு தெரிந்திருந்தா.. கட்டாயம் நான் இந்தக் கடையை அவனுக்கு விற்றிருக்க மாட்டேன்...."

துரியோதனனின் முகத்தில் தெரிந்த உறுதியில்

'கெட்டாலும் மேன்மக்கள்.. மேன் மக்களே..' என்று எண்ணிக் கொண்டான் அர்ஜீன்...

“உங்களைக் காயப் படுத்துகிறதுக்காக இந்தக் கடையை டாடி வாங்கலை.. இத்தனை வருசங்களா அவர் மனசில இருந்த காயத்தின் ரணம் ஆறனும்ங்கிறதுக்காகத் தான் வாங்கியிருக்கார்..”

“புரியுது.. அது அறியாப் பருவம்.. எதுசரி.. எது தப்புன்னு புரியாத வயசில பேசின பேச்சு.. அதை இத்தனை வருசமாகியும் பார்த்தசாரதி மறக்கலையே...”

“மறக்கிறதைப் போல நீங்க பேசலையே...”

“பார்த்தசாரதியிடம் நான் மன்னிப்புக் கேட்கனுமே..”

“வேண்டாம்.. காலங்கடந்த மன்னிப்பினால யாருக்கு என்ன லாபம்...? அதனால அவர் பட்ட மன வேதனையை திரும்பவும் வாங்கிக்க முடியுமா..? பேசின பேச்சுக்கள் நமக்கு எஜமானன் மிஸ்டர் துரியோதனன்... அது மத்தவங்களைக் காயப் படுத்துகிறதைப் போல இருக்கக் கூடாது.. அன்றைக்கு நீங்க மேலே இருந்தீங்க.. அந்த மமதையில.. வாய்க்கு வந்ததை பேசிட்டிங்க.. என்றைக்கும் அதே நிலைமையிலேயே நீங்க இருந்துவிட முடியுமா..? ஒருநாள் கீழே இறங்கித்தானே ஆகனும்...? அப்போ உங்க நிலைமை என்னவாகும்ன்னு யோசிச்சுப் பார்த்தீங்களா..?”

# 10

## *கள்ளமலர் சிரிப்புக்காரி...*
## *என்னைத் தேட ஆசை கொண்டேன்...*

**கா**லத்தினால் அழியாத காயங்கள்.. மனதில் படும் காயங்கள்தான்.. அதை ஆற வைக்கும் மருந்தைக் கண்டு பிடித்தவர் எவருமில்லை... ஆனால்.. மனிதராகப் பிறந்தவர்கள் அதை நினைத்துப் பார்ப்பதில்லை... எத்தனை பொய்யாமொழிப் புலவர்கள் வந்து வன்சொல்லைத் தவிர்த்து இன்சொல்லைப் பேசும்படி எடுத்துக் கூறினாலும் அதிகார போதையில் இருப்பவர்கள் அதை மனதில் கொள்வதில்லை.. காலம் ஒரு நாள் மாறும் என்ற எண்ணமே இல்லாமல் வார்த்தைகளைக் கொட்டிவிடுவார்கள்...

நம் பெரியவர்கள் உதிர்க்கும் ஒவ்வொரு மொழியிலும் வாழ்க்கைத் தத்துவம் அடங்கியிருக்கிறது...

‘வார்த்தைகளைக் கொட்டி விட்டால் அள்ள முடியாது...’

எவ்வளவு தெளிவான வார்த்தைகள் இவை..!

கொட்டி விட்ட எந்தப் பொருளையும் அள்ளி விடலாம்… வார்த்தைகளை அள்ளி விட முடியுமா..? அதையேன் மனித ஜீவன் நினைத்துப் பார்ப்பதில்லை..?

துரியோதனனின் முகத்தில் தெரிந்த குற்ற உணர்வை கண்டுகொள்ளாமல் பேச்சை வேறு திக்கில் செழுத்தினான் அர்ஜீன்…

“ஓகே.. கடையோட அக்கவுண்ட்ஸைப் பார்த்து விடலாமா..?”

“ஷ்யூர்.. ஷ்யூர்…”

பேச்சு திசைமாறியதில் நிம்மதியானார் துரியோதனன் அதைக் கவனித்த அர்ஜீனின் மனதில் பரிதாபம் ஏற்பட்டது.. அதற்கு மேலும் அவரைச் சோதிக்கக் கூடாது என்ற எண்ணத்துடன்.. அவன் கடையை எடுத்துக் கொள்ளும் வேலைகளில் இறங்கினான்…

“இளங்கோ.. அக்கவுண்ட் செக்சனில் இருக்கிற காவ்யாவை வரச் சொல்லு…” இளங்கோவிடம் சொன்னார்..

‘அவ வரப் போறாளா…’ அர்ஜீனின் கண்களில் சுவராஸ்யம் தோன்றியது…

‘வரட்டும்.. ரோட்டில என்ன பேச்சுப் பேசினா.. இப்ப இந்த சீட்டில என்னைப் பார்த்ததும் எப்படி ரியாக்ட் பண்ணப்போறான்னு பார்த்து விடலாம்..’

அவன் மனதில் எதிர்பார்ப்போடு காத்திருந்தான்.. அந்த இளங்கோ முன்னே வர.. பின்னே கை நிறைய ஃபைல்களுடன் வந்து சேர்ந்தாள் காவ்யா.. அவனைக் கவனிக்காமல் துரியோதனனைப் பார்த்து

“குட்மார்னிங் சார்...” என்றாள்...

அந்த குட்மார்னிங்கில் துரியோதனன் மகிழ்ந்து போனார்.. இருந்தும் கடமை தவறாதவராக.. அர்ஜீனைக் காட்டி...

“இனி இவர்தான் உன் புது முதலாளி காவ்யா.. கடையை வித்தாச்சு.. இவர்தான் வாங்கியிருக்கார்..” என்று தழைந்த குரலில் சொன்னார்..

“அப்படியா சார்..? எனக்குத் தெரியவே தெரியாதே..”

காவ்யா போலியாக ஆச்சரியப் பட்டதில் அர்ஜீன் அயர்ந்தே போனான்...

‘பாருடா.. இப்பத்தான் இவளும் இவ பிரண்டும் கடையை வித்துட்டதைப் பத்தியும்.. வரப் போகிற புது முதலாளியைப் பத்தியும்... கதைகதையாய் பேசித்

தள்ளினாங்க.. அத்தனை கதையையும் பேசிட்டு இங்கே வந்து அப்படியான்னு ஒன்றும் தெரியாத பேபியைப் போலக் கண்ணை விரிக்கிறாளே.. வாட் எ கேர்ள்..!'

அவளை வெட்டி விடுவதைப் போல அவன் பார்த்த அதே நேரத்தில் வரவழைத்துக் கொண்ட மரியாதையுடன் அவளும் அவனைப் பார்த்தாள்...

அண்ணலும் நோக்கி.. அவளும் நோக்கியதில்.. அவளுக்குள் காதல் மின்னல் பாயவில்லை...

'இவனா..?..!...' என்ற அதிர்ச்சி பாய்ந்தது...

மேஜை மேல் கைகளை ஊன்றி அதில் முகவாயைப் பதித்து அவளையே கூர்மையான பார்வை பார்த்துக் கொண்டிருந்த அர்ஜீனின் முகத்தில் தெரிந்த ரகசியப் புன்னகையில் அவள் அரண்டே போனாள்...

'அட நொப்புரானே..! இருந்திருந்தும் புது முதலாளியோட காரைத்தான் நான் இடிச்சு நொறுக்கியிருக்கனுமா..? இவன்தான் புது முதலாளின்னு தெரியாம வரிஞ்சு கட்டிக்கிட்டுச் சண்டையை வேற போட்டு வைச்சிருக்கேனே.. தாயே மீனாட்சி..! இந்த மதுரையில பொறந்த தமிழச்சிக்கு இப்படியொரு சோதனையா வந்து சேரனும்...?'

அவளின் தவிப்பை ரசித்துப் பார்த்த அர்ஜீன்...

“என்ன மிஸ்டர் துரியோதனன்.. உங்க ஆபிஸ் ஸ்டாபுக்கு எம்.டியிடம் எப்படி குட்மார்னிங் சொல்லனும்னு தெரியாதா..?” என்று கெத்தாக வினவினான்..

அவன் வம்புக்கு இழுப்பதை காவ்யாவினால் புரிந்து கொள்ள முடிந்தது..

“என்னம்மா காவ்யா..?” துரியோதனன் புருவங்களை உயர்த்தவும் வேறு வழியின்றி...

“குட் மார்னிங்..” என்று அர்ஜீனின் முகம் பார்க்காமல் சொன்னாள்..

அந்த நேரம் பார்த்து துரியோதனனின் செல்போன் அலறிவைத்தது... எடுத்துப் பார்த்தவர்.. சங்கடத்துடன்..

“பெர்ஸனல் கால்... இதோ வந்திடறேன்...” என்று அர்ஜினிடம் சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினார்...

‘தனியா விட்டுப்புட்டுப் போறாரே...’

காவ்யா அவனிடம் தன்னந்தனிமையில் அகப்பட்டுக் கொண்டவளாய் மனதுக்குள் கைபிசைந்தாள்...

அர்ஜின்.. சுழல் நாற்காலியில் தோரனையாக சாய்ந்து அமர்ந்தான்.. லேசாகச் சுழன்றபடி..

“குட்மார்னிங்குன்னு சுவரைப் பார்த்துச் சொல்றயே.. சுவர்தான் உன் முதலாளியா..?” என்று கேட்டான்...

‘திமிர்..!’ காவ்யா மனதுக்குள் பல்லைக் கடித்தாள்...

“என்ன பதிலைக் காணோம்...?”

‘உனக்குப் பதிலைச் சொல்லிட்டாலும்..’ காவ்யா பேசாமல் நின்றாள்...

“பேச்சு வராதா..? நீ ஊமையா...?”

‘ஏன் சொல்ல மாட்ட..? இப்பத்தான் முக்கு ரோட்டில வைச்சு ஒரு கட்டப் பஞ்சாயத்தையே கூட்டி உன்ன நட்ட நடுவில நிப்பாட்டினேன்.. அரை மணிநேரம் கூட ஆகலை.. அம்புட்டையும் மறந்துட்டு என்னைப் பார்த்து ஊமையான்னு கேட்டு வைக்கிற.. நான் வாயைத் திறந்தா என்னவாகும்ன்னு தெரிஞ்சும் இப்புடி வாயைப் பிடுங்கறியே... எல்லாம் உன் நேரம்ய்யா...’

“கொஞ்சநேரத்துக்கு முன்னாலேதான் வீடு கட்டி விளாசித்தள்ளின.. இப்ப பேசாமடந்தை போல நிற்கிற.. உண்மையில யார் நீ...?”

‘மோகினிப் பிசாசு..! வீட்டுக்குப் போ.. நடு ராத்திரிக்கு உன்னைத் தேடிவந்து பேச்சு வார்த்தை நடத்தறேன்.. இப்ப ஆளை விடு...’

“என் காரை நொறுக்கினதுமில்லாம.. என்மேலயே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செஞ்ச ஆளாச்சே நீ.. எங்கே உன் அண்ணன்மார்களையெல்லாம் காணோம்.. அவங்க இல்லாம நீ தனியாவா வேலைக்கு வந்த..?”

இவன் ஒரு முடிவோடுதான் இருக்கிறான் என்று காவ்யாவிற்குப் புரிந்து விட்டது... என்னதான் பேசா மடந்தை போல.. அசையா மரமாய் நின்றாலும்.. இவன் வம்பிழுப்பதை நிறுத்த மாட்டான் என்பது புரிந்துவிட அவள் மௌன விரதத்தை கை விட்டாள்...

‘இவன் புது முதலாளியாய் இருந்தால் என்ன..? பெரிய இவனா இவன்..? என்ன செய்து விடுவான்..? இவனால் என்னதான் செய்து விட முடியும்..? வேலையை விட்டுப் போன்னுதானே சொல்ல முடியும்..? இந்த மடம் இல்லைன்னா சந்த மடம்...’

காவ்யா சுவரைப் பார்ப்பதை விட்டுவிட்டு.. அவனை மிதப்பாக ஓர் பார்வை பார்த்தாள்...

‘அஃது...’ அவன் ரசித்தான்.. அவன் விழிகளில் சுவராஸ்யம் தோன்றிவிட.. அவளை ஏற இறங்கப் பார்த்தான்...

‘பொண்ணு பார்க்க வந்த மாப்பிள்ளை கெட்டான் போ...’ காவ்யா இப்போது வெளிப்படையாகவே பல்லைக் கடித்தாள்...

"அண்ணன்மார்களைப் பார்க்கிறதுக்கு நீங்க இவ்வளவு ஆசைப்படுவீங்கன்னு எனக்குத் தெரியாமப் போச்சு சார்..."

"ஓஹ்ஹோ.. தெரிஞ்சிருந்தா என்ன செய்திருப்ப..?"

"ரோட்டில பஞ்சாயத்துப் பண்ணினா சாருக்குப் பிடிக்காதாம்ண்ணே.. அதனால கடைக்கு வந்து பஞ்சாயத்து பண்ணுங்கன்னு கையோட கூப்பிட்டுக்கிட்டு வந்திருப்பேன்..."

அவளின் பதிலில் அவன் அயர்ந்து போனான்... வெளிப்படையான மெச்சுதல் அவன் விழிகளில் தெரிந்தது...

"தைரியசாலிதான்..." பாராட்டினான்...

"இது மீனாட்சி ஆளற மதுரை மண்ணு சார்... இந்த ஊரு பொண்ணுகளுக்கு தைரியம் அதிகம்தான்... அதனால..."

"அதனால...?"

"இப்படி ஓரக்கண்ணாலே பாக்கிறது.. ஊடுசால் போட்டுப் பேசறது.. மனசுக்குள்ள பெரிய மன்மதராசான்னு நினைச்சுக்கிறது.. இதெல்லாம் இங்கே வேணாம்..."

"வேற எங்கே வைத்துக்கலாம்...?"

அவன் புருவங்களை உயர்த்தி மிதப்பாக கேட்டு வைத்ததில்.. அவன் அடங்கவே மாட்டான் என்று காவ்யாவிற்குத் தெளிவாக புரிந்துவிட்டது...

"வேற எங்கேயும் வைச்சுக்க முடியாது.. ஏன் சார்..? சென்னையில இல்லாத தொழிலா..? எதுக்காக வேலை மெனக்கெட்டு மதுரைப் பக்கம் வந்து மாட்டியிருக்கீங்க...?"

அவளின் தைரியமான கேள்வியில் அவன் கண்களின் மின்னல் அதிகரித்தது.. அவன் பார்த்தாலும் பார்த்தான்.. இது போன்ற ஒரு பெண்ணை அவன் வாழ்நாளில் பார்த்ததே இல்லை...

'கொஞ்சமாவது.. முதலாளியிடம் பேசிக்கிட்டிருக்-கோம்ன்னு இவ நினைத்துப் பார்க்கிறாளா..'

அவன் அவளை ஆராய்ச்சியாய் பார்த்தபடி...

"மதுரை உன் ஊர்தானே..?" என்று விசாரித்தான்...

"பின்னே.. உங்க ஊரா..?" அவள் சண்டைக்கு வந்தாள்...

"என் ஊரை நான் விட்டுக் கொடுக்கவே மாட்டேனே.."

"இங்கே யார் விட்டுக் கொடுத்ததாம்...?"

"நீதான் விட்டுக் கொடுத்த..."

“நானா...?”

“யெஸ்.. மதுரைக்கு வந்து மாட்டியிருக்கீங்களேன்னு கேட்டு வைத்தா என்ன அர்த்தம்..? உங்க ஊரில் வெளியூர்காரங்க வந்து பிழைக்க முடியாதுன்னுதானே அர்த்தம்..?”

அவன் மடக்கிவிட.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவள் என்னவோ மிரட்டுவதற்காகத்தான் அப்படிச் சொன்னாள்.. அவன் கதையையே மாற்றி விட்டதில் இவன் கெட்டிக்காரன்தான் என்ற நினைவு அவள் மனதில் எழுந்தது...

அந்த நினைவில் அவளையுமறியாமல் அவள் உதட்டைச் சுழித்துவிட... அவன் அவளை ஒரு மார்க்கமாக பார்க்க ஆரம்பித்து விட்டான்...

‘இது வேறயா..?’

அவனுக்கு முன்னால் விரல் சொடுக்கி தன்னுணர்விற்கு மீட்டுக் கொண்டு வரலாமா என்று யோசித்தவள்.. நடைமுறைக்கு அது சரிப்பட்டு வராது என்று கைவிட்டு விட்டாள்..

“நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை முதலாளி சார்...”

அவள் வேண்டுமென்றே 'முதலாளி' என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுக்க...

"முதலாளி சாரா..?" என்று புருவங்களை சுருக்கினான் அவன்...

"ஆமாம் முதலாளி சார்.. நீங்க ஆயிரம்தான் இருந்தாலும் முதலாளி.. நான் வெறும் தொழிலாளிதானே முதலாளி சார்.."

"நல்லாத்தான் பேசற..."

"நல்லாத்தான் பேசுவோம்.. ஆனா பேச்சு பேச்சா இருக்கனும்.. அதுக்கு மேலே ஏதாச்சும் தில்லுவாரித்தனம் பண்றதைப் போல தெரிஞ்சுச்சுன்னு வையுங்க.. எங்க பேச்சே வேற மாதிரியிருக்கும்..."

"அதாவது.. இன்னைக்கு காலையில சிக்னல்லே பேசினயே.. அதைப் போல இருக்கும்ன்னு சொல்ல வர்ற..?"

அவன் கண்களில் தெரிந்த சிரிப்பில்...

'இவன் பயப்படவே மாட்டானா...' என்று காவ்யாவிற்கு ஆயாசமாக இருந்தது...

"ஸோ.. இதைத்தான் நீ மதுரையில வந்து நான் மாட்டியிருக்கிறதா சொல்லியிருக்க..."

"புரிஞ்சுக்கிட்டாச் சரி..."

“அது புரிகிறது இருக்கட்டும்.. ‘தில்லுவாரித் தனம்’ன்னா என்ன..? அதுதான் புரியலை..”

“அதுக்குன்னு டிக்ஷனரியெல்லாம் கிடையாது சார்.. மதுரை மண்ணுக்கு வந்திட்டிங்கள்ல.. போகப்போகப் பாருங்க.. இது போல ஆயிரம் வார்த்தைகளை தினம் தினம் கேட்பீங்க.. அதுகளுக்கெல்லாம் அர்த்தம் புரியாம தலை தெறிக்க சென்னையைப் பார்த்து ஓடிராம தாக்குப் பிடிங்க...”

“ஓ...”

அர்ஜீன் டேபிளின் மீது சாய்ந்து அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்.. அவளுக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. தொண்டை உலர்ந்து.. நாவறள்வதை உணர்ந்தவள்...

‘என்னடா இது...’ என்று மனதுக்குள் திகைத்துப் போனாள்..

யாரிடமும் மயங்காத மீனாட்சி.. சொக்கநாதனிடம் மயங்கிப் போனாளாம்.. அந்த மீனாட்சி ஆள்கின்ற மதுரை மாநகரில் பிறந்து வளர்ந்து.. ஆண்களைக் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொள்ளும் காவ்யா.. ஒரு ஆண்மகனின் விழிகளை நேருக்கு நேராய் சந்திக்க முடியாமல் திணறிப் போகிறாளா...?

இது என்ன மாயம்..?

# 11

## சொக்குப்பொடி சொக்கநாதனின்... மீனாட்சியாக ஆசை கொண்டேன்...

“நீ யென்ன சொர்ணாக்காவா..?” அவன் நிதானமாக வினவினான்...

“என்னது..?” காவ்யாவிடம் தோன்றியிருந்த தவிப்பு சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட.. அவள் அர்ஜீனை பயமின்றி முறைத்தாள்...

“மெல்ல.. எதுக்கு இத்தனை கோபம்..? இந்த மிரட்டு மிரட்டினா வேற எப்படிக் கூப்பிடுவாங்க...?”

“பார்த்து சார்.. உங்க இஷ்டப்படி பட்டப் பெயர் வைச்சுக்கூப்பிட இது ஒன்னும் உங்க ஊரில்ல...”

“மதுரை...”

அவளுக்குப் பதில் அவன் சொல்லிவிட்டு.. புருவங்களை உயர்த்தினான்...

‘கிண்டலா..’ அவள் எரிச்சல்பட்டாள்...

“ஆமாம்.. உன் பெயர் என்னன்னு சொன்ன..?”

“எதுவும் சொல்லலை...” வெடுக்கென்று பேசினாள்..

“சும்மா சொல்லாதே... சிக்னல்ல கேட்டப்ப ராணி மங்கம்மான்னு நீ சொல்லலை...” அவன் விடாமல் கிண்டிக்கிளறினான்...

“நினைவிருக்கில்ல..? அப்புறமும் ஏன் கேட்கனும்..?”

“உன் பெயர் அது இல்லைன்னு தெரிஞ்சு போச்சே...” மர்மத்தைக் கண்டு பிடித்து விட்ட பாவனையில் அவன் விழிகள் உருட்டியதும்...

‘கண்டு பிடித்து விட்டான் போல...’ என்று நினைத்துக் கொண்டாள் காவ்யா...

இது என்ன பெரிய இமாலய ரகசியமா..? என்ற நினைவுடன் அலட்சியமாக முகத்தைத் திருப்பிக் கொண்டவளுக்கு.. அடுத்து அவன் பேசியதில் தூக்கிவாரிப் போட்டது...

“உன் பெயர் அல்லிதானே..” என்றான் அவன்...

“அல்லியா..?” அவள் முகம் அஷ்ட கோணலானது...

“ம்ம்.. அல்லிதான்..” அவன் தோள்களை ஸ்டைலாகக் குலுக்கி இரண்டு கைகளையும் விரித்தான்..

‘பெரிய்ய்...ய ஸ்டைல் மன்னன்..’ அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது...

‘ஆனா.. இவன் எப்படி என்னை அல்லின்னு சொல்லலாம்..?’ அவளுக்கு கோபம் வந்தது...

அதுவரை கடைக்குள் தனியாகப் போய் நின்று செல்போனில் பேசிக் கொண்டிருந்த துரியோதனன் பேச்சு முடிந்தவுடன் அவசரமாக அர்ஜீனின் அறைக்கு திரும்பி வந்தார்...

“ஸாரி.. வீட்டிலயிருந்து பேசினாங்க.. அர்ஜன்ட் மேட்டர்...” விளக்கம் சொன்னவரிடம்...

“இட்ஸ் ஆல்ரைட்...” என்றான் அர்ஜீன்...

“இந்த ஃபைல்களில் நீங்க கேட்ட விவரங்கள் இருக்கு அர்ஜீன்...”

காவ்யாவிடமிருந்த ஃபைல்களை வாங்கி அர்ஜீனின் கையில் கொடுத்தபடி துரியோதனன் பேச.. காவ்யாவிற்கு புரையேறி விட்டது...

‘இவன் பெயர் அர்ஜீனன் ஆச்சே காலையில் சொன்னானே.. அதை மறந்து தொலைத்துட்டேனே.. ஏகாம்பரம் கூடச் சொன்னாரே...’

அவன் எதற்காக அவளை ‘அல்லி’ யென்று அழைத்தான் என்று அவளுக்குப் புரிந்துவிட்டதில் அவள் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது...

‘நானும்.. பாவனாவும் பேசிக்கிட்டு இருந்ததைக் கேட்டிருப்பானோ...’

அவன் கண்களின் ஜொலிப்பு அவள் சந்தேகத்தை உறுதி செய்தது...

‘வாய்க்கு வாய் இவனை அர்ச்சுன மகராசனாம்ன்னு சொன்னோம்.. அதையெல்லாம் இவன் கேட்டிருப்பானோ.. அவள பவளக்கொடின்னு சொன்னேன்.. அவ என்னை அல்லின்னாளே....’

பாவனாவிடம் போய்ச் சொல்ல முடியாமல் அவளுக்கு அங்கேயே வேலை இருந்தது.. மனதின் பரபரப்பை அடக்கிக் கொண்டு அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவன் கேட்ட ஃபைல்களை எடுத்து அவனிடம் நீட்டிக் கொண்டிருந்தாள்.. காவ்யாவின் பரபரப்பை யூகித்துக் கொண்டவனைப் போல.. ரகசியப் புன்னகையுடன் அவள் கொடுத்த ஃபைல்களை வாங்கி ஆராய்ந்து கொண்டிருந்தான் அர்ஜீன்...

நேரம் கடக்கக் கடக்க.. காவ்யாவின் கால்கள் வலிக்க ஆரம்பித்தன.. உட்காரச் சொல்லிக் கெஞ்சின...

'இவன் மட்டும் பெரிய இவனைப் போல நாற்காலியில உட்கார்ந்துக்கனும்.. நான் மட்டும் கால் கடுக்க நிக்கனுமா..? சம்பளம் கொடுத்தா.. நான் இவனுக்கு அடிமையா..?'

கோபமும்.. ரோசமும் கொப்புளிக்க... நாற்காலியை இழுத்துப் போட்டு உட்காரும் எண்ணத்துடன் அவள் அதைத் தொட்ட அதே நொடியில்...

"ஏன் நிற்கறிங்க..? உட்காருங்க.." என்றான் அர்ஜீன்...

'இத்தனை நேரமும் இவனுக்கு இது தோணலையா..?' அவளுக்குள் எரிச்சல் மண்டியது...

இவன் சொல்லி நான் உட்காருவதா என்ற எண்ணத்துடன் அவன் சொன்னதை அவள் மறுக்க நினைத்தபோது.. கால்கள் கடுத்து அதைப் பலமாக ஆட்சேபித்தன...

கடைசி வார்த்தை அவனுடையதாகி விட்டதே என்ற கோபத்துடன் வேறு வழியில்லாமல் கால்களைக் காப்பாற்ற உட்கார்ந்தாள் காவ்யா...

கண்களில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு அவன் ஊன்றிப் படித்தான்.. அவன் கேட்கும் விவரங்களை சொல்ல முடியாமல் துரியோதனன் தத்தளித்த

போதெல்லாம் அந்த விவரங்களைச் சொல்லி அவருக்கு கை கொடுத்தாள் காவ்யா.. அவளை நன்றியுடன் பார்த்த துரியோதனன்..

“காவ்யா வேலையில கெட்டி மிஸ்டர் அர்ஜீன்...” என்று சொன்னார்...

“பார்த்தாலே தெரியுது...” என்று நமட்டுச்சிரிப்புடன் சொன்னான் அர்ஜீன்...

காவ்யா முகம் சிவக்க ஃபைலில் பார்வையைப் பதித்தாள்... அவர்கள் மூவருக்கும் ஜீஸ் வந்தது.. அதைப் பருகியபடி துரியோதனன் அறியாத வண்ணம் அவளை அடிப்பார்வை பார்த்தான் அர்ஜீன்...

‘பார்வையைப் பார்...’ அவள் சங்கடத்துடன் அவனைப் பார்க்காமல் சுவரைப் பார்த்தபடி ஜீஸைக் குடித்து முடித்தாள்..

நண்பகல் உணவு நேரம் கடந்தும் அவன் ஃபைல்களுக்குள் தலையைப் புதைத்துக் கொண்டு இருக்க.. காவ்யாவுக்கு பசி வயிற்றைக் கிள்ளியது...

‘என்னமோ மண்ணுக்குள்ள புதையலைத் தேடறவனைப் போல ஃபைலுக்குள்ள தலையை நுழைச்சுக்கிட்டு தேடறானே.. எதைத் தேடறான்..? என்னத்தை தேடினாலும்.. வயித்துக்குள்ள எதையாவது கொட்டிட்டுத் தேடித் தொலைக்கக் கூடாதா..?’

காலையில் அரையும் குறையுமாக சாப்பிட்டு விட்டு ஓடி வந்தவளுக்கு பசி அதிகமானது..

‘நல்லவேளையா அம்மா அரட்டலைப் போட்டு ரெண்டு இட்லியை சேத்து முழுங்க வைச்சுச்சு.. இல்லேன்னா இந்நேரத்துக்கு பசி வேகத்தில மயக்கம் போட்டு விழுந்திருப்பேன்...’

என்னதான் கட்டுப்படுத்திக் கொண்டாலும் ஒரு அளவுக்கு மேல் பசியைத் தாங்க முடியாத காவ்யா.. ‘எலிதான் காயுதுன்னா.. மசால் வடையும் சேர்ந்து எதுக்காக காயனும்..?’ என்ற ஞானோதயம் வரப் பெற்றவளாக எழுந்து கொள்ளப் போனாள்..

‘நான் சாப்பிட்டுட்டு வந்திடறேன் சார்...’

மனதில் நினைத்ததைச் சொல்ல அவள் வாய் திறந்த அதே நொடியில் “காவ்யா நீங்க சாப்பிட்டு விட்டு வந்து விடுங்களேன்..” என்றான் அர்ஜீன்...

போடா.. நீயுமாச்சு.. உன் வேலையுமாச்சு என்று தோன்றிவிட்டது காவ்யாவிற்கு..

அது எப்படித்தான் அவள் வாயைத் திறக்கும் அதே நேரத்தில் அவனும் வாய் திறந்து பேசித் தொலைக்கிறானோ என்றிருந்தது அவளுக்கு..

இவன் சொல்லி நான் சாப்பிடப் போவதா என்ற வீம்பு மனதிற்குள் தோன்றிய போதும்.. துரியோதனனும் சாப்பிடக் கிளம்பி விட்ட பின்பு அதைச் சொன்னால் அவனுடன் அவள் தனித்துப் பேச விரும்புவதைப் போலத் தோன்றிவிடும் என்பதால் அவள் வாயை மூடிக் கொண்டு சாப்பிடப் போனாள்..

அவளுக்காக காத்திருந்த பாவனா சண்டைக்கு வந்தாள்...

“மணியைப் பாருடி.. மூணாச்சு.. என்னடா நம்ம பிரண்டு நமக்காக சாப்பிடாமக் காத்துக்கிட்டு கிடப்பாளேன்னு நினைச்சுப் பார்த்தியா..? புது முதலாளி முகத்தைப் பார்த்ததும் உனக்கு சாப்பாடு மறந்து போயிருச்சா..?”

“அவன் முகத்தைப் பார்த்திட்டாலும்...” எரிச்சல் பட்டாள் காவ்யா..

“ஏண்டி..? ஆள் அழகாத்தானே இருக்கான்..?” என்று கேட்டாள் பாவனா..

“நீ எப்போடி அவனைப் பார்த்த..?” காவ்யா புருவங்களை உயர்த்தினாள்..

“எல்லாம் பார்த்தாச்சு.. இதுவரைக்கும் முப்பது தடவையாவது அந்தப் பக்கம் வேலையிருக்கிறதைப் போல

நான் வந்திருப்பேன்.. அவனும் என்னைப் பார்த்தான்.. நீதான் பார்க்கலை...” அமர்த்தலாகச் சொன்னாள் பாவனா..

“அடிப்பாவி.. இது எப்போ...?”

“காலையில இருந்து இதுதானே என் வேலை...”

“உன்னை..”

பல்லைக் கடித்தபடி ஹேண்ட் பேகில் இருந்த மதிய உணவு டப்பாவை எடுக்கப் போன காவ்யா.. வடையின் வாசனையை முகர்ந்தவளாக சுற்று முற்றும் பார்த்தாள்...

“என்னடி..?”

“வடைவாசனை வருதேடி...”

“இங்கேயிருந்து வருது...”

பாவனா அவளின் மேஜை டிராயரை இழுத்துக் காட்டினாள்.. உள்ளே வடைகள் நிரம்பியிருந்தன...

“அடிப்பாவி.. எதுக்குடி இத்தனை வடைக...?”

“அதிகமில்ல காவ்யா.. கொஞ்சம்தான்...”

“கொஞ்சம்ன்னா..?”

“ரெண்டு டஜன்..”

“இருபத்தி நாலு வடையா..?”

வாய் பிளந்த காவ்யா மீதமிருந்த வடைகளை எண்ணினாள்.. பத்து வடைகள் இருந்தன..

“பதினாழு வடைகள மொங்கான் போட்டயாடி..?”

“நீ வர்றவரைக்கும் பசிதாங்க வேணாமா..?”

நியாயம் கேட்ட பாவனா வடைகளையும்.. டிபன் கேரியரையும் எடுத்து வெளியில் வைத்தாள்...

“இன்னுமாடி உனக்குப் பசிக்குது..?” அதிசயித்தாள் காவ்யா...

“யானைப் பசிக்கு சோளப் பொறி போதுமாடி..?”

அவர்கள் அரட்டையடித்தபடி சாப்பிட ஆரம்பித்தார்கள்...

“காவ்யா உனக்கொன்னு தெரியுமா..?” ரகசியக் குரலில் கேட்டாள் பாவனா...

“அவன் நிஜமாவே அழகா இருக்கிறான் அதுதானே..” என்றாள் காவ்யா...

“அதே தான்.. அது எப்புடிடீ.. நாம நினைச்ச மாதிரியே இருக்கான்...?”

“த்ச்சூ.. நாமன்னு சொல்லி என்னையும் கூட்டுச் சேர்க்காதே..” என்றாள்...

“போடி... நீ கூட்டுச் சேரலைன்னா விடு.. அவன் அர்ச்சுன மகராசனைப் போல இருப்பான்னு நாம பேசினா.. அவன் நிஜமாவே அர்ஜீனனா இருந்து வைக்கிறான்.. ம்ஹீம்.. என்னால்தான் பவளக்கொடியாக முடியுமோ.. என்னவோ.. ஆள் செம ஸ்மார்ட்டுடி...”

“எனக்கொன்னும் அப்படித் தோணலை... எங்க அம்மா அடிக்கடி சொல்லுவாங்க.. ஆளு அழகு.. வேலையைப் பார்த்தா சொலகுன்னு...”

“அடடா.. என்னமா சொலவடையில புகுந்து விளையாடறடி நீ.. ஆனாலும் மதுரை மண்ணு இவ்வளவு விவரம் விளைஞ்ச மண்ணா இருக்கக் கூடாதுடி...”

“பேச்சை நிறுத்திட்டு சாப்பிடற வழியைப் பாரு.. நான் சீக்கிரமா போகனும்...”

“கொடுத்து வைச்சவ.. அவன் முன்னாலேயே உட்கார்ந்திருக்கலாம்...”

“ஏன்...? நீ வேணும்னா போயேன்...”

“நிஜமாகவா சொல்கிற..?”

“உண்மையாத்தான் சொல்றேன்.. அது எனக்குப் பெரிய விடுதலையா இருக்கும்...”

பாவனா உற்சாகத்துடன் சாப்பாட்டை முடிக்க.. அவளை விவரம் சொல்லச் சொல்லி அர்ஜீனின் அறைக்கு அனுப்பி வைத்து விட்டு.. 'அப்பாடி' என்ற நிம்மதியுடன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள் காவ்யா..

போன பாவனா இரண்டே நிமிடத்தில் பூமணத்தோடு திரும்பி வந்து விட்டாள்..

"என்னடி..." என்று திகைத்த காவ்யாவிடம்...

"முடியலைடி..." என்று தலையைப் பிடித்துக் கொண்டாள்...

"என்ன முடியலை..? அவன் கேட்கிற விவரத்தை ஃபைலைப் பார்த்துச் சொல்லித் தொலைக்க வேண்டியது தானே.." காவ்யா கோபப்பட்டாள்...

திரும்பவும் அவன் முன்னிலையில் போய் உட்கார வேண்டுமா..?

# 12

*நீ தொட்டுச்சென்ற மலர்களையே...*
*நான் தொடுத்துச்சூட ஆசைகொண்டேன்..*

“**அ**வன் கடையைப் பற்றிக் கேட்டாப் பரவாயில்லைடி.. மன்னர் திருமலை நாயக்கர் எந்த ஊரில் பொண்ணு கட்டினாருன்னு கேட்டு வைக்கிறாண்டி...”

“தஞ்சாவூரிலன்னு சொல்ல வேண்டியதுதானேடி...”

“அது எனக்குத் தெரியுமா..?”

பாவனா பரிதாபமாகக் கேட்டதில் காவ்யாவிற்கு அவனது திட்டம் என்னவென்று தெளிவாகத் தெரிந்து விட்டது...

அவனுக்கு காவ்யாவை வரவழைத்தாக வேண்டும்.. மற்றபடி அவனாவது.. திருமலை நாயக்கரின் மாமனார் வீட்டைப் பற்றி ஆராய்ச்சி செய்வதாவது...

பல்லைக் கடித்தபடி அவன் முன்னால் போய் நின்றாள் காவ்யா.. கம்யூட்டரில் விழி பதித்திருந்தவன் உடனடியாக அவளை நிமிர்ந்து பார்த்து விடவில்லை..

அவள் வந்ததையே உணராதவனைப் போல.. முகவாயைத் தடவியபடி அவன் கம்ப்யூட்டரின் திரையில் தெரிந்த புள்ளி விவரங்களில் கவனமாயிருக்க.. காவ்யாவிற்கு எரிச்சல் பரவியது...

'வேணும்னே பண்றான்...'

துரியோதனன் இருந்தாலாவது தேவலாம்.. சாப்பிடப் போன மகராஜன் திரும்பி வரவேயில்லை.. உண்ட மயக்கத்தில் உறங்கி எழுந்துவிட்டு வருவாராயிருக்கும் என்று எண்ணிக் கொண்டாள் காவ்யா...

'தூங்கித் தூங்கித்தான் கடையை வித்தாச்சு.. இன்னும் என்ன தூக்கம் வேண்டிக் கிடக்கு...' என்று மனதிற்குள் அவரைத் திட்டித் தீர்த்தாள்...

'அவரிருந்தா பாவனா திரும்பி ஓடி வந்திருக்க மாட்டா.. திருமலை நாயக்கரின் மாமனார் வீட்டைப்பத்தி மட்டுமில்லாம.. அவரோட கொழுந்தியா வீட்டைப் பத்திக்கூடப் பிட்டுப்பிட்டு வைத்திருப்பாரே...'

அர்ஜீன் தலை நிமிர்ந்து அவளைப் பார்க்கிற வழியாய் இல்லை.. அவன் கணக்கு வழக்கில் ஆழ்ந்து போய்விட.. பொறுத்தது போதுமென்று காவ்யா பொங்கியெழுந்தாள்...

"எக்ஸ்யூஸ் மி.." என்று குரல் கொடுத்தாள்..

"வாட்..?" நிமிர்ந்து பார்த்தவனின் கண்களில் ஆர்வம் தெரிந்தது..

'எதுக்கு இப்படி முழிச்சு வைக்கிறான்...' காவ்யா குழம்பிப் போனாள்..

"என்ன சார்...?"

"இப்ப என்ன சொன்னே..?"

அவன் ஏக வசனத்தில் பேசியதில் காவ்யாவுக்குள் கடுப்பு கிளம்பியது...

'அது என்ன துரியோதனன் முன்னாலே மட்டும் வாங்க.. போங்கங்கிறான்.. தனியா மாட்டினா வா.. போங்கிறான்...'

அவள் முறைத்தபடி நீயென்ன சொல்வது.. நானென்ன கேட்பது என்ற ரீதியில் அவன் சொல்லாமலே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்...

"என்னவோ 'கிஸ் மீ'ன்னு காதில விழுந்துச்சே.." அவன் முகத்தில் குறும்பு கொப்பளித்தது...

"என்னது..?" அதிர்ந்து போய் நிமிர்ந்து பார்த்தாள் காவ்யா...

"நீ சொன்னதைத்தான் சொன்னேன்..." அவன் கண்களில் சிரிப்பிருந்தது...

“என்னத்தைச் சொன்னேன்..? சுரைக்காய்க்கு உப்பில்லைன்னா சொன்னேன்..? ‘எக்ஸ்யூஸ் மீ’ன்னு சொன்னேன்..” அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது...

“ஈஸிட்..? என் காதில இப்படி விழுந்ததே...” அவன் விடவில்லை...

“விழும்.. விழும்.. இதே போல பேசினீங்கன்னா வேற சிலதும் சேர்ந்து விழுகும்...” வெடுக்கென்று பதில் சொன்னாள் அவள்..

“வேற சிலதுன்னா..? அடியைச் சொல்கிறயா..?” முகம் மாறாமல் கேட்டான் அர்ஜீன்...

‘ஆமாம்ன்னு சொன்னா இவன் என்ன செய்வான்..?’

காவ்யா கச்சை கட்டிக் கொண்டு பதில் சொல்லத் தயாரான போது கம்யூட்டரின் திரையைக் காட்டிய அர்ஜீன்...

“இதென்ன..?” என்று கேட்டான்...

வேலையைப் பற்றிப் பேச்சு மாறியதில் காவ்யாவும் கடுகடுத்த முகத்துடன் பதிலைச் சொல்ல ஆரம்பித்தாள்.. ஒவ்வொரு கணக்கையும் அவன் உள்ளே நுழைந்து.. அக்கு வேறு.. ஆணிவேராக ஆராய்ந்து கேள்வி கேட்டதில் அவள் மனதில் பாராட்டுதல் தோன்றியது...

'பரவாயில்லையே... பயபுள்ள கெட்டிக்காரனாத்தான் இருக்கான்...'

"யு ஆர் எக்ஸலண்ட்..."

அவள் மனதுக்குள் அவனைப் பாராட்டிக் கொண்டிருக்க.. அவனோ அவளின் வேலைத் திறமையை வெளிப்படையாகப் பாராட்டினான்...

'நான் கேட்டேனா...' என்பதைப் போல தெனாவெட்டாக உட்கார்ந்திருந்தாள் காவ்யா...

"உன் பிரண்ட் உன்னைப் போல இல்லை... எந்தக் கேள்வியைக் கேட்டாலும் 'நே..'ன்னு விழித்து வைக்கிறாங்க..."

'அவளுக்குமட்டும் மரியாதையா..?' மனதுக்குள் வெகுண்ட காவ்யா...

"வேலையைப் பத்திக் கேட்டிருந்தா அவ பதிலைச் சொல்லியிருப்பா சார்.. திருமலை நாயக்கரின் மாமனார் எந்த ஊரு... மச்சினிச்சி எந்த ஊருன்னு கேட்டா எப்படி பதிலைச் சொல்லுவா...", என்று விளாசினாள்..

"ஐ ஸீ.." தாடையைத் தடவிய அர்ஜீன்...

"நான் திருமலை நாயக்கரோட மாமனார் வீட்டைப் பத்தி மட்டும்தானே கேட்டேன்..? மச்சினிச்சி எங்கிருந்து வந்தாங்க..?" என்று கேட்டான்...

'உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா..?' என்ற பார்வையைப் பார்த்த காவ்யா...

"எள்ளுங்கிறதுக்கு முன்னாலே எண்ணையாய் நிற்கலாமேங்கிற எண்ணம்தான்.. வேற என்ன..? மாமனாருக்கு அடுத்து மச்சினிச்சிதானே சாருக்கு நினைவுக்கு வருவாங்க..?" கேலிப் பார்வையுடன் பதிலுக்கு கேட்டாள் காவ்யா..

அவளின் கேலியைக் கண்டு கொண்டவனின் கண்கள் மின்னின...

"ஏனாம்..? மச்சினன் நினைவுக்கு வரமாட்டாரா..?"

"உங்க நினைவுக்கெல்லாம் அவர் வரமாட்டார் சார்.."

"என் நினைவைப் பற்றி அவ்வளவு தெளிவா தெரிஞ்சு வைச்சிருக்கயா..? வெரிகுட்..."

அவன் மகிழ்ந்து போய் பாராட்ட.. எந்தப் பக்கம் போனாலும் அந்தப் பக்கம் வந்து இவன் வழியை மறிப்பானா என்றிருந்தது காவ்யாவிற்கு.. அவன் அத்தோடு விட்டு வைக்காமல் மேஜையில் விரல்களால் தாளம் போட்டபடி..

*"ஒரே நாள்.. உனை நான்...*
*நிலாவில் பார்த்தது...*
*உலாவும்.. உன் இளமைதான்..*
*ஊஞ்சல் ஆடுது..."*

என்று பாடி வைத்தான்...

காவ்யாவிற்கு தூக்கி வாரிப் போட்டது..

‘இந்தப் பாட்டை இவன் எதுக்காக என்னைப் பார்த்து பாடித் தொலைக்கிறான்.. பாவனாவப் பாத்தில்ல பாடித் தொலைக்கனும்..? அவதானே காலங்கார்த்தாலே வாயை வைச்சுக்கிட்டு சும்மாயிருக்க மாட்டாம.. நம்ம ஆபிஸிலே இனிமே இளமை ஊஞ்சலாடப் போகுதுன்னு பேசி வைச்சா.. இவன் அவளை விட்டுருவான்.. என்னைப் பார்த்து பாடி வைப்பான்...’

அந்த நேரம் பார்த்து கந்தசாமி உள்ளே வந்தார்.. அர்ஜீன்...

“கந்தசாமி..” என்றான்...

“ஐயா...” கந்தசாமி வாயெல்லாம் பல்லானார்...

“உங்களுக்கு இந்த அல்லி யாரு.. பவளக்கொடி யாருன்னு தெரியுமா..?”

காவ்யாவைப் பார்த்தபடியே அவன் கேட்டுவைக்க.. காவ்யா கலவரமானாள்...

‘கடவுளே...! இந்தக் கந்தசாமி உளறிக் கொட்டாம இருக்கனுமே.. இவனே ஃபாரினில படிச்சுட்டு.. சென்னையில வியாபாரம் பண்ற ஆளு.. இவனுக்கு

நிச்சயமாய் அல்லி யாரு.. பவளக்கொடி யாருன்னு தெரிஞ்சிருக்காது.. கந்தசாமி வாய் விட்டாத்தான் தெரியும்.. சும்மாவே பாட்டுப் பாடி வைக்கிறான்.. அதையும் தெரிஞ்சுக்கிட்டா என்ன பண்ணித் தொலைப்பானோ...'

அர்ஜீனுக்குத் தெரியாமல் வாயில் விரலை வைத்து சமிக்ஞை செய்து கந்தசாமியை அடக்கி வைக்கலாமென்றால்.. அதைச் செய்ய முடியாதபடி அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்...

'போச்சு..' மானசீகமாக காவ்யா தலையைப் பிடித்தபோது...

"எதுத்தாப்புல இருக்கிற ஜவுளிக்கடையில வேலை பார்க்கிற பொண்ணுதான் பவளக்கொடிங்கய்யா.. அல்லி.. நம்ம கடைக்கு நாலு கடை தள்ளியிருக்கிற டிபார்ட் மென்டல் ஸ்டோரில வேலைபாக்குது..." என்று எடுத்துச் சொன்னார் கந்தசாமி..

"அப்படியா..?" தாடையைத் தடவிய அர்ஜீன்...

'ஆஹா..' என்று மகிழ்ந்து போன காவ்யாவின் முகக் குறிப்பை கவனித்து விட்டான்..

'வேற ஏதோ இருக்கும் போல இருக்கே...' சுதாரித்துக் கொண்டான்...

‘இந்தப் பெண்கள் கிண்டலாப் பேசினதை வைத்துப் பார்த்தால் அந்தப் பெயர்கள் ஏதோ ஒரு கதையில் வருகிற பெயர்களாத்தான் இருக்கனும்.. அது என்ன கதை..? சினிமாக் கதையாய் இருக்குமோ...’

மறந்தும் அவன் இதிகாசக் கதையாயிருக்கும் என்று நினைக்கவில்லை.. அவன் பெயர் அர்ஜீன் என்பதைத் தவிர.. அவனுக்கும் இதிகாசத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இருந்ததில்லை..

‘அது என்ன சினிமான்னு தெரிஞ்சுக்கனும்.. அந்த ஃபிலிமில் அர்ஜீன் ஆக்ட் பண்ணியிருப்பாரோ..? இல்லை.. அந்த ஃபிலிமின் கதையில வர்ற ஹீரோவுடைய பெயர் அர்ஜீனா இருக்குமோ..? அப்ப அல்லியும்.. பவளக்கொடியும் டபுள் ஹீரோயின்ஸா...?’

அதைக் கேட்டறியாவிட்டால் தலையே வெடித்து விடும் போலத் தோன்றிவிட.. கிளம்பிக் கொண்டிருந்த கந்தசாமியை தடுத்து நிறுத்தினான் அர்ஜீன்..

“நான் இவங்களைக் கேட்கல கந்தசாமி...”

“வேற யாரைக் கேட்கறிங்க முதலாளி..?”

“அல்லி.. பவளக்கொடின்னு ஏதாவது ஒரு கதையில வருதா..? அந்தக் கதையில அர்ஜீன் ஹீரோவா வர்றாரா..?”

‘லைனைப் பிடிச்சிட்டானே...’

இனிமேலும் பயந்து கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது என்று அர்ஜீனின் முன்னாலேயே வாயில் ஆள்காட்டி விரலை வைத்து கந்தசாமியை எச்சரித்தாள் காவ்யா...

“உஸ்ஸ்ஸ்... கந்தசாமி.. பேசாம போங்க...”

“அதெப்படிம்மா போறது..? நம்ம முதலாளி லண்டன்ல படிச்சவரு...”

“அதுக்கென்ன இப்ப...”

“இவரு நம்ம ஊரு ‘பவளக்கொடி’ நாடகத்தைப் பத்தித் தெரிஞ்சுக்க ஆசைப்படறதைப் பார்க்கிறப்ப புல்லரிக்குதும்மா...”

“வாட்..? பவளக்கொடின்னு டிராமா இருக்கா..?” என்று கேட்ட அர்ஜீன்.. இப்போது அவன் வாயில் ஆள்காட்டி விரலை வைத்து...

“உஸ்ஸ்ஸ்..” என்று காவ்யாவை அடக்கினான்...

“நீங்க சொல்லுங்க கந்தசாமி.. யார் அந்த பவளக்கொடி..?”

“அதுவா..? அது அர்ச்சுன மகாராஜாவைக் காதல் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்கிட்ட பொண்டாட்டி...”

கந்தசாமியின் இந்த விளக்கத்தை காவ்யாவினால் ரசிக்க முடியவில்லை... அது ஏனென்றும் அவளுக்குத் தெரியவில்லை.. எதனால் என்று யோசித்தபோது.. அவள் காலையில் பாவனாவைப் பார்த்து.. நீதானா பவளக்கொடி என்று கேட்டு வைத்தது நினைவுக்கு வந்து தொலைத்தது...

'இவன் கிட்ட பவளக்கொடியைப் பத்தி கந்தசாமி விளக்கம் சொன்னா எனக்கென்ன வந்துச்சு..' தன்னைத் தானே அவள் அதட்டிக் கொண்டாள்...

"அப்ப.. அல்லிங்கிறது..?" அர்ஜீன் புருவங்களை உயர்த்த...

"வேண்டாம் கந்தசாமி.. வேண்டாம்..." என்று அலறினாள் காவ்யா...

"இதுக்கு எதுக்கும்மா இப்புடிச் சத்தம் போடறிங்க.. ஐயாவே நம்ம ஊரு கதைக மேல ஆர்வப்பட்டு கேட்டுக்கிட்டு இருக்காரு.. நீங்க கதைசொல்லவிடாம ஊடாலே வந்தா என்ன அர்த்தம்..?"

"அவங்களைக் கண்டுக்காதீங்க கந்தசாமி..." அர்ஜீன் தைரியம் கொடுத்ததும்.. கந்தசாமி உற்சாகமாகி விட்டார்...

'அதாகப்பட்டது.. சுவாமி...' என்ற ரீதியில் முகத்தை வைத்துக்கொண்டு அல்லி.. அர்ஜீனனைப் பற்றி அள்ளிவிட ஆரம்பித்தார்...

“அல்லிதானே அர்ஜீனனோட ராணி...”

“ராணின்னா..?”

“பொண்டாட்டி முதலாளி...”

“ஓ...” ரசனையாய் காவ்யாவைப் பார்த்தான் அர்ஜீன்..

அவள் முகம் குங்குமமாய் சிவந்து விட்டதில் அவனது ரசனை அதிகமனாது...

“அல்லி ராஜ்யத்தில பொம்பளைக வைச்சதுதான் சட்டம்...”

“ஹௌ ஸ்வீட்..!”

“அல்லி மகாராணி ஆம்பளைக யாரையும் ஏறெடுத்துப் பார்த்ததில்ல... அப்பேற்பட்டவ.. அர்ச்சுன மகாராசாகிட்ட விழுந்துட்டான்னா பாருங்களேன்...”

அதற்கு மேலும் கந்தசாமி என்ன சொன்னார் என்பதை அவனும் கவனிக்கவில்லை.. அவளும் கவனிக்கவில்லை.. கந்தசாமியின் வர்ணனையில் வெட்கிச் சிவந்திருந்த அவள் முகத்தையே அள்ளிப் பருகுவதைப் போல அர்ஜீன் பார்த்துக் கொண்டிருந்தான்...

# 13

*என் மனதின் ஆசைகளை...*
*நீயறிய ஆசை கொண்டேன்...*

**வா**னத்தில் நிலவு நகர்ந்தது கொண்டிருந்தது... ஜன்னல் வழியாகத் தெரிந்த நிலாக்கால வானத்தின் அழகைப் பார்த்த காவ்யாவிற்கு அதை ரசிக்க முடியாமல் மனதுக்குள் ஏதோவொரு சஞ்சலம் இழையோடிக் கொண்டிருந்தது.. தூக்கம் பிடிக்காமல் அவள் கட்டிலில் புரண்டு படுத்தாள்...

*'பட்டு நிலா வான்வெளியில்..*
*காவியம் பாடும்...*
*கண்ட பள்ளியறைப் பெண்மனது..*
*போர்க் களமாகும்...'*

கவிஞரின் திரையிசைப் பாடல் நினைவுக்கு வந்ததில் அவள் துணுக்குற்றாள்.. இந்தப் பாடலைப் பாடிய கதாநாயகியின் மனதில் காதல் இருந்த நினைவில் பதறி எழுந்தாள்...

‘ச்சே.. அவன் யாரு..? நான் யாரு..? இன்னைக்கு ஒருநாள் அவனைப் பார்த்துப் பேசி பழகினதில மந்திரிச்சு விட்ட கோழியப் போல ஒரு மார்க்கமா ஆகித் தொலைக்கிறேனே.. இது நல்லாயில்லையே.. இதை மட்டும் என்னைப் பெத்த ஆத்தா அன்னபூரணி தெரிஞ்சுக்கிருச்சுன்னு வைய்யி.. அடுத்த நிமிசமே ஒரு அருவாமீசைக்காரனைப் பிடிச்சு.. அவன் கையில என்னைக் கல்யாணம்கிற பெயரில ஒப்படைச்சிருமே.. நானே வம்பாடு பட்டு வேலைக்குப் போக சம்மதம் வாங்கியிருக்கேன்... அதையும் தொலைச்சுப் புட்டு கல்யாணம்கிற பெயரில இந்தச் சுதந்திரத்தையும் தொலைச்சுக்கனுமா...’

மனதுக்குள் இந்தச் சிந்தனை வந்த பிறகு காவ்யா தெளிவாகிப் போனாள்.. கண்களை மூடியவள் நிச்சிந்தையாய் தூங்க ஆரம்பித்தாள்...

அவளும்தான் என்ன பண்ணுவாள்..?

அல்லியைப் பற்றியும் அர்ஜீனனைப் பற்றியும் கதை கதையாய் கேட்டுவிட்டு.. கந்தசாமியை அனுப்பி வைத்த அர்ஜீன்.. காவ்யாவிடம்...

“இந்த அர்ஜீனன் போகிற இடமெல்லாம் பெண்டாட்டியைத் தேடிக்க மாட்டான்.. அல்லியிடம் மட்டும்தான் நிலைத்து நிற்பான்.. இவனுக்கு எந்தக்

கொடியும் வேண்டாம்.. அல்லி மட்டுமே போதும்...” என்று சொல்லி வைத்தால் அவளின் கன்னி மனதில் சலனம் ஏற்படாதா...?

அவன் அத்தோடும் நிறுத்தித் தொலைக்காமல்...

“ஐ லைக் அல்லி..” என்று காதலாகப் பார்த்து வேறு வைத்தான்.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்ட போது.. அவனின் கண்களில் கர்வம் கலந்த மின்னல் வந்தது...

“உனக்கு ஆண்களைப் பிடிக்காதா..? இல்லை படித்த ஆண்களைப் பிடிக்காதா..?” என்று தொடர்ந்து அவன் கேள்வி கேட்டபோது.. சலனப்பட்ட அவளின் கன்னிமனது சமனப்பட்டு விட்டது...

“யார் சொன்னது..?” என்று அவனிடம் சீறினாள்...

“நீதானே சொல்லிக்கிட்டு இருந்த..?”

“அதெல்லாம் ஒன்னுமில்ல...”

“உன் அண்ணன் விருப்பப்பட்ட படிப்பைப் படிச்சிருக்காராமே...” என்று அவன் அடுத்து கேட்ட கேள்வியில் அவளுக்கு தூக்கிவாரிப் போட்டது..

“இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்..?”

“கந்தசாமியின் உபயம்தான்..”

“இந்த கந்தசாமிக்கு வயதுதான் கூடியிருக்கு.. அறிவுங்கிறது குறைஞ்சுக்கிட்டே வந்து இப்பச் சுத்தமா இல்லாமலே போயிருச்சு...”

அவளின் வெடுவெடுப்பில் அவன் முகத்தில் குடி கொண்டிருந்த உல்லாசம் மறைந்து விட்டது...

“வாட்..?” என்று கடுமையாகக் கேட்டான்...

“பின்னே என்ன சார்.. யார் கேட்டாலும் என்னைப் பத்தின விவரத்தை இவரு சொல்லிடுவாரா..?”

“கேட்பது நான் காவ்யா...”

“நீங்க என்ன பெரிய இவரா..?” அவள் படபடத்தாள்..

“என்ன சொன்ன..?” அவன் கண்கள் இடுங்கக் கேட்டான்..

“என்னைப் பத்தின சொந்த விசயங்களை விசாரிக்க நீங்க யாருன்னு கேட்டேன்...”

“நான் இந்தக் கடையோட பாஸ்...”

“அதுக்கு...? என்னைப் பத்தி தேவையில்லாம விசாரிப்பீங்களா..?”

“தேவையோடதான் விசாரித்தேன்...”

அவன் முகத்தில் சிரிப்பு மறைந்து.. கடுமை விரவியிருந்தது.. அதைப் போன்ற கடுமையையும் அவன் முகம் காட்டக் கூடும் என்று அந்த நொடியில்தான் காவ்யா அறிந்து கொண்டாள்...

இருந்தும் விட்டுக் கொடுக்காமல் அவளும் வெடுவெடுத்தாள்...

“என்ன தேவைக்கு விசாரிக்கனும்..?”

“இந்தக் கடையில இருக்கிற கம்யூட்டர்களின் மதிப்பென்னன்னு உனக்குத் தெரியுமா..? பணம் புழங்குகிற இடம்...”

அவன் எங்கே வருகிறான் என்பதை ஒரு நொடியில் புரிந்துகொண்ட காவ்யாவின் முகம் மாறியது...

“அதுக்கு..?” கூர்மையான பார்வையுடன் கேட்டாள்...

“இங்கேயிருக்கிறவங்களோட வீட்டு அட்ரஸீம்.. மத்த விவரங்களும் எனக்குத் தேவை.. அவசரத்தில அது தேவையாயிருக்கும்...” அவன் நிதானமாகச் சொன்னான்...

“எந்த அவசரத்தைச் சொல்கிறிங்க..?” அவள் விடவில்லை...

“ஐ மீன்.. கடையில் பொருள்கள் காணாமல் போகலாம்.. பணம் குறையலாம்.. அந்தச் சமயத்தில இந்த விவரங்கள் பயன்படும்...”

"அதாவது.. நான் திருடியிருந்தா.. என்னைக் கண்டுபிடிக்க இதையெல்லாம் நீங்க யூஸ் பண்ணிக்குவீங்க.. அப்படித்தானே...?" கொதிப்புடன் கேட்டாள் காவ்யா...

"அப்படியும் வைத்துக்கலாம்..." அமர்த்தலாய் பதில் சொன்னான் அர்ஜீன்...

"யாரைப் பார்த்து என்ன வார்த்தை சொல்கிறிங்க..?" காவ்யா வெகுண்டு விட்டாள்...

"ஏன்..? உன்னைப் பார்த்துத்தான் சொல்கிறோன்.. நீயென்ன நேர்மையின் சிகரமா..? காலையில் என் காரை இடிச்சு சேதம் பண்ணிட்டு.. ஊரைக் கூட்டி.. பழியை என் தலையில தூக்கிப் போட்ட ஆளுதானே நீ..?"

அவன் சரியாக மடக்கிவிட.. அவள் முகம் சிவந்து விட்டது...

'அதுக்காக என்னை இப்படிச் சொல்லி விடுவானா..?'

மனம் கொந்தளிக்க.. அவள் சண்டைக்குத் தயாரான போது துரியோதனன் வந்து விட்டார்.. இருவரும் போர் நிறுத்தம் செய்துவிட்டு வேலையைப் பார்க்க ஆரம்பித்தார்கள்...

கணக்கு வழக்குகளை சரிபார்த்து அர்ஜீனிடம் ஒப்படைத்த பின்னால் துரியோதனன் கடையில் இருந்தவர்களிடம் விடை பெற்றுக் கொண்டார்..

அதுநாள்வரை முதலாளியாக இருந்தவர்.. இன்று யாரோபோல வெளியேறுவதில் அந்தக் கடையில் வேலை செய்தவர்களின் மனதில் பாரம் ஏறியது...

காவ்யாவை தனது செயலாளராக அர்ஜீன் நியமித்து விட்டான்..

“நானே திருடி..! எனக்கு எதுக்கு இந்தப் பதவி உயர்வு...” அவள் முறைத்தாள்..

“உன்னைத் திருடின்னு நான் சொன்னேனா..?” புருவங்களை அவன் உயர்த்தினான்...

“நேர்மையின் சிகரமான்னு நீங்க கேட்கலை..?” காவ்யா மூக்கை விடைத்தாள்...

அவன் பதில் சொல்லவில்லை.. அவனுடைய அறையில் காவ்யாவுக்காக மேஜை.. நாற்காலி போடப்பட்டு.. ஒரு கம்யூட்டரும் பொருத்தப்பட்டது...

“உன்னைப் பார்க்கிற சாக்கில் நான் அவனைப் பார்த்துக்கலாம்டி..” பாவனா குதுகலித்தாள்..

“உனக்கு உன் பிரச்னை...” காவ்யா எரிச்சல் பட்டாள்..

“உனக்கு என்னதாண்டி பிரச்னை..?” பாவனா கோபப்பட்டாள்...

“இப்படி முதலாளியோட செகரட்டரியாய் மாறுகிறது எனக்குப் பிடிக்கலை பாவனா..” மனத்தாங்கலுடன் சொன்னாள் காவ்யா..

“ஏண்டி..?” பாவனா விசித்திரமாகப் பார்த்தாள்..

“அவனவன் உன் சீட்டுக்கு வர முடியலையேன்னு வயிறெரிஞ்சு போய் கிடக்கிறானுக.. உனக்கு இந்த பிரமோசன் கசக்குதா...?”

“நீ வயிறெரியலையா...?”

“அது என்ன தேவைக்கு..? அவன் முன்னாலே உட்கார்ந்தா வைகை ஆத்தைப் பத்தி விளக்கம் கேட்பான்.. தெப்பத் திருவிழா எப்ப நடக்கும்பான்.. என்னால விளக்கம் சொல்ல முடியுமா..? எனக்கு திருமலை நாயக்கரின் பெண்டாட்டி எந்த ஊரில பிறந்தாங்கன்னே தெரியலை.. அதனால.. அவன் முன்னாலே உட்கார்ந்து இதுக்கெல்லாம் விளக்கம் சொல்லி ஓய்ந்து போக நீ தாண்டி லாயக்கு...”

‘அவன் என்னிடம் இதையெல்லாம் கேட்க மாட்டான்...’

மனதில் நினைத்ததை வெளியில் சொல்ல காவ்யாவினால் முடியவில்லை... அதுவரை வேறு வழியில்லாமல்தான் அவள் அதை மறைத்தாள்.. அவள்

மனதிலிருந்த சந்தேகத்தை பாவனாவிடம் அவளால் சொல்ல முடியுமா..?

‘அவன் என்னைச் சைட் அடிக்க நினைக்கிறாண்டி.. அதுக்கு தோதாத்தான் அவனுக்கு செகரட்டரியா என்னை புரமோட் பண்ணியிருக்கான்...’

இதைச் சொன்னால் என்ன ஆகும்...?

‘அப்படியாடி சொல்கிற..?’ என்று பாவனா கண்சிமிட்டிச் சிரித்து வைப்பாள்....

‘ஆள் செம ஹேண்ட்சம்மா இருக்காண்டி.. அவனை சைட் அடிக்கனும்னு நான் துடிக்கறேன்.. அவன் என்னடான்னா.. என்னை விட்டுட்டு உன் பக்கமா பார்வையை திருப்பியிருக்கான்.. நடத்து தாயே நடத்து..’ என்று சொல்லியிருப்பாள்...

இதுதான் என்று நிச்சயமாகத் தெரியாத நிலையில் அவளால் இப்படிப்பட்ட பேச்சுக்களைக் கேட்க முடியுமா..?

அந்தக் கடையைப் பற்றிய கணக்கு விவரங்களை காவ்யா மட்டுமே தெள்ளத் தெளிவாக அறிவாள் என்பது உண்மைதானே..? துரியோதனன் வெளிப்படையாக அவளை செயலாளர் என்று சொல்லிக் கொண்டதில்லையே தவிர.. அவருக்குத் தேவையான எந்த விவரத்தையும் அவர் காவ்யாவிடம் தானே கேட்பார்...?

கடையைப் பற்றிய முக்கிய விவரங்களை காவ்யாவிடம் மட்டும்தானே அவர் சொல்லுவார்..?

அவர் மதுரைக்காரர் என்பதினால் அவளைத் தனித்து அமரச் செய்யாமல் விட்டிருக்கலாம்.. அர்ஜீன் அப்படியில்லை... அவன் வெளிநாட்டில் படித்தவன்.. சென்னையிலும்.. மற்ற ஊர்களிலும் மிகப் பெரிய கம்யூட்டர் கம்பெனிகளை நிர்வகித்து வருபவன்... அவனுக்கு செயலாளர் என்ற ஒருவர் கண்டிப்பாக தேவை.. அந்தச் செயலாளர் கடையைப் பற்றிய அனைத்து புள்ளி விவரங்களையும் விரல் நுனியில் வைத்திருப்பவராக இருக்க வேண்டும் என்று அவன் நினைத்ததில் தவறில்லையே...

“சும்மா மனசைப் போட்டு உழட்டிக்காதே காவ்யா.. புது முதலாளியோட செகரட்டரிங்கிறது பவர்புல்லான போஸ்ட்.. இனி இந்தக் கடையில நீ வைச்சதுதான் சட்டம்...”

“ஏண்டி கடுப்பைக் கிளப்பற..? சட்டம் போடத்தான் நானிருக்கேனா..? நீ வேற எரிச்சலைக் கிளப்பாதே...”

“அதில்ல காவ்யா.. இந்தக் கடையில எது நடந்தாலும் அதை உனக்குத் தெரியப் படுத்தியாகனும்.. முதலாளி ஊரில இல்லாத நேரத்தில நீதான் அவரிடத்தில இருந்து கடையை கண்காணிக்கனும்...”

"இப்படியெல்லாம் யார் சொன்னது..?"

"நோட்டிஸே போட்டுட்டாங்க.. பார்க்கலையா..?"

அர்ஜீன் தெளிவாக அறிக்கை தயாரித்து... கடையின் அனைத்து ஊழியர்களிடமும் அனுப்பி வைத்திருந்தான்.. அதில் காவ்யாவின் செயலாளர் என்ற பதவியின் நியமனத்தைத் தெரியப் படுத்தியிருந்தான்.. கடையின் அனைத்து ஊழியர்களும் அவள் கண்காணிப்பின் கீழ் வேலை செய்ய வேண்டும் என்று சொல்லியிருந்தான்.. அவன் ஊரில் இல்லாத நாள்களில் காவ்யாவின் பொறுப்பில் கடை இயங்கும் என்று அறிவித்திருந்தான்..

'ஒரே நாளில் இத்தனை மாற்றங்களா..?' காவ்யாவுக்கு தலையைச் சுற்றியது...

'இதெல்லாம் எதற்காக..?'

# 14

*ஏகாந்தமாய் உன் மடிசாய...*
*என் மனதில் ஆசை கொண்டேன்...*

ஒரு வாரத்திற்குள் கடையை முழுவதுமாக தன் வசப்படுத்தி விட்டான் அர்ஜீன்.. கடையில் வேலை செய்கிறவர்களிடம் தோழமையுடன் பழகினான்.. வரவு.. செலவுக் கணக்கை காவ்யாவிடம் ஒப்படைத்தான்.. அவன் இல்லாத நாள்களில் பேங்கில் வரவு செலவு நடத்தும் அதிகாரத்தை அவள் கையில் கொடுத்தான்...

“தினமும் கலெக்சன் ஆகிற பணத்தை பேங்கில கட்டிரு...”

“எனக்குப் பழக்கமில்லை...” அவள் மறுத்தாள்...

“பழகிக்க...” அவன் கறாராய் உத்தரவிட்டான்...

“திருடி கையில பெட்டிச்சாவியா..? நீங்க கெட்டிக் காரர்தான்...” முகம் திருப்பிக் கொண்டாள் காவ்யா...

அர்ஜீன் குற்ற உணர்வுடன் உதட்டைக் கடித்துக் கொண்டான்...

“அதை நீ மறக்கவே மாட்டியா..?”

“மறக்கிற வார்த்தைகளை நீங்க பேசலை..”

“ஏதோ கோபத்தில பேசின பேச்சு.. அதைப் போய் நீ பெரிதா எடுத்துக்கிட்டா எப்படி..? யு ஆர் எ கிளவர் கேர்ள் காவ்யா... இது போல ஸில்லித்தனமான பேச்சுக்களையெல்லாம் நீ மறந்து விடணும்.. நினைவில வைத்துக்கக் கூடாது...”

“இதிலயும் கெட்டிக்காரர்தான்..” அவளுக்கு கோபத்தில் முகம் சிவந்தது...

“பெண்களுக்கு வெட்கத்தில்தான் முகம் சிவக்கனும்.. இப்படிக் கோபத்தில் முகம் சிவக்கக் கூடாது.. ஆனாலும் உனக்கு இவ்வளவு கோபம் ஆகாது காவ்யா...”

“நான் கோபக்காரிதான்.. பிறந்தப்ப இருந்து இப்படித்தான் நான் இருக்கேன்... இனிமேலும் இப்படித்தான் இருப்பேன்.. உங்களுக்கு மட்டும் கோபம் வரலாம்.. எனக்கு வரக்கூடாதா..?”

“இதையே நானும் கேட்கலாமில்லையா...?”

“தாராளமா கோபப் படுங்க.. ஆனா.. கோபத்தில எதை வேணும்னாலும் பேசிருவீங்களா...?”

“நீயும் அப்படிப் பேசலாமா..?”

“எப்படிப் பேசினேன்..?”

“நீங்க யாருன்னு என்னைக் கேட்கலாமா..?”

அப்படிக் கேட்காமல் வேறு எப்படிக் கேட்பது என்று அவளுக்குப் புரியவில்லை...

‘இவன் என்னதான் மனசில நினைச்சுக்கிட்டு இருக்கான்..?’

“அந்தக் கோபத்தில சட்டுன்னு பேசிட்டேன்... ஆம் ஸாரி...”

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாக இருந்தாள்...

“அதுதான் ஸாரி சொல்லிட்டேனில்ல..? சிரி...” அவன் இலகுவாகப் பேசிச் சிரித்தான்..

காவ்யா முகச்சுளிப்புடன் அவனையே பார்த்தாள்.. அவளது அந்தப் பார்வையில் அவன் புருவங்கள் சுருங்கின.. என்ன என்ற பாவனையில் புருவங்களை உயர்த்தினான்..

“நீங்க ஃபாரின் போய் படிச்சுட்டு வந்தவர்.. சென்னையில பொழைக்கிறவர்...”

“வாட் ஃபார்..?”

“உங்களுக்கு எதை வேண்டும்னாலும் பேசிச்-சிரிக்கிறது ஈஸியா இருக்கலாம்.. எனக்கு அப்படியில்லை..”

“நீ என்னதான் சொல்ல வருகிற..?”

“நீங்க இந்தக் கடையோட ஓனர்....”

“இல்லைன்னு யார் சொன்னது..?”

“நான் இங்கே வேலை பார்க்கிறவ...”

“ம்ப்ச்.. இதை எதுக்கு இப்பச் சொல்கிற..?”

அர்ஜீன் எரிச்சல் பட்டான்.. அது நேரம் வரை வராத எரிச்சல் அப்போது மட்டும் எதற்காக வந்து சேர்ந்தது.. என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டாள் காவ்யா...

“இப்பன்னு இல்ல சார்.. எப்பவும் இதை நீங்க நினைப்பில வைச்சுக்கனும்...”

காவ்யா அவன் முகம் பார்க்காமல் சொல்லி விட்டு வேலையில் கவனமானதில் அவனுக்குள் கோபம் எழுந்தது... புருவங்கள் முடிச்சிட அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. யதேச்சையாக தலை நிமிர்ந்தவளின் பார்வை அவனைச் சந்தித்ததும்.. அவள் முகம் சிவந்தது...

அவன் முகச்சுளிப்பு இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட.. அவனுக்குள் கனன்று கொண்டிருந்த கோபத்தீ அணைந்து அங்கே இதம் பரவியது...

அவளின் கன்னச் சிகப்பை ரசித்துப் பார்த்தவனின் விழிகளில் உல்லாசம் வந்தது.. அவளை முதன் முதலாகச் சந்தித்த தினத்தில் அவள் வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்த நினைவில் அவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்...

“ஏன் காவ்யா...?”

அவன் அழைத்ததில் அவள் நிமிர்ந்து பார்த்தாள்..

“அதெப்படி என் பெயரைச் சொன்னதும் நான் கண்ணில் படற பொண்ணுகளையெல்லாம் கணக்குப் பண்ணிக் கவிழ்க்கிறதில கில்லாடின்னு சொன்ன..? அர்ஜீனன்னா காதல் மன்னன்னு அர்த்தமாகுமா..?”

திடிரென்று அவன் அப்படிக் கேட்டதும் அவளுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை.. யோசித்த பின்னால்தான் அவன் எதைச் சொல்கிறான் என்றே அவளுக்குப் புரிந்தது...

“அதுவா சார்.. பி.எஸ்.ஸி முடிச்சுட்டு வேலைக்கு வந்துக்கிட்டிருக்க என்னைப் பார்த்து உனக்குப் பதினாறு வயசு தானேன்னு கணக்குப் போட்டிங்கள்ல.. அதிலயிருந்து கண்டு பிடிச்சதுதான் சார்...” என்று சிரிக்காமல் பதில் சொன்னாள்...

“ஹா.. ஹா.. உண்மையிலேயே உன்னைப் பார்த்தா ஸ்கூல் கோயின்ங் கேர்ள் போலத்தான் இருக்குது...”

“இருக்கும்.. இருக்கும்.. எதுக்கும் இதைப் போல கணக்குப் போடறதை நிப்பாட்டி வையுங்க...”

“ஏன்...?”

“ஏனா..? உங்க நல்லதுக்குத்தான் சொல்றேன்.. திருப்பாச்சி ஊரு அருவா செய்கிறதுக்குத்தான்... பெயர் வாங்கியிருக்கு அதை வாங்கிக் குவிச்சு.. யூஸ் பண்றதுக்கு எங்க மதுரைதான் பெயர் வாங்கியிருக்கு... அதனால அடக்கி வாசிங்க...”

“இல்லேன்னா...”

“உங்க மதுரைக்கார மச்சானுக... அருவாளைத் தூக்கிக்கிட்டு வந்து கணக்கெழுதி விட்டுப் போயிருவானுக...”

“இதைப் பாருடா.. பேனா இல்லாமலே கணக்கை எழுதுவாங்களா...?”

“எங்க ஊரு ஆளுகளுக்கு.. வெட்டரிவாளும்.. வேலுக்கம்புந்தான் பேனாவும்.. பென்சிலும்...”

“அடேங்கப்பா.. பயங்கர பில்ட் அப்பா இருக்கு...” வாய்விட்டு சிரித்தவன் ஆழ்ந்த குரலில் கேட்டான்..

“பயமுறுத்தறியா...?”

அவன் கேள்வியில் சட்டென்று நிமிர்ந்து பார்த்தவளுக்கு என்ன பதிலைச் சொல்வது என்று பிடிபடவில்லை...

ஆமாம் என்று சொன்னால் இவன் என்ன செய்து விடுவான் என்ற வீம்பு அவளுக்குள் எழுந்தது...

"உங்களை எதுக்காக நான் பயமுறுத்தனும்... எங்க ஊரு பழக்கத்தைச் சொன்னேன்... எங்க ஊரில மண்ணையும்.. பெண்ணையும் பத்திரமாப் பார்த்துக்குவாங்க..."

"எல்லா ஊரிலயும் அப்படித்தான்..." கடினமான குரலுடன் அவன் சொன்னான்...

'கோவிச்சுக்கிட்டானோ...' என்று தோன்றிய போதும்.. அதைப் பற்றி அவள் அலட்டிக் கொள்ளவில்லை..

'கோவிச்சுக்கிட்டாக் கோவிச்சுக்கட்டுமே.. இவன் கோவிக்கிறதாலே என் வீட்டிலே குழம்பு கொதிக்காம போயிரப் போகுதா..? இல்ல சோறு வேகாமப் போயிரப் போகுதா...?'

அலட்சியத்துடன் தலையை சிலுப்பிக் கொண்டவளை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.. அவளது இயல்பான வெடுக்.. வெடுக்கென்ற பேச்சிலும்.. மூக்கு நுனியில் ஒட்டிக் கொண்டிருக்கும் கோபத்திலும் அவன்மனம் மையம் கொள்வதை ஆச்சரியத்துடன் அவன் உண்ரந்தான்..

*"இப்படி நான் ஆனதில்ல...*
*புத்தி கெட்டுப் போனதில்ல...*
*முன்னே பின்னே நேசமில்ல...*
*மூச்சு முட்டிப் போனதில்ல..."*

அந்தக் கடைக்கு அடுத்த கடையில் ஒலித்துக் கொண்டிருந்த பாடல் வரிகளில் அவன் மனம் நிலைத்தது...

ஏதோ வேலையாக அவன் பக்கம் பார்த்தவளின் கண்ணிமைகள் படபடவென்று அடித்துக் கொண்டதில் அர்ஜீனின் மனதில் மோகம் மூண்டது.. அவளது அகன்ற விழிகளில் ஒளிர்ந்த ஒளிர்வில் அவன் அப்படியே அமிழ்ந்து போனான்...

*"கன்னிப் பொண்ணு கண்ணுக்குள்ளே..*
*கட்டுத்தறி கண்டேனே...*
*படபடக்கும் நெஞ்சுக்குள்ளே...*
*பட்டாம்பூச்சி பார்த்தேனே...*
*இசை கேட்டேனே..."*

பாடல் ஒலித்துக் கொண்டிருக்க அதன் இசையில் அவன் மனம் நனைந்தது.. இது போன்ற பாடல்களை அவன் அதற்கு முன்னால் கேட்டதில்லை.. மெலிதான பாப் இசையையும்.. நரம்புகளை முறுக்கேற்றும் மேற்கத்திய தாளத்துடன் கூடிய இசையையும் கேட்டுப் பழக்கப்

பட்டிருந்தவன் அவன்.. மதுரை மண்ணின் மனம் நிறைந்த ரம்யம் பொங்கும் விழாக்கால நாள்களை உணர்த்தும் தினசரி நாள்களை அவன் சந்தித்ததே இல்லை...

அவளையே அவன் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்த காவ்யாவிற்கு வேலை ஓடவில்லை..

'இதுக்குத்தான் இந்த ரூமில உட்கார வைச்சானா..?'

அதற்குத்தான் என்று தெரிந்தும்.. அவள் மனதுக்குள் எரிச்சல் பட்டுக்கொண்டாள்.. அவன் ஆண்மை ததும்பும் கம்பீரத் தோற்றத்துடன் இருந்ததில் அவளுடைய கன்னி மனது சலனப்பட்டு விடாமலிருக்கப் போராடித் தவித்தது.. அதே நொடியில் அவன் பார்வையில் லேசான பரவசத்தையும் உணர்ந்து தொலைத்தது...

*"அடி ஆத்தாடி...!*
*இள மனசொன்னு..*
*ரெக்கைகட்டி பறக்குது சரிதானா..?*
*அடி அம்மாடி....!*
*ஒரு அலையொன்னு மனசில...*
*அடிக்குது முறைதானா...?"*

அவன் மனதிலிருப்பதைக் கேட்பதைப் போல பாடல் ஒலிக்க.. அவன்

"ஹௌ.. நைஸ்..." என்று ரசித்துச் சொன்னான்...

'இவன் எதைச் சொல்றான்..?'

அவளைத்தான் சொல்கிறானோ என்று அவளுக்குச் சந்தேகம் வந்து விட்டது.. இந்தாரு.. இதையெல்லாம் வேற ஆளுகிட்ட வைச்சுக்க என்று பொங்கி விடலாமென்று அவள் வாய்திறக்க யத்தனித்த போது...

"பாட்டைச் சொன்னேன்.." என்றான் அவன்...

'நிஜமாவே இவன் பாட்டைத்தான் சொன்னானா..?'

கண்களில் சந்தேகத்துடன் நம்பாத பாவனையில் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு வேலையைத் தொடர்ந்தாள் காவ்யா...

*"உயிரோடு.. உயிர்சேர...*
*ஒருகோடி ஆனந்தம்...*
*இவன் மேகமாக யாரோ காரணம்...?"*

அவன் பாடலுடன் சேர்ந்து விசிலடித்ததில் அவளின் வேலை தடைபட்டது... அன்றைக்குப் பார்த்து வேலை செய்ய மாட்டேனென்று மக்கர் செய்து விட்ட ஏஸியை மனதுக்குள் சபித்தாள் காவ்யா....

‘அதனால்தானே இவன் ஜன்னலை விரியத் திறந்து வைச்சுக்கிட்டு பாட்டைக் கேட்டுக்கிட்டே விசிலடிச்சு வைக்கிறான்..?’

மூடப்பட்ட அறையில் அவனுடன் தனித்து வேலை செய்ய சங்கடப்பட்டுக் கொண்டிருந்தவள்.. ஏஸி ரிப்பேரானதில் மகிழ்ந்துதான் போயிருந்தாள்...

‘அப்பாடி.. இவன் ஜன்னலை திறந்து வைப்பான்...’

அதுவே இப்படிப் பாடலைக் கேட்க வைத்து.. கூடவே அவனை விசிலையும் அடிக்க வைக்கும் என்று அவள் கனவா கண்டாள்..?

‘இவன் எதைச் செஞ்சாலும் அது வில்லங்கமாத்தான் வந்து விடியுது...’

வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டிருந்தவளை பார்வையால் அளவிட்டபடியே...

“உங்க ஊரில் ஒரு லிவிங்னெஸ் தெரியுது...” என்றான் அர்ஜீன்...

“ஓஹோ...” அவன் முகம் பார்க்காமல் சொன்னாள் காவ்யா...

“எங்க வீட்டில் ஏதாவது ஒரு பண்டிகையோ.. பங்சனோ நடந்தால் எப்படியொரு கலகலப்பான

சிச்சுவேசன் இருக்குமோ.. அதைப் போல இந்த மதுரையில் தினமும் கலகலப்பான நாளாவே இருக்குது.. ஐ லைக் இட்..”

அவளைப் பார்த்துக் கொண்டே அவன் சொல்லிய விதத்தில்.. அவன் விரும்புவது மதுரையை மட்டும் தானா என்று அவள் தடுமாறிப் போனாள்...

## 15

*என் காலடியோசைதனை...*
*நீ உணர ஆசைகொண்டேன்..*

**தே**வராஜன் ஓங்கி உதைத்த உதையில் ஓடிச் சென்று சாய்ந்தது மரமுக்காலி..

“இதுக்கு வாயிருந்தா அழுதுரும்...” அலுத்துக் கொண்டபடி அந்த முக்காலியை நிமிர்த்தி வைத்தாள் செல்வி...

“ஏண்ணே உன் கோவத்தை எதுக்காக சாமான் மேல காட்டற..? இன்னும் கொஞ்ச நேரத்தில அப்பா வந்திருவாரு.. அவர்கிட்டக் காட்ட வேண்டியதுதானே..?” தேன்மொழி முறைத்தாள்...

“இந்தாரு.. நானே எக்குத்தப்பான கோவத்தில இருக்கேன்.. நீ பாட்டுக்கு வாய் விட்டேன்னு வைய்யி.. தங்கச்சின்னு கூடப் பார்க்க மாட்டேன்...” ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தான் தேவராஜன்..

“அடேங்கப்பா... இன்னைக்குத்தான் அதிசயமா உனக்கு எக்குத்தப்பா கோவம் வருதாக்கும்..? என்னைக்கும் இந்தக் கதைதான் புதுசா வந்து கதை சொல்றியே.. போவியா...” எரிச்சல் பட்டாள் தேன்மொழி...

“யம்மா.. இவளக் கெஞ்சம் வாயை மூடச் சொல்லு.. என்னைக்கும் இருக்கிற மாதிரிதான் இன்னைக்கும் இருக்கா..?” சப்தம் போட்டான் தேவராஜன்...

“இருடா.. உலை வாயையும்.. ஊர்வாயையும் மூடிறலாம்.. இவ வாயை மூடிற முடியுமா..? ஆத்தா மகமாயி நான் பெத்த மகளே..! உன் அண்ணன்காரன்தான் ஆடறான்னா நீயாவது அடக்கி வாசிக்கக் கூடாதா..?” மகளிடம் பேசிப் பார்த்தாள் செல்வி...

“ஏம்மா.. இது உனக்கே நாயமா இருக்கா..? அவனப் பெத்த அதே வயித்திலதான என்னையும் சுமந்து பெத்த.. அவனுக்கொரு நாயம்.. எனக்கொரு நாயமா..? அவன் ஆடனும்.. நான் அடங்கிப் போகனுமா..?” தேன்மொழி நியாயம் கேட்டாள்..

“அடி கூறுகெட்டவளே..! அவனே டவுனில இருக்கிற கடையை வித்துப்புட்டோமேங்கிற வருத்தத்தில இருக்கான்.. அது புரியாதவளா இப்பப்பாத்து அவன்கூட ஒறண்டை இழுக்கிறயே.. உன்னை என்ன செய்தா தேவலாம்..?” செல்வி கையை ஓங்கினாள்...

“அவனை அடிச்சு வளர்க்காம.. என்னை அடிக்க வர்றியா..? டவுனில இருக்கிற கடை யாரால கை நழுவிப் போச்சு.. இவனாலதானே...? சும்மா இருக்க மாட்டாம.. தொழில் பண்றேன் பேர்வழின்னு பணத்தைக் கரைச்சான்.. அது கடைசியில கடையை விக்கிறதில வந்து முடிஞ்சிருக்குது...” தேன்மொழி பொருமினாள்...

“நானா கடையை விக்கச் சொன்னேன்...? ஊருல இருக்கிற நிலத்தை வித்திருந்தா எல்லாம் சரியாயிருந்திருக்கும்.. அதைவிட்டுட்டு கடையை விக்கப் போறேன்னு அப்பாதான ஒத்தைக் காலில நின்னாரு...” தேவராஜன் சலித்துக் கொண்டான்...

“உன்ன மகனாப் பெத்துட்டாரில்ல.. அதுக்கப்புறம் அவரால ரெட்டைக்காலில நிக்க முடியுமா..? ஒத்தக் காலிலதான நின்னாகனும்..?” விடாமல் வழக்கடித்தாள் தேன்மொழி...

வாசலில் செருப்புச்சத்தம் கேட்டது.. திரும்பிப் பார்த்த செல்வி..

“அப்பா வர்றாரு... ரெண்டு பேரும் அடங்கி இருங்க...” என்று அடிக்குரலில் எச்சரித்தாள்...

தளர்ந்த நடையோடு உள்ளே வந்த துரியோதனன் முறைத்தபடி நின்றிருந்த மகனையும்.. மகளையும் பார்த்தார்.. எதுவும் பேசாமல் சோர்வாக சோபாவில் சரிந்தார்...

“மோர் சாப்பிடுங்க...”

செல்வி.. ப்ரிட்ஜில் இருந்த மோர் பாட்டிலை அவரிடம் நீட்டினாள்.. வாங்கிக் குடித்தபின்பும் அவர் முகத்தில் தெம்பு வரவில்லை...

“தெரிஞ்ச விசயம்தானே...” சங்கடத்துடன் கேட்டாள் செல்வி...

“எதைச் சொல்ற..?” துரியோதனனின் களைத்த விழிகளை மூடியிருந்த இமைகள் திறந்தன..

“கடையை வித்தாச்சு.. இன்னைக்கு கடையை வாங்கின ஆளுகிட்ட கணக்கு வழக்கை ஒப்படைக்கனும் கிறதுதான்...” தயங்கியபடியே சொன்னாள் செல்வி...

“ம்ப்ச்.. அது தெரியும்டி.. ஆனா.. இந்தக் கடையை வாங்கியிருக்கவன்.. என் கூடப் படிச்சவன்னு எனக்குத் தெரியாமப் போச்சேடி...”

“என்ன சொல்றிங்க...?”

“ஆமாம் செல்வி.. ஒரு காலத்தில அவன் குடும்பம் கஷ்ட திசையில இருந்தப்ப.. அவங்க நடத்திக்கிட்டு இருந்த கடையை வித்தாங்க.. அவன் அதை என்கிட்டச் சொல்லி வருத்தப்பட்டான்...”

“நிசமாவா..?”

“ம்ம்ம்.. நான் அதை ஏளனம் பண்ணிட்டேண்டி.. அதை மனசில வைச்சுக்கிட்டு இருந்தவன் இத்தனை வருசம் கழிச்சு என் கடையை வாங்கியிருக்கான்.. அது தெரிஞ்சிருந்தா அவனுக்கு இந்தக் கடையை நான் வித்திருக்க மாட்டேன்...”

செல்வி பெருமூச்சை விட்டாள்.. அவளுடைய கணவன் கடையை விற்று விட்டதால் மன வருத்தம் அடைந்ததை விட.. அதை அவருடைய எதிரிக்கு விற்று விட்டதில் தோல்வியுணர்வை அடைந்திருப்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது...

புரிந்துதான் அவளால் என்ன செய்ய முடியும்..? தினை விதைத்தால் தினையை அறுக்கலாம்.. வினை விதைத்தால்..?

வினையைத்தானே அறுக்க முடியும்...

“இத்தனை வருசமா நினைப்பில வைச்சிருக்காண்டி.. அவனுக்கு மதுரைப் பக்கம் வேலையே இல்ல.. அவன் தொழிலே வேற.. அதையெல்லாம் விட்டுப்புட்டு.. வேலை மெனக்கெட்டு என் கடையை வாங்கியிருக்கான்னா.. அவன் மனசில எந்த அளவுக்கு வன்மம் இருந்திருக்கனும்..?” புலம்பினார் துரியோதனன்..

“விட்டுத் தள்ளுங்க.. மத்தவங்களை விட அதிக விலை கொடுத்திருக்கிறதா நீங்கதான சொன்னீங்க.. இந்தக் கடையை மத்தவங்களுக்கு வித்திருந்தா இப்பக் கிடைச்ச பணத்தில பாதிகூட வந்திருக்காதுன்னு நீங்கதான சொன்னீங்க.. தேவா வாங்கி வைச்சிருந்த கடனையும் அடைச்சிட்டு.. மேலத்தெருவில ஜவுளிக்கடையையும் ஆரம்பிச்சுட்டோம்.. இனி என்ன..? கை நஷ்டம் இல்லாம கொள்ளை லாபத்திலதான கடையை வித்திருக்கீங்க..?”

“பணத்தினாலே மனசு நிம்மதியை வாங்கிர முடியுமா செல்வி..? கூடக்கிடைச்ச பணத்திலே தொழிலைத் தொடங்கியிருக்கோம்... அதனாலே சந்தோசப் பட முடியலையே.. குறைச்சலாப் பணம் கிடைச்சிருந்தா கடனை மட்டும் அடைச்சிருப்போம்.. ஆனா மனசு நிம்மதியா தூங்கியிருப்பேன்..” மனம் வலிக்கப் பேசினார் துரியோதனன்..

“இதுக்குத்தான் நான் படிச்சுப் படிச்சு சொன்னேன்..”

தேவராஜன் கோபத்துடன் பேச முயன்றபோது.. துரியோதனன் அவனை முறைத்துப் பார்த்தார்.. அந்தப் கனல் வீச்சில் தேவராஜன் தடுமாறிப் போனான்...

“அப்பா...”

“மனுசனாடா நீ..? உன்னாலதான் தலைநிமிர்ந்து நின்ன நான் தலைகுனிஞ்சு வந்திருக்கேன்.. அன்னைக்கு அவனைச் சொல்லிக் காண்பிச்சேண்டா.. இன்னைக்கு அவன் என்னைச் சொல்லிக் காண்பிச்சுட்டான்.. யாரால..? உன்னால...”

“அதுக்கத்தான் ஊரில இருக்கிற நிலத்தை விக்கச் சொன்னேன்...” தலைநிமிராமல் முணுமுணுத்தான் தேவராஜன்..

“என் பாட்டன்.. முப்பாட்டன் காலத்தில இருந்து பரம்பரை.. பரம்பரையாய் கை மாறி வந்த நிலம்டா அது.. ஊடே வந்த இந்தக் கடையை வித்ததுக்கே இம்புட்டு மனக் கஷ்டப்படறேன்.. பரம்பரை நிலத்தை வித்தா உயிர் தரிப்பேனாடா..?”

“அப்பா...”

“கடையை வித்ததில ஒரு கொறைவுமில்லடா.. அந்தக் கடையை என் பகையாளிக்கு வித்தேன் பாரு.. அதுதான் குறைவு...”

“இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்த்திருக்கலாம்..”

“உனக்குக் கடன் கொடுத்தவனுக பொறுக்கனுமே..”

துரியோதனனுடன் வாதிட முடியாமல் வாய்க்குள் முணுமுணுத்தபடி... மாடிப் படியில் கால் வைத்தான் தேவராஜன்...

அவனுக்கு அந்தக் கடையை விற்றதில் பிடித்தமில்லை.. ஏனென்றால்.. அதில் வேலை செய்த காவ்யாவின் மீது அவனுக்கு பிடித்தமிருந்தது.. தினமும் கடையைக் கவனிக்கப் போகும் சாக்கில் அவளைப் பார்த்து ஜொள்ளு விடுவான்.. அவள் இவனைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாள் என்பது வேறு விசயம்.. அவள் இவனைப் பார்த்தாலும்.. பார்க்காவிட்டாலும்.. இவன் அவளைப் பார்க்கப் போவதை நிறுத்தவே மாட்டான்...

“ஏய்ய்.. தேவாங்கு வந்திருக்குதுடி...”

பாவனா அவனை இந்தப் பெயரைச் சொல்லித்தான் அழைப்பாள் என்று அவனுக்கு இதுநாள்வரை தெரிந்திருக்க-வில்லை... இந்தப் பெயரையும் காவ்யாதான் அவனுக்குச் சூட்டிவிட்டாள் என்பதும் அவனுக்குத் தெரியாது..

“பாக்கறதுக்கு அச்சு அசல் தேவாங்கு மாதிரியே இருக்காண்டி பாவனா.. இவன் மூஞ்சியும்.. முழியும் பாக்கச் சகிக்கலை.. பெரிய மன்மதன்னு மனசுக்குள்ள நினைப்பு.. எங்க வீட்டில மட்டும் இவன் முழிக்கிற முழியைப் பத்திச் சொன்னேன்னு வைய்யி.. இவன வீடுகட்டி புரட்டி எடுத்திருவாங்க.. எங்க அம்மா கொடுக்கிற கரண்டியடியைத் தாங்குவானாடி இவன்..?”

“அப்படியா சொல்ற..? ப்ளீஸ்.. ப்ளீஸ்.. அதை கண்குளிர பார்க்கனும் போல இருக்கு காவ்யா.. பேசாம இவனைப் பத்தி உன் வீட்டில போட்டுக் குடுத்துரேன்...”

“பிழைச்சுப் போகட்டும்.. விடுடி.. இஸ்ஸெல்லாம் ஒரு ஆளு.. இஸ்ஸை சமாளிக்க முடியாம நான் என் வீட்டு ஆளுகள கூப்பிட்டுக்கிட்டு வரனுமா...?”

“வேணாம்கறியா..?”

“ஆமாண்டி.. இந்த வில்லங்கத்தப் போயி நான் வீட்டில சொல்ல.. அவுக குய்யோ முறையோன்னு கத்தி இவனப் போட்டு பொரட்டி எடுக்க.. பெரிய ரகளைதான் வந்து சேரும்...”

“வந்தா வரட்டுமே...”

“அது வந்தா.. நான் வேலைக்கு வர முடியாதே..”

“அப்படியொன்னு இருக்கில்ல...?”

“அதனாலதான் யோசிக்கிறேன் பாவனா.. கடையில எப்பவும் முதலாளி இருக்காரு.. நம்மளைப் போல வேலை செய்கிறவங்க நிறையப் பேரு இருக்காங்க.. இவன் வந்துட்டுப் போற வரைக்கும் இவன் அழகு வழியற குரங்கு முகத்தைப் பார்க்காம இருக்கனும்.. அவ்வளவுதானே.. இது ஒரு பெரிய விசயமா...?”

அந்தக் காரணத்தினால் இவனைக் கண்டும் காணாததைப் போல காவ்யா நகர்ந்துவிட.. இவனோ.. அவள் மனதில் இவன்மீது ஒரு மார்க்கமான எண்ணமிருப்பதாக நினைத்து மகிழ்ந்து கொண்டிருந்தான்..

அந்த மார்க்க எண்ணங்களைப் பற்றி இவனால் துரியோதனனிடம் எடுத்துச் சொல்ல முடியுமா..?

‘அப்பா.. அப்பா.. அந்தக் கடையில வேலை பார்க்கிற காவ்யா தான் என் சொப்பனசுந்தரி.. அவளுக்கு ரூட்டு விடத்தான் நான் தினமும் கடைப் பக்கமே வர்றேன்.. இன்னும் ரூட் கிளியராகல.. அது கிளியராகிற வரைக்குமாவது கடையை விக்காம தள்ளிப் போடுங்கப்பா..’ என்று அவன் சொன்னால் துரியோதனன் அவனை உச்சி முகர்ந்து தழுவி...

‘அதுக்கென்னடா மகனே..! கடன் பாட்டுக்கு கிடக்கு.. அதப் பத்தி எனக்கென்ன கவலை.. எதுக்காக நான் கடை

நடத்தறேன்..? அங்க வேலைபாக்கிற பொண்ணுக்கு நீ ரூட்டு விடத்தானே நடத்தறேன்..’ என்று சொல்லி மகிழ்ந்து போவாரா என்ன..?

‘எவ்வளவு தைரியமிருந்தா என்கிட்டயே நீ ரூட்டைப் பத்திப் பேசுவ..?’ என்று பிளந்து கட்டிவிட மாட்டாரா..?

அதனால் அந்த தேவ ரகசியத்தை.. மனதுக்குள் போட்டு புதைத்து கொண்டிருந்தான் தேவராஜன்...

நாளை முதல் கடைக்குப் போக முடியாது.. காவ்யாவைப் பார்க்க முடியாது என்பதில் அவன் பித்துப் பிடித்தவனைப் போலாகி விட்டான்...

‘காவ்யாவப் பார்க்க முடியாமப் பண்ணிட்டு... இவரு என்னவோ பகையாளியப் பத்தி பஞ்சாயத்தைப் பேசிக்கிட்டு இருக்காரு... வாயை அடக்கி இருந்திருக்கனும்.. அதவிட்டுட்டு.. வாய்விட்டா.. இந்தக் கதிதான்...’ மனதுக்குள் துரியோதனனை அர்ச்சித்தான்..

காவ்யாவை பார்க்க முடியாமல் போய்விட்ட பின்பு.. கடை யார் கைக்குப் போனாலும் அவனுக்கு என்ன வந்தது..?

# 16

*எங்கேயோ குரல் கேட்டால்...*
*நீ எனை நினைக்க ஆசைகொண்டேன்...*

**சு**றுசுறுப்பாய் ஈரத்தலையை துவட்டிக் கொண்டிருந்தாள் காவ்யா.. காபியோடு மாடியேறி வந்த அன்னபூரணி...

"ஆத்தி.. இதுயாரு..? நான் பெத்த மகதானா..?" என்று அயர்ந்து விட்டாள்...

ஈரத் தலைமுடியை உலர்த்திக் கொண்டிருந்த காவ்யா.. புருவங்களை உயர்த்தினாள்...

"ஏம்மா..? அதுகூட உனக்கு மறந்து போயிருச்சா..? அதிகப்படிப்புப் படிச்சு.. பெரிசா கவர்ண்மென்டு ஆபிசரா இருக்கிற உன் மகன் மட்டும் போதும்ன்னு நினைச்சிட்டியா..?"

"அதானே பார்த்தேன்.. எங்கே இன்னும் நம்ம அல்லி மகாராணி அண்ணன்காரன் பேச்சை இழுத்துக் கிழிச்சு தோரணம் கட்டலையேன்னு நினைச்சேன்.. நீயும்

வாயைத் திறந்திட்ட.. ஏண்டி..? விடியறப்பவே அவன்கூட மல்லுக்கு நிக்கனும்கிற வேண்டுதலோடதான் கண்ணை முழிப்பியா..?"

"ஆமாம்மா.. எனக்கு அப்படியொரு நேர்த்திக்கடன் இருக்கு.. இப்ப எதுக்காக நீ மாடியேறி வந்த..?"

"உன்ன மடியில தூக்கிப் போட்டு கொஞ்சி மகிழலாமுன்னுதான்.. கேள்வியப் பாரு கேள்விய.. கையில காபித் தம்ளரோட நிக்கறேன்.. இவ எதுக்காக வந்தேன்னு கேக்கிறா.."

"இந்தக் காபி எனக்குத்தான..?"

"இல்லடி... உன் அண்ணனுக்கு..."

"நீ செஞ்சாலும் செய்வ.. உன் மகனுக்கு ஒளிவு மறைவா பலகாரத்தை பொட்டலம் கட்டிக் கொடுக்கிற ஆளுதான நீ..?"

"அதையேண்டி ஒளிஞ்சு மறைஞ்சு செய்யனும்..? இது அவன் வீடு.. அவன் சம்பாத்தியத்தில செய்யற பலகாரத்தை அரசனைப் போல என் மகன் உக்காந்து சாப்பிடுவாண்டி..."

"உன் மகன் உட்கார்ந்தும் சாப்பிடட்டும்... இல்ல.. உருண்டுக்கிட்டே சாப்பிடட்டும்.. எனக்கு அது தேவையில்ல..."

“உனக்கு எதுதான் தேவை..?”

“உன் கையில இருக்கிற காபித் தம்ளர்தான் தேவை.. இந்தப் பக்கமா அதை நீட்டறியா.. விட்டா இதையும் கொண்டு போயி உன் மகனுக்கு புகட்டி விட்டாலும் விடுவ.. யாரு கண்டா..?”

அன்னபூரணியின் கையிலிருந்த காபித் தம்ளரை ஏறக்குறைய பிடுங்கிக் கொண்டாள் காவ்யா.. அவள் அசைகின்ற போதெல்லாம்.. மயில் தோகை போல நீண்டிருந்த அவளுடைய கூந்தலும் அசைந்தது... விரித்து விட்டிருந்த முடி காலருகே தொங்கியதில் அன்னபூரணியின் மனதில் கர்வம் பிறந்தது...

‘எம்மகதான் எம்புட்டு அழகா இருக்கா...’

தன் மகளுக்குத் தோதான மாப்பிள்ளை அந்தத் தெற்குச்சீமையில் எங்கே பிறந்திருக்கிறானோ என்ற எண்ணத்தில் ஏக்கப் பெருமூச்சு விட்டாள் அவள்...

“என்னாச்சும்மா.. இப்புடி மூச்சை விடற.. எந்தக் கோட்டையைப் புடிக்க முடியலைன்னு இம்புட்டு ஏக்கப்படற..?”

“ம்ஹூம்.. இனிமே நான் எந்தக் கோட்டையைப் பிடிச்சுக் கொடியை நாட்டப் போறேன்.. எங்காலம் முடிஞ்சிருச்சு.. இனிமே என் மக்க காலம் ஆரம்பிச்சிருச்சு..

எல்லாம் உனக்கேத்த மகராசன் எங்கே பொறந்திருக்-
கானோங்கிற நினப்புத்தான்...”

அன்னபூரணி படியிறங்கிப் போய்விட்டாள்.. பீரோவைத் திறந்து எந்த உடையை உடுத்தலாம் என்று ஆராய்ந்தாள் காவ்யா.. ஈரத்தலைமுடியை தொய்வாக பின்னலிடுவதற்கு சேலை கட்டிக் கொள்வதுதான் பாந்தமாக இருக்கும் என்று தோன்றியதில் நீலவண்ண ஷிபான் சேலையை உருவினாள்.. அதை உடுத்திக் கொண்டு கண்ணாடியில் பார்த்தபோது.. தேவதையின் பொழிவோடு இருந்தாள்...

‘அல்லி மகாராணி..’

அன்னபூரணி விளித்தது நினைவுக்கு வந்தது.. கூடவே..

‘உனக்கேற்ற மகராசன் எங்கே பொறந்திருக்கானோ..’ என்ற அவளின் அங்கலாய்ப்பும் சேர்ந்து வந்தது..

‘உன் பெயர் அல்லிதானே...’

ரகசியப் புன்னகையுடன் அவள் மனதில் எழுந்தான் அர்ஜீன்.. காவ்யாவுக்கு தூக்கி வாரிப் போட்டது.. இது என்ன.. என்று அவள் அரண்டு போனாள்...

அல்லி மகாராணி என்று அவளை அன்னபூரணி அழைப்பது வாடிக்கையான ஒன்றுதான்.. அவள்

அழைத்தால்.. அர்ஜீன் அழைத்ததும் சேர்ந்து ஏன் நினைவுக்கு வரவேண்டும்..?

அதேபோல அவளைக் கட்டிக் கொள்ளும் மகராஜனைப் பற்றி அன்னபூரணி சொன்னால்.. அந்த அர்ஜீன் மகாராஜனைப் பற்றி ஏன் அவள் நினைக்க வேண்டும்..?

'பின்னே அந்த நினைப்பு வந்து தொலைக்காதா..?' அவள் மனதுக்குள் அலுத்துக் கொண்டாள்...

'சரக்குன்னா.. இவன் பெரிய அர்ச்சுன மகாராசான்னு மனசுக்குள்ள நினைச்சா.. மகாராசன்னு சொன்னவுடனே அவன் நினைப்புத்தான் வந்து நிக்கும்...?'

நினைவுகள்.. நினைவுகளாக இருக்க.. கைக்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.. பரபரப்புடன் தன்னை சரி செய்து கொண்டாள்.. ஹேண்ட் பேகை எடுத்துக் கொண்டு.. மாடிப்படியில் இறங்கியபோது...

"காவ்யா.." என்ற குரல் கேட்டது...

திரும்பிப் பார்க்காமலே அது கண்ணதாசனின் குரல் என்பதை உணர்ந்து கொண்டவள்..

"என்னண்ணே.." என்றாள்..

"இன்னைக்கு சீக்கிரத்திலேயே கிளம்பிட்டயே..."

“ஆமாம்.. கடையில வேலை செய்கிற ஆளுகளுக்கு சம்பளம் போடனும்..”

“அதுக்கு நீ எதுக்காக சீக்கிரம் போகனும்..?”

“நான்தானே பேங்குக்குப் போயி பணத்தை எடுத்துட்டு வரனும்..?”

தங்கையின் பதிலைக் கேட்ட கண்ணதாசனின் முகத்தில் கவலை சூழ்ந்தது...

“இது என்னம்மா புதுப்பொறுப்பா இருக்கு..? உனக்கு கடையில அக்கொண்ட்ஸ் பார்க்கிற வேலைதான..?”

“அதையேண்ணே கேக்கிற.. புது முதலாளி வர்ற வரைக்கும் அப்படித்தான் இருந்துச்சு.. கடை கை மாறினதில இருந்து என் வேலையும் மாறிருச்சு.. புதுசா செகரட்டரி போஸ்டைக் கொடுத்துட்டாங்க.. முதலாளி சென்னையில இருக்கிறவரு.. மாசத்தில நாலைஞ்சு நாளைக்கு மட்டும் வந்து போவாராம்.. அவரில்லாத சமயத்தில கடையை பாத்துக்கிறது என் பொறுப்பாய் போயிருச்சுண்ணே...”

காவ்யா சொல்லச் சொல்ல.. அவள் முகத்தில் தெரிந்த உணர்வுகளையே அவதானித்துக் கொண்டிருந்தான் கண்ணதாசன்...

கூடுதல் பொறுப்புக்களில் தங்கை மகிழ்ச்சியடைய வில்லை என்பதை அவனது அறிவு கணித்து விட்டது..

“ரிஸ்க்கான வேலைன்னா ஏம்மா ஏத்துக்கிட்ட..? முடியாதுன்னு மறுத்திருக்கலாமே... ”

“எல்லாம் சொல்லிப் பார்த்துட்டேன்.. கேட்ட பாடாய் இல்லை.. சரி.. இதையும்தான் கத்துக்குவோமேன்னு ஒப்புக்கிட்டேன்...”

“அப்படியா சொல்கிற..?”

எப்போதும் எடுத்தெரிந்து பேசுவதையே வழக்கமாக வைத்திருந்த தங்கை அன்று இணக்கமாகப் பேசியதிலிருந்தே அவளின் மன உளைச்சலை புரிந்து கொண்டான் கண்ணதாசன்..

“இன்னைக்குத்தான் முதன் முதலா பேங்குக்குப் போகப் போறியா..?”

“ம்ம்ம்...”

“இரு.. நானும் வர்றேன்...”

“நீயுமா..?”

காவ்யாவின் கண்களில் இருந்த சஞ்சலம் விலகியதில் நெகிழ்ந்து போனான் கண்ணதாசன்.. அவன் உதவியை மறுக்காமல் அவள் விழி விரித்ததில் அவள்

மனதிலிருந்த பயத்தை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது...

“சாப்பிட்டுக்கிட்டு இரு.. ஐஞ்சே நிமிசத்தில வந்துடறேன்...”

அவன் விரைவாகப் போய்விட.. காவ்யா படியிறங்கினாள்.. அவள் மனதுக்கு நிம்மதியாக இருந்தது.. கடையில் வேலை செய்கிறவர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளப் பணத்தின் மொத்த தொகை அதிக அளவில் இருந்ததில் அவள் கவலையாகியிருந்தாள்...

அவ்வளவு பெரிய தொகையை தனி மனுஷியாக பேங்கிற்குப் போய் வாங்கிக் கொண்டுவர வேண்டுமா..?

பாதுகாப்புக்கு கடையில் வேலை செய்கிற ஆண்களில் யாரையாவது கூப்பிட்டுக் கொண்டு போகலாம் என்று அர்ஜீன் அறிவுறுத்தியிருந்தான்..

வேறு வினையே வேண்டாம் என்று.. அந்த ஏற்பாடை தவிர்த்திருந்தாள் காவ்யா...

கந்தசாமியையும்.. ஏகாம்பரத்தையும் தவிர.. மற்ற ஆண் ஊழியர்கள் அனைவரும் இளம் வயதில் இருந்து தொலைத்தார்கள்.. அவர்களுடன் ஜோடி போட்டுக் கொண்டு காவ்யா வெளியே செல்ல முடியுமா..? விவரம் தெரிந்தால் அன்னபூரணி மகளின் காலில் சூடு வைத்து விடுவாளே...

அவள் சாப்பிட ஆரம்பித்தபோது.. சிவதாணு காய்கறிப் பையுடன் உள்ளே வந்தார்.. சாப்பிட்டுக் கொண்டிருந்த மகளைப் கனிவுடன் பார்த்து...

“என்னம்மா.. சாப்பிடறயா..?” என்று கேட்டார்...

‘இல்லேப்பா.. சடுகுடு விளையாடறேன்..’ என்று சொல்லத் தோன்றியது காவ்யாவிற்கு...

அப்படிச் சொன்னால் ஏற்படும் பின் விளைவுகளைப் பற்றிய யோசனை வர.. அன்ன பூரணியின் கையில் கரண்டி இருக்கிறது என்ற ஜாக்கிரதை உணர்வுடன்..

“ஆமாம்ப்பா...” என்றாள் காவ்யா...

“நல்லாச்சாப்பிடனும்.. சாப்பாடுதான் மனுசக் கழுதைக்கு வேலை செய்கிறதுக்கான சக்தியைக் கொடுக்கும்.. சரியாச் சாப்பிடலைன்னு வைய்யி.. அது ரத்த சோகையில போயி முடியும்.. ரத்தசோகை வந்தா என்ன ஆகும்..?”

காய்கறிப் பையை டைனிங் டேபிளில் வைத்துவிட்டு கதாகாலேட்சபத்தை சிவதாணு ஆரம்பித்துவிட.. தப்பிக்கும் மார்க்கம் குறித்த பலத்த யோசனைக்கு ஆளானாள் காவ்யா...

‘இப்படின்னு தெரிஞ்சிருந்தா சாப்பிடாமலேயே ஓட்டம் பிடிச்சிருக்கலாமே...’

அவள் தொண்டைக்குள் இறங்கிய தோசையை விழுங்க விடுவேனா என்று சிவதானு அடம் பிடித்துக் கொண்டிருந்தபோது.. கையில் தோசைக் கரண்டியுடன் வந்த அன்னபூரணி ஒரு அதட்டலைப் போட்டாள்...

“நீங்க சொல்றதெல்லாம் வராம இருக்கனும்னா முதல்ல அவ சாப்பிடனும்...”

“யாருடி இவ.. அதத்தானே இம்புட்டு நேரமும் சொல்லிக்கிட்டு இருக்கேன்..?”

“சொல்லிக்கிட்டு இல்ல.. அள்ளி வீசிக்கிட்டு இருக்கீங்க.. அவளே பாவம்.. வேலைக்குப் போற அவசரத்தில இருக்கா.. அவகிட்டப் போயி விட்ட விடிகாலையில உபதேசம் பண்ண ஆரம்பிச்சா அவ தாங்குவாளா..?”

“சாப்பிடத்தானடி சொன்னேன்..? இது ஒரு குத்தமாடி...?”

“குத்தம்தான்.. எழுந்திருச்சுப் போயி குளிச்சுட்டு வர்ற வழியைப் பாருங்க.. புள்ளைகளுக்குத்தான் ஆபிஸ் இருக்கா..? உங்களுக்கில்லையா..?”

அன்னபூரணி விரட்டிய விரட்டலில் எழுந்திருக்க மனமில்லாமல் எழுந்து போனார் சிவதானு.. அவசரமாக வந்த கண்ணதாசன்...

"சீக்கிரமா டிபனைக் கொடும்மா..." என்றான்...

"எதுக்குய்யா இம்புட்டு அவசரம்..?"

"காவ்யாவ அவளோட ஆபிசில டிராப் பண்ணனும்மா..."

மறந்தும் அவள் பேங்குக்குப் போக வேண்டும் என்று அவன் சொல்லவில்லை.. அன்னபூரணி உள்ளே போனதும்.. தாழ்ந்த குரலில் காவ்யாவிடம் பேசினான்..

"நீ பேங்குக்கு போகிற பொறுப்பில இருக்கிறதை.. இப்போதைக்கு அம்மாகிட்டச் சொல்ல வேணாம் காவ்யா.. தெரிஞ்சா பயந்து போயிடும்.. உன்னை வேலைக்கு அனுப்ப வேணாம்னு சொல்லிரும்..."

எந்த வேண்டுகோளை கண்ணதாசனிடம் அவள் வைக்க நினைத்தாளோ.. அந்த வேண்டுகோளை அவள் கேட்காமலே கண்ணதாசன் நிறைவேற்றி விட்டதில் அவள் மனதில் நன்றியுணர்வு எழுந்தது...

# 17

*என் மனதில் உன் மனதை..*
*இணைத்துவிட ஆசைகொண்டேன்..*

**பே**ங்கில் கூட்டம் அதிகமாக இருந்தது.. காவ்யாவின் முகத்தில் பயரேகை படிந்தது.. ஒவ்வொரு மாதமும் இதைப் போலவே கண்ணதாசன் துணைக்கு வரமுடியுமா என்று அவள் மலைத்தாள்...

“பழகிக்க காவ்யா...” சமாதானப் படுத்துவதைப் போலச் சொன்னான் கண்ணதாசன்...

“ம்ம்ம்...” அரை மனதாக தலையசைத்தாள் காவ்யா..

பொத்திப் பொத்தி வளர்த்த தங்கையின் மீது கண்ணதாசனின் மனதில் பாசம் பொங்கியது.. அவனுக்குத் தெரியும்.. காவ்யாவின் கோபமும்.. வேகமான பேச்சும் அவளின் உண்மையான குணத்தை பிரதிபலிப்பவை அல்ல என்று..

அவள் மென்மையானவள்.. அதிர்ந்து பேசப் பிடிக்காதவள்.. இருந்தும் அவள் அந்த முகமூடியின் பின்னால் தன்னை மறைத்துக் கொண்டாள்...

அதிக அளவிலான பணத்தை தனியே கொண்டு வர பயந்ததினால்தான்.. அதுவரை கண்ணதாசனின் காரில் ஏறாதவள்.. அன்று ஏறிக் கொண்டாள்...

“உங்க ஆபிஸில் செக்யூரிட்டி கார்டாய் யாரையாவது கூப்பிட்டுக்கிட்டு வரலாமேம்மா...”

“ம்ம்ம்.. அந்த ஆப்சன் உண்டுண்ணே.. ஆனா.. எல்லாரும் கொஞ்ச வயசுக்காரனுக.. ரெண்டே ரெண்டு பேருதான் வயசானவங்க.. ஒருத்தர் புல்தடுக்கி பயில்வான்..”

“ஹா... ஹா...”

“இன்னொருத்தர் வணங்காமுடி.. என் வேலை காவல் காப்பதேன்னு சொல்லி நைசாக் கழண்டுக்கிட்டார்...”

“போகுது விடு.. பேங்குக்குப் போய் வர பழகிக்கிறது நல்லதுதான்.. ஆனா.. அதிக அளவு பணத்த நீ ஹேண்டில் பண்ணனும்.. அதான் எனக்குக் கவலையாயிருக்கு.. இது ரிஸ்க்குன்னு தோணுது...”

“எனக்கும் அதே எண்ணம்தாண்ணே...”

“உன் பாஸிடம் சொல்லி.. இந்த டியூட்டியை வேற யாருக்காவது மாத்தி விட்டுறச் சொல்லு...”

“கேட்டுப் பாக்கறேன்...”

“நான்கூட வருவேன்தான்ம்மா.. ஆனா.. என்னைக்காவது ஒரு நா.. நான் வரமுடியாம போயிட்டா.. நீ தனியாச் சிரமப்படக் கூடாது பாரு.. அதுக்குத்தான் சொல்றேன்...”

“புரியுது...”

கண்ணதாசன் பேங்கில் பணம் எடுக்க வேண்டிய பகுதிக்கு அவளை அழைத்துச் சென்று வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்தான்.. காத்துக் கொண்டிருந்த நேரத்தில் செல்போனில் அலுவலகத்தை அழைத்து உத்தரவுகளை பிறப்பித்தான்...

‘அண்ணனுக்குத்தான் என்மேல எம்புட்டு அக்கறை..’ காவ்யா மனம் நெகிழ்ந்தாள்...

பொறுப்பான பதவியில் இருக்கும் ஓர் அதிகாரி.. அவனுடைய தங்கைக்காக பேங்குக்கு வந்து காத்திருக்கிறான் என்றால் அவனுடைய பாசத்தை அவள் என்னவென்று சொல்லுவாள்..?

‘ஆனாலும்...’ அவள் மனம் சிணுங்கியது...

‘இதையெல்லாம் செய்கிறவன்.. என்னை பெரிய படிப்பு படிக்க வைத்திருக்கலாமே.. அப்படிப் படிச்சிருந்தா இப்படி பேங்குக்கு வர பயந்துக்கிட்டு நான் உட்கார்ந்திருக்க வேணாமே...’

"போகலாமா...?"

பணத்தை வாங்கி பத்திரப் படுத்திக் கொண்ட கண்ணதாசன் கேட்டான்.. காவ்யா நிம்மதியுடன் எழுந்து அவனைப் பின் தொடர்ந்தாள்.. அவளுடைய கடைவாசலில் கார் நின்றது...

"இனிமே நானாப் போய்க்குவேண்ணே..." என்றவளிடம் அதை மறுத்தான்...

"உள்ள வந்து பணத்தைக் கொடுத்து உன்னைப் பத்திரமா உக்கார வைச்சாத்தான் எனக்கு நிம்மதி..."

பணப்பையை எடுத்து கொண்டு கடைக்குள் நுழைந்தான் கண்ணதாசன்.. ஊழியர்களின் முகத்தில் சம்பள தினத்திற்கான சந்தோசம் குடி கொண்டிருந்தது...

"எது உன்னோட சீட்..?"

"முதலாளி இல்லாத டயத்தில பாவனா பக்கத்தில உக்காந்து வேலை பார்ப்பேன்.. அவர் வந்திட்டா அவரோட கேபினில்தான் வேலையிருக்கும்..." காவ்யா தயங்கியபடி சொன்னாள்..

கண்ணதாசனின் புருவங்கள் சுருங்கின.. அவன் அதற்குமேல் எதையும் கேட்கவில்லை...

"இப்ப பாவனா சீட்டுக்குப் பக்கத்திலதான உட்காருவ..?"

“இல்லைன்ணே.. சம்பளம் கொடுக்கிறதினால.. முதலாளியோட ரூமிலதான் உட்காரப் போறேன்.. அங்கதான் ஷேப்டி லாக்கர் இருக்கு..”

“சரி.. வா...”

காவ்யா காட்டிய அறைக் கதவைத் திறந்தவன்.. புருவங்களை உயர்த்தியபடி தங்கையைத் திரும்பிப் பார்த்தான்...

அந்த அறையில் அர்ஜீன் அமர்ந்திருந்தான்...

‘இவன் இன்னைக்கு வரப் போகிறதாய் சொல்லலையே...’

அவனை எதிர்பாராத திகைப்புடன் காவ்யா அவனுக்கு வணக்கம் சொன்னாள்.. லேசாக தலையை அசைத்தவன் அவளுடன் நின்றிருந்த கண்ணதாசனை யோசனையுடன் பார்த்தான்..

“ஐ ஆம் கண்ணதாசன்.. காவ்யாவோட அண்ணன்..”

அவன் பார்வையைக் கவனித்த கண்ணதாசன் சொன்னதும் அர்ஜீனின் முகத்தில் வெளிச்சம் பரவியது..

“கிளாட் டு மீட் யு மிஸ்டர் கண்ணதாசன்...”

அவன் எழுந்து நின்று கண்ணதாசனுக்கு கை கொடுத்தான்...

“ப்ளீஸ்.. டேக் யுவர் சீட்...”

“இட்ஸ் ஆல்ரைட்.. நான் ஆபிஸ் போகனும்.. காவ்யா தனியா பேங்குக்கு போக வேண்டியிருந்தது.. அவளுக்கு இதெல்லாம் பழக்கமில்ல... ஸோ.. நான் துணைக்கு வர வேண்டியதாப் போச்சு...”

“ஓ.. ஐ.. ஸீ...” காவ்யாவை பார்வையால் அளந்த அர்ஜீன்...

“உங்க தங்கை தைரியசாலியாச்சே..” என்றான்...

“தைரியத்துக்கும்.. இதுக்கும் சம்பந்தமில்லை மிஸ்டர் அர்ஜீன்.. அதிக அளவிலான பணத்தை ஹேண்டில் பண்ணி அவளுக்குப் பழக்கமில்லை... நீங்க முறையான செக்யூரிட்டிக்கும் அரேன்ஜ் பண்ணலை...” கண்ணதாசன் இறுக்கமான முகத்துடன் பேசினான்..

“நோ மிஸ்டர் கண்ணதாசன்.. பேங்குக்குப் போய் வர டாக்ஸி ஃபேர் அலோவ் பண்ணியிருக்கேன்.. கூட செக்யூரிட்டியாய் இரண்டு பேரை எஸ்கார்டு போட்டுக்கச் சொல்லி ஆர்டர் போட்டிருக்கேன்..” முகம் மாறிப் போன அர்ஜீன் விளக்கம் சொன்னான்...

“யார்கிட்ட ஆர்டர் போட்டிங்க..?” புருவச் சுளிப்புடன் கேட்டான் கண்ணதாசன்..

“காவ்யாவிடம் ஆர்டர் போட்டேன்.. என்ன காவ்யா.. உங்ககிட்ட சொன்னேனா இல்லையா..?” புருவங்கள் முடிச்சிட காவ்யாவிடம் கேட்டான் அர்ஜீன்...

“அது போதாது மிஸ்டர் அர்ஜீன்.. யாரைக் கூட அனுப்பினா பெட்டர்ன்னு நீங்க நினைக்கறிங்களோ அவங்களுக்கு டைரக்டா ஆர்டர் போடனும்.. காவ்யா கூப்பிட்டா அவங்க ரிஜக்ட் பண்றதுக்கான சான்ஸ் இருக்கே...”

“ஐ ஸீ... இன்னைக்கே அதைச் செய்திடறேன்...”

“தேங்க்ஸ் ஃபார் தட்..”

அர்ஜீனிடம் கைகுழுக்கி விடை பெற்ற கண்ணதாசன் தங்கையின் பக்கம் திரும்பி...

“சாயந்திரமா உன்னைக் கூப்பிட வந்திடறேன்ம்மா.. எத்தனை மணிக்கு வரனும்ன்னு நீ போன் பண்ணு..” என்று சொல்லி விட்டு வெளியேறி விட்டான்...

அர்ஜீனின் முகம் பாறையைப் போல இறுகியிருந்தது...

“உன் அண்ணன்கிட்ட என்னைப் பத்தி கம்ப்ளெயின்ட் பண்ணினயா..?” என்று கேட்டான்..

“உங்களைப் பத்தி நான் எதுக்காக கம்ப்ளெயின்ட் பண்ணனும்..?” எரிச்சலுடன் கேட்டாள் காவ்யா...

“அப்புறம் எதுக்காக உன் அண்ணன் விசாரணைக் கமிசனைப் போடனும்..?” அர்ஜீனும் எரிந்து விழுந்தான்..

“அது வேலை பார்க்கிற இடம் அப்படி.. என் அண்ணன் ஸ்டேட் கவர்ண்மென்டில் பெரிய ஆபிசர்.. அதோட ஆபிசில என்ன ரூலை ஃபாலோ பண்றாங்களோ.. அதை இங்கே வந்து சொல்லிட்டுப் போகுது... எங்கே..? இங்கேதான் எந்த ரூலும் இல்லாமப் போயிருச்சே.. இத்தனைக்கும் பெரிய.. பெரிய கம்பெனியை நடத்தறதாய் பேசிக்கிறாங்க.. இதைக்கூட எங்க அண்ணன் வந்து சொல்லித் தெரிஞ்சுக்க வேண்டிய நிலைமையில இருக்கிறவங்க என்னத்தை கம்பெனியை நடத்தறாங்களோ” காவ்யா உதட்டைச் சுழித்தாள்...

“ஸ்டாப் இட்..” அர்ஜீனின் குரல் ஓங்கி ஒலித்தது...

காவ்யாவின் முகம் சிவந்து விட்டது.. அதுவரை அதுபோல யாரும் அவளிடம் சப்தம் போட்டதில்லை.. ஆனானப்பட்ட துரியோதனனே அவளிடம் அடக்கித்தான் வாசிப்பார்.. இவன் நேற்று வந்தவன்.. அவளை மிரட்டப் பார்க்கிறான்...

“இந்த மிரட்டலெல்லாம் இங்கே வேணாம் சார்... அதுக்கு வேற ஆளைப் பாருங்க...”

“உன் பாஸை மதிக்கவே கூடாதுங்கிற முடிவோட இருக்கியா..?”

“இங்கே யாரு மதிக்காம இருக்கிறது..?”

“உன் பேச்சுக்கு வேறென்ன அர்த்தம்..?”

“அந்தப் பேச்சு எதனால வந்தது..?”

“உன் அண்ணன் வந்து எனக்கு ஆர்டர் போட்டதால வந்தது..”

“யாரும்.. யாருக்கும் ஆர்டர் போடல.. அதுக்கு அதோட தங்கச்சி மேல இருக்கிற அக்கறையில பேசுச்சு.. அதை ஆர்டர் போடறதா நீங்க நினைச்சா அதுக்கு நான் ஒன்னும் பண்ண முடியாது..”

“ஓ.. உன் அண்ணனுக்குத்தான் உன்மேல அக்கறை இருக்கா..? மத்தவங்களுக்கு இல்லையா..?”

“என் அண்ணன் அளவுக்கு யாருக்கும் அக்கறை இருந்ததில்ல.. மத்தவங்களும்.. என் அண்ணனும் ஒன்னாகிட மாட்டாங்க...”

எடுத்தெரிந்து பேசுகிறவளை என்ன செய்தால் தகும் என்ற கொலைவெறியோடு முறைத்துப் பார்த்தான் அர்ஜீன்...

அவன் அவளுக்காகத்தான் அவசரம்.. அவசரமாகக் கிளம்பி.. மதுரைக்கு வந்திருந்தான்.. இத்தனைக்கும்.. நள்ளிரவு வரை நீண்ட ஒரு பிஸினெஸ் பார்ட்டியில் அவன்

கலந்து கொள்ள வேண்டியிருந்தது.. அது முக்கியமான பார்ட்டி.. அதை தவிர்க்க முடியாதவனாக அவன் போயிருந்தான்.. பார்ட்டி முடிந்ததும்.. அங்கிருந்தே விமான நிலையத்துக்குச் சென்று அடுத்த விமானத்தைப் பிடித்து.. விடிவதற்குள் மதுரைக்கு பறந்து வந்திருந்தான்.. ஹோட்டலில் ரூம் போட்டு.. குளித்து முடித்து விட்டு.. கடைக்கு வந்து பார்த்தால்.. காவ்யா அங்கில்லை... பேங்கில் பணம் எடுப்பதற்கான செக்கை அவளிடம் கொடுத்திருந்ததால் அவள் வரும் வரை காத்திருக்கலாம் என்று காத்திருந்தான்...

பண விவகாரத்தை கையாள்வதற்கு அவள் காட்டிய தயக்கம் அவன் மனதில் பதிந்திருந்தது.. பயப்படுகிறாள் என்பதை புரிந்து வைத்திருந்தான்.. ஆனாலும் அவனுக்கு வேறு வழி தெரியவில்லை.. அவனால் மாதம் முழுவதும் மதுரையிலேயே இருக்க முடியாது.. சென்னையில் கூடத் தங்க முடியாமல் வெளிநாடுகளுக்கு பறந்து கொண்டிருக்கிறான்... அந்த நிலைமையில் மதுரைக் கடையின் நிர்வாகத்தை நம்பிக்கையான ஒரு நபரிடம் அவன் ஒப்படைத்தாக வேண்டும்.. அப்படிப்பட்ட நபராக காவ்யா மட்டுமே அவன் கண்ணுக்கு தெரிந்து வைத்தாள்..

அவன் பார்த்துப் பழகிய பெண்கள்.. பணவிவகாரங்களுக்கு அஞ்சிப் பின் வாங்கியதில்லை.. ஆண்களை விடக் கெட்டிக்காரத்தனமாக அதைக் கையாளத் தெரிந்தவர்கள் அவர்கள்..

அந்த நினைவில்தான் அவன் காவ்யாவிடம் பணப் பொறுப்பைக் கொடுத்தான்.. அதுவே அவளுக்கு முள் கிரிடமாக ஆகிவிடக்கூடும் என்று அவன் நினைத்தும் பார்த்ததில்லை...

‘பழக்கமில்லாத ஜாப்.. அதனாலதான் முகத்தைத் தூக்கி வைச்சுக்கிறா.. இரண்டு முறை பணத்தைப் போட்டு.. எடுத்துப் பழகிட்டாப் போதும்.. சமாளிச்சுருவா.. யாரு இவ...’

அவளின் துடிப்பான பேச்சின் நினைவில் தனக்குள் புன்னகைத்தபடிதான் அவளுக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்தான் அர்ஜீன்.. அவனில்லாத நாள்களில் அவனிடத்தில் இருந்து கடையை நிர்வகிக்கும் மிகப் பெரிய அங்கீகாரத்தை அவன் கொடுக்க.. அதையே.. கண்ணதாசன் வந்து கேள்வி கேட்டு விட்டுப் போனதில் அவனுக்கு கோபம் வந்துவிட்டது...

# 18

*யாழினிலே என்குரல் கேட்டு...*
*நீதுயில ஆசை கொண்டேன்...*

‘இவளுக்கு நான் யாரோ ஒருவனா..?’

இந்த நினைவில் மனம் கொந்தளித்தான் அர்ஜீன்.. அவளுக்காக அடித்துப் பிடித்து.. இரவோடு இரவாக விமானத்தைப் பிடித்து அவன் பறந்து வந்தால்.. இங்கே அவள் மற்றவர்களும்.. அவளுடைய அண்ணனும் ஒன்றாகி விட முடியுமா என்று கேள்வி கேட்கிறாள்...

‘என்னைவிட இவ அண்ணன் உசத்தியாப் போயிட்டானா...’

அவளுக்கு அவன் யார் என்ற நினைவு இல்லாமல் மனம் கொதித்தான் அவன்.. அவள்மீதான அவனது அக்கறையை கேள்வி கேட்டுவிட்டுப் போய்விட்ட கண்ணதாசனின் மேல் அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.. அந்த வேகத்தில்..

"அவ்வளவு அக்கறையிருக்கிறவர் எதுக்காக தங்கையை வெளியே வேலைக்கு அனுப்பனும்..?" என்று கேட்டு விட்டான்..

காவ்யாவின் முகம் ரத்தமாக சிவந்து விட்டது.. இப்படியொரு கேள்வியை எதிர்நோக்க நேரிடும் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை...

'என்ன வார்த்தைய கேட்டுட்டான்..' அவள் மனம் துடித்தது...

"அதுவா சார்.. நான் கொண்டு போகிற சம்பளப் பணத்தில்தான என் வீட்டு உலை கொதிக்கனும்.. அதான் தெரியாத்தனமா தங்கச்சிய வேலைக்கு அனுப்பிட்டார்.." என்றபடி எழுந்து கொண்டாள் காவ்யா...

அவள் மேஜையின் மேலிருந்த ஃபைல்களை அடுக்கி அவன் மேஜைமீது வைத்தாள்.. மேஜையைப் பூட்டி சாவியை ஃபைல்களின் மேல் வைத்தாள்.. பணக் கட்டுக்களை எடுத்து அவன் முன்னால் பரப்பி வைத்தாள்..

"என்ன இது..?" அவன் புருவங்கள் சுருங்கின...

"என்கிட்ட இருந்த பொறுப்பையெல்லாம் ஒப்படைச்சுட்டேன்.. பணத்தை எண்ணிப் பார்த்து சரியாய் இருக்குன்னு சொல்லிட்டிங்கன்னா நான் என் வழியைப் பார்த்துக்கிட்டு போய்க்கிட்டே இருப்பேன்.."

"வாட்..?"

“அதாவது நான் என் வேலையை விடறேன்னு சொல்றேன்..”

அவள் நிமிர்வாக பதில் சொல்லிய விதத்தில் அவனது ஈகோ காயமடைந்தது.. அத்தனை விரைவில் அவள் வேலையை விட்டுச்செல்லும் முடிவை எடுக்கக்கூடும் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை.. அந்த முடிவை எந்தவிதத் தயக்கமோ.. தடுமாற்றமோ இல்லாமல் அவள் எடுத்ததில் அவன் மனம் பாதிப்படைந்தது..

“ஸோ.. நினைச்சவுடனே எதையும் நீ தூக்கிப் போட்டிருவ..” அவன் உறுத்துப் பார்த்தபடி சொன்னான்...

“நினைச்சதையெல்லாம் நீங்க பேசலாம்.. நினைச்சதை நான் செய்யக் கூடாதா..?”

“வேலைக்குன்னு வந்துட்டா அதில சில ரெஸ்பான்ஸிபிலிட்டிஸ் இருக்கும்.. அது வேணாம்ன்னு சொன்னா எப்படி..?”

“ரெஸ்பான்ஸிபிலிட்டிஸை யாரும் இங்கே தட்டிக் கழிக்கலை..”

“அப்படி நினைக்கிறவங்க.. இந்தக் கடையோட அட்மினிஸ்ட்ரேசனில அவங்க அண்ணன் மூக்கை நுழைக்கிறதை அலோவ் பண்ணியிருக்கக் கூடாது...”

“எங்க அண்ணனே ஒரு அட்மினிஸ்ட்ரேசன் ஆபிசர்தான் சார்.. அதுக்கு அதோட வேலையைப் பார்க்கவே நேரமில்ல.. இதில உங்க டப்பாக் கடையோட

அட்மினிஸ்ட்ரேசனில மூக்கை நுழைக்கனும்னு அதுக்கு என்ன தலையெழுத்தா..?"

"டப்பாக் கடையா..? யு மீன்.. ஸ்மால் பாக்ஸ் ஸ்டோர்..?"

"எனக்கு இங்கிலீஷ் பிடிக்காது..."

"எவ்வளவு தைரியமிருந்தா என் கடையை குறைவாகப் பேசுவ..?"

"எவ்வளவு தைரியமிருந்தா நீங்க என் அண்ணனை குறைவாய் பேசுவீங்க...?"

"என் அட்மினிஸ்ட்ரேசனில் தலையிட உன் அண்ணன்யார்..? முதலில் இதுக்கு ஒரு பதிலைச் சொல்லு.. இங்கே வேலை பார்க்கிறது நீ மட்டும்தான்.. உன் அண்ணன் எதுக்காக உன்கூட வரனும்...?"

"இதுக்கெல்லாம் அதுக்கு நேரமில்ல சார்.. பண விவகாரத்த நீங்க என் தலையில கட்டினீங்க.. துணைக்கு ஆளில்லாம தனியா எப்படி பேங்குக்குப் போறதுன்னு நான் மறுகி நின்னேன்.. அண்ணன் எனக்கு துணைக்கு வந்துச்சு.. இதைப் பத்தி உங்களுக்கென்ன தெரியும்.? என் கூடவளர்ந்த என் அண்ணனுக்குத்தான் தெரியும்.."

"துணைக்கு ஆளைக் கூப்பிட்டுக்கொண்டு போக நான் அலோவ் பண்ணியிருந்தேனே..."

"யாரைக் கூப்பிடறது..? ஏகாம்பரம் ஆத்தாத மனுசரு.. அவரு வேலைக்கு வந்து போறதே பெரிய விசயம்..

கந்தசாமியைக் கூப்பிட்டா.. என் வேலை இது இல்லம்மான்னு கட் அன்ட் ரைட்டா சொல்லிட்டாரு... வேற என்னத்தைத்தான் செய்யறது..?”

காவ்யாவின் முகத்தில் தெரிந்த எரிச்சலில் அர்ஜீனின் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன.. இதில் இத்தனை இடர்பாடுகள் இருக்கக் கூடும் என்று அவன் நினைத்துப் பார்க்கவில்லை...

“ஏகாம்பரமும்.. கந்தசாமியும் மட்டும்தான் இந்த ஆபிஸில் வேலை செய்கிறாங்களா..? மத்தவங்க உன் கண்ணுக்குத் தெரியலையா..?”

“தெரியலை சார்...” வெடுக்கென்று அவள் பதில் சொன்னாள்..

“வொய்..?”

“ஏனா..? ஏன் கேட்க மாட்டிங்க... மத்தவங்கள்ளாம் இளந்தாரிக.. அவங்ககூட நான் வெளியே போய் வந்தா என் வீட்டில என்னைச் சேர்க்க மாட்டாங்க.. என் அம்மா விசம் வைச்சே என்னைச் சாய்ச்சிரும்.. தேவையா..?”

“ஓ...”

இளம்வயது ஆண்களுடன் தனித்து வெளியே போவதை அவள் விரும்ப மாட்டாள் என்பதில் அவன் மனதில் இனம் புரியாத திருப்தி ஏற்பட்டது...

மேஜை மீதிருந்த ஃபைல்களை அவள் பக்கமாக நகர்த்தினான் அவன்..

“என்னது..?”

“காமெடி பண்ணாம இதையெல்லாம் அள்ளிக்கிட்டு உன்சீட்டில போய் உட்காரு.. நிறைய வேலையிருக்கு...”

எதுவுமே நடக்காததைப் போல அவன் பேசிய விதத்தில் காவ்யாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

“நான் வேலையை விடறேன்னு சொல்றது.. உங்களுக்கு காமெடியாய் இருக்கா..?”

“ஆர்கியூ பண்ணினது போதும் காவ்யா.. வொர்க்கர்ஸீக்கு சேலரி கொடுக்கனும்.. சேலரி லிஸ்டைக் கொடு..”

“அதைப்பத்தி எனக்கென்ன கவலை..? உங்க சம்பளமே எனக்கு வேணாம்.. இந்த மாதம் நான் ஃப்ரீயாய் வொர்க் பண்ணிக் கொடுத்தேன்னு நினைச்சுக்கங்க.. யாருக்கு வேணும் உங்க சம்பளப் பணம்..? என்னவோ இந்த சம்பளத்துக்காகத்தான் நான் வேலைக்கு வர்றேன்னு பேசினிங்களே.. எனக்கு உங்க சம்பளம் வேண்டாம்.. சம்பளத்தையும் தாண்டி நிறைய விசயங்கள் இருக்கு.. அதெல்லாம் உங்க மரமண்டைக்குப் புரியாது..”

“மரமண்டையா..?”

“ஆமாம்.. மரமண்டைதான்...”

“அப்போ டப்பாக் கடை..! இப்ப மரமண்டை..! வெரிகுட்.. செக்கரட்டரின்னா இப்படித்தான் இருக்கனும்.. நான் ரொம்பக் குடுத்து வைத்தவன்.. கீப் இட் அப்... ”

“உங்க இங்கிலீஷைத் தூக்கிக் குப்பையில போடுங்க..”

“போட்டுட்டாப் போச்சு.. நான் இருக்கலாமா.. இல்லை.. நானும் குப்பைத் தொட்டியில உட்கார்ந்துக்கனுமா...?”

சிரிக்காமல் அவன் கேட்டதில் காவ்யா கொஞ்சமாக மலையிறங்கினாள்.. கோபத்தில் உதடுகள் துடிக்க.. அவனை முறைத்துப் பார்த்தாள்.. உணர்ச்சி மிகுதியில் அவள் கண்கள் லேசாக கலங்கி விட்டன...

“நீங்க சென்னைக்காரங்க.. எல்லாமும் உங்களுக்கு விளையாட்டாத்தான் இருக்கும்.. நான் அப்படியில்ல...”

“நீ அப்படின்னு நான் எதுவும் சொன்னேனா..? இல்லையே...”

“எனக்கு மேலே படிக்க முடியலை.. வேலைக்குப் போகலாம்ன்னு நினைச்சா.. அதையும் எங்க வீட்டில வேணாம்ன்னு சொல்லிட்டாங்க... கொஞ்ச நாளைக்கு மட்டும் வேலைக்குப் போயிட்டு வர்றேன்னு சொல்லித்-தான் இந்தக் கடையில கணக்கு வழக்கைப் பாக்கிற

வேலைக்கு வந்துக்கிட்டு இருக்கேன்.. இதை விட்டுறச் சொல்லி என் அம்மா சொல்லாத நாளே இல்ல.. என் விவகாரம் இப்படியிருக்க.. கேட்டிங்களே ஒரு கேள்வி..”

காவ்யாவின் குமுறலில் ஏன் அந்தக் கேள்வியைக் கேட்டேன் என்று மனம் நொந்து போனான் அர்ஜீன்...

“எங்க வீட்டில யாரும் என்னை வேலைக்குப் போன்னு சொன்னதில்ல.. நான்தான் அடம் புடிச்சு வேலைக்கு வந்து போய்க்கிட்டு இருக்கேன்.. அது தெரியாம நீங்க வார்த்தையை விட்டுப்புட்ட பின்னால இங்கே வேலை பார்க்க என்னால முடியாது...”

காவ்யாவின் உறுதியில் அர்ஜீனின் மனம் அசைந்தது.. அவளில்லாத அந்தக் கடையை அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை...

“லுக் காவ்யா.. நைட் முழுவதும் தூங்காம இருந்த அசதியில பட்டுன்னு பேசிட்டேன்.. அதை மனதில் வைத்துக்காதே...”

“ஓஹோ.. உங்களுக்கு அசதி வந்தா நீங்க வாய்க்கு வந்ததையெல்லாம் பேசுவீங்க.. நான் கேட்டுக்கனுமா..? நினைச்சதையெல்லாம் நீங்க பேசிடறதுக்கு இது ஒன்னும் சென்னையில்ல சார் எங்க மதுரை...”

“இருக்கட்டுமே.. மதுரை மண்ணில மன்னிப்பே கிடையாதா..?”

"சில பேச்சுக்கு மன்னிப்புக் கிடையாது.."

"நான் மட்டும்தான் பேசினேனா..? நீ பேசலையா..?"

"உங்களைப் போல பேசலை..."

"என்னை விட அதிகமாவே பேசின.. என் கடையை டப்பாக்கடைன்னு சொன்ன.. என் தலையை மரமண்டைன்னு சொன்ன.. நீயே பாரு.. என் முகத்தைப் பார்த்தா மரமண்டை மாதிரியா தெரியுது...?"

விசமக் குரலில் அவளை வம்புக்கிழுத்தான் அர்ஜீன்.. அவனையுமறியாமல் அவன் முகத்தை அவள் பார்த்து வைத்தாள்..

அந்த முகத்தில் தளும்பிய ஆண்மை நிறைந்த கம்பீரத்தில் அவளின் கன்னிமனம் சிக்கிக் கொண்டது.. அவன் பார்வை அதற்காகவே காத்திருந்ததைப் போல அவளை ஊடுறிவியது.. ஒரு வினாடிக்கு மேல் அவன் முகத்தைப் பார்க்க முடியாதவளாய் முகம் சிவக்க.. வேறு திசையில் பார்த்து வைத்தாள் காவ்யா...

அந்த முகச்சிவப்பு கோபத்தினால் வந்ததல்ல.. வெட்கத்தினால் வந்தது என்று கண்டு கொண்ட அர்ஜீனின் கண்கள் மின்னின.. அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் அவள் தவித்ததில் அவனது ஆண்மை கர்வம் கொண்டது..

அது நேரம் வரை அவளைச் சரியாகப் பார்க்காமல் பேச்சிலேயே கவனமாக இருந்தவன்.. உச்சி முதல்

உள்ளங்கால் வரை நிதானமாக.. ரசித்துப் பார்க்க ஆரம்பித்தான்.. அதை உணர்ந்தவளின் மெல்லிய விரல்கள் லேசாக நடுங்கத் தொடங்கியதில் அவனுக்குள் கிறக்கம் பரவியது..

தளர்வாகப் பின்னலிட்டிருந்த நீண்ட பின்னலை அவன் ஆர்வத்துடன் பார்த்தான்.. இது இந்தியப் பெண்மைக்கான அடையாளம் என்று அவனுக்குத் தோன்றியது.. அவளிடம் தெரிந்த அந்த பெண்மையின் மிளிர்வில் அவன் மயங்கிப் போனான்...

நெருக்கமாகக் கட்டிய மல்லிகைப் பூச்சரம் அவள் தோள்களில் வழிந்ததில் தெரிந்த குடும்பப் பாங்கான அழகில் அவன் மனம் சிக்கித் தவித்தது..

எப்போதும் சுடிதாரில் வருபவள் அன்று புடவையைக் கட்டியிருப்பதை கவனித்தவனுக்கு இவள் எல்லா விதமான உடைகளிலும் அழகாக இருக்கிறாள் என்ற நினைவு வந்தது...

ஊதா வண்ண ஷிபான் சேலையின் பார்டரில் ஜரிகை வேலைப்பாடு இருந்தது.. சேலையின் உள் பகுதியில் அதே ஜரிகை புள்ளிகளாக நிறைந்திருந்தது...

அழகான அந்தச் சேலையில்.. அவளது அழகு பன்மடங்கு அதிகமாகி விட்டதைப் போலத் தோன்றியதில் அவன் தாகத்துடன் அவளைப் பார்த்ததான்.. அவன் விழிகள்.. அவள் விழிகளில் எதையோ தேடின...

# 19

*சொல்லில் அடங்கா ஆசைகளை...*
*சொல்லிவிடவே ஆசை கொண்டேன்...*

“**கா**வ்யா...” அவன் மனதை உணர்த்தி விடுபவனைப் போல உணர்ச்சி பொங்க அழைத்தபடி.. அவளருகே ஓர் எட்டு வைத்தான் அர்ஜீன்...

சட்டென்று அவள் பின்வாங்கியதில் முகம் சுளித்தான் அவன்.. ஒரு இனிய கனவு கலைந்ததைப் போல இருந்தது அவனுக்கு...

“சார்...”

இளங்கோ உள்ளே வந்துவிட... அர்ஜீன் காவ்யாவைப் பார்த்தான்...

“இந்த ஃபைல்களையெல்லாம் நான் பார்த்தாச்சு.. எடுத்துக்கறிங்களா.. டேபிள் கிளீனாகனும்.. அப்புறம்.. சேலரி கொடுக்கனுமில்ல.. அதுக்கான லிஸ்டை ரெடி பண்ணிட்டிங்களா..?”

இளங்கோவின் முன்னால் மறுத்துப் பேசமாட்டாள் என்ற அவனின் கணக்கீடை அவள் புரிந்து கொண்டாள்..

வேறு வழியில்லாமல் ஃபைல்களை எடுத்துக் கொண்டாள்.. அவள் இடத்தில் அமர்ந்து கம்யூட்டரை உயர்ப்பித்து அவன் கேட்ட லிஸ்டை பிரிண்ட் எடுத்துக் கொடுத்தாள்...

சம்பளப் பட்டுவாடா நடந்து கொண்டிருந்தது.. காவ்யாவுக்கு உதவி செய்ய பாவனாவும் வந்திருந்தாள்.. அடிப்பார்வையில் அர்ஜீனைப் பார்த்தபடி பணத்தை எண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்...

“ஆள் பார்க்க.. மீசை வைச்ச ஜேம்ஸ்பாண்டு போலவே இருக்காண்டி...” என்று அவள் சொல்லிவைக்க..

‘அப்படியா இருக்கிறான்..?’ என்று நிமிர்ந்து பார்த்தாள் காவ்யா...

கந்தசாமியிடம் பேசிக் கொண்டிருந்தவனின் முகத்தில் தெரிந்த கம்பீரத்தில் அவள் மனம் கட்டுத்தறியை அறுத்துக் கொண்டு பாய யத்தனிக்க... அவசரமாக விழியைத் திருப்பி கொண்டவள்...

“பேசாம வேலையைப் பாருடி... அவன் எந்தப் பாண்டாய் இருந்தா நமக்கென்ன..?” என்று வெடுவெடுத்தாள்...

“உனக்கென்னன்னு சொல்லு.. நமக்கென்னன்னு என்னையும் கூட்டுச் சேர்க்காதே...” கறாராய் சொல்லி விட்டாள் பாவனா..

தோழிகள் இருவரும் ரகசியக் குரலில் பேசிச் சிரிப்பதை கவனிக்காததைப் போல கவனித்துக் கொண்டிருந்தான் அர்ஜீன்...

அந்த ரகசிய சிரிப்பில் காவ்யாவின் முகம் பூவாக மலர்வதைக் கண்டவனுக்கு.. இவள் எப்போதும் இதைப் போலவே சிரித்த முகமாய் இருந்தால் என்ன என்று தோன்றியது...

அந்த நேரம் பார்த்து அங்கே வந்த ஏகாம்பரம்...

“என்ன.. தோழிப் பொண்ணுக.. ரெண்டு பேரும் ஒன்னாச் சேர்ந்துட்டிங்களா..? யாருக்கு பட்டப் பேரை வைச்சுக்கிட்டு இருக்கீங்க..?” என்று கேட்டு வைத்தார்..

“பட்டப் பெயரா..? யு மீன் நிக் நேம்..” புருவங்களை உயர்த்தினான் அர்ஜீன்...

“சார் என்ன கேட்கறிங்க..?” ஏகாம்பரம் பேந்தப் பேந்த விழித்தார்..

“நீங்க சம்பளம் வாங்கியாச்சான்னு கேட்கிறார்.. இங்கே வாங்க.. சம்பளத்தைக் கொடுக்கிறோம்...” அழுத்தமான குரலில் அவரை அழைத்தாள் காவ்யா...

சம்பள ஆசையில் அருகே போனவருக்கு சம்பளமும் கிடைத்தது.. தாழ்ந்த குரலில் சத்தமில்லாமல் அவர்கள் நடத்திய மண்டகப்படியும் கிடைத்தது...

“இன்னைக்கு மட்டும்தான் இங்கே டூட்டி.. நாளைக்கு உங்க சீட்டுக்கு பக்கத்திலேதான் வந்து சேருவேன்.. அதை நினைப்புல வைச்சுக்கங்க..” எச்சரித்து அனுப்பிவைத்தாள் பாவனா...

சுழல் நாற்காலியில் சுழன்றபடி.. அந்தப் பெண்களை ஜாடையாகப் பார்த்துக் கொண்டிருந்தான் அர்ஜீன்.. அவர்களும் அவனை ஜாடையாகப் பார்த்து வைத்தார்கள்.. பாவனாவிடம் ரகசியம் பேசும் போது காவ்யாவின் கண்களில் தெரிந்த சிரிப்பில் அவன் சொக்கிப் போனான்.. ஏதோ வேலையாக பாவனா வெளியே போனபோது...

“அந்தப் பேச்சை என்னிடம் பேசினால் குறைந்தா போயிடுவ..?” என்று காவ்யாவிடம் கேட்டான்..

“எந்தப் பேச்சை..?” அவள் புருவம் சுருக்கினாள்...

“அதான்.. நீங்க ரெண்டு பேரும் சீக்ரெட்டாப் பேசி... சீக்ரெட்டா சிரிச்சுக்கிட்டிங்களே.. அதைத்தான் சொல்றேன்.. அப்படி என்ன பேசிச் சிரித்தீங்க...?”

“அதெல்லாம் பிரண்ட்ஸீக்குள்ள ஆயிரம் இருக்கும்..”

“அந்த ஆயிரத்தில ஒன்னையாவது என்னிடம் பேசலாமே...”

அர்ஜீன் விடாமல் கேட்டதில் காவ்யாவின் விழிகள் உயர்ந்து அவன் விழிகளைச் சந்தித்தன.. அதற்காகவே

காத்திருந்ததைப் போல அர்ஜீனின் விழிகள் காவ்யாவின் பார்வையைக் கவ்விக் கொண்டதில் அவளுக்குள் ஏதோ செய்தது.. பிரிக்க முடியாமல் கலந்து விட்ட பார்வையினை மீட்க முடியாமல் அவள் தவித்தாள்.. ஆர்வமாக அவளைப் பார்த்தவனின் பார்வையில் தெரிந்த அந்த ஏதோ ஒன்றில் அவள் மனம் சிக்கி சின்னா பின்னமானது..

"காவ்யா..."

பாவனா வந்து விட்டதில் அவர்களின் பின்னிக் கிடந்த பார்வைகள் விலகிப் பிரிந்தன.. அர்ஜீன் இயல்பாக சுழல் நாற்காலியில் சுழன்று திரும்பி விட்டான்.. அவனைப் போல காவ்யாவினால் உடனடியாக இயல்பு நிலைக்கு திரும்பி விடமுடியவில்லை.. கன்னச் சிகப்புடன் இயல்பு நிலைக்குத் திரும்ப அவள் மிகவும் சிரமப்பட்டாள்...

"என்னடி..." சன்னக்குரலில் வினவிய பாவனாவிற்கு எதுவோ புரிந்ததைப் போல இருந்தது...

"ஒன்னுமில்லையே..." மறுப்பாக முணுமுணுத்த காவ்யாவின் பலவீனக் குரலே... எதுவோ இருக்கிறது என்று அறிவித்து வைத்தது....

காவ்யாவை உற்றுப் பார்த்தாள் பாவனா.. நேர் கொண்ட பார்வையுடன் பேசும் காவ்யாவின் பார்வை அவள் பார்வையைச் சந்திக்கப் பயந்து தடுமாறி நிலம் பார்த்தது...

பெண்மையை பெண்மையே அறியும்.. கள்ளியை கள்ளியே அறிவாள்.. பாவனாவும் காவ்யாவை கண்டு கொண்டாள்...

"இதைப் பாருடா.. மூச்சுக்கு முந்நூறு தடவை சண்டை போட்டுக்கிட்டு அவனை சைட்டும் அடிக்கறியா..? உன்னை என்னவோன்னு நினைச்சேன்.. ஆனா நீ என்னையே தூக்கிச் சாப்பிடறதைப் போல பின்னிப் பெடலெடுக்கிற.. ஆத்தாடி.. இந்த சைவப்பட்சினி வேசம் போடுகிறதுகளை மட்டும் நம்பவே கூடாதுடிம்மா..."

அர்ஜீன் வெளியே போன சமயத்தில் பிலுபிலுவெனப் பிடித்துக் கொண்டாள் பாவனா...

"அடச்சீ.. அடங்கு.. நானாவது.. அவனைச் சைட் அடிக்கிறதாவது.. இப்பத்தான் வேலையை விட்டுட்டுப் போறேன்னு கிளம்பினேன்..."

"அவன் விடமாட்டேன்னு சொல்லியிருப்பானே..."

"எப்படிடீ கண்டுபிடிச்ச..?"

"ஊம்..? வெத்தலையில் மை போட்டு ஜோஸியம் பார்த்தேன்... போவியா... இதைக் கண்டுபிடிக்க கோடாங்கியைக் கூப்பிட்டுக்கிட்டு வரனுமா..? தானாத் தெரியாதா..?"

"உனக்குத் தெரிஞ்சதையெல்லாம் இங்கே அளந்து விடாதே.. அதுக்கு நான் ஆளில்ல..."

"உன் ஆளுக்குத்தான் நீ ஆளா...?"

"என் ஆளா..? அடச்சீ.. வாயைக் கழுவு..."

"ஐ.. யாருகிட்ட இந்த வேசம் போடற..?"

"உனக்குப் பைத்தியம்தான் பிடிச்சிருக்கு.."

"நானா பைத்தியம்..? நீதான் பைத்தியம்.. அதுவும் வெறும் பைத்தியமில்லை.. காதல் பைத்தியம்.."

"பாவனா.. வேணாம்..."

காவ்யாவின் எச்சரிக்கையை லட்சியம் செய்யாமல் பாவனா மெல்லிய குரலில் பாடினாள்...

*"அடி போடி.. பைத்தியக்காரி..*
*நான் அறியாதவளா..?*
*சின்னஞ்சிறுசா..?"*

"உன்னைப் போயி சின்னஞ்சிறுசுன்னு கைப்புள்ள கூடச் சொல்லாது.."

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருந்த போது அர்ஜீன் வந்து விட்டான்.. அவர்களின் பேச்சு.. ரகசியத் தொனிக்கு மாறிவிட.. அதை பொறாமையுடன் உற்றுக் கவனித்தான்...

மாலையில் காவ்யாவை அழைத்துக் கொண்டு போக கண்ணதாசன் வந்தான்...

"என்னடி.. உன் அண்ணன் வந்திருக்காரு.. உன் வண்டி என்னவாச்சு.." பாவனா விசாரித்தாள்...

"உங்க பிரண்டுக்கு பேங்குக்கு போய் வர பயமாம்.. அதான் ஸ்கூல் கேர்ள் போல அண்ணனைத் துணைக்குக் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்காங்க..." குற்றம் சாட்டும் பாவனையில் சொன்னான் அர்ஜீன்...

"ஸ்கூல் கேர்ளா..?"

நிமிர்ந்து பார்த்த காவ்யாவின் விழிகள் கேட்ட கேள்விக்கு.. ஆமாம் என்ற பதிலை அர்ஜீனின் விழிகள் சொல்லின... முதல் நாள் சந்திப்பின் போதே அவளைப் பள்ளிக்குச் செல்லும் சிறுமியென்று அவன் அழைத்தது அந்த நேரம் பார்த்து அவள் நினைவுக்கு வந்து தொலைத்தது...

"வேலையிருக்கா காவ்யா.. வெயிட் பண்ணட்டுமா..?"

உயர் பதவியில் இருக்கும் கண்ணதாசன் இதமாக கேட்டபோது.. காவ்யாவின் மனம் வலித்தது.. அத்தனை நாள்களாக அவனிடம் பாராமுகம் காட்டி விட்டோமே என்ற குற்ற உணர்வில் மனம் நைந்து போனாள் காவ்யா...

"இல்லேண்ணே.. கிளம்பிரலாம்..."

அவள் எழுந்து நின்றாள்... கண்ணதாசன் அர்ஜீனைப் பார்த்து லேசாக தலையை அசைத்தாள்..

பதிலுக்கு அவனும் தலையை அசைத்தான்.. காவ்யா கண்ணதாசனைத் தொடர்ந்து போய் விட்டாள்...

"உங்க பிரண்டுக்கு அண்ணன்னா ரொம்பப் பிடிக்குமோ..?"

திடிரென்று வந்த கேள்வியில் பாவனா ஆச்சரியப் பட்டுப் போனாள்... அவளிடம் அர்ஜீன் பேசுவானென்று அவள் நினைத்ததே இல்லை.. அவள் விழி விரிந்த அதே நேரத்தில் அவளது அறிவு அவளிடம்

'ரொம்பத்தான் ஆடாதே... இவன் உன்கிட்டப் பேசினாலும்.. உன்னைப் பத்தி விசாரிக்கல.. காவ்யாப் பத்தி விசாரிக்கிறான்..' என்று அறிவுறுத்தியது...

'இருக்கட்டுமே..' அவள் அறிவின் அறிவுறுத்தலைக் கண்டு கொள்ளாமல் அர்ஜீனைப் பார்த்தாள்...

"அப்படியெல்லாம் ஒன்னுமில்லை சார்.. எல்லா அண்ணன்.. தங்கைகளைப் போலத்தான் இவங்களும் இருப்பாங்க..."

"எனக்கென்னவோ அப்படித் தோணலையே..."

"ஆஞ்சுவலா சார்.. அவளுக்கும்.. அவ அண்ணனுக்கும் ஆகவே ஆகாது.. எலியும்.. பூனையும் போல அடிச்சுக்குவாங்க..."

“ஐ ஸீ... ஏன் அப்படி..?” அர்ஜீன் சந்தோசமாகி விட்டான்.. அது ஏனென்று பாவனாவிற்கு புரியவில்லை...

“இவ படிக்க முடியாத மேல்படிப்பை இவளோட அண்ணன் படிச்சிட்டார்.. அந்தக் குத்தத்தைத் தவிர வேற எந்தக் குத்தமும் அவர் செய்யலை சார்...”

“உங்க பிரண்டுக்கு இவ்வளவு போதாதா..? அவங்க சும்மாவே ஆளுகளை காய்ச்சு.. காய்ச்சுன்னு காய்ச்சி எடுத்திருவாங்க.. இதில ரீசன் ஒன்னு கிடைச்சுட்டா கேட்கவா வேணும்...?”

அர்ஜீன் ரசித்துச் சொன்ன விதத்தில் பாவனாவின் மனதில் சன்னமான பொறாமையின் இழையோடியது.. மறுநாள் காலையில் காவ்யாவைப் பார்த்தபோது...

“உண்மையிலேயே அவனுக்கு உன் மேல் நோக்கமிருக்குன்னுதான் எனக்குத் தோணுது காவ்யா..”, என்று சொன்னாள்...

“அவனென்ன பெரிய இவனா..? அவனுக்கு நோக்கமிருந்தாப் போதுமா..? உடனே எங்க அப்பாவும்.. அம்மாவும்.. அண்ணனும் இவனைக் கூப்பிட்டு.. வெத்தல பாக்க கையில கொடுத்து நிச்சயம் பண்ணிருவாங்களா..?”, காவ்யா படபடத்தாள்...

“ஏய்ய்.. இவ்வளவு அழகான பணக்காரன் உன்னை சைட்டடிக்குறான்.. அது உனக்கு கசக்குதா..?”

“ஆமாம்.. கசக்குது.. அவன் பணக்காரனா இருந்தா அவன் மட்டுக்கு.. எனக்கென்ன வந்தது..”

கோபத்துடன் அர்ஜீனனின் அறைக்குள் போன காவ்யாவுக்கு அடுத்த சண்டை காத்திருந்தது...

“உனக்கு உன் அண்ணனை அவ்வளவாப் பிடிக்காதாமே..” என்று ஆரம்பித்தான் அர்ஜீன்...

“யார் சொன்னது..?” சண்டைக் கோழியாய் அவள் முறைத்தாள்...

“உன் பிரண்டுதான் சொன்னாங்க...”

“இன்னும் என்னவெல்லாம் சொன்னா..?”

“உன்னால அதிகம் படிக்க முடியலையாமே...”

“அதுதான் ஊருக்கே தெரிஞ்சசங்கதியாச்சே... இதை அவகிட்ட கேட்டுத்தான் துப்பறியனுமா..? நான் டிகிரி முடிச்சிருக்கேன் சார்.. உங்க ஓட்டைக்கடையில் ஒன்னுக்குமத்த செக்கரட்டரி உத்தியோகம் பார்க்க இந்தப் படிப்பு போதும்..”

“ஓட்டைக் கடையா..?”

அடுத்த சண்டை அவர்களுக்குள் மூண்டு எழுந்தது...

# 20

*அடித்தாலும்... பிடித்தாலும் – உன்..*
*அருகிலிருக்க ஆசை கொண்டேன்..*

**து**ரியோதனனின் கடையொன்றும் காவ்யா சொன்னதைப் போல... ஓட்டை உடைசலாய் இருக்க வில்லை... அது கம்யூட்டர்களை விற்பனை செய்யும் கடை.. முழுவதுமாக ஏஸி செய்யப்பட்டு.. ஒவ்வொரு அங்குலத்திலும் நவீனத்தை பிரதிபலித்த கடை.. அந்தக் கடையைத்தான் ஓட்டை.. உடைசலான கடையென்று காவ்யா சொன்னாள்...

‘இந்தக் கடை ஓட்டைக் கடையா..?’

அர்ஜூனுக்குள் சுர்ரென்று கோபம் மூண்டது... அந்தக் கடையை வாங்க எத்தனை கோடி பணம் கொடுத்தானென்று அவனுக்குத்தானே தெரியும்..?

“நீ சொன்ன இரண்டு மேட்டரில ஒன்று மட்டும் தான் உண்மை..”, முகச்சுளிப்புடன் சொன்னான் அவன்...

“எந்த உண்மையைக் கண்டுட்டிங்க..? எந்தப் பொய்யைக் கண்டு புடிச்சிட்டிங்க..?”

“இந்தக் கடை ஓட்டைக் கடையில்லை.. இந்த ஸ்ட்ரீட்டிலேயே அழகா டெகரேட் பண்ணியிருக்கிற கடை இது ஒன்னுதான்.. மத்ததெல்லாம் மதுரையைப் போல அரதப் பழசு..”

“ஓஹோ.. பழமையின் பெருமையைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்..? வைகை ஆத்தில வெள்ளம் கரை புரண்டு ஓடினாலும்.. எங்க மதுரை அசராது... இது கோவில் நகரம்.. எங்கிட்டுப் பாத்தாலும் தெய்வங்கள் குடியிருக்கும் ஊரு.. எங்க ஊரு சித்திரைத் திருவிழாவைப் பாத்திருக்கீங்களா...? பாத்திருந்தா எங்க பழமையோட பெருமையைத் தெரிஞ்சிருக்கும்.. எங்கே..? அதையெல்லாம் பார்க்காம வெறும் வாய் பந்தலிலேயே ஆளை மிரட்டனும்னு நினைக்கிறவங்ககிட்ட எங்க ஊரு பெருமையைப் பத்தி என்னத்தப் பேசறது..? ஒத்தரூபாய்க்கு இட்லி வாங்கினா.. அதுக்கு தொட்டுக்க ஏழு சட்னி கொடுக்கிற ஊரு இந்த ஊரு.. இதெல்லாம் பழமையானதுதான்னா.. அந்தப் பழமையே எங்களுக்குப் போதும்.. புதுமை வேண்டவே வேண்டாம்...”

“அதை மட்டும் சொல்லலை.. நீ சொன்ன ஸ்டேட் மென்டில இரண்டாவதாய் சொன்னது முக்காலும் உண்மைன்னு சொல்றேன்...”

“நீங்க பெரிய உண்மை விளம்பிதான்.. அப்படிக் கண்டுபுடிச்ச உண்மையை புட்டுப்புட்டு வையுங்க.. பார்ப்போம்...”

“அதுதான்.. நீ ஒன்னுக்குமத்த செக்கரட்டரியாய் வேலை பார்க்கிறேங்கிற உண்மை...”

அர்ஜீன்.. நிறுத்தி நிதானமாக.. ரசித்துச் சொல்லிய விதத்தில் காவ்யாவின் முகம் சிவந்து விட்டது...

‘இது கோபச் சிவப்பு...’ மனதுக்குள் கோபத்துடன் நினைத்துக் கொண்டான் அர்ஜீன்...

“அந்த ஒன்னுக்குமத்த செக்கரட்டரி வேலையைப் பார்த்தே தீரனும்னு இங்கே யாரும் தவ்விக்கிட்டு இல்லை.. இப்பவே வேலையை விட்டுப் போறதானாலும்.. நான் ரெடியாத்தான் இருக்கேன்...”

‘நீ அதுக்கு மட்டும்தான குதித்துக்கிட்டு நிற்ப..’ அர்ஜீனுக்குள் எரிச்சல் வந்தது...

“என்ன.. இதைச் சொல்லியே என்னை பிளாக் மெயில் பண்ணப் பார்க்கறியா..?”

“நான் எதையும் பார்க்கலை...”

“என்னைப் பார்க்கலியா..?”

அர்ஜின் சட்டென்று கேட்டு விட்டதில் காவ்யாவின் முகம் குங்குமமானது...

‘இது வெட்கச்சிகப்பு..’ அர்ஜீனின் மனதில் தென்றலடித்தது.. அதுவரை நுகராத மல்லிகையின்

வாசனையை அப்போது தான் அவனது நாசி உணர்ந்து நுகர ஆரம்பித்தது..

‘மதுரை மல்லிகைக்கு மணம் அதிகம்தான்..’ என்று நினைத்தவன்..

‘மல்லிகைக்கு மட்டுமா அழகு அதிகம்.. இவளுக்கும் தான்..’ என்று சேர்த்து நினைத்துக் கொண்டான்...

“தேவையில்லாம பேச வேணாம் சார்..” காவ்யாவின் மூக்கின் நுனி சிவந்து விட்டது..

‘இவ லேடி ஹிட்லரோ...?’

எல்லோருக்கும் பட்டப் பெயரை வைக்கும் அவளுக்கே ஒரு பட்டப்பெயரை மனதுக்குள் வைத்து விட்ட நினைவில் அர்ஜீன் லேசாக சிரித்து வைத்தான்...

‘இவனுக்கென்ன கிரிடமா சூட்டியிருக்கேன்.. இப்புடிச் சிரிச்சு மகிழ்ந்து போறானே...’

அவனை அவள் பார்வையிடுவதைக் கணித்து.. அதை நேரடியாக அவன் சொல்லியும் வைத்ததில் கடுப்பாகி விட்டிருந்தாள் காவ்யா...

அவனை இரண்டில் ஒன்று பார்த்து விடவேண்டும் என்ற வெறி அவளுக்குள் மூண்டு விட்டிருந்தது..

‘இவன் என்னத்தைச் செய்து கிழிச்சுருவான்... மிஞ்சிப் போனால் வேலையை விட்டுப் போ என்பான்..

அவ்வளவுதானே... போடா நீயுமாச்சு... உன் வேலையுமாச்சுன்னு டாட்டா காட்டிட்டு போய்க்கிட்டே இருக்க வேண்டியதுதானே...'

அவள் நேரடியாக முறைத்ததில் அவன் சிரிப்பு மறைந்து புருவங்கள் மேலே ஏறின...

'இப்போ எதைச் சொல்லப் போறா..? லேடி ஹிட்லர்ன்னு நான் மனதுக்குள்ளதானே நினைச்சேன்..?'

"இது மதுரை சார்..."

'இதையே எத்தனைதரம் சொல்லுவா..?'

"நான் மதுரைக்காரி..."

'ஆஹா.. அருமையான டயலாக்.. இது வரைக்கும் நானும் மதுரைதாண்டா என்கிற டயலாக்கை கேட்டுக் கேட்டு அலுத்தே போயிருந்தது.. இது புதுசா இருக்கே..'

அவளே அவனுக்குப் புதிதாகத்தான் இருந்தாள்.. அவள் கோபப்பட்டாலும் அவனுக்கு அவளைப் பிடித்திருந்தது.. வெட்கப்பட்டால் அதைவிட அதிகமாக பிடித்திருந்தது.. அதை அறியாதவளாக அவனுடன் மல்லுக்கு நின்று கொண்டிருந்தாள் காவ்யா...

"இந்த ஓரக்கண்ணால பார்க்கிறது.. கள்ளச்சிரிப்பு சிரிக்கிறது.. இதெல்லாம் என்கிட்ட வேணாம்..."

‘வேறு யாரிடமும் வைத்துக் கொள்ள எனக்கு விருப்பமில்லை.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?’

அவள் பேசிய பேச்சுக்கெல்லாம் அவன் அசைந்து கொடுக்காமல் அவளையே ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்ததில் அவளின் படபடப்பு அதிகமானது...

“எங்க ஊரில் தானாச் சிரிச்சுக்கிட்டு இருக்கிறவங்களுக்கு வேற பேரை வைச்சுருவாங்க...”

“என்னன்னு வைப்பாங்க..? பைத்தியம்ன்னா..?”

அவன் நிதானத்தைக் கைவிடாமல் கேட்டதில் அவளுக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியவில்லை.. கோபத்தை வெளிக்காட்டும் வகை தெரியாமல் நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தாள்..

“பார்த்து.. சேர் உடைஞ்சிரப் போகுது..” அவன் அக்கறைப்பட்டான்...

“அப்படி உடைஞ்சிட்டா அதுக்கான பணத்தை என் சம்பளத்தில கழிச்சுக்கங்க..” அவளுக்கு அதற்கும் கோபம் வந்தது...

“எதற்கு இத்தனை கோபம்..?” அவன் விசாரித்தான்..

“என் அண்ணனுக்கும் எனக்கும் ஆயிரம் இருக்கும்.. அது என் சொந்த விசயம்.. அண்ணன் தங்கை பாசத்தைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்..?” அவள் படபடத்தாள்..

“தெரியாதுதான்..” உடனடியாக அவன் அதை ஒப்புக்கொண்டான்..

“ஆனா.. அக்கா.. தம்பி பாசத்தைப்பத்தி எனக்குத் தெரியும்.. உடனே உனக்கு அது தெரியாதுன்னு நான் சொல்லிக்காட்டினா நல்லா இருக்குமா..?”

“ஓ.. சாரைப் பத்திச் சொன்னதுமே ரோசம் பொத்துக்கிட்டு வந்துருச்சோ..? இதைப் போலத்தானே எனக்கும் இருக்கும்..?”

“நீ ரோசப்படு.. யாரு வேண்டாம்ன்னு சொன்னது..?”

“அட..! அதைக்கூட நீங்க சொல்லிருவீங்களோ..”

“இப்ப ‘அட’ன்னு யாரைச் சொன்ன..? என்னைத்தானே...”

அவன் மடக்கியதில்.. ‘ஆமாண்டா.. அப்படித்-தாண்டா.. உன்னைத்தாண்டா.. அடேய்ன்னு சொன்னேன்டா..’ என்று சொல்லும் ஆசை அவளுக்குள் மிகுதியானது..

அதைச் சொல்ல முடியாத கோபத்துடன் கம்யூட்டரின் கீபோர்டை அவள் படபடவென்று தட்டலானாள்... அந்த வேகத்தில் கம்யூட்டரும் ஆடியது..

“இதை உடைச்சிட்டா.. இதுக்கான பணத்தைக் கழிக்க நீ ஆறுமாதவாது வேலை செய்ய வேண்டியிருக்கும்..” என்றான் அர்ஜீன்..

அவள் எரிப்பதைப் போல அவனைப் பார்த்தாள்...

“அப்படி மட்டும் நினைப்பு வைச்சுராதீங்க சார்.. ஒரு நொடியில இதுக்கான பணத்தை என் அண்ணன் கட்டிரும்..”, என்று பார்வையால் அவனைச் சுட்டாள்...

‘திரும்பவும் அண்ணனா..?’ அவன் புருவங்கள் சுருங்கின..

“இப்ப எதுக்குத் தேவையில்லாம உன் அண்ணனைப் பேச்சில இழுக்கிற..?”

“எனக்கு என் அண்ணனின் பேச்சுத்தான் எப்பவும் தேவை.. நானாவது என் அண்ணனுக்கு கூடப் பொறந்தவ.. அது பேச்சை இழுக்கறேன்.. அதுக்கு நீங்க யாரு..? சம்பந்தமேயில்லாம நீங்க எதுக்காக என் அண்ணனின் பேச்சை இழுத்தீங்க...?”

“உன் அண்ணன்தான் சம்பந்தமேயில்லாம என் ஆபிஸ் அட்மினிஸ்ட்ரேசனில் மூக்கை நுழைத்தார்...”

“அதுக்கு..? என் வீட்டு விவகாரங்களில் நீங்க மூக்கை நுழைப்பீங்களா..?”

“உன் வீட்டு விவகாரத்தில் நான் மூக்கை நுழைத்தேனா..? இது என்ன புதுப்பழி..?”

“நீங்கதானே கேட்டிங்க..”

“என்ன கேட்டேன்..?”

“உனக்கு உன் அண்ணனை அவ்வளவாப் பிடிக்காதாமேன்னு நீங்க கேட்கலை..?”

“ஆமாம் கேட்டேன்.. அதுக்கென்ன இப்ப..? உன்னைப் பத்தித்தானே கேட்டேன்..? உன் வீட்டைப் பற்றிக் கேட்கலையே...”

இவன் புரிந்துதான் பேசுகிறானா என்றிருந்தது காவ்யாவிற்கு.. அவளுடைய அண்ணனைப் பற்றி அவளின் தோழியிடம் விசாரித்திருக்கிறான்.. இது வீட்டைப் பற்றிக் கேட்பதாகாதா..?

“நான் வேற.. என் வீடு வேறயா..?”

“கமான் காவ்யா.. நீயென்ன குழந்தையா..? ஓட்டுப் போட்டு ஒரு கவர்ண்மென்டையே எலக்ட் பண்ணி செலக்ட் பண்ற வயது வந்தாச்சு.. இப்பப் போயி நீ தனி மனுஷி இல்லைங்கறியே...”

“திரும்பத்திரும்ப என்னைச் சொல்ல வைக்கறிங்க சார்.. இது மதுரை.. இங்கே வந்து தனி மனித சுதந்திரத்தைப் பத்திப் பேசாதீங்க.. நிலாவைக் காட்டி அம்மா சோருட்டினப்போ.. குடும்பத்தைப்பத்தியும்.. அதோட பிணைப்பைப் பத்தியும் சேத்துத்தான் ஊட்டி வளர்த்திருக்கு.. நாங்கள்ளாம்.. அம்மா.. அப்பா.. அண்ணன்.. தங்கை.. அப்பத்தா.. அம்மத்தா.. தாத்தா..

பாட்டன்னு கூடி வாழற ஆளுக.. அதனால நீ ஓட்டுப் போடற.. அதனால ஓட்டுறவே இல்லாம வாழப்பாருன்னு அறிவுரை சொல்ற வேலையெல்லாம் இங்கே வேணாம்.. நாங்க ஆயிரம் பேருக்கு அறிவுரை சொல்ற ஆளுக.. யாருகிட்ட உபதேசம் பண்ண வர்றீங்க..? ஊருக்கே உபதேசம் பண்ற ஊரில பிறந்து வளந்தவகிட்டயா..? அப்புறம்.. இப்புடி ரேஸில ஓடற குதிரையைக் கூப்பிடாறப்புல.. கமான்.. கமான்னு கூப்புட்டு வைக்காதீங்க.. ஒரு நிமிசம்.. நாம மனுஷியா.. இல்ல.. குதிரையான்னு சந்தேகம் வந்து தொலைக்குது...”

நீளமாகப் பேசினவளின் முன்னால் தண்ணீர் பாட்டிலை நகர்த்திவைத்தான் அர்ஜீன்.. கேள்வியாகப் பார்த்தவளிடம்..

“மைக் பிடிக்காத அரசியல்வாதியைப் போல பேசி ஓய்ந்துட்ட.. தொண்டை உலர்ந்திருக்கும்.. தண்ணியைக் குடிச்சு அதை நனைச்சுக்க...” என்று அமர்த்தலாகப் பேசினான்...

என்ன சொன்னாலும் இவன் காதில் ஏறவே ஏறாதா என்று எரிச்சல் பட்டுப் போனாள் காவ்யா.. உண்மையிலேயே அவனுடன் பேசிப்பேசி அவள் ஓய்ந்துதான் போயிருந்தாள்.. தண்ணீர் குடித்தால்

தேவலாம் போலத்தான் அவளுக்கு இருந்தது.. அதற்காக அவன் கொடுக்கும் தண்ணீரைக் குடித்து வைத்தால் அவன் சொல்வதைப் போல மைக் பிடிக்காத அரசியல்வாதியைப் போல அவள் ஆகிவிட மாட்டாளா..?

“அந்தத் தண்ணியை நீங்க குடிங்க..”

“வொய்..? இது ஆர்டினரி வாட்டர்தான் காவ்யா.. ஐ மீன்.. வேற எதுவுமில்லை.. அதாவது.. நான் என்ன சொல்ல வர்றேன்னா...”

“எங்களுக்கும் புரியுது.. எங்க ஊருப் பக்கமும் குடிமகன்கள் நிறையப் பேரு இருக்காங்க.. அதனால விளக்கம் சொல்லாம.. தண்ணியைக் குடிச்சிட்டு.. வேலை ஏதாச்சும் இருந்தாப் பார்க்கறிங்களா..?”

அவளின் அதீத தைரியத்தில் அவன் ஈர்க்கப்பட்டான்.. கொஞ்சம்கூட அவளுடைய முதலாளி என்று யோசிக்காமல் வெடுக் வெடுக்கென்று அவள் பதில் பேசிய அஞ்சாமையில் அவன் ஆகர்ஷிக்கப்பட்டான்.. அவளின் அந்த அலட்சியம் கலந்த கோபமே அவனை அவளிடத்தில் இரும்பைக் கவரும் காந்தத்தைப் போல ஈர்த்தது...

“நீதான் எனக்கு வேலை குடேன்..”

‘இவனுக்கு நான் வேலை கொடுக்கிறதா..? இவன் முதலாளிங்கிற பகுமானத்த காட்டறானாக்கும்...’

அவள் முகம் மாறிப் போனாள்.. சிடுசிடுத்த முகத்துடன் அவனைப் பார்த்து..

"என்னசார்.. சொல்லிக் காட்டறிங்களா..?" என்று கேட்டாள்..

எதற்கு முடிவிருந்தாலும்.. அவளுக்கும்.. இவனுக்குமான சண்டைக் கொரு முடிவே இருக்காது என்று அந்த நொடியில் அர்ஜீனுக்குத் தோன்றி வைத்தது...

## 21

*சொல்லில் அடங்கா ஆசைகளை..*
*சொல்லி விடவே ஆசை கொண்டேன்...*

**வ**ட்டமான பெரிய தட்டின் மையத்தில் சூடான இடியாப்பங்களைப் போட்டு.. அது மிதக்கும் அளவில் தேங்காய்ப்பாலை ஊற்றினாள் அன்னபூரணி.. அலுவலகக் களைப்பு போக குளித்துவிட்டு.. கைலி பனியனில் வந்து உட்கார்ந்த கண்ணதாசன்..

"காவ்யா எங்கேம்மா.." என்று கேட்டான்..

“பசிக்குதுன்னுதான் கீழே வந்தா கண்ணா.. அப்பப் பார்த்து உன் அப்பா.. திருக்குறளைச் சொல்லி விளக்கம் கேட்டு வைச்சாரா.. இந்தா வந்திர்ரேன்னு போனவதான்.. ஒரு மணி நேரம் போயாச்சு.. இன்னும் வரல...” அலுத்துக் கொண்டாள் அன்னபூரணி....

அப்போதும் திருக்குறள் புத்தகத்தை கீழே வைப்பேனா என்று அடம் பிடித்தவராக சிவதானு.. புத்தகமும் கையுமாக சாப்பிட வந்து உட்கார்ந்தார்...

“ஐயா.. சாமி.. இப்பாயாச்சும் அந்தப் புத்தகத்த கீழே வைச்சறிங்களா.. பாவம்.. என் புள்ள.. பசிக்குதும்மான்னு வந்தா.. அவள புத்தகத்தக் காட்டி விரட்டி விட்டதுமில்லாம.. இப்பயும் அவள சாப்பிடவிடாம பண்ணனும்கிற முடிவோட இருக்கீகளா..?”

“இதென்னடி அநியாயமா இருக்கு.. குறளப் படிச்சா அது குத்தமாடி..?”

“குறளப் படிச்சாக் குத்தமில்ல.. அதுக்கு விளக்கம் கேட்டு வீட்டுல இருக்கற மக்க.. மனுசங்களப் படுத்தி எடுத்தா அது குத்தம்தான்.. தெரியாமத்தான் கேக்கறேன்.. இப்ப எதுக்காக குறளப் படிச்சு விளக்கம் கேட்டுக்கிட்டு அலையறிங்க..? குறளோவியம் எழுதப் போறிங்களா..?”

“அதுக்கெல்லாம் எனக்கு அறிவு பத்தாதுடி...”

“தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காக ஒட்டுப்புல்லப் போல அத ஒட்ட வைச்சுக்கிட்டு இருக்கீங்க...?”

சிவதாணு கீழே வைக்க மனமில்லாமல் புத்தகத்தை வைக்க.. அதை எடுத்து புத்தக அலமாரியின் அடுக்கில் வைத்தாள் அன்னபூரணி...

“என் புத்தகம்டி..” ஏக்கத்துடன் பார்த்தார் சிவதாணு..

“என்னவோ.. இவரோட காதலியைப் பிரிஞ்சாப்புல தான் ஏங்கித்தவிக்கிறாரு.. வீட்டுக்குள்ளதான இருக்கீங்க.. உங்க புத்தகம் எங்கேயும் ஓடிப் போகலை.. அதுவும் வீட்டுக்குள்ளதான் இருக்குது.. அடங்கி உட்காருங்க...”

கணவருக்கு இடியாப்பத்தை பரிமாறியபடியே அதட்டலைப் போட்ட அன்னபூரணி.. மாடிப்படியின் கீழ்ப்படியின் நின்று கொண்டு குரல் கொடுத்தாள்..

“காவ்யா.. அடியேய்.. காவ்யா....”

பசிக்கு உணவில்லாத போது.. தூக்கத்தை கண்களுக்கு ஈய வேண்டும் என்ற கொள்கைப்படி சின்னதாக குட்டித்தூக்கம் போட்டுக் கொண்டிருந்த காவ்யா.. அவசரமாக ஓடிவந்து எட்டிப் பார்த்தாள்..

“என்னம்மா..?”

“பசிக்குதுன்னு சொன்னீல்ல.. வந்து சாப்பிட்டுட்டுப் போ.. எனக்கும் வேலை முடியும்..”

“கொஞ்ச நேரம் கழிச்சு வர்றேம்மா...”

“எனக்கென்ன ஏழுகையா இருக்குது..? வாடி கீழே..”

காவ்யா வாய்க்குள் முணுமுணுத்தபடி கீழே இறங்கி வந்தாள்.. டைனிங் டேபிளில் சிவதாணுவைக் கண்டதும்.. அவளுக்கு வந்த பசி ஓடிப் போய்விட.. அவளும் ஓடிப் போய்விடும் உத்தேசத்துடன் திரும்ப யத்தனித்தபோது...

“உன் அப்பா கையில இருக்கிற புத்தகத்தை பிடுங்கி அலமாரியில வைச்சாச்சு.. பயப்படாம வா..” என்று தைரியம் கொடுத்தாள் அன்னபூரணி...

‘புத்தகம்தான அலமாரிக்குப் போயிருக்கு..? அப்பா இங்கேதான இருக்காரு...’

எதற்கும் இருக்கட்டும்மென்று நாற்காலியின் முனையில் தொற்றிக் கொள்வதைப் போல அமர்ந்தாள் காவ்யா...

‘ஓடத் தோதாயிருக்கும்...’

காவ்யாவின் முன்னால் தட்டை வைத்த அன்னபூரணி.. இடியாப்பத்தைப் போட்டு தேங்காய்பாலை ஊற்றினாள்.. ஆசையுடன் அதைப் பிட்டு.. வாயருகே காவ்யா கொண்டு போன போது...

“ஏம்மா காவ்யா.. படிச்ச திருக்குறளை அதுக்குள்ள மறந்து போயிரலாமாம்மா..” என்று ஆரம்பித்தார் சிவதாணு..

அன்னபூரணியை முறைத்தபடி பிய்த்த துண்டை வாய்க்குள் தள்ளும் வாய்ப்பு தனக்கில்லை என்ற முடிவுக்கு வந்தவளாக.. தட்டில் அதைப் போட்டுவிட்டு.. பரிதாபமாக சிவதாணுவைப் பார்த்தாள் காவ்யா...

“பசிக்குதுப்பா...”

“சாப்பிடும்மா...” தாராள குணத்துடன் சொன்னார் சிவதாணு...

‘அதுக்குத்தான் நீங்க விட மாட்டேங்கறிங்களே...’

ஏக்கத்துடன் தட்டைப் பார்த்தபடி அமர்ந்திருந்த காவ்யாவை நிமிர்ந்து பார்த்தான் கண்ணதாசன்...

“அப்பா...”

“என்ன கண்ணா...”

“சாப்பிடறப்ப டியுசன் எடுக்க வேணாம்.. அது பாவம் பசிக்குதுன்னு வந்திருக்குது.. சாப்பிட விடுங்க...”

“நான் என்னப்பா செய்றேன்... தாராளமா சாப்பிடட்டும்..”

“அது சாப்பிடனும்னா நீங்களும் சாப்பிடனும்.. பேசக் கூடாது..” கண்டிப்புடன் பேசினான் கண்ணதாசன்...

சிவதாணுவுக்கு மகன் தீர்ப்புத்தான் மகேசன் தீர்ப்பு.. அதனால் மகளுக்கு திருக்குறளைச் சொல்லிக் கொடுக்க

முடியவில்லையே என்ற ஆற்றாமையுடன் இடியாப்பத்தில் கவனமானார்...

“சாப்பிடும்மா..” பாசத்துடன் சொன்னான் கண்ணதாசன்..

நீ சொல்லைன்னா எனக்குச் சாப்பிடத் தெரியாதாக்கும் என்றுதான் மகள் நொடிப்பாள் என்று கணித்து வைத்திருந்த அன்னபூரணியின் கணிப்பை பொய்யாக்கி விட்டு.. தமையனை நன்றியுடன் பார்த்தபடி சாப்பிட ஆரம்பித்தாள் காவ்யா...

‘இதென்னடி அதிசயமா இருக்கு.. கிழக்கும்.. மேற்கும் எப்ப ஒன்னாச்சு...?’ இமைகளை கொட்டி விழித்தாள் அன்னபூரணி...

“காவ்யா...”

“என்னண்ணே...”

“எனக்குத் தெரிஞ்ச மில்லில ஆபிஸ் வொர்க் பார்க்க ஆள் தேவைப்படுதாம்.. இப்ப நீவாங்கற சம்பளத்தைவிட அதிகமா கிடைக்கும்.. நீ அங்கே ஜாயின் பண்றியா..?”

காவ்யாவுக்கு ‘திக்’ கென்றது...

‘இந்த வேலையை விடறதா..?’

பாவனாவின் முகம் கண்முன் வந்து நின்றது.. அத்தனை நாள்களாக பார்த்துப் பழகிய சக ஊழியர்கள்

நினைவுக்கு வந்தார்கள்.. பேச்சு பேச்சாக இருந்தாலும்.. விரல் நுனியில் வந்து நிற்கும் கடையின் விவரங்கள் நினைவுக்கு வந்தன... அவள் மனம் அசைந்தது...

பார்த்துப் பழகிய முகங்களையும்.. வேலையையும் விட்டுவிட்டு அவள் வேறு எங்கோ செல்வதா..? பாவனாவின் நட்பு காணக்கிடைக்காதது.. இதைக் கண்ணதாசன் புரிந்து கொள்வானா..?

ஒரே அலைவரிசையில் சிந்திக்கும் தோழமை கிடைப்பது.. எவ்வளவு அரிதான ஒன்று என்பதை கண்ணதாசனிடம் எப்படி அவள் சொல்வாள்..?

காவ்யாவின் தயக்கத்தைக் கவனித்த கண்ணதாசனின் புருவங்கள் முடிச்சிட்டன.. அக்கறையுடன் பேசும் தமையனின் வார்த்தைகளை மறுத்துப் பேசமுடியாமல் அவள் திண்டாடினாள்.. இதே வார்த்தைகளை இரண்டு தினங்களுக்கு முன்னால் அவன் சொல்லியிருந்தால் காவ்யாவின் பதிலே வேறாக இருந்திருக்கும்..

‘இதென்ன.. புதுசா கரிசனம் பொங்கி வழியுது.. ஏண்ணே.. எனக்கு வேலை வாங்கிக் குடுன்னு நான் உங்கிட்ட கேட்டேனா..? நீபாட்டுக்கு முந்திரிக் கொட்டை போல முந்திக்கிட்டு வர்ற.. இந்த கரிசனத்தை என்ன மேல படிக்க வைக்கிறதில காண்பிக்க வேண்டியது

தான..? படிக்கிற படிப்பையெல்லாம் நீயே படிச்சுக்குவ.. பார்க்கிற வேலையையும் ஆபிசர் உத்தியோகமா பாத்து வாங்கிக்குவ.. என்ன மட்டும் மில்லுல வேலையிருக்கு.. போன்னு சொல்லுவ.. ஏண்ணே உனக்கு இந்த கெட்ட புத்தி..? இது என்னத் தேடி தானா வந்த வேலை.. எனக்கு இதுவே போதும்.. நீ வாங்கிக் கொடுக்கிற வேலை வேணாம்..' என்றுதான் அவள் சொல்லியிருப்பாள்..

இன்று கதையே வேறாக இருந்தது.. காவ்யாவின் முகமூடியை கண்ணதாசனின் பாசம் கழட்டிப் போட வைத்திருந்தது.. தங்கையின் முகம் பார்த்தே அவள் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு.. தாய்.. தந்தையிடம் அவளின் வேலைச்சுமையிலிருந்த ஆபத்தைக் காட்டிக் கொடுக்காமல்.. அவளுடன் துணைக்கு வந்து அவளின் வேலையை முடித்துக் கொடுத்து.. பத்திரமாக அவளை அலுவலகத்தில் சேர்ப்பித்ததோடு நிற்காமல் அவளுடைய அண்ணனாக அர்ஜீனிடம் சண்டைக்கும் போனானே.. அதற்குப் பின்னாலும்... பொய் முகமூடியின் பின்னால் ஒளிந்து கொண்டு அண்ணன் பறக்கவிடும் பாசப் பறவையை.. 'சூ..சூ..' வென்று விரட்ட காவ்யாவினால் முடியவில்லை...

எப்படி அவனிடம் மறுப்பது என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கையில் எதிர்பாராத விதமாக அன்ன பூரணியிடமிருந்து அவளுக்கு உதவிக்கரம் வந்தது...

“வேணாம்டா கண்ணா.. இதுன்னா பார்த்துப் பழகின இடம்.. அந்த துரியோதனன் வேற நம்ம ஊருக்கார மனுசனா இருந்தாரு...”

“அதைத்தான் நானும் சொல்றேன்ம்மா.. துரியோதனன் கடையை வித்துட்டார். வாங்கின ஆள்... நம்ம ஊர்க்கறரில்லை.. சென்னைக்காரர்.. அவருக்கு நம்ம குடும்பத்தைப் பத்தியும்.. காவ்யாப் பத்தியும் என்ன தெரியும்..? அதனாலதான் சொல்றேன்.. காவ்யா இந்த வேலையை விட்டுட்டு.. நான் சொல்ற வேலைக்குப் போகட்டும்...”

“இங்கே மட்டும் தெரிஞ்ச ஆளுக இருப்பாங்களா..?”

“மில்லோட முதலாளி எனக்குத் தெரிஞ்சவர்.. காவ்யாவுக்கு மதிப்புக் கொடுத்து நடத்துவாங்க..”

“இந்த சுத்தற வேலையே வேணாம்கிறேன்.. நீ வேலையை விடச் சொன்னதை சரின்னுதான் சொல்லுவேன்.. இவ எதுக்காக வெளியே வேலைக்குன்னு போகனும்..? பேசாம வீட்டில இருக்க வேண்டியதுதானே.. நீ புதுசா ஒரு வேலையைத் தேடறதுக்குப் பதிலா.. இவளுக்குத் தோதான மாப்பிள்ளயத் தேடு.. காலாகாலத்தில கல்யாணம் பண்ணிக் கொடுத்திரலாம்..”

“அது உடனே நடக்கிற வேலையாம்மா..?”

“நடக்கிறப்ப நடக்கட்டும்.. அதுவரைக்கும் இவ வீட்டில இருக்கட்டும்.. அறியாத இடத்தில வேலைக்குப் போக வேணாம்...”

‘போச்சுடா...’ மானசீகமாக தலையில் கை வைத்தாள் காவ்யா...

‘இந்தம்மா சும்மாவே சாமியாடும்... அண்ணன் வேற உடுக்கை அடிச்சு வைச்சிருச்சு... இனிமே இது சாமானியத்தில மலையிறங்காதே...’

அவளின் முகத்திலிருந்தே அவளது மனத்தின் எண்ண வோட்டத்தைப் புரிந்து கொண்ட கண்ணதாசன் அன்னபூரணியை மலையிறக்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டான்...

“இப்ப தங்கச்சி கல்யாணத்துக்கு என்னம்மா அவசரம்..?”

“அப்ப உன் கல்யாணத்துக்கு அவசரப்பட சொல்றியா..? வேணும்னா உனக்குப் பொண்ணுப் பாக்கவா..?”

“எதுக்கும்மா இந்தக் கொலைவெறி..?”

“எனக்காடா கொலைவெறி..? அது உனக்கும்.. உந்தங்கச்சிக்கும் தான் இருக்கு.. உந்தங்கச்சிக்கும் மாப்பிள்ளை பாக்க மாட்ட.. நீயும் பொண்ணு

கட்டமாட்டன்னா என்னடா அர்த்தம்..? புள்ளகளப் பெத்தவளுக்கு எப்படியிருக்கும்ன்னு யோசிச்சுப் பாத்தியா..? இதில வேற இவ வேலை செய்யற கடையை வேறொருத்தன் வாங்கிட்டான்னு சொல்ற.. கண்ணா..!"

"என்ன..?"

"காலகாலத்தில உந்தங்கச்சியை கரையேத்திருப்பா.."

எப்போதும் அதை மறுத்துப் பேசும் கண்ணதாசன் அப்போது அதை மறுத்துப் பேசவில்லை என்பதை கண்டு கொண்டாள் காவ்யா.. மௌனமாக ஏதோ யோசனையுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தவனிடம்...

"அதுவரைக்கும் இந்தக் கடைக்கே இவ வேலைக்குப் போயிட்டு வரட்டும்பா.." என்றும் சொன்னாள் அன்னபூரணி...

"இதில ரிஸ்க் இருக்குன்னு தோணுதும்மா..."

"இருக்கட்டும்.. முடிஞ்சா வேலையப் பாக்கட்டும்.. இல்லேன்னா இந்த சோலியே வேணாம்ன்னு விட்டுத் தள்ளிட்டு வந்திரட்டும்.. ஆனா வேற பக்கம் இவள வேலைக்கு அனுப்ப வேணாம்ப்பா..."

"அம்மா.. இந்தக் கடை இப்ப துரியோதனன் கையில் இல்ல..."

“துரியோதனன்தான் இல்ல.. அந்தக் கடையில வேல பாக்கிற மத்த மக்க மனுசங்களுமா இல்லாம போயிட்டாங்க...”

“அம்மா...”

“ஆமாண்டா தம்பி.. மில்லுன்னா கடலுடா.. அதில உந்தங்கச்சிய வேலைக்கு அனுப்ப நான் சம்மதிக்க மாட்டேன்.. இதுன்னா ஒரு தம்ளர் தண்ணி.. மிஞ்சிப் போனா அங்கே பத்துப் பதினைஞ்சு பேர்தான் வேலை பார்க்கிறாங்க... அத்தன ஆளுகளும் நம்மளுக்குத் தெரிஞ்ச ஆளுகதான்.. இன்னார் வீட்டுப் பொண்ணுன்னு பயந்து.. பதவிசாப் பழகிட்டுப் போயிருவாங்க...”

‘மத்தவங்க அப்படிப் போயிருவாங்க.. அந்தப் புது முதலாளி அப்படிப் போவானா..?’ மனதுக்குள் கேட்டுக் கொண்டான் கண்ணதாசன்...

அர்ஜீனை அவன் கேள்வி கேட்டவுடன் அவன் பார்வை கண்டிப்புடன் காவ்யாவின் மீது பாய்ந்ததை அவன் மனது நினைத்துப் பார்த்தது...

# 22

## உன் மனதின் பெட்டகத்தில்... ஒளிந்து கொள்ள ஆசைகொண்டேன்...

அது உரிமை கொண்ட பார்வை...!

அப்படிப்பட்ட பார்வையினை ஒரு கணவன்தான் பார்த்து வைப்பான்...

'என்னைப் பற்றி எப்படி நீ உன் அண்ணனிடம் சொல்லலாம்...?' என்று அர்ஜீனின் பார்வை காவ்யாவிடம் கேட்டதை கண்ணதாசன் கண்டுபிடித்து விட்டான்...

அது அவனுக்கு உவப்பானதாக இல்லை...

அவன் பண்பட்டவன்.. பெரியவர்கள் கூறியப் பழமொழிகள் வாழ்க்கையை உணர்த்துபவை என்பதை புரிந்து வைத்திருப்பவன்..

'எட்டாத பழத்திற்கு கொட்டாவி விடாதே...'

'உயர உயரப் பறந்தாலும்.. ஊர்க்குருவி பருந்தாகி விட முடியாது..'

'அகலக்கால் வைக்காதே...'

இதையெல்லாம் வாழ்ந்து பார்த்தவர்கள்.. பின்னால் தொடர்ந்து வரும் தலைமுறையினர்க்கு சொல்லிச் சென்றிருந்தார்கள்.. அவற்றில் உள்ள அர்த்தங்களை புரிந்து வைத்திருந்தவன்தான் கண்ணதாசன்.. அர்ஜீனின் பார்வை ஒரு முதலாளியின் பார்வையைப் போல இல்லாமல் ஓர் விதமான சொந்தத்துடன் காவ்யாவின் மீது படிந்ததை கண்ணதாசன் விரும்பவில்லை...

எட்டாக்கனிக்கு ஏன் ஆசைப்பட வேண்டும் என்பதுதான் அவனுடைய எண்ணமாக இருந்தது.. அர்ஜீன்தான் காவ்யாவை உரிமையோடு பார்த்தான்.. காவ்யா அப்படிப் பார்க்கவில்லை என்பதும் அவன் மனதில் பதிந்திருந்தது...

அவள் இயல்பாக பணக்கட்டுக்களை எடுத்து அர்ஜீனின் முன்னால் வைத்துக் கொண்டிருந்தாள்.. அர்ஜீனிடம் பணத்தை ஒப்படைத்து விட வேண்டுமென்ற பரபரப்பு மட்டுமே அவளிடம் அப்போது தென்பட்டது.. அர்ஜீனின் பார்வையை அவள் சந்திக்கவே இல்லை..

‘இந்தக் கடையில காவ்யாவ வேலைக்கு அனுப்பக் கூடாது...’

அப்போதே முடிவெடுத்து விட்டான் கண்ணதாசன்.. மாலையில் அவளை அழைத்துக் கொண்டு போக அவன் சென்ற போது.. அர்ஜீனின் முகத்தில் தெரிந்த

சன்னமான பொறாமையுணர்வு இவன் மனதில் சஞ்சலத்தை விதைத்தது..

‘எந்தங்கச்சிய நான் கூப்பிட்டுக்கிட்டுப் போனா.. இவனுக்கென்ன வந்தது..? என்னவோ இவன் சொத்தை கொள்ளையடிச்சுக்கிட்டுப் போகிறவனப் பாக்கிறதைப் போல பாத்து வைக்கிறானே.. ஊஹீம்.. இவன் பார்வையே சரியில்ல...’

அர்ஜீனுக்காக தங்கையின் சுதந்திரத்தைப் பறித்து அவளை வீட்டோடு முடக்கவும் கண்ணதாசன் பிரியப்பட வில்லை.. அப்படி மட்டும் அவன் செய்து விட்டால்.. இப்போது ஒதுங்கிப் போகும் அவன் தங்கை.. ஆயுள் முழுவதும் அவனை அண்ணனென்றே ஏற்றுக்கொள்ளாமல் ஒதுக்கி வைத்துவிடுவாள் என்பதால் அவன் கவலையுடன் வேறு மார்க்கத்தைக் குறித்த சிந்தனையில் ஆழ்ந்தான்.. அவனுடைய அதிகார பலத்தைப் பயன்படுத்தி விசாரித்தபோது.. அவனுக்குப் பழக்கமான ஒருவர் நடத்தும் மில்லில் அலுவலகப் பிரிவில் வேலை ஒன்று காலியாக இருப்பது அவனுக்கு தெரிய வந்தது.. உடனடியாக அந்த மில் முதலாளிடம் பேசினான்...

“உங்க தங்கைங்களா சார்..? தாராளமா வரட்டும்.. நம்ம மில்லில் சாரோட தங்கச்சிக்கு வேலை கொடுக்கிறதில எனக்கும் ஒரு கௌரவம்...” என்று அவர் சொல்லிவிட்டார்..

அங்கே காவ்யா வேலைக்குப் போனால்... கண்ணதாசனின் தங்கையென்ற தனிக் கவனிப்பும்.. கூடுதல் மரியாதையும்... பாதுகாப்பும் கிடைக்கும் என்பதினால்தான் கண்ணதாசன் தங்கையிடம் அந்த வேலையைப் பற்றிப் பேசினான்.. அதை தங்கை வரவேற்பாள் என்றுதான் அவன் நினைத்தான்.. இப்படித் தயக்கம் காட்டவாள் என்று நினைத்துப் பார்க்கவில்லை.. அதைவிட அவளுக்கு ஆதரவாக அன்னபூரணி களம் இறங்குவாள் என்று கொஞ்சம் கூட அவன் நினைத்துப் பார்க்கவில்லை...

ஆளுக்கொரு யோசனையுடன் அண்ணனும்.. தங்கையும் சாப்பிட்டு விட்டு எழுந்து கொண்டனர்.. அதுவரை வேறு ஏதோ யோசனையுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த சிவதாணு.. மகன் எழுந்து கொள்வதைக் கண்டதும் அவசரமாக..

“என்ன முடிவு பண்ணியிருக்கப்பா..?” என்று கேட்டார்...

காவ்யாவின் கல்யாணத்தைப் பற்றித்தான் அவர் கேட்கிறார் என்று நினைத்துவிட்ட கண்ணதாசன்..

“பார்க்கலாம்ப்பா..” என்றான்..

“என்னது..? பாக்கலாமுன்னா சொல்ற.. படிக்கலாமுன்னு சொல்லுப்பா..” மகனைத் திருத்தினார் சிவதாணு..

“படிக்கலாமா..?” புருவங்களை உயர்த்தினான் கண்ணதாசன்..

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.. அதற்குள் சமையலறையிலிருந்து வெளியே வந்த அன்னபூரணி கணவரை அனல் பார்வை பார்த்தாள்...

“ஏம்ப்பா.. இவரு என்ன.. மக கல்யாணத்தப் பத்திக் கேக்கிறாருன்னா நினைச்சே..?” என்று மகனைப் பார்த்துக் கேட்டாள்..

“ஆமாம்மா.. அதப் பத்தித்தான் இப்ப நாம பேசிக்கிட்டு இருந்தோம்..?” என்றான் கண்ணதாசன்..

“நீ வேற.. அதெல்லாம் இந்த மனுசன் காதில ஏறாது.. எப்பப் பாரு.. திருக்குறளு.. திருக்குறளுதான்.. என்னமோ குறளோவியம் வரையப் போகிறவரப் போலத்தான் மனசுக்குள்ள நினப்பு.. இப்பவும் அதப்போலத்தான் எதையாச்சும் பேசி வைக்கப் போறாரு.. இப்படியாப்பட்ட மனுசனை வைச்சுக்கிட்டு எப்படித்தான் எம்பொண்ண கரைசேக்கப் போறேனோ.. அது அந்த ஆத்தா மகமாயிக்குத்தான் தெரியும்...”

“இல்லம்மா.. அப்பா நம்ம காவ்யா கல்யாணத்தப் பத்தித்தான் கேக்கிறாரு...”

“வீணா நம்பிக்கை வைக்காதேடா தம்பி.. இன்னுமா உங்கப்பாவப் பத்தி நீ புரிஞ்சுக்கல..?”

“எல்லாம் புரியும்மா.. ஆனா.. இம்புட்டு நேரமா.. அப்பா முன்னாலதானே நாம பேசிக்கிட்டு இருந்தோம்...? அப்படியிருக்கிறப்போ.. அப்பா அத விட்டுட்டு வேற பேச்சப் பேசுவாருன்னு எனக்கென்னவோ தோணலம்மா..”

“அப்படிங்கற..? இரு.. உன் ஆசையைக் கெடுப்பானேன்.. நீயே உங்கப்பா வாயாலே இவரு என்னதான் சொல்ல வந்தாருங்கிறதக் கேட்டுத் தெரிஞ்சுக்க.. ஏங்க.. இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க..?”

“என்ன பூரணி இப்புடிக் கேட்டுப்புட்ட..?”

“நான் கேக்கல.. உங்க மகன் கேக்கிறான்.. உங்க புத்தியத் தெரிஞ்சும் உங்ககிட்ட கேணச்சியப் போல கேள்வியக் கேட்டு வைக்க.. எனக்கென்ன கிறுக்கா புடிச்சிருக்கு..?”

“எதுக்குடி இம்புட்டுக் கோவம் கோவிச்சுக்கிறவ..? நான் என்னத்த சொல்லிப்புட்டேன்.. நம்ம கண்ணன் பெரிய ஆபிசரு...”

“அதுக்கு..?”

“அவன் தினமும் ஒரு திருக்குறளப் படிச்சுட்டுப் போயி ஆபிசில சொல்லி வைச்சா.. குறளு பரவும்ல்ல..”

சிவதாணு எடுத்துச் சொல்லச் சொல்ல.. அன்னபூரணி கேலிப் பார்வையுடன் மகனைப் பார்த்தாள்..

“கேட்டுக்கப்பா.. என்னவோ உங்க அப்பா.. பொறுப்பில பருப்பு கடையறவர்ன்னு சொன்னியே.. இதான் இவரோட பொறுப்பு..”

“அப்பா...”

தாளமாட்டாமல் பற்களை நறநறத்தான் கண்ணதாசன்.. தங்கையின் திருமணத்தைப் பற்றித் தாயார் அதீத கவலை கொள்வதற்கான அடிப்படைக் காரணம் என்னவென்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது...

‘ம்ஹீம்.. இப்படியாப்பட்ட அப்பாவுக்கு வாழ்க்கைப் பட்டா.. என் அம்மாவுக்கு.. பெத்த மக வாழ்க்கையைப் பத்திக் கவலை வராம என்ன செய்யும்..?’

“என்னப்பா..” மகனிடம் ஆவலாக பேச ஆரம்பித்தார் சிவதாணு...

“திருக்குறள் உலகப் பொது மறைப்பா...”

“ஆஹா.. உனக்காவது அதோட அருமை புரிஞ்சிருக்கே..”

“உலத்துக்கே புரியும்.. அதனால...”

“அதனால..?”

“நீங்களும்.. நானும் பரப்பித்தான் அது பரவனும்னு இல்ல.. குறளை விட்டுப்புட்டு குடும்பத்தைக் கவனிங்க..”

"அதுக்குத்தான் நீ இருக்கியேப்பா..."

இலகுவாக சிவதாணு இல்லறப் பிரச்னைகளிலிருந்து கழன்று கொள்ள.. இப்படிப்பட்ட தகப்பனுக்காக வள்ளுவர் என்ன குறளை எழுதி வைத்திருக்கிறார்.. என்று யோசித்தபடியே மாடிக்குப் போனான் கண்ணதாசன்..

அங்கே பால்கனியில் நடைபழகிக் கொண்டிருந்தாள் காவ்யா... கண்ணதாசன் திரும்பிப் பார்த்தான்.. அன்னபூரணி கணவருக்கு அர்ச்சனை செய்து கொண்டிருந்தாள்...

இப்போதைக்கு அன்னபூரணியின் கவனம் மாடிப் பக்கம் திரும்புவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்ற நிம்மதியோடு காவ்யாவை நோக்கிப் போனான் கண்ணதாசன்..

"காவ்யா..."

சில்லென்ற.. இரவு நேரத்தின் இதமான காற்றில் உலாவிக் கொண்டிருந்த காவ்யா நின்றாள்...

"அண்ணே..."

அவளருகில் வந்த கண்ணதாசனின் பார்வை அவளைத் துளைத்தது.. அது ஏனென்று புரியாமல் அப்பாவியாக விழித்து வைத்தாள் காவ்யா.. அதைக் கண்ட கண்ணதாசனின் முகம் கனிந்தது...

“நீ சின்னப்பொண்ணு காவ்யா..”

“நான் மட்டும் கிழவின்னா என்னச் சொல்லிக்கறேன்..?”

“அதுக்காக இல்லம்மா.. உனக்கு நல்லது கெட்டது தெரியாது..”

“அப்படின்னு நீ நினைச்சுக்கிட்டு இருக்க...”

“எனக்கென்னவோ அந்தக் கடைக்கு நீ வேலைக்கு போறது சரியில்லன்னு தோணுதும்மா...”

“ஏண்ணே..?”

இந்தக் கேள்விக்கு கண்ணதாசன் என்ன பதிலைச் சொல்லுவான்..? உன்னை உன் புது முதலாளி பார்க்கும் பார்வை சரியில்லை என்றா சொல்ல முடியும்..? அப்படிச் சொன்னால்.. விகல்பமில்லாத காவ்யாவின் மனதில் விகல்பத்தை விட்டதாக ஆகி விடாதா..?

“என்னவோ தெரியலம்மா.. என் மனதுக்கு திருப்தியா இல்ல...”

“பிடிச்ச வரைக்கும்தான் நானும் வேலைக்குப் போவேன்.. உனக்கு என் குணம் தெரியுமில்ல..? வீணா மனசைப் போட்டு உழட்டிக்காதண்ணே.. இங்கேன்னா பாவனா இருக்கா.. பழகின மக்க.. மனுசங்க.. இருக்காங்க..

புதுசா ஒரு இடத்தில வேலைக்குப் போனா.. எல்லா மனுசங்களும் புதுசாத்தான் இருப்பாங்க.. யாரு குணம் எப்படியிருக்கும்ன்னு யாரு கண்டது..? பாத்துத்தான பேசிப் பழகியாகனும்..?”

‘ஓ... இதனால்தான் தங்கச்சி அப்படித் தயங்கினாளா..?’ கண்ணதாசனின் மனம் நிம்மதியானது..

“பாவனா மாதிரி ஒருத்தியத் தேடிப் பிடிக்க முடியாதுண்ணே... எப்புடியும் ஒருநாளைக்கு என்னக் கல்யாணம் கட்டிக் கொடுத்துப்புடுவீங்க.. அதர்கப்புறம் நான் என் கூடப் பழகின அத்தனை சிநேகிதத்தையும் மறந்துதான் ஆகனும்.. அதுவரைக்கு-மாவது கிடைச்சிருக்கிற இந்த சிநேகிதத்தைப் பிரியாம இருக்கேனே...”

காவ்யாவின் வார்த்தைகளில் இருந்த உண்மையில் மனம் நெகிழ்ந்தான் கண்ணதாசன்.. அவனுடன் ஒன்றாம் வகுப்பிலிருந்து கல்லூரிவரை ஒன்றாகப் படித்த ஐந்து சிநேகிதர்கள் இருந்தார்கள்.. அவனுடன் சேர்ந்து அறுவராக ஆனவர்கள் அடிக்கடி ஒன்று கூடிப் பேசுவார்கள்.. சினிமாவுக்கு போவார்கள்.. வெளியூர்களுக்கு சுற்றுலாவாக போய் வருவார்கள்.. அவற்றுக்கெல்லாம் அவன் வீட்டில் அனுமதி கேட்க வேண்டியதே இல்லை..

இன்ன இடத்திற்கு போய் வருகிறேன் என்ற செய்தியைச் சொன்னால் போதும்..

காவ்யாவுக்கு அப்படியில்லை.. அவள் வேலையிலிருந்து திரும்பி வர.. சில நிமிடங்கள் தாமதமாக ஆனாலும்.. அவள் அதற்கான விளக்கத்தைச் சொல்லியாக வேண்டும்.. பிறந்த வீட்டிலேயே இந்த நிலைமை எனும் போது.. புகுந்த வீட்டில் அவள் நிலைமை இன்னும் அதிகமான நெருக்கடியில்தானே இருக்கும்..?

அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவள் நட்புக்களைத் தேடிப் போய் பேசிப் பழக முடியுமா..?

நட்பு என்பது கடவுள் கொடுத்த வரம்..! என்ன ஒன்று... அந்தவரம் ஆண்களுக்கு மட்டுமே சொந்தமானதாக ஆகிவிட்டது.. பெண்களுக்கு அது நிலைத்து நிற்பது என்பது கனவுதான்...

# 23

*சிறகை விரித்து உன்இதயத்திலே..*
*சிறகடிக்க ஆசைகொண்டேன்...*

**சோ**பாவில் சரிந்து.. டீப்பாயின் மீது கால்களைத் தூக்கிப் போட்டு.. டிவியையும் ஓடவிட்டு.. அதைப் பார்க்காமல் விட்டத்தில் தெரிந்த பல்லியை வெறித்துக் கொண்டிருந்தான் தேவராஜன்...

அவன் கையிலிருந்த ரிமோட்டைப் பார்வையிட்ட தேன்மொழி.. சின்னத்திரையில் என்னநிகழ்ச்சி ஓடிக் கொண்டிருக்கிறது என்று பார்த்தாள்.. அங்கே புள்ளிமான் ஒன்று ஓடிக் கொண்டிருக்க.. அதைத் தொடர்ந்து புலி ஓடிக் கொண்டிருந்தது...

தேன்மொழியால் அதைப் பார்க்க முடியவில்லை.. அவளுக்கு வேறு சேனலில் வரும் நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டியிருந்தது.. சேனல் மாற்ற வேண்டுமானால்.. டிவியின் ரிமோட் அவள் கைக்கு வர வேண்டும்.. ஆனால் அதை தேவராஜனிடமிருந்து கைப்பற்ற வேண்டுமே...

அதற்கான ஒரே வழிமுறையாக.. உள் பக்கமாக திரும்பி...

“யம்மாவ்...” என்று சப்தமிட்டாள் தேன்மொழி...

“என்னடி..? எதுக்கு இப்படிச் சத்தத்தைப் போட்டு ஊரைக் கூட்டறவ..? அம்மா எங்கே போயிட்டேன்..? ஆட்டுக்குட்டி பின்னாலயா போயிட்டேன்...?” மகளைக் கடிந்தபடி வந்து சேர்ந்தாள் செல்வி...

“ஆட்டுக்குட்டியை விட்டுப்புட்டு அண்ணனைப் பாரு...”

தேன்மொழி கை காட்ட.. மகனைப் பார்த்த செல்வி திகைத்து விழித்தாள்.. டிவியைப் போட்டு விட்டு.. அதைப் பார்க்காமல் மகன் எதற்காக விட்டத்தில் ஓடும் பல்லியைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற விவரம் அவளுக்குப் பிடிபடவில்லை...

“இவன் ஏண்டி.. ஆடு திருடின கள்ளனப் போல ஒரு மார்க்கமா முழிச்சுக்கிட்டு இருக்கான்..?” மகளிடமே விளக்கம் கேட்டாள்...

“அதையேன் கேக்கிற.. இது கொஞ்ச நாளா இப்படித்தான் இருக்குது.. எப்புடியோ இருந்துட்டுப் போகட்டும்ன்னு பாத்தா.. அதுக்கும் விட மாட்டேன்னு அடம் பிடிக்குது..” கடுப்புடன் சொன்னாள் தேன்மொழி...

“டிவியப் போட்டா.. அதைப் பாக்கனும்.. அத விட்டுப்புட்டு இவன் என்னத்துக்காக விட்டத்தில ஓடற பல்லியப் பாக்கறான்..?”

“ஊம்..? எல்லாத்தையும் எங்கிட்டயே கேளு.. ஏன்..? உன் மகன்கிட்ட இதயெல்லாம் கேக்க மாட்டியா..?”

“கேட்டாலும் அவன் சொல்லிட்டுத்தான் வேற சோலியப் பாப்பான்..”

“அதுக்கு..? நான்தான் உனக்குக் கிடைச்சேனா..?”

“நீதானடி அம்மான்னு அழச்சு.. அண்ணனப் பாருன்னு பிராது கொடுத்த..?”

“பிராது கொடுத்தவுன்ன நீ தீர்ப்பச் சொல்லிப்-புட்டியாக்கும்..?”

“உனக்கு இப்ப என்னதாண்டி வேணும்..?”

“உம்மகன்.. பல்லிய விரட்டட்டும்.. நான் வேணாம்ன்னு சொல்லல...”

“அடிப்பாவி.. அவன் உனக்கு அண்ணன்டி...”

“யாரு இல்லேன்னு சொன்னது..? அந்த நொண்ணன்.. டிவி ரிமோட்ட இந்தப் பக்கமா தள்ளிட்டு.. பல்லி விரட்ட நடத்தட்டும்...”

“என்னமோ மஞ்சு விரட்ட நடத்தட்டும்ங்கிறதப் போலயில்ல சொல்லி வைக்கிறவ..? எல்லாம் என் நேரம்டி..”

தலையில் அடித்துக் கொண்ட செல்வி.. அதே கோபத்துடன் தேவராஜனின் முதுகிலும் அடித்து வைத்தாள்.. அந்த அடியில் சுரணை வரப் பெற்ற தேவராஜன்.. டிவியின் திரையைப் பார்த்து விட்டு...

“டிஸ்கவரி சேனலை யாரு போட்டு விட்டது..?” என்று சப்தம் போட்டான்...

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்ட தாய்.. மகள் இருவருக்கும் பற்றிக் கொண்டு வந்தது...

“எனக்கு நல்லா வந்திரும் வாயில.. ஏண்டா.. நீதான ரிமோட்ட கையில வைச்சிருக்க..? அத நீ போடாம.. வேற யாரு போடுவா..?” அதட்டினாள் செல்வி...

“ஒரு வேள.. விட்டத்தில ஓடற பல்லி வந்து போட்டிருக்குமோ...” தாயிடம் சந்தேகம் கேட்டாள் தேன்மொழி..

“ரிமோட்ட இங்க குடுடா...”

வெற்றிகரமாக அதைக் கைப்பற்றி.. மகளிடம் ஒப்படைத்தாள் செல்வி.. கோட்டையைப் பிடித்துக் கொடியை நாட்டி விட்ட சந்தோசத்துடன் சேனலை மாற்றினாள் தேன்மொழி...

தேவராஜன் எழுந்து கொண்டான்.. வண்டிச் சாவியை கையில் எடுத்தான்...

“எங்கேடா போற..?” என்று கேட்டாள் செல்வி..

“போறப்பயே எங்கேன்னு கேட்டு வைய்யி.. விளங்கிடும்...” எரிந்து விழுந்தான் தேவராஜன்...

“இவரு இந்த மதுரைச் சீமையை கட்டி ஆளப் போறாரு.. எங்கேன்னு கேட்டா வேல கெட்டுப் போயிரும்..” நொடித்துக் கொண்ட செல்வி...

“இந்தாப் பாரு.. வெளியே போனா.. எந்த வில்லங்கத்தயும் இழுக்காம வீட்டுக்கு வந்து சேரு.. அத விட்டுப்புட்டு.. எந்தக் களவாணிப்பய கூடாவாது சகவாசம் வைச்சுக்கிட்டு திரும்பவும் தொழில் பண்றேன்னு ஆரம்பிச்சேன்னு வைய்யி.. உங்கப்பா... மனுசனா இருக்க மாட்டாரு.. சொல்லிப்புட்டேன்..” என்று எச்சரித்தாள்...

“ஆமாம்.. இப்ப மட்டும் உன் புருசன் மனுசனாத்தான இருக்காராக்கும்..?” வெடுவெடுத்தான் தேவராஜன்...

“அவரு மனுசனா இருக்கப் போய்த்தான்.. நீ இழுத்து வைச்ச கடனை கடையை வித்து அடைச்சு முடிச்சாரு.. அதுக்கப்புறமும் நீ திருந்த மாட்டேங்கறியே...”

“அந்தக் கடையை யாரக் கேட்டு வித்தாரு..?”

“யாரைக் கேக்கனும்ப்பா..?”

“என்னக் கேட்டிருக்கனும்..?”

“உனக்குக் கடன் கொடுத்த மாமன் மச்சானுக.. உன்னக் கேக்கலியேடா தம்பி.. உன்ன விட்டுப்புட்டு.. உங்கப்பன் கழுத்தில இல்ல துண்டப் போட்டு இழுத்தாங்க..? ஆமா.. உனக்கு எதுக்குடா அந்தக் கடை மேல இம்புட்டு பாசம் கொப்புளிக்குது..? ஒருநா.. ஒரு பொழுது கூட.. அந்தக் கடையில உக்காந்து வியாபாரம் செய்திருக்க மாட்ட.. காலயில ஒருதரம்.. சாயந்திரம் ஒருதரம்ன்னு எட்டிப் பார்த்து.. வெட்டிப் பொழுதப் போக்கினதுக்கா இம்புட்டுப் பாசம்..?”

“யம்மாவ்.. நானே வயித்தெரிச்சலில இருக்கேன்.. நீவேற எரியற கொள்ளியில எண்ணய ஊத்தாத...”

“இதயெல்லாம் வக்கணயா பேசிரு.. அப்பன் சம்பாரிச்சு வைச்ச சொத்த மட்டும் கட்டிக் காப்பாத்தாம கோட்ட விட்டுரு...”

செல்வி சிடுசிடுத்துக் கொண்டிருக்க.. அதை லட்சியம் செய்யாமல் வெளியே வந்து.. வீட்டின் முன்புறமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த புல்லட்டைக் கிளப்பினான் தேவராஜன்...

அது என்னவோ.. புல்லட்டைத்தான் அவனுக்கு மிகவும் பிடிக்கும்.. ஊருக்குள் ஆயிரம் வண்டியிருந்தாலும்.. புல்லட்டின் மீது உட்கார்ந்து போனால்தான்

தோரணயாயிருக்கிறது என்று அவன் நண்பர்களிடம் பெருமையடித்துக் கொள்வான்.. அந்த நண்பர்களும் அவன் வாங்கிக் கொடுக்கிற புரோட்டாவுக்கும்.. சால்னாவுக்கும் வேட்டு வந்து விடக் கூடாது என்ற பயத்தில் ‘ஆமாம் சாமி’ போட்டு வைப்பார்கள்..

அன்றும் அதைப் போல.. தோரணையுடன் இருக்கும் நினைவில்.. புல்லட்டில் ஆரோகணித்தான் தேவராஜன்.. அது நேராக காவ்யா வேலை பார்த்த கடையின் முன்னால் போய் நின்றது..

அவன் மனமறிந்து ஓடிச் சென்று இறக்கி விட்ட குதிரையைத் தட்டிக் கொடுப்பதைப் போல.. புல்லட்டையும் பிரியத்துடன் தட்டிக் கொடுத்து விட்டு கடைக்குள் பிரவேசித்தான் தேவராஜன்.. எதிர்ப்பட்ட கந்தசாமி.. வாயெல்லாம் பல்லாக...

“வாங்க... தம்பி...” என்று வரவேற்றார்...

“எப்புடி இருக்கிங்கண்ணே...” வரவழைத்துக் கொண்டே பாசத்துடன் விசாரித்தான் தேவராஜன்...

அதற்கு முன்னால் அவன் கந்தசாமியை ‘அண்ணே’ என்று விளித்ததில்லை.. அப்படிப்பட்டவனின் அன்பான அந்த அழைப்பில் நெக்குருகிப் போய் விட்டார் கந்தசாமி..

“நல்லா இருக்கேன் தம்பி.. ஐயா சௌக்கிய-முங்களா..?”

பதிலுக்கு துரியோதனனின் சௌகரியத்தைப் பற்றி கந்தசாமி விசாரித்து வைக்க.. நீயெல்லாம் நலம் விசாரிக்கும் அளவுக்கு நாங்கள் கீழே இறங்கி விட்டோமா என்று மனதுக்குள் கொதித்துப் போனான் தேவராஜன்...

ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வெள்ளந்திச் சிரிப்புடன்...

“அவருக்கென்னண்ணே.. நல்லாத்தான் இருக்காரு.. ஆனாலும் இந்தக் கடையோட ஞாபகம்தான் அவர விட்டு போக மாட்டேங்குது...” என்று பொய்யாக வருத்தப் பட்டான்...

“எத்தன வருசமா நடத்திக்கிட்டு வந்த கட... அவ்வளவு சீக்கிரமா மறந்துர முடியுமா தம்பி..?” கந்தசாமியும் சேர்ந்து வருத்தப்பட்டார்...

“ஆனாலும் பாருங்க.. வித்த கடப்பக்கம் அவரு எட்டிப்பாக்க முடியுமா..?” போலியாக இமை சிமிட்டினான் தேவராஜன்...

அவனுக்கு துக்கமாம்.. அதனால் கண் கலங்குகிறதாம்.. அதை மறைக்க.. ஐயா இமைகளைச் சிமிட்டி கண்ணீரை மறைக்கிறாராம்...

பவளக்கொடி நாடகத்தில் கூடக் காணக் கிடைக்காத இந்த அற்புதமான நடிப்பில் விழுந்து விட்டார் கந்தசாமி...

“முடியாதுதான் தம்பி..” என்று நாத்தழுதழுத்தார்...

“அதான்.. அவரு சார்பா.. தினமும் ஒருதரம் கடப் பக்கம் எட்டிப் பாத்துட்டு போகலாம்ன்னு வந்திருக்கேன்..” சோகமாக முகத்தை வைத்துக் கொண்டான் தேவராஜன்...

“இதுக்கு எதுக்கு தம்பி மனசு வருத்தப்படறிங்க..? இன்னைக்குத்தான் இது ஊரான் வீட்டுக்கட.. ஒரு காலத்தில இது உங்க கடதான தம்பி.. நீங்க நினச்சப்ப வரலாம்.. போகலாம்..”, அவனைத் தேற்றினார் கந்தசாமி...

‘யோவ்.. கடையை வித்து.. முழுசா மூணுமாசம்தான் ஆகுது.. அதுக்குள்ள இந்தக்கட.. ஒருகாலத்தில எங்க கடயா இருந்துச்சுன்னு நீ நாயம் பொளக்கிறயா..? கிழவா.. தனியா எங்கையில மாட்டினேன்னு வைய்யி.. அன்னைக்கு உனக்கு திருவிழாதாண்டி.. அன்னைக்கு பாப்ப.. இந்த தேவராஜனோட திருமுகத்த...’

மனதுக்குள் கந்தசாமியை திட்டியபடி.. வெளியே அவரைப் பார்த்து நன்றியுணர்வு பொங்க சிரித்து வைத்தான் தேவராஜன்...

“அப்புறம்.. கட எப்படியிருக்கு கந்தசாமி..?”

“முன்ன விட நல்லா யாவாரம் நடக்குது தம்பி...”

யதார்த்தமாக சொல்லி வைத்து விட்டு.. தேவராஜனின் பலத்த கண்டனப் பார்வைக்கு ஆளானார் கந்தசாமி...

'நான் அதயாய்யா.. கேட்டேன்.. காவ்யா எப்படியிருக்கான்னு கேட்டேன்.. கடவியாபாரம் ஓடினா எனக்கென்ன..? இல்ல குப்புறப் படுத்துக்கிட்டாத்தான் எனக்கென்ன..'

மனதுக்குள் அவன் அர்ச்சிப்பதை அறியாதவராக.. வெள்ளைச் சிரிப்புடன்.. தேவராஜனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் கந்தசாமி...

'சகிக்கலை.. இந்தக் கிழவன் முகத்தப் பாக்கவா இம்புட்டுத் தூரம் வந்தேன்..?'

"உள்ளார வாங்க.. தம்பி..."

'அப்பாடி.. ஒரு வழியா உள்ளே கூப்பிட்டுட்டான்..'

அதற்காகவே காத்திருந்த தேவராஜன்.. அரக்கப் பறக்க உள்ளே நுழைந்தான்...

'ம்ஹீம்.. எங்கப்பன் மட்டும் கடய விக்காம இருந்திருந்தா.. இந்தக் காவலாளிப்பய கூட நின்னு பேசியிருக்க மாட்டேன்.. இப்பப்பாரு.. இந்தக் கடக்குள்ள நுழைய இவன்தயவு தேவப்படுது.. இவனுக்கெல்லாம் குல்லாப் போட்டு.. ஜால்ராவத் தட்ட வேண்டியதா இருக்கு...'

பொருமியபடி உள்ளே நுழைந்தவன் புன்னகை மன்னனாகி.. என்னவோ.. தேர்தலில் நிற்கும் அரசியல்வாதி

ஓட்டுக் கேட்டு வந்திருப்பதைப் போல.. எல்லோருக்கும் பொத்தாம் பொதுவாக கரம் குவித்தபடி..

“நல்லாயிருக்கியா இளங்கோ.. நல்லாயிருக்கியா குமாரு...” என்று நலம் விசாரிக்க ஆரம்பித்தான்...

அவர்களும் மகிழ்ந்து போய் அவனிடம் பதிலுக்கு நலம் விசாரித்தார்கள்.. அப்படியே நகர்ந்து போய்.. காவ்யாவின் முன்னால் நின்றான் தேவராஜன்..

‘அப்பாடி.. ஒரு வழியா வந்து சேந்துட்டேன்..’ அவனுக்கு மூச்சு வாங்கியது...

“எப்படியிருக்கீங்க காவ்யா..?” கண்களில் காதல் வழிய அவன் கேட்டதற்கு...

“அப்படியேதான் இருக்கேன்..” என்று வெடுக்கென்று பதிலைச் சொன்னாள் காவ்யா...

‘ம்ஹீம்.. உலகத்தில எது மாறினாலும்.. இவ மட்டும் மாறவே மாட்டா...’

# 24

*நித்தம் உந்தன் திருமுகத்தில்..*
*நான் விழிக்க ஆசைகொண்டேன்..*

**தே**வராஜனும்தான் காவ்யா அந்தக் கடையில் வேலைக்குச் சேர்ந்த அந்த நாள்முதல்.. இந்த நாள்வரை.. அவளிடம் வழியோ.. வழியென்று வழிந்து பார்க்கிறான்.. ஆனாலும் காவ்யாவின் கவனத்தை அவனால் கவர முடியவில்லை...

அவன் விடும் ஜொள்ளு மழையில் அந்தக் கடைதான் நனைந்ததே தவிர.. காவ்யாவின் மனம் நனையவில்லை.. அவள் தேவராஜனின் பசீரத பிரயத்தனங்களை ஒரு அலட்சியப் பார்வையில் தவிடு பொடியாக்கி விட்டு.. கல்லையும்.. மண்ணையும் பார்ப்பதைப் போல அவனையும் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போய்விடுவாள்...

‘உனக்கெல்லாம் ஒரு கணக்கா..’ என்பதைப் போல அவள் பார்த்திருந்தால் கூட தேவராஜனால் தாங்கிக் கொண்டிருக்க முடியும்.. அவன் பார்வையிடும் அநேகப் பெண்கள்.. அவனை அப்படித்தான் பார்த்து வைத்தார்கள்..

இப்படி.. உணர்வு துடைத்த முகத்துடன் காவ்யா பார்த்து வைத்ததைப் போல யாரும் அவனைப் பார்த்ததில்லை...

என்னதான் அவள் அப்படியொரு அருமையான பார்வையை பார்த்து வைத்தாலும்.. தேவராஜன் தன் முயற்சியில் சற்றும் மனம் தளரவில்லை.. விக்கிரமாதித்த மகராஜன் நின்றதைப் போல.. தேவராஜனும் விடாமல் காவ்யாவிடம் காதல்கணைகளை வீசிக் கொண்டிருந்தான்..

காவ்யாவின் வெடுக்கென்ற பதிலால் திடுக்கிட்டுப் போகாமல்... அசையாத நெடுமரமாய்... அங்கேயே நின்று கொண்டிருந்த தேவராஜனை சுவராஸ்யமாக பார்வையிட்டாள் பாவனா...

எவ்வளவு அடித்தாலும் தாங்கிக் கொள்கிற நல்ல்ல்ல்... லவனாக.. காவ்யாவின் புறக்கணிப்புகளைத் தாங்கிக் கொண்டு புன்னகை மன்னனாக நிற்கிறவனைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்குச் சிரிப்புத்தான் வரும்...

அந்த ஐயோ பாவம் சிரிப்பை.. தூண்டில் வீசுகிற சிரிப்பாக எடுத்துக் கொள்ளும் தேவராஜன்.. எதற்கும் இருக்கட்டுமென்று காவ்யா இல்லாத தருணங்களில் பாவனாவிடமும் வழிந்து வைப்பான்.. அந்த வழிசலை ரசிக்கும் பாவனா.. அவன் அந்தப்பக்கம் போனதும்.. இந்தப் பக்கம் காவ்யாவிடம் அதைப்பற்றிச் சொல்லிச் சிரிப்பாள்..

அன்றும் அந்த சுவராஸ்ய ஐயோ பாவப் பார்வையினை அவள் பார்த்து வைக்க..

‘ஆஹா.. பட்சி என்னைப் பார்வையிடுதே...’ என்று புல்லரித்துப் போய் விட்டான் தேவராஜன்...

பதிலுக்கு வெளிப்படையாக பார்வையிட முடியாமல் காவ்யா பக்கத்திலிருக்க.. அவளிடம் காவியக் காதலனாக வேடம் போட முயன்று கொண்டிருந்த தேவராஜன்.. அவளுக்குத் தெரியாமல் பாவனாவையும் பார்த்து வைத்தான்...

‘பார்றா.. பயபுள்ள.. இந்தப் பக்கமும் ஊடுசால் போடவர்றதை...’ பாவனாவிற்குள் ரகசியச் சிரிப்பு பொங்கியது... அவள் தேவராஜனின் பக்கமாக திரும்பி அமர்ந்து கொண்டாள்...

“என்ன.. தேவா சார்.. எப்படியிருக்கீங்க...” நமட்டுச் சிரிப்புடன் நலம் விசாரித்தாள்..

‘இந்தப் புள்ள தனியா வரும்போது பேசித் தொலைக்கக் கூடாதா.. காவ்யா முன்னால்தான் பேசித் தொலைக்கனுமா...’

மனதுக்குள் பாவனாவை அர்ச்சித்தபடி.. காவ்யாவின் முகத்தையே பருகு.. பருகென்று பார்த்தபடி.. பாவனாவின் முகத்தைப் பாறாததைப் போல பாவனை காட்டிய தேவராஜன்..

"ம்ம்ம்.." என்று முணுமுணுத்தான்..

'பாருடா.. இப்பத்தான் எக்குத்தப்பா பாத்து வைச்சான்.. காவ்யா நிமிர்ந்து பாத்தவுடனே பயபுள்ள என்னமா வேஷம் கட்டறான்...'

பாவனாவுக்கு அவனை சும்மா விடக்கூடாது என்று தோன்றிவிட்டது...

"ம்ம்ம்ன்னா என்ன அர்த்தம்..? எனக்குப் புரியலையே.. ஏன் ஏகாம்பரம் சார்.. உங்களுக்கு ஏதாச்சும் புரியுதா..?" என்று விசாரித்தாள்...

"ஒரு மண்ணும் புரியலைம்மா..." என்று கம்யூட்டரை முறைத்தபடியே பதில் சொன்னார் ஏகாம்பரம்...

அவருக்கு அவர் கவலை.. கையிலே கணக்குப் போடுவதில் கில்லாடியான அவர் முன்னாலே... கம்யூட்டரை நிறுத்தி வைத்து அதில் கணக்குப் போடச் சொன்னால்.. பாவம் அந்த மனிதர்தான் என்ன பண்ணுவார்.. பணக்கணக்கை மனக்கணக்கில் சொல்லுவதில் வல்லவரான அருடைய திறமையை கம்யூட்டர் பதம் பார்த்து தவிடு பொடியாக்கிக் கொண்டிருந்ததில்.. அவர் எதைப் பேசினாலும் எரிந்து விழுந்துதான் பேசி வைப்பார்..

தேவராஜனுக்கு சோதனையாக இருந்தது.. பாவனா காவ்யாவிடம் விசாரணைக் கமிசன் நடத்தியிருந்தால் கூட.. அவன் தாங்கிக் கொண்டிருப்பான்.. ஏகாம்பரத்திடம் விசாரணை கமிசன் போட்டதைத்தான் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

'இப்படிப் போட்டுத் தாக்கறாளே...' அவன் பற்களை நறநறத்தான்...

"கேட்டிங்களா தேவா சார்.. அவருக்கும் புரியலையாம்.." என்றாள் பாவனா...

"யாருக்குப் புரிஞ்சாலும்... புரியாட்டாலும்... காவ்யாவுக்கு புரியுமே.. எனக்கு அதுவே போதும்...", என்றான் தேவராஜன்..

"என்னடி காவ்யா.. இவர் இப்படிச் சொல்றாரு.. உனக்குப் புரியுதா..?" காவ்யாவிடம் கேட்டாள் பாவனா..

'ஆஹா.. இவ காவ்யாவை பேச்சில இழுத்து விட்டுட்டாளே...' மகிழ்ந்து போன தேவராஜன்.. காவ்யாவின் பதிலை அறிய ஆவல் ததும்பும் முகத்துடன் அவள் முகத்தையே பார்த்தான்...

"சகிக்கலை..." வெடுவெடுத்தாள் காவ்யா...

தேவராஜனின் முகம் விழுந்து விட்டது.. அதை ஓரக்கண்ணால் பாவனா ரசித்துக் கொண்டிருந்ததை

உணர்ந்தவனுக்கு பூமி இரண்டாகப் பிளந்து.. ‘வா தேவராஜா..’ என்று அவனை அழைத்துக் கொள்ளக் கூடாதா என்ற ஏக்கம் மேலிட்டது...

“என்னடி இப்படிச் சொல்ற..? இவரென்ன மியுஸிக்கா போட்டுட்டார்..? ம்ம்ம்னு முணுமுணுத்துத்தான வைத்தார்... அதைப் போய் சகிக்கலைன்னா எப்புடி காவ்யா..?” பாவனா விடாமல் வழக்கு வைத்தாள்...

‘விட்டுத் தொலைக்க மாட்டேங்கிறாளே...’ தேவராஜனின் மனம் சல்லடையானது...

“காலங்கார்த்தால ரம்பம் போடாதேன்னு உன்கிட்ட எத்தனைவாட்டி சொன்னாலும் நீ திருந்தவே மாட்டியா..? நீதான் வேலை செய்யறதில்ல.. வெட்டியாய் பொழுதப் போக்குற.. உன்னப் போல வெட்டிப் பொழைப்பு பொழைக்க என்னால முடியாதுன்னு சொன்னாக் கேட்டுக்கவே மாட்டியா... நான் வேலை செய்யனும்.. வேலயக் கெடுக்காம உன் சோலிக்கழுதயப் பாக்கப் பாரு..” என்று திட்டித் தீர்த்த காவ்யா.. பாவனாவின் முகத்தைப் பார்க்காமல் தேவராஜன் முகத்தையே பார்த்தபடி திட்டித்தீர்த்ததில் தேவராஜன் பலத்த பாதிப்பிற்கு ஆளானான்...

பேச்சுவாக்கில் ஒருமுறை கூட அவள் பாவனாவை ‘டீ’ போட்டு அழைக்கவில்லை என்ற உண்மையையும் அவனிடமிருந்த கொஞ்ச நஞ்ச அறிவு.. அறிவுறுத்தி

வைத்ததில் அவனின் கருத்த முகம் மேலும் கருத்து விட்டது..

பாவனா சிரிப்பை அடக்கிக் கொண்டதில் தேவராஜனின் பாதிப்பு அதிகமானது.. ஆனாலும் அவன் நகராமல்.. ஆணியடித்ததைப் போல அங்கேயே நின்றான்..

'சொரணை கெட்ட ஜென்மம்..' காவ்யா முகத்தை திருப்பிக் கொண்டாள்...

'இன்னும் இவன் எத்தனை அடிகளத்தான் தாங்குவான்..?' பாவனா மனக்கணக்கைப் போட்டாள்...

இது இரண்டையும் செய்யாத ஏகாம்பரம்.. கம்யூட்டரை வெறுப்புடன் பார்த்து விட்டு காவ்யாவின் பக்கம் திரும்பினார்...

"இந்தக் கழுதைய யாரும்மா கண்டு புடிச்சது.." என்று விசாரித்தார்..

"எனக்குத் தெரியாது..." காவ்யா தலையைப் பிடித்தாள்..

அவளுக்கு தலைவலி வந்து விட்டிருந்தது.. விண்விண்ணென்று தெறித்த தலையை விரல்களால் அழுத்தி விட்டபடி.. முகத்தைச் சுளித்தாள்...

“என்னடா.. தேவாசார் வந்து இம்புட்டு நேரமாகுது.. நம்ம காவ்யாவுக்கு இன்னும் தலைவலி வரலியேன்னு இப்பத்தாண்டி நினைச்சேன்.. நான் நினைச்சு முடிக்கிறதுக்குள்ள ‘டாண்’ணு உனக்கு தலைவலி வந்திருச்சு...”, மெச்சிப் போனாள் பாவனா...

“உன்னை..” பல்லைக் கடித்தாள் காவ்யா...

“என் வேதனையைப் பார்த்தா.. உனக்குச் சிரிப்பாணி வருதா..?” தேவராஜனை முறைத்தபடி பாவனாவிடம் கேட்டாள்...

“ஐயோடா.. அதெல்லாம் இல்லைடி... எல்லாம் ஒரு கரிசனம்தான்.. வேற ஒன்னுமேயில்ல.. நம்புடி..” என்று காவ்யாவிடம் சொல்லிய பாவனா ஏகாம்பரத்தின் பக்கமாக திரும்பி...

“காவ்யாவுக்கு தலைவலி வந்திருச்சு ஏகாம்பரம் சார்.. அதனால கம்யூட்டர் கழுதய கண்டு புடிச்சது யாருன்னு நம்ம தேவா சார்கிட்டக் கேளுங்க.. இவரு பில் கேட்ஸோட வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரராத்தான் பொறக்கலை.. மத்தபடி.. கம்யூட்டர் பத்தியெல்லாம்.. அக்கு வேறு ஆணிவேறா அலசித் தள்ளிப் புடுவாரில்ல..” என்று சொல்லி வைத்தாள்...

‘கெடுத்தாளே.. காரியத்த...’ தேவராஜன் நடுங்கிப் போனான்..

கண்மாக்கரையில் சீட்டுக்கச்சேரி நடத்துவதைப் பற்றித்தான் அவனுக்குத் தெரியும்.. கம்யூட்டரைப் பற்றி அவனுக்கென்ன தெரியும்.. அதிலும் அந்த பில்கேட்ஸ் என்பவன் பூனைகளை விற்கிறவனா.. இல்லை யானைகளை விற்கிறவனா என்று கூட அவனுக்குச் சுத்தமாகத் தெரியாது.. இந்த லட்சணத்தில் அவன் பில்கேட்ஸின் வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரனைப் போல என்று பாவனா எடுத்து விட்டால்.. பாவம் பய புள்ள.. என்னதான் செய்வான்..?

ஏகாம்பரம் அவனை ஏறிட்டுப் பார்த்தார்.. தேவராஜன் கதி கலங்கிப் போனான்.. அவர் வாயைத்திறக்க... இவன் அரண்டு போய் வேறு திக்கில் பார்த்து வைக்க.. என்று அங்கே களைகட்டியதில் பாவனா உற்சாகமாகிப் போனாள்...

“ம்ஹீம்.. இவருகிட்ட கம்யூட்டரப் பத்திக் கேக்கிறதுக்குப் பதிலா நான் கழுத மேய்க்கப் போகலாம்...” என்று சொல்லி விட்டார் ஏகாம்பரம்..

அவ்வளவுதான்.. பாவனா விழுந்து.. விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்.. தலைவலியுடன் போராடிக் கொண்டிருந்த

காவ்யாவிற்கும் சிரிப்பு வந்து விட்டது.. அதைத் தாள மாட்டாத தேவராஜனுக்கு வருத்தம் வந்து விட்டது...

“என்னம்மா இம்புட்டுச் சிரிப்பு சிரிக்கறிங்க.. நம்ம பவளக்கொடி நாடகத்தப் பாத்து.. நான்கூட இம்புட்டுச் சிரிப்பு சிரிச்சதில்லம்மா..” என்றபடி காபித்தம்ளர்களோடு அங்கே பிரசன்னமானார் கந்தசாமி...

“இதைப் பாருடா.. நம்ம காவ்யாவுக்கு தலைவலி வந்தவுடனே.. கரெக்டா காபி வந்து சேர்ந்திருது...” என்று ஆச்சரியப்பட்டுப் போன பாவனா...

“எப்புடி கந்தசாமி..?” என்று அவரிடம் விசாரித்தாள்..

“அது வேற ஒன்னுமில்லம்மா... நம்ம பழைய முதலாளியோட மகன் வந்து நின்னாலே... நம்ம காவ்யாம்மாவுக்கு தலைவலி வந்து நின்னுரும்... அதான்... சின்னய்யா கடைக்குள்ள நுழையறப்பவே நான் காபிக் கடைக்குள்ள நுழைஞ்சிட்டேன்...” என்று விளக்கம் சொன்ன கந்தசாமி.. காவ்யாவை அனுதாபத்துடன் பார்த்தபடி..

“தலைவலி மாத்திரையையும் வாங்கிட்டு வந்திருக்கேன்ம்மா...” என்று எடுத்துக் கொடுத்தார்...

‘ரொம்ப முக்கியம்.. இப்ப இத இவ கேட்டாளா..?’ கடுப்பாகிப் போனான் தேவராஜன்...

“நல்ல வேலை செஞ்சீங்க கந்தசாமி...” பாவனா பாராட்டிவிட்டு..

“வாங்கிக்கடி காவ்யா..” என்று தோழியை ஊக்குவித்தாள்..

காவ்யாவும் தேவராஜனை முறைத்தபடி தலைவலி மாத்திரையை வாங்கிக் கொண்டதில் பாவனாவுக்கு மகிழ்ச்சி... கந்தசாமிக்கோ நெகிழ்ச்சி...

“பாவம்.. இந்தம்மாவுக்கு தலைவலி வந்தா என்ன பாடுபடுவாங்கன்னு எனக்குத்தானே தெரியும்..?” தேவராஜனிடம் அனுதாபத்துடன் சொன்னார் கந்தசாமி..

‘இப்ப இத நான் கேட்டேனா..?’

கேட்காமலே தலைவலி மாத்திரையையும்.. தகவலையும் அள்ளித்தரும் கந்தசாமியை வெட்டவா.. குத்தவா என்பதைப் போலப் பார்த்து வைத்தான் தேவராஜன்...

“என்ன... தேவாசார்... உங்களப் பத்தியும்... உங்க வரவப் பத்தியும் கந்தசாமி தெளிவா கணிச்சு வைச்சிருக்காரே...” பாவனா தேவராஜனிடம் அபிப்ராயம் கேட்டாள்...

“ஹி.. ஹி... பெரியவருக்கு கொஞ்சம் ஜாஸ்திதான்..” என்றான் தேவராஜன்...

“எது ஜாஸ்தின்னு சொல்றீங்க..? கொழுப்பா..?” விளக்கம் கேட்டாள் பாவனா..

கந்தசாமியின் முகம் சுருங்கிவிட்டது.. அவர் மீசையின் மேல் கையைப் போட்டு தேவராஜனை யோசனையுடன் பார்த்ததில் தேவராஜன் கதிகலங்கிப் போனான்...

‘ஆத்தாடி.. கிழவன் பார்வையே சரியில்லையே.. இப்ப இவனுக்கு நான் முதலாளியும் இல்ல.. முதலாளியா இருந்தாலே இந்த ஆளு.. வெளியில வா.. உன்ன அங்கே பாத்துக்கிறேன்னு சொல்லி வைப்பான்.. இப்ப அதுவும் இல்லாம போச்சு.. கடைக்குள்ளயே பாத்துப் புடுவானே.. இந்தப் பாவனா இவனத் தூண்டிவிட்டு திருவிழாக் கொண்டாட வைச்சிருவா போல இருக்கே.. நாள பின்னே இந்தக் கடைக்கு நான் வந்து போகனுமுன்னா.. இந்தக் கிழவனின் தயவு தேவப்படுமே.. இவன்தான வாசலக் காக்கிறவன்...’

வாயில் காப்போரை அனுசரித்துப் போக வேண்டிய அவசியத்துக்கு ஆளான தேவராஜன்.. அவசரமாக பாவனாவின் கூற்றை மறுத்தான்...

“சேச்சே... நான் அப்படிச் சொல்லுவேனா..? விவரம் ஜாஸ்தின்னு சொன்னேன்...”

# 25

## ஊரடங்கும் நேரத்திலே... உனைப் பார்க்க ஆசைகொண்டேன்..

“அடிச்சாண்டி அந்தர் பல்டி...” காவ்யாவின் காதருகே வியந்தாள் பாவனா..

காவ்யா எதையும் கண்டு கொள்ளாதவளாக தலைவலி மாத்திரையை விழுங்கிக் கொண்டிருந்தாள்.. இளங்கோ அவசரமாக அங்கே வந்தான்...

“இவ்வளவு வேகமா எந்த டிரெயினைப் பிடிக்க ஓடி வர்றீங்க இளங்கோ..? சேல்ஸ் செக்சனில பிரச்னையா..?” என்று கேட்டாள் பாவனா...

“அதெல்லாம் இல்ல பாவனா.. முதலாளி வந்திருக்காரு..” பரபரத்தான் இளங்கோ...

“என்னது.. முதலாளி வந்திருக்காரா..?”

கந்தசாமி வாசல்பக்கமாக ஓடினார்.. ஏகாம்பரம் கம்யூட்டரை முறைப்பதை விட்டுவிட்டு.. காதலியைப் போல கட்டியணைத்து வேலை செய்ய ஆரம்பித்தார்..

பாவனா ரகளையை மறந்தவளாக ஃபைல்களை அவசரமாக இழுத்து அவள் முன்னால் பரப்பிக் கொண்டாள்..

‘இந்த அரிபரியெல்லாம் எங்கப்பன்கிட்ட கடையிருந்தப்ப இல்லயே...’

தேவராஜனுக்கு பற்றிக் கொண்டு வந்தது... அவன் முதலாளியின் மகனாக.. சின்ன முதலாளியாக இருந்திருக்கிறான்.. அவன் வந்து போகும் போதெல்லாம் அந்தக் கடையில் வேலை பார்ப்பவர்கள் இயல்பாகத்தான் இருப்பார்கள்.. இதுபோன்ற பரபரப்பை.. இதற்கு முன் அவன் கண்டதில்லை...

“காவ்யா.. உங்களை முதலாளி வரச்சொல்றாரு...”

“நீங்க சொல்றதுக்கு முன்னாலேயே அவ கிளம்பிட்டா இளங்கோ... ம்ஹீம்.. இனி முதலாளி சென்னைப் பக்கம் போகிற வரைக்கும் இவ சீட் அங்கேதான் இருக்கும்...” பெருமூச்சு விட்டாள் பாவனா...

தேவராஜனுக்கு பக்கென்று ஆகிவிட்டது.. இதை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை..

‘காவ்யா எதுக்காக அந்தப் பயலோட சீட்டுக்குப் பக்கத்து சீட்டில உக்காரனும்..’ அவன் ஏகத்துக்கும் கவலைப்பட்டான்...

அவன் கவலையை கண்டு கொள்ளாமல் காவ்யா விரைந்து விட்டாள்.. அவள்தான் அவனையே கண்டு கொள்ள மாட்டாளே.. அவன் கவலையையா கண்டு கொள்வாள்..?

எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்று பரிதவித்தான் தேவராஜன்.. யாரும் அவனுடைய இருப்பைக் கவனிப்பதாகத் தெரியவில்லை...

"இந்தக் கணக்கை சரிபார்த்தீங்களா ஏகாம்பரம் சார்..?" என்று கேட்டபடி நிமிர்ந்து பார்த்த பாவனாதான் அவனுடைய இருப்பைக் கவனித்து விட்டு புருவங்களை உயர்த்தினாள்..

"தேவா சார்.. இன்னுமா நீங்க போகலை..?"

இந்தக் கேள்வியைக் கேட்ட பின்பு எந்த ரோசமுள்ள மனிதனும் அந்த இடத்தில் நிற்காமல் உடனடியாக இடத்தைக் காலி செய்திருப்பான்...

தேவராஜன் அப்படியில்லை.. அவன் காரியவாதி.. ரோசத்தைப் பார்த்தால்.. காவ்யா எதற்காக முதலாளியின் சீட்டுக்கு பக்கத்துசீட்டில் இடம் மாறினாள் என்று எப்படி அவன் தெரிந்து கொள்வான்..?

அதனால் அவனுக்கு உதவாத அந்த ரோசத்தை தள்ளி வைத்துவிட்டு பாவனாவிடம் வழிந்தான்...

“ஹி.. ஹி.. உங்களைப் பாத்தா போகத் தோணலைங்க...”

“இதைப் பார்றா.. இம்புட்டு நேரமும் தோணாதது.. இப்பத் தோணியிருக்கா..? ஏன்..? இம்புட்டு நேரமும் காவ்யா பக்கத்தில இருந்தாளே.. அதனாலயா..?”

“என்னங்க இப்படிச் சொல்லிட்டிங்க.. நான் இந்தக் கடைக்கு வர்றதே உங்களைப் பார்க்கனும்னுதாங்க..”

“அப்படியா..? இத அப்படியே காவ்யா காதில போட்டு வைக்கவா..?”

“ஐயையோ...”

“என்னாச்சு..? கட்டெறும்பு கடிச்சிருச்சா..?”

“அதெல்லாம் எதுக்குங்க.. இதெல்லாம் நம்மளுக்குள்ள இருக்கிற ரகசியம்ங்க...”

“ரகசியத்துக்கும் எனக்கும் ரொம்பத்துரமாச்சே தேவா சார்...”

“அது கிடக்குது கழுதை.. விட்டுத் தள்ளுங்க.. ஆமா.. காவ்யா எதுக்காக சீட் மாறினாங்க..?”

“அதானே பாத்தேன்.. சோழியன் குடுமி சும்மா ஆடாதே... உங்களுக்கு காவ்யா எதுக்காக இடம் மாறினான்னு தெரியனும்.. அதுக்காகத்தானே இந்த பிட்டு..?”

“அப்படியெல்லாம் இல்லீங்க..”

“இதை நான் நம்பனுமாக்கும்..? போனாப் போகுது.. பிழைச்சுப் போங்க.. காவ்யா சீட்மாறலை.. முதலாளிதான் சீட் மாத்தினார்..”

விவரம் அறியும் மும்முரத்தில் தேவராஜன் நடப்பு நிலைமையை மறந்தவனாக...

“எங்கப்பா எதுக்காக இப்படிச் செஞ்சாரு..?” என்று கேட்டு வைத்துவிட்டான்...

பாவனா ஒரு மார்க்கமாக அவனைப் பார்க்க.. ஏகாம்பரமோ...

“ஐயோ.. பாவம்..” என்றார்..

‘இந்த ஆளு எதுக்காக என்னைப் பாத்து பாவப்படறான்..’ தேவராஜன் புரியாமல் பாவனாவைப் பார்த்தான்.. அவளோ...

“உங்கப்பா இப்படிச் செய்யலை தேவா சார்.. முதலாளிதான் இப்படி மாத்தியிருக்காரு.. ஐ மீன்.. இப்ப.. இந்தக் கடையோட முதலாளியாய் இருக்கிற அர்ஜீன் சார்தான் இந்த மாற்றத்தைப் பண்ணியிருக்காரு...”, என்று அனுதாபத்துடன் விளக்கினாள்...

தேவராஜனுக்கு முகத்தை எங்கே போய் வைத்துக் கொள்வது என்று தெரியவில்லை.. இப்படியா மறதி வரும் என்று தன்னைத்தானே அவன் நொந்து கொண்டான்...

‘இந்தப் பாவனா சும்மாவே கிண்டல் பண்ணிச் சிரிச்சு வைப்பா.. இப்ப இத வேற சொல்லி வைச்சிருக்கேனா.. இன்னும் எத்தனை காலத்துக்கு இதை வைச்சே ஓட்டப் போறாளோ.. தெரியலையே...’

தேவராஜனின் முகமாற்றத்தைக் கவனித்தபடி தனக்குள் சிரித்துக் கொண்ட பாவனாவை விட்டுத் தொலைவில் ஓடிவிட அவன் மனம் துடித்ததுதான்.. ஆனால் அப்படி அவன் ஓடிவிட்டால்.. காவ்யாவைப் பற்றிய புதுவிவரங்களை அவன் அறிவதெப்படி..?

அதனால் எதுவும் நிகழாததைப் போல முகத்தை வைத்துக் கொண்டு

“ஏன் மாத்தினாரு..?” என்று கேட்டு வைத்தான்..

“ஏன்னா.. இப்ப காவ்யாதான அவருக்கு செக்ரட்டரி.. அதனால அவ சீட்.. அவரோட சீட்டுக்கு பக்கத்தில இருக்கிறதுதான் பெட்டர்ன்னு அவர் ஃபீல் பண்றார்...” என்றாள் பாவனா..

‘பட்டரா..?’ என்று கேட்கத்தான் வாயெடுத்தான் தேவராஜன்.. அவன் அதிகபட்ச படிப்பாக ஐந்தாம்

வகுப்புவரை படித்தவன்.. கான்வெண்டில் படித்த துரியோதனனுக்கு.. இப்படிப்பட்ட மகன் வாய்த்து விட்டான்.. பள்ளிக்கூடம் அனுப்பி வைத்தால்.. கையைக் கிழித்துக் கொள்வேன் என்று துரியோதனை மிரட்டி வைத்திருந்த வீராதி வீரன் அவன்.. அதனால் மகனைப் படிக்க வைக்க முடியாத குறையை மகளைப் படிக்க வைத்து நிவர்த்தி செய்து கொண்டார் துரியோதனன்...

அப்படிப்பட்ட தேவராஜனிடம் பெட்டர் என்று சொன்னால் அவன் என்ன நினைப்பான்..? அது என்னவோ திண்பண்டம் போல என்றுதானே நினைத்து வைப்பான்..?

நல்ல வேளையாக.. அவன் நினைத்து வைத்ததை பாவனாவிடம் கேட்டு அவன் நோகடித்து விடவில்லை.. மாறாக எல்லாம் தெரிந்தவனைப் போல...

"ஏன் அப்படி நினைக்கிறாரு..." என்று தான் கேட்டு வைத்தான்...

"இன்னைக்கு என்ன.. இத்தனை 'ஏன்'களைக் கேட்கறிங்க தேவாசார்..? அர்ஜீன் சார் வெளிநாட்டில் படிச்சவர்.. சென்னையில் பிஸினெஸ் பண்றவர்.. அவருக்கு மதுரையைப் பற்றி என்ன தெரியும்..? இந்தக் கடையைப் பத்தித்தான் என்ன தெரியும்..? ஸோ.. இரண்டையும் தெரிந்த காவ்யாவை செக்ரட்டரியாக்கி அவளிடம் பவரைக் கொடுத்திருக்கார்..."

“பவரா..?”

“ஊம்.. பவர்தான்.. அர்ஜீன்சார் இல்லாத நேரங்களில் கடையோட பொறுப்பு இப்ப காவ்யா கைக்கு வந்திருச்சு...”

தேவராஜனுக்கு இது புதிய செய்தி.. ஏற்கனெவே அவன் கடையின் தற்போதய நிலவரங்களைப் பற்றிய செய்திகளைச் சேகரித்துத்தான் வைத்திருந்தான்... அந்தச் செய்திகளே அவனுக்கு தலைவலியை வர வைத்திருந்தன.. இப்போது கேட்ட இந்தச் செய்தி அவனுக்கு நெஞ்சுவலியையே வரவைத்து விட்டது..

‘அவன் இல்லாதப்ப கடையோட பொறுப்பு காவ்யா கையிலயா..? இதுக்கு என்ன அர்த்தம்...?’

அவனுக்குத் தெரிந்த அர்த்தம் ஒன்றே ஒன்றுதான்.. அது காவ்யாவுக்கு அர்ஜீன் ரூட் விடுகிறான் என்பது...

‘பயபுள்ள... இதுக்குன்னே மதுரைக்கு வந்திருக்காண்டா...’

அவன் கைகளைப் பிசைந்தான்... அதை சுவராஸ்யமாக வேடிக்கை பார்த்தாள் பாவனா... அவளது பார்வையை உணர்ந்தவன் கைகளைப் பிசைவதை நிறுத்திவிட்டு..

“ஹி... ஹி...” என்று வழிந்தான்..

“இந்தச் சிரிப்பை காவ்யா இருக்கிறப்ப எங்கே ஒளித்து வைத்திருந்தீங்க தேவா சார்..?”

“ஹிஹி.. ஹி..ஹி...”

“போதும் சார்.. ஆபிஸைக் கூட்டித் துடைக்கிற சிந்தாமணி இப்பத்தான் வேலையை முடிச்சிட்டு... வீட்டைப் பார்த்து போயிருக்கா.. அவளத் திரும்பி வர வைச்சிராதீங்க...”

“ஏங்க அப்படிச் சொல்றீங்க...”

“நீங்க இந்த ஏங்கு ஏங்கி வழிஞ்சுவைச்சா.. ஆபிஸே ஈரமாகிறாதா..? அதைக் கழுவித்துடைக்க அவ வந்துதானே ஆகனும்..?”

“நீங்க ரொம்பக் குறும்பு...”

“ம்ஹீம்.. இதெல்லாம் லேடிஸ் சொல்ல வேண்டிய டயலாக்.. ஆமாம்.. எதுக்காக இப்ப நம்பியாரைப் போலக் கையைப் பிசைஞ்சீங்க..?”

“சும்மாதான்...”

“சும்மா இதையெல்லாம் பண்ணாம.. உங்க வீட்டுக்குப் போயி சமத்துப் பிள்ளையா.. உங்க அம்மாவுக்கு சப்பாத்தி போட மாவைப் பிசைஞ்சு தரலாமே.. என்ன ஏகாம்பரம் சார்.. நான் சொன்ன ஐடியா எப்படியிருக்கு..?”

“சூப்பரா இருக்கு பாவனா..”

அவர்கள் இருவரும் அவனைப் பார்த்துக் கேலி செய்வதை தேவராஜன் உணர்ந்தான்.. இந்தக் காவ்யாக் கழுதையை மடக்க என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கு என்ற நினைவுடன் பல்லைக் கடித்தவன் திகைத்தான்...

அவனுக்கு எதிரே அமர்ந்து அவ்வளவு நேரமும் அவனைக் கேலி பேசி சிரித்துக் கொண்டிருந்த பாவனாவும்.. ஏகாம்பரமும்.. மிக மரியாதையான முகபாவனையுடன் எழுந்து நின்றார்கள்...

‘என்னடா இது.. இம்புட்டு நேரமும் கூட்டுக் களவாணிக மாதிரி கூட்டுப் போட்டுக்கிட்டு என் காலை வாரிச்சுக.. இப்ப என்னடான்னா இம்புட்டு மரியாதையா எழுந்திருச்சு நிக்குதுக.. ஒருவேள மனசு திருந்திருச்சுகளோ.. என்னதான் இருந்தாலும்... நமக்கு சம்பளம் கொடுத்த முதலாளியின் மகன்னு நினைச்சிருச்சுகளோ...’

அவன் மெய்சிலிர்த்து விட்டான்..

“எனக்கெதுக்கு இம்புட்டு மரியாதை பாவனா... பரவாயில்ல.. நீங்க கேலி பேசினத நான் மனசில வைச்சுக்க மாட்டேன்.. உக்காருங்க.. உக்காருங்க..” என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தபோது...

“ஹீ ஆர் யு..?” என்ற குரல் அவன் முதுகுக்குப் பின்னால் கேட்டது..

திடிரென்று கேட்ட ஆங்கில வார்த்தையில் அவன் திடுக்கிட்டு விட்டான்.. பாவனாவின் முன்னால் பதிலுக்கு ஏதாவது ஒரு ஆங்கில வார்த்தையைச் சொல்லியே ஆக வேண்டும் என்ற இக்கட்டில் மாட்டிக் கொண்டவன்.. அவனுக்குத் தெரிந்த ஒரே ஆங்கில வாக்கியமான..

“ஹீ இஸ் திஸ் பிளாக்ஷீப்...?” என்று பதிலுக்குக் கேட்டபடி பாவனாவை பெருமையுடன் பார்த்தான்...

பாவனா தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக முகத்தைச் சுளித்தாள்..

“முதல்ல திரும்பிப் பாருங்க தேவா சார்...”

அவளின் குரலில் இருந்த சலிப்பை உணர்ந்தவன்..

‘ஏன் இப்படிச் சொல்றா..?’ என்று எண்ணமிட்டபடி திரும்பிப் பார்த்தான்..

அங்கே மிடுக்காக.. கண்களில் கண்டிப்புடன் அர்ஜீன் நின்றுகொண்டிருந்தான்...

“யார் நீங்கன்னு கேட்டேன்...” அவன் குரல் அழுத்தமாக ஒலித்தது...

‘ஓ.. இவன் அதைத்தான் கேட்டானா..?’ தேவராஜன் அவனை ஏற இறங்க பார்த்துவிட்டு...

“ஏன்..? நான் யாருன்னு தெரிஞ்சா.. இந்தக் கடையை என் பெயருக்கு எழுதிக் கொடுக்கப் போறயா..?” என்று எரிச்சலுடன் கேட்டான்...

“ஸ்ஸ்.. தேவா சார்.. இவர்தான் கடையோட முதலாளி..” பாவனா இப்போது வெளிப்படையாகவே தலையில் அடித்துக் கொண்டாள்...

‘அப்போ நான் யாரு...’ என்று எண்ணமிட்டபடி.. நீதானா அந்த முதலாளி என்ற ஒர் கோபப்பார்வையை பார்த்தான் தேவராஜன்...

“பாவனா.. யார் இவர்..?” அர்ஜீன் முகம் சுளித்தான்...

“துரியோதனன் சாரோட சன் சார்..” பாவனா அவசரமாக பதில் சொன்னாள்...

‘என்னமோ.. இவன் தான் முதலாளிங்கிறாப்புல தோரணை காட்டினானே.. இப்பத் தெரிஞ்சுக்கட்டும்.. நான் யாருன்னு.. இன்னைக்கு இவன் இந்தக் கடைக்கு முதலாளின்னா.. நான் நேத்தைய முதலாளி.. இவனுக்கே இவ்வளவு தெனாவெட்டு இருந்தா.. எனக்கு எவ்வளவு இருக்கும்...’

கெத்தாக பார்வையிட்டவனை புருவங்கள் சுருங்கப் பார்த்த அர்ஜீன் அடுத்து கேட்ட கேள்வியில் தேவராஜனுக்கு தூக்கிவாரிப் போட்டது...

“இவருக்கு இங்கேயென்ன வேலை...?”

ஒரே கேள்விதான்.. அந்த ஒரு கேள்வியில் பாவானவின் முன்னால் தனது பிம்பம் தரைமட்டமாகி சரிவதை உணர்ந்தான் தேவராஜன்...

# 26

## *என் நிழல் தேடி நீவரவே...*
## *ஏக்கத்துடன் ஆசைகொண்டேன்..*

**அ**ர்ஜீன் கோபத்துடன் இருந்தான்.. அவனுக்கு வெளிநாட்டில் வேலை இருந்தது.. அதை முடித்து விட்டு முதல்நாள்தான் அவன் சென்னைக்குத் திரும்பினான்.. வந்தவுடனே பார்க்க வேண்டிய அவசர வேலைகளை பார்த்து வைத்து விட்டு.. உடனே பிளைட் பிடித்து மதுரைக்கு வந்து இறங்கியிருந்தான்...

யாருக்காக...? காவ்யாவுக்காக...!

இங்கே வந்து பார்த்தால்.. அவன் வருவதைக் கூடக் கவனிக்காமல் அவள் யாரோ ஒருவனுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறாள் என்றால் அவனுக்கு எப்படியிருக்கும்..?

'யார் அவன்..?'

அர்ஜீன் பல்லைக் கடித்தபடி இளங்கோவை அழைத்து.. அவன் வந்திருக்கும் தகவலை காவ்யாவிடம் சொல்லச் சொல்லி அனுப்பி வைத்தான்.. அடுத்த சில நிமிடங்களிலேயே அவளும் வந்து விட்டாள்.. வந்தவளின் முகத்தில் வேலைக்கான பரபரப்பு மட்டுமே இருந்தது.. அவன் வந்திருக்கிறானே என்ற ஓர் மலர்ச்சி இல்லை...

'இவளுக்கு நான் இருந்தாலும்.. இல்லாவிட்டாலும் ஒன்றுதானா..?'

அர்ஜீனின் மனதில் அவளைக் காணப் போகும் உற்சாகம் இருந்தது.. அந்த உற்சாகம் அவளுக்கு இல்லையா..?

அவன் ஏமாற்றமாக உணர்ந்தான்.. அவன் மனதில் ஓர்விதமான வெறுமை பரவியது.. அவனுக்குள் பொசுபொசுவென்ற சொல்லத்தெரியாத கோபம் மூண்டது..

"உன் சீட்டில் இல்லாம எங்கே போன..?" அதட்டினான்.

அவன் இல்லாத நாள்களின் வரவு செலவுக்கான ஸ்டேட் மென்டை அடுக்கிக் கொண்டிருந்த காவ்யா வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.. அவன் எதற்காக கோபப்படுகிறான் என்று அவளுக்குப் புரியவில்லை...

“என் சீட்டில்தான் இருந்தேன் சார்...”

“பொய் சொல்லாதே.. நான் வரும்போது நீ உன் சீட்டில் இல்லை... இளங்கோ வந்து சொல்லவும்தான் கிளம்பிவந்த...”

அவன் பேசிய வார்த்தைகளில் காவ்யாவுக்கு கோபம் வந்துவிட்டது.. அவன் வந்திருக்கிறான் என்பதில் மனதில் ஓரமாக துளிர்த்திருந்த சந்தோசம் காணாமல் போனது...

“பொய் சொல்றேனா..? நானா..? என்ன தேவைக்கு நான் உங்ககிட்ட பொய் சொல்லனும்..? அப்படியே தேவையிருந்தாலும் நான் பொய் சொல்ல மாட்டேன்.. எனக்கு அந்தப் பழக்கமில்ல...” என்று படபடத்தாள்..

“இதுதானே உன்சீட்..? நான் வரும் போது இந்தச் சீட்டில் நீ உட்கார்ந்திருந்தயா...?” அவன் குற்றவாளியை விசாரிப்பதைப் போல உறுமினான்...

“நீங்க இருக்கும் போதுதான் இது என் சீட்.. நீங்க ஊரில் இல்லாதப்ப.. நான் வழக்கம்போல பாவனாவின் பக்கத்திலே உட்கார்ந்து வேலை செய்ய நீங்கதான் பெர்மிசன் கொடுத்திருக்கீங்க.. மறந்து போய் பேச வேணாம்...”

“நான்தான் வந்துட்டேனில்ல..?”

“எனக்கு அது தெரியுமா..? இன்னைக்கு நீங்க வரப் போறீங்கன்னு வெத்தலயில மையைத் தடவி ஜோஸியமா பாத்து வைச்சிருந்தேன்..? திடீர்ன்னு வருவீங்க.. இரண்டு நாளைக்கு கடையை ஆட்டி வைப்பீங்க.. அப்புறமா

காணாமல் போயிருவீங்க.. நீங்க எப்ப வருவீங்க... எப்ப போவீங்கன்னு யாருக்குத் தெரியும்..?"

"ஓ.. அது தெரியாததினாலதான் காலையிலேயே வேலை செய்யாம எவன் கூடவோ அரட்டை அடிச்சுக்கிட்டு இருக்கியா...?"

"என்னது..? எவன்கூடவோ அரட்டை அடிச்சுக்கிட்டு இருக்கேனா..? வார்த்தையை அளந்து பேசுங்க சார்... வாயிருக்குங்கிறதுக்காக.. வார்த்தைகளைக் கொட்டக் கூடாது..."

"யார் அவன்..?"

"எவன்..?"

"உன் கூடப் பேசிக்கிட்டு இருந்தவன்..."

"எவன்கூடவும் நான் பேசலை..."

"பொய் சொல்லாதே.."

"திரும்பவும் இதே வார்த்தைகளச் சொல்லாதீங்க... நீங்க உங்க மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..? முதலாளின்னா என்ன வேணும்னாலும் பேசிக்கலாமா..?"

காவ்யாவின் முகம் சிவந்துவிட்டது.. அவள் கோபத்தில் மூச்சிரைக்க நின்று கொண்டிருக்க.. அர்ஜீன் இறுகின முகத்துடன் அறையை விட்டு வெளியே போனான்..

கடையின் பின் பகுதியிலிருந்த அலுவலகப் பகுதிக்குப் போனவன் தேவராஜனின் முதுகுக்குப் பின்னால்

நின்று யாரென்று ஆங்கிலத்தில் கேட்டான்.. அவன் துரியோதனனின் மகனென்று தெரிந்தவுடன் அர்ஜீனின் மனதிலிருந்த கோபம் இன்னும் அதிகமாகியது...

"இவருக்கு இங்கேயென்ன வேலை..?"

அவன் முகச்சுளிப்பிற்கு பாவனாவிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை.. ஏகாம்பரம் சும்மாவே முதலாளிகளின் முன்னிலையில் வாயைத் திறக்க மாட்டார்.. அர்ஜீனின் முன்னால் கேட்கவே வேண்டாம்.. செதுக்கி வைத்த சிலையைப் போல அசையாமல் நின்று விட்டார்..

அவர்களிடமிருந்து உதவிக்கரம் நீளாது என்று நிச்சயமானவுடன் தேவராஜன் சமாளிக்க முயன்றான்...

"இந்தப் பக்கமா வந்தேன்..."

"வந்தா..?"

"கடையைப் பாத்ததும் கடந்து போக கால் வரல..."

"ஏன் வரலை..?"

"என்ன இப்புடிக் கேட்டுப் புட்டிங்க.. இன்னைக்குத் தான இது உங்க கடை... இதுக்கு முதல்ல இது எங்ககடை..."

"முதலில் இருந்ததைப் பத்தியெல்லாம் பேச வேண்டாம்.. இந்த செகண்டில் இது என்னுடைய கடை.. புரியுதா..?"

அர்ஜீன் கோபத்துடன் அதட்டியதில் தேவராஜனின் மனதிலிருந்த வன்மம் விழித்துக் கொண்டது.. உயரமாக.. கம்பீரமாக.. ஆண்மையின் அழகோடு.. பெண்களைக்

கவரும் தோற்றத்துடன் இருந்தவனை பொறாமைக் கனலுடன் அவன் பார்த்தான்.. அவனுக்குள் தோற்றுவிட்ட வன்மத்தீ கொழுந்துவிட்டு எரிந்தது...

'இன்னைக்கு கடை.. நாளைக்கு காவ்யாவா..?'

"இப்ப என்னாச்சுன்னு இந்தப் பேச்சு பேசறிங்க..? என்னவோ நீங்க எங்க அப்பாவோட நண்பன் மகன்னு சொன்னாரு.. இதுதான் நட்புக்கு நீங்க கொடுக்கிற மரியாதையா..?"

"ஹலோ.. என்டாடியும்.. உங்க அப்பாவும் தான் பிரண்ட்ஸ்.. நானும்.. நீங்களும் பிரண்ட்ஸில்லை..."

"அதுக்கு..?"

"இந்தப் பக்கம் வந்தால்.. கடைக்கு வரனும்கிற கட்டாயம் ஏதும் இல்லை.. எனக்கு வேலை முக்கியம்.. அதை கெடுக்கிறதைப் போல யார் நடந்துக்கிட்டாலும் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க மாட்டேன்... அன்டர்ஸ்டாண்ட்.."

"சும்மா இங்கிலீஷில் பீலா விடாதீங்க சார்.. எங்க கடையாச்சேன்னு பாசத்தோட பார்க்க வந்தா எகிறிக் குதிக்கறிங்க..."

"இப்ப இது உங்க கடையில்லை.. இளங்கோ.. இளங்கோ..."

அர்ஜீன் போட்ட சப்தத்தில் இளங்கோ அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தான்.. கோப முகத்துடன் நின்றிருந்த அர்ஜீனின் முகம் பார்த்தான்...

"இவர் மிஸ்டர் துரியோதனின் சன்னாம்..."

"ஆமாம் சார்.. தேவராஜன்னு பெயர்..."

"எனக்கு அது தேவையில்லை.. இவர் எதுக்காக நம்ம வேலையில டிஸ்டர்ப் பண்றார்..?"

இளங்கோ பதில் சொல்ல முடியாமல் மென்று விழுங்கியபடி தேவராஜனின் அருகில் வந்து மெல்லிய குரலில் கெஞ்சினான்...

"தயவு செஞ்சு கிளம்புங்க சார்..."

இளங்கோ சொல்வதற்கு முன்னாலேயே தேவராஜன் கிளம்புவதாகத்தான் இருந்தான்.. அர்ஜீனின் கோபத்தோடு மோத அவன் தயாராக இல்லை.. அவனுக்கு இது போன்ற நேரடித்தாக்குதல்களில் என்றுமே விருப்பமோ... பழக்கமோ இருந்ததில்லை.. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் முதுகில் குத்துவதும்.. பின்னாலிருந்து தாக்குவதும்தான்.. திரை மறைவு வேலைகளில் அவன் கை தேர்ந்தவன்... இது போன்ற முகம் பார்த்துச் சண்டை போடும் வேலைகளில் கை தேர்ந்தவனல்ல...

"எதுக்காக கெஞ்சறிங்க இளங்கோ... நான் போய்க்கிட்டுத்தான் இருக்கேன்.. மரியாதை தெரியாதவன் கிட்ட நின்னுபேசனும்னு எனக்கு மட்டும் ஆசையா..?"

தேவராஜன் போய்விட்டான்.. அர்ஜீன் அதிக அளவில் கோபப்படுகிறான் என்று பாவனாவிற்குத் தோண்றியது.. என்னதான் இருந்தாலும் ஒரு காலத்தில்

தேவராஜனுக்குத்தானே அந்தக்கடை சொந்தமாக இருந்தது..? அந்தச் சொந்தத்தில் பார்க்க வந்தவனிடம் அர்ஜீன் அந்த அளவுக்கு கடுமை காட்டியிருக்க வேண்டாம் என்று நினைத்தாள் அவள்...

யாருடைய நினைவைப் பற்றியும் கவலைப் படாமல் கடுகடுத்த முகத்துடன் அறைக்குத் திரும்பினான் அர்ஜீன்...

அங்கே கையில் ஒரு பேப்பரோடு நின்றிருந்தாள் காவ்யா... அவன் டேபிளில் ஃபைல்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன... அர்ஜீன் பல்லைக் கடித்தபடி அவளைப் பார்த்து...

“என்ன.. ரெஸிக்னேசன் லெட்டரா..?” என்று ஒரு மாதிரியான குரலில் வினவினான்...

“ஆமாம்...” இறுக்கமான முகத்துடன் சொன்னாள் காவ்யா...

“விட்டுட்டுப் போக காரணம் தேடிக்கிட்டே இருப்பியா..?” புதிர் போடும் குரலில் கேட்டான் அர்ஜீன்...

காவ்யா அதைக் கவனிக்கவில்லை... அவள் மனம் முழுதும் அர்ஜீன் பேசிய பேச்சுக்கள்தான் நிறைந்திருந்தன...

“கண்ணில விளக்கெண்ணையை விட்டுக்கிட்டு காரணத்தை தேடி ஏன் நான் அலையனும்..? அதான் லட்டுலட்டா நீங்க காரணங்கள அள்ளித் தருகிறீங்கள்ல..” என்றபடி ராஜினாமாக் கடிதத்தை நீட்டினாள் காவ்யா...

அவள் கண்களுக்குள் ஊடுறிவிப் பார்த்தபடி ராஜினாமாக் கடிதத்தை வாங்கிய அர்ஜீன்... அதைச் சுக்கல் சுக்கலாக கிழித்து குப்பைக் கூடைக்குள் வீசினான்...

“போ.. போய் வேலையைப் பாரு..” என்று எரிச்சலோடு சொன்னான்...

காவ்யா அசையவில்லை.. அர்ஜீனை முறைத்தபடி அங்கேயே நின்றாள்.. அர்ஜீன் புருவங்களை உயர்த்தினான்...

“இன்னும் என்ன..?”

“நான் வேலையை விடறேன்...” காவ்யாவின் உதடுகள் துடித்தன...

“விடுவதிலேயே குறியாக இரு..”எரிந்து விழுந்தான் அர்ஜீன்...

“நீங்க மனசில நினைக்கறதையெல்லாம் பேசுவீங்க.. நான் அதைக் கேட்டுக்கிட்டிருக்கனுமா..? வேணாம் சாமி.. இந்த வேலையும் வேணாம்.. உங்க பேச்சும் வேணாம்..” காவ்யா குமுறினாள்...

“நான் வேணாமா..?” ஆழ்ந்த குரலில் கேட்டான் அர்ஜீன்...

அந்தக் குரல் காவ்யாவின் இதயத்தில் இறங்கியது... அவள் அதிர்ந்தாள்.. இதுபோன்ற அதிர்வை இதற்கு முன்னால் அவள் உணர்ந்ததில்லை.. மனதின் அதிர்வை விழிகளில் பிரதிபலித்தவளாய் அர்ஜீனை அதிர்ச்சியுடன்

பார்த்தாள்.. அவர்களின் பார்வைகள் கலந்தன.. ஒரு ஆக்டோபஸைப் போல அர்ஜீனின் பார்வை அவளை ஆக்ரமிப்பதை உணர்ந்தாள் காவ்யா...

அவள் மனம் அலை பாய்ந்தது... அவளால் அவனின் அந்தப் பார்வையினை நேர் கொண்டு பார்க்க முடியவில்லை.. ஆழ்கடலில் துரும்பாக அவளின் மனம் தத்தளித்தது...

'எனக்கென்னவோ அந்தக் கடைக்கு நீ வேலைக்குப் போறது சரியில்லன்னு தோணுதும்மா...'

அவள் காதோரமாக கண்ணதாசனின் வார்த்தைகள் ஒலித்தன.. அவள் உலுக்கி விடப் பட்டவளைப் போலத் தன்னுணர்விற்கு மீண்டாள்...

இதுதானா...? இதனால்தானா..? இது இப்படியாகும் என்று கண்ணதாசன் அறிந்து வைத்திருந்ததால்தான் அப்படிச் சொன்னானா..?

சட்டென்று பார்வையை விலக்கிக் கொண்டாள் காவ்யா... அர்ஜீனின் முகத்தில் கோப அலைகள் பரவின..

'இப்ப எதுக்காக முகத்தைத் திருப்பிக்கிறா...?'

"நான் வேலையை வேணாம்னு சொன்னேன்..." எச்சரிக்கையுடன் அவன் முகம் பார்க்காமல் பேசினாள் காவ்யா...

"அப்ப நான் வேணும்.. அப்படித்தானே..?" கோபம் விலகியவனாக கேட்டான் அர்ஜீன்...

காவ்யாவின் பார்வை அவளையும் மீறி.. அவன் பார்வையைச் சந்தித்தது.. காத்திருந்த அந்தக் காதலனனின் பார்வை அதைக் கவ்விக் கொண்டது...

'இவன் கில்லாடி...' லேசாக இதழ் வளைத்தாள் காவ்யா....

"இப்ப வேலையைப் பத்தித்தான் பேசறோம் சார்... வேற பேச்சு என்னத்துக்கு..?"

"பேசினா.. நீ பதிலைச் சொல்லு..."

"சில பேச்சுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது சார்.."

"ஏன்..?"

"சொன்னா நீங்க தாங்க மாட்டிங்க.. இப்ப நான் வேலையை விட்டுப் போறேன்... அதைப்பத்தி மட்டும் பேசுங்க..."

அர்ஜீன் சுழல் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து சுழன்றான்.. அவனின் அலட்சியமான அந்தத் தோரணையில் அவள் மனதைப் பறிகொடுத்தாலும்.. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் முகம் திருப்பிக் கொண்டாள்...

"உன் வேலையைப் பத்தின என் முடிவைச் சொல்லிட்டேன்.. போ.. போய்.. வேலையைப் பாரு..."

லேசான முகச்சுளிப்புடன் அவன் சொல்லியும் அசையாமல் நின்றாள் காவ்யா...

# 27

*பாடி வரும் பறவைகளில் –*
*நீயென் பாடல் தேட ஆசைகொண்டேன்...*

“**உ**ன் சீட்டுக்குப் போன்னு சொன்னேன்...” அழுத்தத்துடன் சொன்னான் அர்ஜீன்...

“முடியாது.. நீங்க பேசின வார்த்தைகளுக்கு எனக்கு நியாயம் கிடைச்சாகனும்...” உறுதியுடன் சொல்லி விட்டாள் காவ்யா..

“நான் வந்தப்ப துரியோதனனின் சன்.. உன்னிடம் பேசிக்கிட்டு இருந்தானா.. இல்லையா..?”

“யாரைச் சொல்றீங்க..? தேவராஜனையா..?”

“ஓ.. அவன் பெயரைச் சொன்னால்தான் விடுவ போல இருக்கே... யெஸ்.. அந்த தேவராஜன்தான்... அவன் தானே துரியோதனனின் சன்...?”

“ஏன்.. உங்களுக்கு அது தெரியாதா..?”

“தெரியாது.. என்ன இப்ப..?”

“ஆச்சரியமாயிருக்கு.. கடையை விற்றவன் அவன் வாங்கினவர் நீங்க.. உங்களுக்கு அவனைப் பத்தித் தெரியாதாம்.. இதை எங்கேயும் கேட்டதில்ல...”

“இங்கே கேட்டுட்ட இல்ல.. அத்தோடு விட்டுவிடு.. அவன்கூட உனக்கென்ன பேச்சு..? இந்தக் கேள்விக்கு பதிலைச் சொல்லு...”

“அவன்கூட நான் பேசினேனா..? நீங்க கண்டீங்களா..?”

“காணப் போய்த்தான் சொல்றேன்...”

“என்னத்தைக் கண்டிங்க..? கண்ணில கண்டதை-யெல்லாம் உண்மைன்னு நினைச்சுக்கிறதுதான் சென்னைக்காரங்க பழக்கமோ..?”

“கண்ணில கண்டதை இல்லைன்னு சாதிக்கிறதுதான் மதுரைக்காரங்க பழக்கமோ..?”

“அவன் பேசிக்கிட்டு இருந்தான்.. அவ்வளவுதான்.. என்கூடப் பேசலை.. நானும் அவன் கூடப் பேசலை...”

“இதை நான் நம்பனுமா..?”

“நம்பாட்டிப் போங்க.. நீங்க நம்பினாத்தான் என் வீட்டில குழம்பு கொதிக்குமா...?”

“இந்த டயலாக்கையும் விடவே மாட்டியே...”

“எங்கே.. விடனும்னு நான் நினைச்சாலும்.. நீங்க விடமாட்டேங்கறிங்களே.. தெரியாமத்தான் கேட்கிறேன்..

அப்படியே அவன்கூட நான் பேசினாலும் உங்களுக்கென்ன வந்தது...?”

காவ்யாவின் கேள்வியில் ரௌத்ரமானான் அர்ஜீன்.. அவன் முகத்தில் கோபச் சிவப்புத் தோன்றியது.. கண்கள் இடுங்க அவளை உற்றுப் பார்த்தான்...

“ஓஹோ.. வேலை நேரத்தில் நீ அவன்கூட வெட்டி அரட்டை அடிப்ப.. அதை நான் கேட்கக் கூடாதா..?”

“அது வெட்டி அரட்டைன்னு உங்களுக்குத் தெரியுமா..?”

“இது வேறயா..? பின்னே..? அது வேண்டப்பட்ட அரட்டையா..?”

“ஆமாம்.. கடையோட பழைய முதலாளி அவன்...”

காவ்யா இப்படிச் சொன்னதை அர்ஜீன் ரசிக்க வில்லை.. தாடையைத் தடவியபடி முகம் சுருங்க.. அவளை அவன் முறைத்தான்...

“அப்ப.. பழைய முதலாளியைத்தான் நீ மதிப்ப...”

“எல்லோரையும் தான் மதிக்கனும்...”

“ஐ டோன்ட் லைக் திஸ் டைப் ஆஃப் ஆர்குயுமென்ட்ஸ்..”

“இது சங்கத்தமிழ் வளர்த்த மதுரை சார்.. நீங்க சொல்கிறதை தமிழிலேயே சொல்லுங்க...”

“பார்க்கலாம்...”

“அவனிடம் பழைய கணக்கு வழக்கப்பத்தின விவரமொன்னு வேண்டியிருந்தது.. அதான் கேட்டுக்கிட்டு இருந்தேன்.. அது ஒரு குத்தமா..?”

காவ்யா அப்பாவியாய் இமை கொட்ட.. அர்ஜீன் பல்லைக் கடித்தான்...

“இதுக்கெல்லாம் விரட்டினா என்னால இங்க வேலை செய்ய முடியாது சார்...”

“பிளாக்மெயில் பண்றியா..?” ஆழ்ந்த குரலில் கேட்டான் அவன்...

அந்தக் குரலில் காவ்யா பேச்சிழந்தாலும்.. சமாளித்துக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தாள்...

“நீங்களும் இதைப் பிடிச்சுக்கிட்டே தொங்க வேணாம் சார்..”

“தொங்குகிறதா..? என்ன ஒரு லாங்வேஜோ..” அலுத்துக் கொண்டான் அவன்...

“எங்களுக்கு இப்படித்தான் பேசவரும்...” காவ்யா நொடித்தாள்...

“எங்களுக்குன்னா..? யார் யாருக்கு..? உனக்கும்.. அவனுக்குமா...?” அர்ஜீன் புருவங்களை உயர்த்தினான்..

‘இவன் இதை விடவே மாட்டானா..?’ காவ்யாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"உங்க ஆசையைக் கெடுப்பானேன்.. ஆமாம்ன்னு தான் வைச்சுக்கங்களேன்.. அவரும் மதுரைக்காரரு.. நானும் மதுரைக்காரி.. ஆயிரம்தான் இருந்தாலும்.. என் பேச்ச அவரு புரிஞ்சுக்குவாரு.. அவரு பேசறத நான் புரிஞ்சுக்குவேன்.. உங்கள மாதிரி என்ன லாங்வேஜோன்னு அலுத்துக்க மாட்டோம்ல்ல..." இமை கொட்டினாள்...

அவள் தேவராஜனை அவர் என்று சொன்னதை அர்ஜீன் ரசிக்கவில்லை.. இமை கொட்டியவளை இமைக்காமல் பார்த்தான் அர்ஜீன்... அவளின் முகம் சிவந்து விட்டது.. உதடுகளைக் கடித்துக் கொண்டு வேறு திக்கில் பார்த்தாள்...

"உங்க ஊர் பெருமை இருக்கட்டும்.. அவனைப் பார்த்தா நல்லவனாத் தெரியல..." அர்ஜீன் எச்சரித்தான்...

'இதை நீ சொல்லித்தான் தெரிஞ்சுக்கனுமாக்கும்..'

"என்னைச் சீண்டி விடறேன் பேர்வழின்னு அவன் கூடச் சிரிச்சுப் பேச ஆரம்பிச்சுராதே..."

'ஆஹா.. இப்படியொரு வழி இருக்கில்ல...?'

"என்னை டென்சனாக்க அவனை யூஸ் பண்ணினேன்னு வை..."

'என்ன ஆகும்ன்னு எனக்கே தெரியும்.. நான் வைகையாத்துத் தண்ணியக் குடிச்சு வளர்ந்தவ.. என் கிட்டயேவா..?'

“அவன் வேலையை காட்டிருவான்...”

‘நான் அவன் கை காலை முறிச்சுருவேன்..’

“ஸோ.. இந்த கேமை இத்தோட முடிச்சுக்கிட்டு வேலையைப் பார்க்கலாமா..?”

“என் ராஜினாமா..?”

“குப்பைக் கூடைக்குப் போயாச்சு...”

“யாரைக் கேட்டுக் கிழிச்சீங்க...?”

“நீ யாரைக் கேட்டு எழுதின..?”

அவள் முறைத்தபடி ஃபைல்களைத் தூக்கிக் கொண்டு போனாள்.. டொம்மென்ற சப்தத்துடன் அவள் டேபிளில் வைத்தாள்... வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்..

அர்ஜீன் தேவராஜனைப் பற்றிய யோசனையுடன் ஒரு பென்சிலை எடுத்தக் கடித்தபடி காவ்யாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.. ஊடும் பாடும் அவனைப் பார்த்து வைத்த காவ்யா அவன் பார்வையினால் சங்கடத்துக்கு ஆளானாள்...

‘ஒரு மனுஷிய இப்படியே பாத்துக்கிட்டு இருந்தா அவ எப்படி வேலை செய்வாங்கிற நினைப்பு வேணாம்..? இந்த ஆளுக்கென்ன.. பருகு.. பருகுன்னு பார்த்துட்டுப் போவாரு.. அவஸ்தைப் படறது யாரு..? நான் தானே...’

அவனைப் பார்க்காதே என்று மனதை அதட்டியபடி வேலை செய்து கொண்டிருந்தவள்.. மதிய உணவு இடைவேளை வந்தது.. 'அப்பாடா...' என்ற ஆசுவாசப் பெருமூச்சைவிட்டாள்...

"சார்.. நான் சாப்பிட்டுட்டு வர்றேன்..."

அவன் முகம் பார்க்காமல் வெளியேற முனைந்த போது...

"இவ்வளவு செல்பிஷ் கேர்ளா நீ..?" என்று கேட்டான் அவன்...

"அவ்வளவு சுயநலமா இருந்து எதை அள்ளிக் கிட்டோமாம்.." என்றாள் காவ்யா...

"நீயாச் சாப்பிடப் போறியே.. ஒரு வார்த்தையாவது நீங்களும் சாப்பிட வாங்கன்னு கூப்பிடுகிறயா..?" சரஸத்துடன் வினவினான் அவன்...

காவ்யா உஷாராகி விட்டாள்.. அவன் விடும் மலரம்புகளைப் புரிந்து கொள்ளாமலிருக்க அவளொன்றும் முட்டாள் இல்லையே....

"நல்லாயிருக்கு சார் உங்க நியாயம்.. எனக்குப் பசிச்சா நான்தான் சாப்பிடனும்.. அப்பத்தான் எனக்குப் பசியடங்கும்.. எனக்குப் பதிலா நீங்க சாப்பிட்டா.. எனக்குப் பசி அடங்கிருமா..?" என்று கழுத்தை வெட்டினாள்...

"ஆக.. உன் டப்பாவில் இருக்கிற சாப்பாட்டை என் கண்ணிலயே காட்ட மாட்ட..?" அவன் உல்லாசமாகக் கேட்டான்...

“அது என்ன தேவைக்கு..? உங்களுக்கு ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் சாப்பாடு காத்திருக்கு.. என் சாப்பாட்டு மேல எதுக்காக கண் போடறிங்க..?” விளையாட்டைப் போலக் கேட்டுவிட்டு வேகமாக அங்கிருந்து அகன்று விட்டாள் காவ்யா..

பிடிகொடுக்காமல் அவள் நழுவுவது அர்ஜீனுக்குப் புரிந்தது... அவன் ஏதோ யோசனையுடன் சுழல் நாற்காலியில் சுழன்று விட்டு.. சாப்பிடுவதற்காக எழுந்தான்...

“**பா**வம்டி அந்த தேவராஜன்.. காய்ச்சு.. காய்ச்சுன்னு இவன் காய்ச்சிட்டான் இந்த அளவுக்கு அவனை ஹர்ட் பண்ணியிருக்க வேண்டாம்ன்னு தோணுது...”

சாப்பிடும் போது பாவனா பரிதாபப் பட்டாள்... காவ்யா பதில் சொல்லவில்லை.. எதற்காக தேவராஜனை அந்த அளவுக்கு அர்ஜீன் காய்ச்சினான் என்ற உண்மையை அறிந்திருந்ததால் மௌனமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்..

“ஆயிரம் தான் இருந்தாலும் இந்தக் கடை இதுக்கு முன்னாலே தேவராஜன் பேமிலிக்குத்தான சொந்தமாயிருந்தது...?”

“அதுக்கு என்ன செய்யனும்கிற பாவனா..? அந்த தேவராஜனுக்கே கடையை திருப்பி எழுதிக் கொடுத்துடனும்கிறியா..?”

“நீயேண்டி கோபப் படற..?”

“கோபப்படாம கொஞ்சவா சொல்ற..? அந்த தேவராஜனும்.. அவன் மூஞ்சியும்.. அவன் எதுக்குடி.. வித்தகடை மேலே உரிமை கொண்டாடிக்கிட்டு இங்கே வர்றான்...?”

“பாவம்டி காவ்யா...”

“அவனுக்குப் பாவம் பார்த்தேன்னு வை.. அவன் உன்னைப் பாவம்ன்னு ஆக்கிருவான்.. தேவாங்குக்குப் போய் பாவப்படுவியா..?”

“சீச்சீ.. என்ன பேசற நீ...”

“நீ விவரமானவன்னு நினைச்சேன்.. உன் விவரம் இவ்வளவு தானா..?”

“காவ்யா... அவன் ஜௌ்ளு மன்னன்.. எனக்கு அது தெரியும்...”

“தெரிஞ்சுமா அவனுக்கு சப்போர்ட் பண்ற..?”

“நான் சொல்ல வந்ததே வேற காவ்யா.. அவனே ஒரு காமெடி பீஸ்.. அவனைப் போயி அப்படிக் கதிகலங்க வைக்கனுமா..? ”

“விடேண்டி.. அவனைக் கதிகலங்க வைச்சா என்ன குறைஞ்சு போச்சு..? அவன் என்ன கடைமேல இருக்கிற பாசத்திலயா இந்தப் பக்கம் ரோந்து சுத்தறான்..?” பல்லைக் கடித்தாள் காவ்யா..

“உன்மேல இருக்கிற பாசத்திலன்னு சொல்கிறயா..?” எடுத்துக் கொடுத்தாள் பாவனா...

“அவன் கூடல்லாம் என்னை இணை கூட்டிப் பேசின.. உன்னைச் சும்மா விட மாட்டேன்.. அவன் ஆளும்.. மூஞ்சியும்.. முகரையும்.. இவனுக்கு இந்தக் கடைமேலே பாசம் பொங்கி வழியுதாக்கும்..? இவன் மட்டும் உருப்படியா இருந்திருந்தா இவனோட அப்பா இந்தக் கடையை வித்திருக்க மாட்டார்...”

“அது என்னவோ உண்மைதான்.. அவனை விடு.. நீ நம்ம ஆபிஸ் ஹீரோகிட்ட வா...”

“நம்ம ஆபிஸ் ஹீரோவா..? யாருடி அது...?”

தெரியாததைப் போல கேட்டாள் காவ்யா.. அவள் மனதுக்குத் தெரியும்.. அது அர்ஜீன்தான் என்பது...

“ஹை.. ஹை.. இப்படிச் சொன்னா நாங்க நம்பிருவோமாக்கும்.. அது யாருன்னு உனக்குத் தெரியாதா..?”

“தெரியாது...”

“இந்த மதுரையே அவர் வரவாலே மஞ்சள் நிலா மாலை நேரத்துக்கு மாறியிருக்கு.. நீ என்னவோ.. எதுவும் தெரியாதது போல நடிக்கற...”

“நான் எதுக்காக நடிக்கனும்..?”

“அதானே தெரியல.. இத்தனைக்கும் அந்த ஹீரோ பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கிற வரம் வாங்கியிருக்கிற

மகராசி நீ.. உனக்கு அந்த ஹீரோவைப் பத்தித் தெரியாதா..?”

“யாரைச் சொல்ற...? புது முதலாளியையா சொல்ற..?”

வரவழைத்துக் கொண்ட ஆச்சரியத்துடன் கேட்டாள் காவ்யா.. அவள் கண்களில் தெரிந்த கள்ளத்தனத்தை ரசித்துச் சிரித்தாள் பாவனா.. கள்ளியும்.. கள்ளியும்.. கலந்துரையாட ஆரம்பித்தார்கள்...

# 28

*உன் பாதத் தடத்தினிலே...*
*என் பாதம் பதிக்க ஆசைகொண்டேன்...*

**கா**வ்யாவின் கண்களில் மயக்கம் தெரிந்தது.. அர்ஜீனைப் பற்றிப் பேசும் போது மட்டும்.. அந்த மயக்கம் வந்து அவள் கண்களில் குடி கொள்வதை பாவனா கவனித்துத்தான் வைத்திருந்தாள்...

அன்றும் அதே மயக்கம் காவ்யாவின் கண்களில் வந்து அமர்ந்ததில் பாவனா கண்களைச் சிமிட்டினாள்...

“அப்படியா..? நான் இவ்வளவு நேரமும் அவனைப் பத்தித்தான் பேசறேன்னு உனக்குத் தெரியாதா..? அவ்வளவு அப்பாவியா நீ...?”

“ஆமாம்டி பாவனா..” காவ்யா இமை கொட்டினாள்...

“அப்படியே அறியாப் பெண்ணைப் போல வேசம் போடறேடி...”

“வேசம் போடறேனா..? நானா..? சேச்சே.. நம்ம ஆபிஸ்லேயே செம ஹேண்ட்சம் ஹீரோன்னு நீ சொன்னா.. நான் யாரைன்னு நினைப்பேன்...?”

“ஏன்..? நம்ம கந்தசாமியை நினைக்க வேண்டியது தான..?”

“எதுக்கு..? அவரோட அறுபது வயது பெண்டாட்டி கட்டையைத் துக்கிக்கிட்டு அடிக்க வருகிறதுக்கா..?”

“அப்ப.. நம்ம ஏகாம்பரத்தை நினைக்கறியா...?”

“ஏண்டி..? அவரே.. இப்பவோ.. அப்பவோன்னு இருக்கிறாரு.. இதுவே கவர்ண்ட்மென்ட் ஆபிஸ்ன்னா.. எப்பவோ ரிட்டயர்மென்டைக் கொடுத்துப் பத்தி விட்டிருப்பாங்க.. கடையாய் இருக்கிறதால தப்பிச்சுக்கிட்டு இருக்காரு.. உனக்கு அது பொறுக்கலையா..? ஹீரோன்னு சொல்ல உனக்கு வேற ஆளே கிடைக்கலியா..?”

அந்த நேரம் பார்த்து இளங்கோ அந்தப் பக்கமாக வந்து போனான்.. பாவனா காவ்யாவைப் பார்த்து ரகசியமாக கண்ணடித்தாள்...

“இவன் எப்படி..?”

அவளின் கேள்வியில் காவ்யாவுக்கு தூக்கிவாரிப் போட்டது.. இளங்கோவின் காதுகளில் பாவனாவின் பேச்சு விழுந்து விட்டதோ என்ற கவலைக்கு அவள் ஆளானாள்..

“அடச்சீ.. கண்ணைக் கண்ண அடிச்சு வைக்காதே.. அவன் பார்த்து வைச்சுட்டா வம்பு...”

“ஏனாம்..? என்னத்தைக் கிழிப்பான்..?”

“இம்சையே..! அவனுக்கு இன்னும் கல்யாணம் ஆகித் தொலைக்கலேடி.. அவன் பாட்டுக்கு பதிலுக்கு கண்ணடிச்சு வைச்சுட்டா வம்புடி...”

“உன் கூடத்தான் இம்சை காவ்யா... கல்யாணம் ஆணவங்களைக் கை காட்டினா... கிழவன்ங்கிற... ஆகாதவனைக் கை காட்டினா வம்புங்கிற.. நான் என்னதாண்டி பண்ண..?”

“எதுவும் பண்ண வேணாம்.. கொட்டிக்கத்தான வந்த..? அதைப் பண்ணு...”

காவ்யா சாப்பாட்டில் கவனமாக.. பாவனா லேசாக சிரித்துக் கொண்டாள்.. அதைப் பார்த்த காவ்யாவின் விழிகளில் கேள்வி எழுந்தது..

“என்னடி..?” என்றாள்...

“ஒன்னுமில்ல..” பாவனா சிரிப்பை நிறுத்தவில்லை..

“நீயெல்லாம் மறை கழண்ட கேஸ்... உன்கிட்டப் போயி காரணத்தைக் கேட்கிறேன் பாரு.. என்னைச் சொல்லனும்...”

“ஓஹ்ஹோ.. தானாச் சிரிச்சுக்கிறவங்களுக்கு மறைகழண்ட கேஸ்ன்னு பெயர் வைப்பியா..?”

“நான் வைக்கலை.. இந்த உலகம் வைச்சிருக்கு...”

“அப்ப.. அர்ஜீன் பெயரைச் சொன்னா.. நீயாச் சிரிச்சுக்கறியே.. தானிக்குப் பேரு ஏமிம்மா..?”

காவ்யாவுக்கு அகப்பட்டுக் கொண்ட உணர்வு எழுந்தது.. அர்ஜீனைப் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் அவளுக்குள் ரகசியச் சிரிப்பு உற்பத்தியாவதை பாவனா எப்படிக் கண்டு பிடித்தாள்...?

“எல்லாக் களவாணித்தனமும் எங்களுக்கும் தெரியும்..?” என்று நொடித்தாள் பாவனா...

“போடி.. நீ ரொம்பத்தான் கண்டவ...”

“காணாமப் பேசல... ஆமா... ஹீரோ என்ன சொல்றார்...”

“ஹீரோவா...? யார் அது...?” காவ்யா இமை கொட்டினாள்...

“ஏய்ய்... முடியலடி... இந்தப் பாடுபடுத்தாதே...” பாவனா கையெடுத்து கும்பிட்டாள்..

இருவரும் அவர்களுக்கு மட்டுமே சொந்தமான பிரத்யேகச் சிரிப்பைக் கலகலத்துச் சிரித்தார்கள்...

“அர்ஜீன் என்ன சொல்றான்..?” சிரித்து முடித்த பாவனா கேட்டாள்...

“என்னத்தைச் சொல்லுவான்..? என்மேல குத்தம்தான் சொல்லுவான்..” காவ்யா அலுத்துக் கொண்டாள்...

“என்ன ஆள்டி இவன்..? அவனவன்.. அழகான பொண்ணுக பக்கத்தில வந்தா முத்தம்தான் கேப்பாங்க.. இவன் என்னடான்னா குத்தம் கண்டுபிடிச்சுக்கிட்டே இருக்கானே.. தேறுவானாடி..?”

“அடச்சீ.. வாயைக் கழுவு...”

“அதைச் சாப்பிட்டு முடிச்ச பின்னால செஞ்சுக்கலாம்..”

“இப்படியாடி பேசி வைப்ப..? உனக்குப் பேச வேற பேச்சே கிடையாதா..?”

“அடேங்கப்பா.. நீ பெரிய அவ்வையார்தான்.. நம்பிட்டேன்... ஆமாம்... வந்தவுடனேயே வழக்கு வைச்சீங்களா..?”

“நான் வைக்கலை.. அவன்தான் வைச்சான்...”

“என்னவாம்..?”

“வேலை நேரத்திலே.. வேலையைப் பார்க்காம.. அந்த தேவராஜன் கூட அரட்டையடிச்சுக்கிட்டு இருந்தேனாம்..”

“எனக்கென்னவோ.. நீ வேலை பாக்காமல் அரட்டையடிச்சது பிரச்னையில்லைன்னு தோணுது காவ்யா.. அந்த தேவராஜன்கூட அரட்டையடிச்சதுதான் பிரச்னைன்னு தோணுது.. அதான் ஹீரோ.. தேவராஜனை அந்தக் காய்ச்சு காய்ச்சினானா..?”

அதைக் காவ்யாவும் அறிந்துதான் வைத்திருந்தாள்.. அர்ஜீன்தான் ஒளிவு மறைவில்லாமல் வெளிப்படையாகப் பேசித் தீர்த்தானே.. அதைப் பாவனாவிடம் ஒப்புக் கொள்ள மனமில்லாமல் மௌனம் சாதித்தாள்...

“இதெல்லாம் ஹீரோவுக்கு வேண்டாத வேலைன்னு தான் நான் சொல்லுவேன்...” என்றாள் பாவனா...

“நான் மட்டும் வேண்டிய வேலைன்னா சொன்னேன்..?”

“பாருடி காவ்யா.. ஹீரோன்னு இருந்தா.. வில்லனோடதான் மோதனும்.. காமெடி பீஸ்கிட்டயெல்லாம் மோதக் கூடாது.. இதை நீயேன் ஹீரோ சாருக்கு எடுத்துச் சொல்லக் கூடாது...”

‘வேற வினையே வேணாம்..’ காவ்யாவின் முகத்தில் ரகசியச் சிரிப்பு வந்தது...

‘சும்மாவே அவன் என்னை ஒரு மார்க்கமா பார்த்துக்கிட்டு இருக்கான்.. இந்த லட்சணத்தில... இதை நான் அவன்கிட்ட சொல்லிவைச்சேன்னா.. வசிய மருந்தைத் தின்னவனைப் போல என்பின்னாலேயே சுத்த ஆரம்பிச்சிருவான்.. தேவைதானா..?’

“இதைப் பாருடா.. இவ மட்டும் தானாச் சிரிச்சுக்கலாமாம்.. என்னடி சிரிப்பு வேண்டிக்கிடக்கு..?”

“இந்த எடுத்துச் சொல்ற வேலையெல்லாம் எனக்கு வராது.. நீயே அவர்கிட்ட எடுத்துச் சொல்லேன்...”

இதைக் கேட்டதும் பாவனா ஏக்கப் பெருமூச்சை விட்டாள்.. எதற்காக இப்படி மூச்சை இழுத்து விடுகிறாள் என்று புரியாத பார்வையை பார்த்தாள் காவ்யா...

“எனக்கும் ஆசைதான்.. எடுத்துச் சொல்கிற சாக்கில ஹீரோகூட பிரண்ட்ஷீப்பை வளர்த்துக்கலாமே..”

‘இவளுக்கு இப்படியொரு ஆசையிருக்கா...’ குமைந்து போனாள் காவ்யா...

“எங்கே..? அந்த ஆசையில நெருங்கிப் போனா.. அவன் மதுரை மாநகரத்தின் வரலாற்றைக் கேட்கிறானே.. என்னதாண்டி செய்கிறது..?”

‘பிழைச்சேன்..’ காவ்யா நிம்மதியானாள்...

“நான் நினைக்கிறேன்.. இவனுக்கு மதுரை மாநாகரத்தின் வரலாற்றைப் பத்தித் தெரிஞ்சுக்க ஒன்னும் ஆசையிருந்திருக்காது.. அதைச்சொல்லி என்னைத் துரத்திட்டு.. உன்னைப் பக்கத்தில இழுத்துக்கனும்கிற ஆசையிருந்திருக்கும்...”

“பேத்தாதே...”

“உள்ளதைச் சொன்னால் பேத்தலா..? அதுசரி.. இந்த ஆபிஸீக்குள்ள ஹீரோ வந்தாலும் உன்னையே

சுத்தறான்.. காமெடி பீஸ் வந்தாலும்.. உன்னையே பாக்கறான்னா.. நான் அழகியில்லையா...?"

"அடிதாண்டி வாங்கப் போற.. ஆமாம்.. எதுக்காக அந்த தேவராஜனை காமெடி பீஸ்ங்கிற...?"

"அவன்மேல உனக்கு இத்தனை அக்கறையா..? இருக்காதே..."

"ஒரு மண்ணும் இல்லை.. அவன் பக்கா வில்லன்டி..."

"அதானே பார்த்தேன்.. புலி பசிச்சாலும் காமெடி வில்லனைப் பார்க்காதே.. ஹீரோவைத்தானே பார்க்கும்.."

"அடேங்கப்பா.. உனக்குத்தான் அவன் ஹீரோ.. எனக்கில்ல.. ஹீரோவாமில்ல ஹீரோ..."

"அப்படிங்கிற..?"

"ஆமாம்கிறேன்.. பெரிசா இங்கிலிஷ்ல பீலா விட்டா இவன் ஹீரோ ஆகிடுவானா...?"

"ஓ..."

"வாட்டசாட்டமா.. ஆறடி உயரத்தில.. பெயருக்கேத்ததைப் போல அந்த அர்ஜீன மகராஜன் போல கம்பீரமா இருந்துப்புட்டா... இந்த ஆளை நான் ஹீரோன்னு சொல்லிருவேனா...?"

"அப்புறம்..?"

"பேசும்போது உதட்டைச் சுழிக்கிறது..."

"அதில உன் உசிரே போயிருக்குமே..."

"எரிச்சலைக் கிளப்பாதே... பெரிய ஸ்டைல் மன்னனாட்டம் முடியைச் சிலுப்பிக்கிறது..."

"அந்த முடியில விரல் விட்டு கலைக்கனும்னு உனக்குத் தோணியிருக்குமே..."

"அது உனக்குத் தோணும்..."

"எனக்குத் தோணி என்னடி பண்ண..? ஹீரோ என்பக்கம் திரும்பிப் பார்க்கனுமே..."

"போன் பேசும் போது பாவனா.. இந்த ஆள்காட்டி விரலை நீட்டி... காதோரமா முகத்தில கோடு இழுத்துக்கிட்டே பேசறது.. அது என்ன மேனரிசமோ தெரியலைடி.."

"தூள்..."

"கம்யூட்டரில வேலை பார்க்கிறப்ப.. காலை ஆட்டிக்கிறது.. பெரிய துரைன்னு மனசுக்குள்ள நினைப்பு.."

"உன் மனசில என்ன நினைப்புடி..?"

"ஜீன்ஸ் பேண்டுதான்.. கார்கோ சட்டைதான்.. கூலிங்கிளாஸ்தான்.. ஹையோ.. இந்த ஆள் பண்ற அளப்பறையை மதுரை தாங்காதுடி பாவனா..."

"அப்படின்னு மதுரை உன்கிட்ட வந்து சொல்லிச்சா.."

"கருப்புமில்லாம.. சிகப்புமில்லாம.. இது என்ன கலர்டி... கோதுமை கலரில இருக்கானோ..?"

“யாருக்குத் தெரியும்..? உத்துப் பார்த்த உனக்குத்தான் தெரியும்...”

“இதெல்லாம் ஒரு கலரா..?”

“பின்னே..? இல்லேங்கறியா..?”

“ஆயிரம் தான் சொல்லு.. எங்க மதுரை மண்ணுக்குன்னு ஒருகலர் இருக்கும்.. அந்தக் கலருக்கு இந்த ஆளு கலரு இணையாகுமா..?”

“ஆகாதுங்கிற...?”

“கோபம் வந்தா முறைக்கிறார் பாரு ஒரு முறைப்பு.. அடேங்கப்பா.. மனசுக்குள்ள என்னமோ பெரிய சண்டியர்ன்னு நினைப்பு...”

“ஆளப் பாத்தா விருமாண்டி போலத் தெரியலையே..”

“யாருக்குத் தெரியும்..? விருமாண்டியோ.. உறுமாண்டியோ.. நான் அந்த ஆளைப் பத்தி யோசிக்கறதே இல்லை...”

“என்னடி சொன்ன..?”

பாவனா ‘ஆ’வென்று வாய் பிளந்து விட்டாள்.. அதைப் பார்த்த காவ்யா.. புரியாதவளாய் விழி விரித்தாள்...

“உனக்கு என்னாச்சு..?”

“இதுவரை எதுவும் ஆகலை.. இனிமேத்தான் ஆகனும்.. ஆமா.. நீ ஹீரோவைப் பத்தி யோசிக்கிறதே இல்லை...?”

“ஊம்..! அந்த ஆளைப் பத்தி நானெதுக்காக யோசிக்கனும்..? அவன் பக்கம் திரும்பக்கூட மாட்டேன்...”

“நீ..? திரும்பியே பார்த்ததில்ல...?”

“ஊம்..! அவரையெதுக்கு நான் பாக்கனும்..? எனக்கிருக்கு ஆயிரம் வேலை...”

காவ்யா சாப்பிட்டு முடித்தவளாக கை கழுவ எழுந்து கொள்ளப் போனாள்.. அவள் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்த பாவனா...

“ஏண்டி.. ஹீரோ பாக்கிறதுக்கு எப்படியிருக்கான்.. அவன் உயரம் என்ன.. கலர் என்ன.. பேசும் போது எப்படிப் பேசறான்.. சிரிக்கறப்ப எப்படி உதட்டைச் சுழிக்கிறான்.. போன பேசினா எப்படி காதைச் சுரண்டறான்.. வேலை செய்யறப்ப எப்படிக் காலை ஆட்டறான்னு எல்லாத்தையும் நோட் பண்ணி நோட்ஸ் கொடுத்துட்டு.. அவன் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டன்னு சொல்ற பார்த்தியா.. இதத்தாண்டி என்னால தாங்க முடியல...”

“நிசத்தைத்தான் சொன்னேன் பாவனா...”

“கொலைவெறியைக் கிளப்பாதே.. ஹீரோ போடற சட்டைமுதல் கூலிங்கிளாஸ் வரை பார்வையிட்டுட்டு.. எதுவும் தெரியாத பச்சப் புள்ளையைப் போலக் கண்ணக் கொட்டற பாரு.. உனக்கு ஆஸ்கர் அவார்டு கொடுத்தாக்கூடப் பத்தாதுடி...”

“அடிப் போடி...”

காவ்யா கையை உறுவிக் கொண்டு விரைந்து விட.. அவளை திட்டியபடியே பாவனா தொடர்ந்து சென்றாள்.. கதவுக்குப் பக்கத்தில் அவர்களின் கண் பார்வைக்கு மறைவாக நின்று கொண்டிருந்த அர்ஜீன் தாடையைத் தடவிக் கொண்டான்.. அவன் முகத்தில் கள்ளச்சிரிப்பு மலர்ந்திருந்தது...

# 29

## *என் அசைவுகளை கணக்கெடுக்கும்.. உன்மீது ஆசைகொண்டேன்...*

அர்ஜீனின் இதழ்களில் கள்ளச் சிரிப்பு விரிந்திருந்தது.. அது நேரம் வரை.. அந்தத் தோழிகள் பேசிய ரகசியப் பேச்சுக்களை மறைந்திருந்து கேட்டவனுக்குள் ரகசிய சந்தோசம் உற்பத்தியானது...

அவன் ஒட்டுக் கேட்க வேண்டும் என்று நினைக்க வில்லை.. சாப்பிடத்தான் எழுந்தான்.. அதற்குள் ஒரு முக்கியமான போன் அழைப்பு வந்துவிட்டது.. மதுரைக் கடையில் இறக்குமதியாகியிருந்த கம்யூட்டர்களைப் பற்றிய விவரங்களை மறுமுனை கேட்டது.. கம்யூட்டர்கள் இறக்குமதியான போது அர்ஜீன் வெளிநாட்டில் இருந்தான்..

அதனால் சற்று நேரத்தில் அழைத்துச் சொல்வதாகக் கூறிவிட்டு போனை அணைத்தான்.. அதுபற்றிய விவரங்களைக் கேட்பதற்காகத்தான் காவ்யாவைத் தேடிப் போனான்..

கடையின் பின் பகுதியில் கதவு இருக்கும்.. அதைத்திறந்தால் அலுவலகப் பகுதி ஆரம்பமாகும்.. அந்தக் கதவைத் திறந்த அர்ஜீனின் காதுகளில் ‘பாவம்டி அந்த தேவராஜன்..’ என்று பாவனா பரிதாபப்பட்டது விழுந்து விட்டது.. அதற்கு காவ்யா என்ன பதிலைச் சொல்லப் போகிறாள் என்று அறிந்து கொண்டே ஆக வேண்டும் என்று தோன்றிவிட... அர்ஜீன் அப்படியே நின்று விட்டான்.. அதற்கு காவ்யா சொன்ன பதிலில் அவன் மனதின் ஓரமாக ஒட்டிக் கொண்டிருந்த சந்தேகம் கலந்த கோபம் பறந்தே போய் விட்டது..

காவ்யா வாய்க்கு வாய் மதுரை என்று சொன்னதில் அவளுடைய ஊரின் மீது அவளுக்கு இருந்த அபிமானத்தை அவன் புரிந்து வைத்திருந்தான்.. அந்த ஒன்றினாலேயே அவளுடன் தேவராஜன் பேசிக் கொண்டிருந்ததில் அவன் கோபப்பட்டு விட்டான்.. என்னதான் இருந்தாலும் தேவராஜன் மதுரைக்காரனாயிற்றே என்ற எண்ணம் அவனுக்கு...

அந்தக் கோபத்தில் அவன் காவ்யாவைத் திட்டி வைக்க... அவளோ போர் முரசைக் கொட்டி.. வேலையை விட்டு விடுகிறேன் என்று கிளம்பி விட்டாள்...

ஒருவழியாய் சமாதானம் ஆனாலும்... காவ்யாவின் மனதில் அவனைப் பற்றிச் சிறுதுளியளவு கூட எண்ணமில்லையா என்ற தாபம் அவனுக்குள் இருந்தது...

அந்தத் தாபத்தை தீர்த்து வைப்பதைப் போல... காவ்யா பாவனாவிடம் அவனைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போக.. அர்ஜீனின் காதுகளில் தேன் வந்து பாய்ந்தது...

அவனது ஒவ்வொரு அசைவையும்.. அங்குலம்.. அங்குலமாக அவள் ரசித்திருப்பதை பாவனா புரிந்து கொண்டதைப் போலவே அவனும் புரிந்து கொண்டான்.. அந்தப் புரிதலில் அவனுக்குள் உற்சாக ஊற்றெடுத்தது.. உதடுகளைக் குவித்து மெலிதான சீழ்க்கையொலியுடன் திரும்பி வந்தவனை.. கடையின் வேலையாள்கள் விசித்திரமாகப் பார்த்தார்கள்...

“என்னடா இளங்கோ.. புது முதலாளி வெளிநாட்டில படிச்சவர்ன்னாங்க.. இவரென்னடான்னா விசிலடிச்சான் குஞ்சா இருக்காரு...”

“ஒரு வேளை... இதையும் சேர்த்து படிச்சிட்டு வந்தாரோ என்னவோ...”

“விசிலடிக்ககூட வெளிநாட்டில் சொல்லிக் கொடுப்பாங்களா..?”

“ஏன்..? அத நம்ம நாட்டுக்குத்தான் சொந்தம்ன்னு பட்டாப் போட்டுக் கொடுத்திருக்காங்களா...?”

அவனது ‘விசில்’ வேலையாள்களின் மத்தியில் வழக்கைக் கிளப்பி விட்டிருக்கிறது என்பதைக் கவனிக்காமல் அறைக்குள் போய் விட்டான் அர்ஜீன்...

பாவனாவிடம் பேச வேண்டிய கடைசி நிமிட ரகசியக் கிசுகிசுக்களைக் கிசுகிசுத்து விட்டு அறைக்கு திரும்பி வந்த காவ்யா புருவங்களை உயர்த்தினாள்..

‘இவன் இன்னும் சாப்பிடப் போகலையா...?’

மனதில் நினைத்ததை அவனிடம் கேட்கவில்லை...

‘அது என்ன தேவைக்கு..? இவன் உச்சாணிக் கொம்பில ஏறிக்கிறதுக்கா..? இவன் பசிக்கு இவன் தானே சாப்பிட்டாகனும்..? வயிறு பசிச்சா சாப்பிட்டுட்டுப் போறான்..’

அலட்சியப் படுத்த முயன்றாலும்... ஏன் இன்னும் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறான் என்ற கவலை அவளுக்குள் எழுந்தது...

‘எப்பப் பார்த்தாலும் ஆலவட்டம் போட்டுக்கிட்டே இருக்கிறது.. ஊரைச் சுத்தற மகராசனுக்கு நேராநேரத்தில வயித்துக்குள்ள எதையாச்சும் போட்டுக்கனும்கிற நினைப்பு இருக்க வேணாமா..?’ மனதுக்குள் திட்டித் தீர்த்தாள்...

அவளின் மன உணர்வுகள்.. முகத்தில் பிரதிபலிக்கிறதா என்று அவதானிப்பவனைப் போல.. சுழல் நாற்காலியில் சுழன்றபடி அவளையே கவனித்துக் கொண்டிருந்தான் அர்ஜீன்..

அதை காவ்யாவும் உணர்ந்துதான் இருந்தாள்.. இவனுக்கு இதைவிட்டால் வேறு வேலை இல்லையா.. என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டபடி கோபப் படுவதைப் போல முகத்தை வைத்துக் கொண்டாள்...

அவள் கம்யுட்டரின் திரையைக் கவனிப்பதும்.. கையிலிருந்த பேப்பர்களைக் கவனிப்பதுமாக.. வேலையை ஆரம்பிக்க அவளின் விழிகள் சுழல்வதை ரசித்தான் அவன்..

குனிந்த அவள் முகத்தில்.. நெற்றியிலிருந்து விலகிவந்த முடிக்கற்றை விழுந்தது.. அதைக் கோதிசரி செய்தபடி நிமிர்ந்து பார்த்தவள் அவன் பார்வையைச் சந்தித்தாள்...

‘ஆரம்பிச்சுட்டானா...’

அவன் பார்வையை உணர்ந்தவளின் கன்னம் சிவந்தது.. மனதுக்குள் தோன்றிய படபடப்பையும்.. பரபரப்பையும் மறைக்க முயன்றபடி.. உதடுகளைக் கடித்தாள் காவ்யா...

அவளது பரபரப்பை அவன் உணர்ந்துதான் இருந்தான்... லேசான சிரிப்போடு.. அவளை பார்வையிடுவதை தொடர்ந்தான்..

‘இவன் இதுக்குத்தான் மதுரைக்கு வர்றான்...’

எரிச்சல்பட முயன்றாள் காவ்யா.. ஆனால்.. என்னதான் அவள் எரிச்சலை வெற்றிலை பாக்கு வைத்து வா... வா.. என்று வருந்தி அழைத்தாலும்.. அது வர மாட்டேனென்று அடம் பிடித்தது...

‘பார்வையொன்றே போதுமா...’

மனதுக்குள் அவள் கேட்டுக் கொண்டாள்.. இப்படிச் சாப்பிடப் போகாமல் அழிச்சாட்டியம் பண்ணிக் கொண்டிருப்பவனுக்கு என்னதான் தேவை என்ற கேள்வி அவள் மனதில் முளைத்தது...

அர்ஜீனின் செல்போனின் மணியொலித்தது.. அவன் அதை எடுத்தான்.. காதுக்கு கொடுத்தான்.. ஆள்காட்டி விரலால் காதோரமாக கோடிழுத்தபடி அவளைப் பார்த்தான்.. அவன் எதிர்பார்த்ததைப் போலவே அவளின் விழிகள் உயர்ந்தன... அவனது ஆள்காட்டி விரல் கோடிழுப்பதை மனதுக்குள் பதிவு செய்தபடி.. எதுவும் அறியாதவளைப் போல அவள் குனிந்து வேலையைத் தொடர்ந்தாள்...

‘சைட் அடிக்கிறா..’ அவன் முகத்தில் கள்ளச்சிரிப்பு மலர்ந்தது.. போனை அணைத்து விட்டு...

“காவ்யா...” என்று கூப்பிட்டான்...

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.. என்னவென்று கேட்கிறாளா பார் என்ற எண்ணம் கோபமில்லாமல் அவன் மனதில் எழுந்தது...

அவனுக்குத்தான் அவளின் இந்த தெனாவெட்டைப் பிடித்து வைக்குமே...

‘திமிர்...’ அவன் அதையும் ரசித்தான்...

“நான் பாரின் போயிருந்தப்ப இம்போர்ட் ஆன கம்யூட்டர்ஸ் எத்தனை..? அதைப் பத்தின ஃபுல் பர்டிகுலர்ஸீம் எனக்கு வேணுமே...”

அவளிடம் அவன் பேசிக் கொண்டிருந்தபோதே திரும்பவும் செல்போன் அலறியது.. எடுத்து நம்பரைப் பார்த்தவன்...

“அதுக்குள்ளே கூப்பிட்டுட்டான்.. விவரம் சொல்ல கொஞ்சமாவது டைம் கொடுக்க வேணாமா..?” என்று சலித்துக் கொண்டபடி போனை உயிர்ப்பித்தான்...

“வெயிட் மிஸ்டர் கனகலிங்கம்.. என் செகரட்டரி சாப்பிடப் போயிருந்தாங்க.. இப்பத்தான் வந்திருக்காங்க.. நீங்க கேட்ட பர்டிகுலர்ஸை கொஞ்ச நேரத்தில் கொடுத்து விடுகிறேன்... அவசரப் படாதீங்க...” என்று கண்டிப்பான தொனியில் பேசினான்...

‘இதுக்காகத்தான் சாப்பிடப் போகாம உக்காந்திருக்கானா...’ காவ்யா அவசரமாக எழுந்தாள்...

“இதோ சார்...”

அவள் நீட்டிய ஃபைலை வாங்கிய அர்ஜீன்.. செல்போனில் அந்தக் கனகலிங்கத்தை அழைத்து விவரங்களைச் சொல்ல ஆரம்பித்தான்...

அவன் சொல்லி முடித்ததும்.. ஃபைலை வாங்கிக் கொண்ட காவ்யா மனம் தாளாமல்...

"அப்பவே என்னைக் கூப்பிட்டிருக்கலாமே.." என்று சொல்லி விட்டாள்...

"எப்பவே..?" அவன் புருவங்களை தோரணையாக உயர்த்தினான்..

'இதுக்கொண்ணும் குறைச்சலில்ல...' எரிச்சல் படுவதைப் போல அவள் அதை ரசித்தாள்...

"நான் சாப்பிடப் போனப்பவே கூப்பிட்டிருக்கலாம்.."

'அதற்காகத்தான் வந்தேன்...' மனதில் நினைத்தபடி லேசாக சிரித்தான் அர்ஜீன்...

'வயித்தில பசியை வைச்சுக்கிட்டு சிரிப்பென்ன வேண்டிக் கிடக்கு...' காவ்யா முறைத்தாள்...

அர்ஜீன் அதையெல்லாம் கண்டு கொள்வதாக இல்லை... அவன் மனதில் சந்தோசம் பரவியிருந்தது.. அவளை அழைக்கப் போனவன்.. அதை மறந்து.. அவள் பேசுவதைக் கேட்டு விட்டு திரும்பி வந்த கதையை இவள் அறிவாளா என்ற ரகசியப் புன்னகை அவன் முகத்தில் ஒட்டியிருந்தது..

"சாப்பிட்டு வரட்டுமேன்னு நினைச்சேன்..."

"நீங்க இன்னும் சாப்பிடலையே..."

அவள் பட்டென்று சொல்லி விட்டாள்.. அவளையும் அறியாமல் அவள் மனதிலிருந்த அக்கறையும்.. ஆதங்கமும் வெளிப்பட்டு விட்டதில் அர்ஜீனின் கண்களில் மின்னல் வந்தது...

‘கண்டு புடிச்சிட்டானே...’ காவ்யாவின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது..

‘சும்மாவே இவனைப் பிடிக்க முடியாது.. இதில இதுவும் சேர்ந்துக்கிட்டா சொல்லவே வேணாம்.. இவன் ஆட்டத்தை அடக்க முடியாதே..’ எதிர்பார்ப்புடன் நினைத்துக் கொண்டாள்..

“இவ்வளவு அக்கறையிருக்கிறவங்க.. கொண்டு வந்த சாப்பாட்டைக் கொடுத்திருக்கலாமே..” அவன் வம்புக்கு இளுத்தான்...

“நீங்க அதிலேயே குறியாய் இருங்க.. அது எங்க அம்மா எனக்குன்னு ஆக்கிக் கொடுத்த சோறு...”

“அதைப் பங்கு போட்டுக்கிட்டா ஆகாதா..?”

“ஆகாது...”

“யாருக்கு...?”

“எங்க அம்மாவுக்கு...”

இதைக் கேட்டதும்.. அர்ஜீன் டேபிளில் சரிந்து அவள் முகத்தை ஊன்றிப் பார்த்தான்.. அவன் கண்களில் ரகசிய மின்னல் வந்திருந்தது...

‘இவன் என்னத்தையோ எக்குத்தப்பாச் சொல்லப் போறான்...’ எதிர்பார்ப்பில் காவ்யாவின் மனம் சிக்கிக் கொண்டது...

அதற்கு முன்னால் அது போல அர்ஜீன் டேபிளில் சரிந்து அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்த தருணங்களில் எல்லாம் அவன் பேசிய பேச்சுக்கள் புதிர் கலந்த புரியாத ஒர்விதமான உணர்வை உணர்த்தின என்பதை அவள் நினைத்துப் பார்த்தாள்...

அதுபோல இப்போதும் அவன் வாய்மொழி எந்த வார்த்தைகளை உதிர்க்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பில் சிக்கியிருந்தவளை அவன் ஏமாற்றி விடவில்லை...

“அப்ப.. உனக்கு ஆகும்ன்னு சொல்லு...”

அவன் விழிகளில் தெரிந்த ரகசிய சங்கேத மொழியைப் படிக்க முயன்று தோற்றவளாய் முகம் திருப்பிக் கொண்டாள் காவ்யா.. அவளது மனதுக்குள் இனம் புரியாத இன்ப உணர்வுகள் எழுந்து நின்றன...

“இந்த வித்தாரப் பேச்சொல்லாம் இங்கே செல்லுபடியாகாது...”

“ஏன்னா.. இது மதுரை.. ஆம் ஐ கரெக்ட்..?”

அவன் பலமாகச் சிரித்து விட்டு எழுந்தான்.. டேபிளைச் சுற்றி அவளருகில் வந்தான்.. காவ்யாவின் விரல்கள் நடுங்கின.. அவனது அருகாமையை உணர்ந்தவளுக்குள் பீதி கிளம்பியது.. பயத்துடன் அறைவாசலை அவள் பார்த்தாள்..

‘யாராச்சும் வந்துட்டா என்ன நினைப்பாங்க...’

அவள் பதட்டத்துடன் நகர முற்பட்டாள்.. அவள் கால்களில் இரும்புக் குண்டைக் கட்டியிருந்ததைப் போல அவளால் நகர முடியவில்லை... அதை உணர்ந்து கொண்ட அவனது சிரிப்பு மேலும் விரிந்தது.. அவள் காதோரமாக அவன் மூச்சுக்காற்றுப் பட்டது.. அவள் மீது பட்டுவிடாமல் தள்ளி நின்றபடி..

"நான் பட்டினி கிடந்தா உன்னாலே தாங்கிக்க முடியலையில்ல..?" என்று அவன் கேட்டான்...

# 30

*மாலை நேரத்து மயக்கத்தையே...*
*உன் மனது உணர ஆசைகொண்டேன்...*

*"மயக்கத்தைத் தந்தவன் யாரடி...?*
*மணமகன் பெயரென்ன கூறடி..*
*மறைவினில் நடந்ததென்னடி..?*
*நீ சொல்லடி.. கதைமாறாமலே.."*

**பா**வனா பாடியதைக் கேட்டதும் காவ்யாவிற்கு கோபம்வந்து விட்டது.. இவளிடம் கையும் களவுமாக எப்படி மாட்டிக் கொள்கிறோம் என்று நினைத்துப் பார்த்தவளுக்கு அது பிடிபடவில்லை...

“ச்சீ.. அசிங்கமாய் பேசாதே...”

“இதைப் பாருடா.. இவ்வளவு நேரமும்.. யாரோ ஒருத்தி.. யாரோ ஒருத்தனின் முகம் பார்த்துக்கிட்டு அசையாம நின்னாளாம்.. அந்த மயக்கத்தைத் தந்தது யாருன்னு கேட்டா.. ச்சீங்கிறாளாம்.. என்ன கொடுமை இளங்கோ...?”

அவர்களைக் கடந்து போன இளங்கோவிடம் பாவனா கேள்வி கேட்க.. அவன் என்ன விவரமென்று தெரியாமலே சிரித்து வைத்தான்...

‘இவன்கிட்டப் பஞ்சாயத்து வைக்கிறாளே...’

காவ்யாவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.. பாவனாவை அடக்க முயன்றவளாக.. ‘ஸ்ஸ்ஸீ..’ ‘த்ச்சு..’ ‘ஸ்ஸ்ஸ்..’ என்பது போன்ற பல ஒலிச்சமிக்ஞைகளை எழுப்பினாள்.. பாவனாவின் காதுகளில் அவை ஏறினபாடாக இல்லை...

“என்ன விசயம் பாவனா..?” கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டவனாக இளங்கோ கேட்டான்...

“இளங்கோ என்னன்னு கேக்கிறார்.. சொல்லிரவா காவ்யா..?” பாவனா பீதியைக் கிளப்பினாள்...

“இவளுக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கு இளங்கோ.. வேற ஒன்னுமில்லை.. நீங்க போங்க..” காவ்யா ஊடே புகுந்து விட்டாள்..

சிநேகிதிகளுக்கு இடையே நிகழும் ரகசிய உரையாடல் அது என்பதை கண்டு கொண்டவனாக இளங்கோ நகர மனமில்லாமல் நகர்ந்து விட்டான்.. இடத்தைக் காலி பண்ணுவதற்காகவே காத்திருந்த காவ்யா.. அவன் தலை மறைந்ததும் பாவனாவின் மீது பாய்ந்தாள்...

"ஏண்டி குரங்கே.. அவனே இஞ்சி தின்ன குரங்கைப் போலப் பல்லைக் காட்டறான்.. அவன்கிட்டப் போயி கட்டப் பஞ்சாயத்து வைக்கிறயே.. உன்னை என்ன செய்தால் தேவலாம்..?"

"இந்தாபாரு.. ஹீரோகிட்ட நான் பேசினா ஏன்னு கேளு.. அதை விட்டுட்டு இஞ்சி திங்கிற குரங்கு கூடக்கூட பேச விடமாட்டேன்னு சொன்னா நல்லாயில்ல.. சொல்லிட்டேன்.."

"அறிவு கெட்டவளே.. அவன் நம்மகிட்ட ஜொள்ளு விடற ஆள்டி..."

"அதை நீ சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கனுமா..? எனக்கே தெரியுமே..."

"தெரிஞ்சம் ஏண்டி அவனை ஊடாலே இழுக்கற..?"

"அவன்கிட்ட பஞ்சாயத்துதானேடி வைச்சேன்..? அதுக்காக அவன் கையைப் பிடிச்சு இழுத்தேன்னு கதை கட்டறியே.. நியாயமாடி..?"

"உன்னை..! ச்சே.. திருத்தவே முடியாதுடி.. நீ எக்கேடோ கெட்டுத் தொலை..."

“அருமையான ஆசிர்வாதம்... இப்படியே மெயின்டெயின் பண்ணு...”

“என்னை எதுக்குடி கிண்டல் பண்ற...?”

“எதுக்குன்னு உனக்குத் தெரியாதா..?”

புருவங்களை உயர்த்தி.. ரகசியச் சிரிப்புடன் கேள்வி கேட்டாள் பாவனா.. காவ்யாவுக்கு என்னவோ போல இருந்தது.. மனதின் உணர்வுகளை பகிரங்கப் படுத்த அவளால் முடியவில்லை.. பொத்தி வைத்த மல்லிகையின் வாசம் வெளியில் கமழலாம்.. அதற்காக பொத்தி வைப்பதை நிறுத்தி விடக் கூடாது...

“உன் கிறுக்குத்தனமான பேச்சுக்கு நான் ஆளில்ல பாவனா.. எனக்கு வேலை கிடக்கு..”

“எனக்கும்தான் வேலையிருக்கு.. நீ என்ன நினைக்கிற..? நீ ஒருத்தி மட்டும்தான் வேலை செய்து சம்பளம் வாங்குகிறன்னு நினைச்சயா...? நானென்ன ஊஞ்சல் கட்டியா ஆடிக்கிட்டிருக்கேன்..?”

“இப்ப என்னாங்கிற...” பொறுக்க முடியாமல் முறைத்தாள் காவ்யா...

“ஒன்னுமில்ல.. ஒரு ஸ்டேட்மென்டில ஹீரோவோட கையெழுத்து தேவைப்பட்டுச்சு.. வாங்கலாம்ன்னுதான் வந்தேன்.. வந்து பார்த்தா...” வார்த்தைகளை முடிக்காமல் கண் சிமிட்டினாள்...

‘அவன் எனக்குப் பக்கத்தில வந்து நின்னதை இவ பார்த்திருக்கா...’ காவ்யா சங்கடப்பட்டுப் போனாள்...

“தொடலை.. ஆனா தொட்டான் படலை... ஆனா... பட்டான்... இந்த விடுகதைக்கு விடையென்ன காவ்யா..?” பாவனா கேட்டாள்...

அவளின் கண்களில் தெரிந்த ரகசிய சிரிப்பைக் கண்ட காவ்யாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது...

‘அப்பவே நினைச்சேன்.. யாராவது பாத்து வைக்கப் போறாங்கன்னு.. நான் பயந்தபடியே ஆகிருச்சு.. மத்தவங்க பாத்திருந்தாக்கூட ஒன்னுமில்ல.. முதலாளி முக்கியமான ஏதோ ஒன்னை.. கிட்டத்திலே நின்னு சொல்லிக் கிட்டிருந்தார்ன்னு நினைச்சுக்கிட்டு போயிருப்பாங்க.. இவ அப்படியில்லை.. ஓடுகிற ஆத்துத் தண்ணியில.. ஒன்பது சுழிவைக் கண்டு பிடிக்கிற ஆளு.. இனி சும்மாவா இருப்பா...’

பாவனா சும்மாவே இல்லை.. அடுத்து வந்த நாள்களில் அதையே சொல்லிக் கொண்டிருந்தாள்... காவ்யா அடித்தாலும் அடங்கவில்லை... அவளின் குடுமியைப் பிடித்தாலும்.. கேலிப்பேச்சை நிறுத்தவில்லை..

“நான் கண்டாலும் கண்டேன்.. உன்னைப் போல ஒருத்தியை உலகத்தில கண்டதில்லைடி.. என்னமா நடிக்கிற..?”

“என்னத்தை நடிச்சேன்..? நீயேண்டி என்னைப் போல ஒருத்தியை தேடிக்கிட்டு இருக்க..? உனக்கு வேற சோலிக் கழுதையே கிடையாதா..?”

“அது எப்படிடீ.. அவ்வளவு கிட்ட வந்து நின்னும்.. உன்னைத் தொடாமலே ஹீரோ மெயின்டெயின் பண்ணினான்.. ஹீரோகிட்ட இந்த வித்தையைப் பத்திக் கேட்கனுமே..”

“ஏய்ய்..”

“ஒரு நூலளவுதாண்டி இடைவெளி இருக்கும்.. அடேங்கப்பா.. ரெண்டு பேருமே சரியான திருடன்.. திருடிங்கடி..”

“பாவனா...”

“ரெண்டு பேரில யாராவது ஒருத்தர் அசைஞ்சிருந்தாக் கூடப் போதும்.. அடுத்தவங்க மேலே உராய்வுதான்.. ஆமா.. உராய்வைப் பத்தி சயின்ஸ் என்ன சொல்லுது...”

“வேணாம்டி...”

“சயின்ஸ்லதாண்டி கெமிஸ்ட்ரி வரும்.. அதைப் போய் வேணாம்ன்னு சொன்னா எப்படி..? ஆமா.. உன் காதோரமாக குனிஞ்சு என்ன செய்தான்..? ஐ மீன்.. என்ன சொன்னான்..?”

“எதையாவது பார்த்துப்புட்டு எக்குத்தப்பா பேசற பிரண்டுகிட்ட இருந்து தள்ளியிருக்கச் சொன்னான்...”

“அம்மணி கரடிக் கதையைச் சொல்றீங்களாக்கும்..? சரியான உவமைதான்.. பூஜை வேளையில கரடியைப்

போல வந்து நின்னவ நான்தானே..? எனக்குக் கரடிப் பட்டம் கொடுக்கிறது சரிதான்..."

"உளராதே பாவனா..."

"அதானே.. அதையெல்லாம் நான் ஏன் செய்யனும்..? நானா மயக்கத்தில இருக்கேன்..? மயக்கத்தில இருக்கிறவங்கதான் உளறிக் கொட்டி.. கிளறி மூடனும்.."

அர்ஜீன் முக்கியமான வேலையொன்றைச் சொல்லிக் கொண்டிருந்தான் என்று காவ்யா சொல்லிப் பார்த்து விட்டாள்... அதையெல்லாம் காது கொடுத்துக் கேட்பதற்கு பாவனா தயாராக இல்லை.. அவள் உன்னை நான் அறிவேன் என்ற ஒரே நேர் கோட்டில் நின்று விட்டாள்...

சொல்லிச் சொல்லி அலுத்துப் போன காவ்யாவும் எப்படியோ தொலை என்று விட்டு விட்டாள்.. ஆனால்.. பாவனாவின் கேலி அத்து மீறும்போது.. அவளுக்கு மனம் தாங்காது...

"வேண்டாம் பாவனா.. அவன் யாரோ எவரோ.. மதுரைக்கு கடையை வாங்கினதாலே வந்து போகிறான் நானும் கல்யாணம் ஆகிற வரைக்கும்.. வெளியுலகைப் பார்க்கிறேன்னு வேலைக்கு வந்து... போய்க்கிட்டு இருக்கேன்.. நீ யானைக்கும்.. பூனைக்கும் சம்பந்தம் பேசாதே..."

"அடிப்போடி.. அந்த விண்ணுக்கும்.. மண்ணுக்கும் சம்பந்தமுண்டுன்னு பாட்டே இருக்கு..."

“சினிமாவில் நடக்கிறதெல்லாம் வாழ்க்கையில் நடக்காது...”

“அப்புறம் ஏண்டி.. அவன் உன் பக்கத்திலே வந்து உராயாமல் உன்னை உராய்ந்தான்...?”

“அதை விடவே மாட்டியாடி...?”

“நீ விட்டுட்டியா..?”

பாவனா காவ்யாவின் ஆழ்மனதை தொட்டு விட்டாள்.. அதிர்ந்து விழித்த காவ்யா.. வேலையிருப்பதைப் போல எழுந்து சென்று விட்டாள்.. அவள் மனது பதறியது...

விடவில்லையே.. காவ்யாவின் மனது அதை நினைக்காமல் இருந்ததில்லையே.. அன்று அவன் கேட்டானே...

‘நான் பட்டினி கிடந்தா உன்னால தாங்கிக்க முடியலையில்ல..?’ என்று..

அவன் அத்தோடு நிறுத்தினானா..? அதற்கு மேலும் கேட்டான்...

“ஏன் காவ்யா...?”

ஏனென்று அவள் எப்படிச் சொல்வாள்..? அவனின் மூச்சுக் காற்றில் அவளின் முடி பறந்த போத.. அவள் மனம் துடித்த துடிப்பை அவளால் அவனிடம் சொல்ல முடிந்ததா..? அவனது ஆண்மை நிறைந்த அண்மையில்.. அவளின் இளம்மனது தறி கெட்டுப் பாய்ந்ததை அவளால் அவனிடம் சொல்ல முடிந்ததா..? காதோரமாக குனிந்த

அவனின் மூச்சுக் காற்றின் வெப்பத்தில்.. அவளின் ரகசியக் கனவு குளிர் காய்ந்ததை அவளால் அவனிடம் சொல்ல முடிந்ததா..? அவனிடமிருந்து வெளிப்பட்ட பிரத்யேகமான நறுமணத்தை அவளது நாசி நுகர்ந்து கிறங்கியதை அவளால் அவனிடம் சொல்ல முடிந்ததா..? அவனது முன்னுச்சி முடி கலைந்து சிதறியிருந்ததில்.. அவள் மனது கலைந்து சிதறியதை.. அவளால் அவனிடம் சொல்ல முடிந்ததா..? அவன் கிட்ட வந்து.. முட்டி நின்றபோது.. எங்கிருந்தோ ஆசைகள் வந்து அவளது இளம் மனதில் குடி புகுந்ததை அவளால் அவனிடம் சொல்ல முடிந்ததா..?

எதையும் சொல்ல முடியாமல் கிளர்ந்து தவித்தாள் அந்தப் பேதை...

“நான் சொல்லவா..?” அவன் கிசுகிசுத்தான்...

‘வேண்டாம்.. சொல்லாதே...’ அவள் மனதுக்குள் அரற்றினாள்...

‘நீ எதையாவது சொல்லி வைத்து என் மனதில் ஆசைத் தீயை மூட்டி விடாதே... நான் தாங்க மாட்டேன்.. நீ வேறு.. நான் வேறு...’

“என் பசி உன்னைப் பாதிக்குதுன்னா அதுக்கு ஒரேயொரு அர்த்தம்தான் இருக்க முடியும்..” அவன் கிறங்கிப் போன குரலில் சொல்லிக் கொண்டிருந்த போது.. அறைவாசலில் சப்தம் கேட்டது...

அர்ஜீன் சட்டென்று விலகி நின்றான்.. யாரோ வந்து போயிருப்பதை ஆடிக் கொண்டிருந்த வாசல் கதவு உணர்த்தியது.. காவ்யா அதற்குள் சமாளித்துக்

கொண்டவளாக.. தன்னுணர்விற்கு மீண்டு விட்டாள்.. அழகான நாதத்திற்கு.. இடையே தடை ஏற்பட்டு விட்ட உணர்வுடன் அர்ஜீன் எரிச்சலானான்...

"யார் வந்து போனது..?"

"எனக்கென்ன தெரியும் சார்..? இது கடை... பலபேரு வந்து போகிற இடம்.. அதை மறந்திரக்கூடாது..."

வரவழைத்துக் கொண்ட கடுமையுடன் பேசிய காவ்யாவின் முகத்தை கூர்ந்து பார்த்தான் அர்ஜீன்.. அதில் சற்று முன்னால் பார்த்த மயக்கத்தின் சுவடு தெரியவில்லை.. அவனது புருவங்கள் முடிச்சிட்டன.. இவ்வளவு சீக்கிரத்தில் அவள் அந்த மயக்கத்திலிருந்து வெளியேறி விட்டதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை..

"நான் கேட்டதுக்கு நீ பதில் சொல்லலையே..." கடினமான குரலுடன் கேட்டான்...

"என்ன கேட்டிங்க..?"

"ஓ.. அதுக்குள்ள 'எல்லாத்தையும்..' மறந்துட்டியா..?"

அவன் 'எல்லாத்தையும்' என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்ததில் அவளின் முகம் சிவந்து விட்டது..

"உங்க பசியைப் பத்தி சொன்னீங்க.. உங்க பசி என்னைப் பாதிக்கிறதுக்கான அர்த்தம் ஒன்னே ஒன்னுதான்.. அது மனிதாபிமானம்.. நான் மட்டும் வயிறு நிறைய சாப்பிட்டுட்டு வந்து உட்கார்ந்திருக்க.. என் கண்ணுக்கு முன்னாலே உட்கார்ந்திருக்கிறவங்க பசியோடு இருந்தா அது என்னைப் பாதிக்காதா...?"

‘அவ்வளவுதானா..?’ அர்ஜீன் அவளை உறுத்துப் பார்த்தான்...

அவனது பார்வையின் வேகத்தைத் தாங்க மாட்டாமல் அவள் தலை குனிந்து கொண்டாள்.. அன்று இரவு படுத்துத் தூங்க முயன்றபோது அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை.. பக்கத்துத் தெருவில் யார் வீட்டிலோ விசேசத்திற்காக கட்டப்பட்டிருந்த ஒலி பெருக்கியில் பழைய பாடலொன்று தவழ்ந்து வந்தது...

*“எங்கிருந்ததோ ஆசைகள்..*
*எண்ணத்திலே ஓசைகள்..*
*என்னென்று சொல்லத் தெரியாமலே...*
*நான்.. ஏன்.. இன்று.. வாடினேன்..?”*

எங்கிருந்தோ வந்த ஆசைகளின் அலைக்கழிப்பை சொல்ல முடியாதவளாக அவள் தூங்க முயன்று போராடித் தோற்றுக் கொண்டிருந்தாள்...

# 31

*என் ஒரு கோடி ஆசைகளை..*
*நீ உணர ஆசைகொண்டேன்..*

**ப**ச்சைப் பசேலென்ற மலையடிவாரம்.. அதில் கம்பீரமான அழகோடு.. அந்தக் கள்ளழகரைப் போலவே.. காண்பவர்களின் மனதைக் கொள்ளையடிக்கும் விதமாக வான்முட்ட எழுந்து நிற்கும் கோபுரத்தோடு.. காட்சி தரும் அழகர் கோவில்.. அதன் முன்னாலிருந்த அகன்ற பெரும் மைதானத்தில் அந்த சொகுசு வேன் பிரேக்கடித்து நின்றது..

“கோவில் வந்திருச்சு..” டிரைவர் குரல் கொடுத்தான்..

முன்னாலிருந்த சீட்டில் அமர்ந்து.. முன்பக்கம் பார்க்காமல்.. பின்பக்கமாக பார்த்தவண்ணம்.. பயணம் செய்த அர்ஜீனை பார்க்காததைப் போல கள்ளப்பார்வை பார்த்துக் கொண்டிருந்த காவ்யாவின் முதுகில் ஓங்கி ஒரு போடு போட்டு.. உலக நினைவுக்கு அவளை இழுத்துக் கொண்டு வந்தாள் பாவனா..

‘சுரீர்’ என்ற அடியின் வலி உறைக்க.. முதுகைத் தடவியபடி தோழியை முறைத்தாள் காவ்யா...

“ஏண்டி குரங்கே.. சும்மா கூப்பிட மாட்டியா...? அடிச்சுத்தான் கூப்பிடுவியோ...”

“வேற வழி..? வேன் கோவில் வாசலுக்கு வந்து நின்னு ஆறு நிமிசமாகிருச்சு.. மகாராணி இறங்கனும்கிற நினைப்பே இல்லாம கனவில மிதந்துக்கிட்டு இருக்கீங்க.. அப்புறம் அடிச்சு எழுப்பாம என்ன செய்வாங்களாம்..?”

பாவனா சொன்னதைக் கேட்டதும் காவ்யாவுக்கு வெட்கமாகி விட்டது.. அவள் சுற்று முற்றும் பார்த்தாள்..

அவர்கள் மூவரையும் தவிர.. மற்றவர்கள் வேனை விட்டு கீழே இறங்கியிருந்தார்கள்....

"நாம மட்டும்தான் இருக்கோமா..?" அவள் முகத்தில் அசடு வழிந்தது...

"வழியறதைத் துடை.. உன்னாலே நானும் வேனுக்குள்ள மாட்டிக்கிட்டேன்.. ஜன்னலோர சீட்டுக்கு ஆசைப்பட்டுத் தொலைச்சது தப்பாப் போயிருச்சு.. இப்படி ஓரச்சீட்டில உட்கார்ந்துக்கிட்டு என்னை இறங்க விடாம வழி மறிப்பேன்னு கனவா கண்டேன்..?"

அவள் முகத்தில் வெடித்த எள்ளையும்.. கொள்ளையும் கண்ட காவ்யா.. எழுந்து கொள்ள மனமில்லாமல் எழுந்தாள்.. அப்போதும் அர்ஜீன் எழுந்து கொள்ளாமல் சீட்டிலேயே அமர்ந்திருந்தான்..

"என்னடி.. இவன் இறங்காம உட்கார்ந்திருக்கான்..?" காவ்யா பாவனாவின் காதோரமாக கிசுகிசுத்தாள்..

"என்கிட்டக் கேட்டா..? எனக்கென்ன தெரியும்..? உனக்கு வாயிருக்குதானே.. ஊமையில்லையே.. அவன் கிட்டேயே கேளு.. அதுக்கு முதல்ல எனக்கு வழியை விட்டுட்டு.. அப்புறமா கேளு.. நான் வேனை விட்டு இறங்கனும்..."

"நானும்தான் இறங்கனும்..."

"அந்த நினைப்புக்கூட உன் மனசில இருக்கா...?"

"ஏண்டி கோவிச்சுக்கற...?"

“ஏன்னு உனக்குத் தெரியாதாக்கும்..? அந்த மனுசன்தான் முதலாளியாப் போயிட்டான்.. அவன் பக்கத்தில் சரிசமமாய் யாரும் உட்காரலை... தனியாய் உட்கார்ந்திருக்கிறவன்.. இறங்கினாலும்.. இறங்கலைன்னாலும் மத்தவங்களுக்கு பாதிப்பில்லை.. நீ அப்படியா..? என்கூட இணை போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கிற.. என்னடா.. நாம எழுந்திருச்சாத்தான.. இவளும் எழுந்திருப்பான்னு ஒரு அறிவு வேணாம்...?”

பாவனா படபடத்தாள்.. அவளும்தான் என்ன செய்வாள்..? அவளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே அந்த நினைவில்லாமல் நொடிக்கொரு தரம் இமையைத் தாழ்த்தி தரையைப் பார்ப்பதும்.. அடுத்த நொடியே இமையை உயர்த்தி அவனைப் பார்ப்பதுமாக காவ்யா அழும்பு பண்ணிக் கொண்டே வந்தால் அவளுக்கு பொறாமைக்கனல் பொங்கி வழியாதா..?

‘இவளை இந்தப் பார்வை பார்க்கிறான்.. பக்கத்தில உட்கார்ந்திருக்கிற என்பக்கம் அரைக்காவாசியாவது பார்வையை வீசறானா..?’

என்னவோ.. ராமன் சீதையைப் பார்ப்பதைப் போல.. ஒருத்திக்கு ஒருவனாய் காவ்யாவை மட்டும் அர்ஜீன் பார்வையிட்டுக் கொண்டே வந்ததில் பாவனா கடுப்பாகிப் போனாள்..

‘லைலா மஜ்னு கெட்டாங்க.. இந்த லட்சணத்தில இவளைக் கேட்டா.. இது காதல் இல்லேம்பா.. அதை நான் ஊம் கொட்டிக் கேட்டுக்கனும்.. கள்ளழகா.. நீயே இந்த நியாயத்தைக் கேளு...’

அழகர் இதைப் பற்றியெல்லாம் கண்டு கொள்கிறவராக இல்லை.. காதலில் இதெல்லாம் சகஜம்ப்பா என்று சொல்லாமல் சொல்கிறவரைப் போல புன்னகையுடன் கோவில் கோபுரத்தில் காட்சிதந்தார்..

'ம்ஹீம்.. நீயே கள்ளன்.. உன்கிட்டே வந்து நான் கேணச்சியைப் போலக் கம்ப்ளெயிண்ட் பண்ணுகிறேன் பாரு.. நீ இந்தக் கள்ளிக்குத்தானே சப்போர்ட் பண்ணுவ..' பாவனா மனதுக்குள் கள்ளழகருடன் செல்லச் சண்டை போட்டாள்...

வேனுக்குள் அமர்ந்திருந்த அர்ஜீனையும்.. காவ்யாவையும் தரையிறங்க வைப்பதற்குள் அவளுக்கு போதும்.. போதுமென்று ஆகிவிட்டது.. அவர்களுக்கு முன்னாலேயே தரையிறங்கியிருந்தவர்கள்.. பொறுமையாக காத்திருந்தார்கள்...

வெளிநாட்டுக் காரை வைத்திருக்கும் முதலாளி.. அந்தக் காரில் பயணம் செய்யாமல்... அவர்களுடன் சரிசமமாக வேனில் பயணம் செய்த ஆனந்த அதிர்ச்சியிலிருந்து.. அவர்கள் மீளவில்லை...

அர்ஜீனின் கடையில் விற்பனைப் பிரிவில் வேலை செய்து கொண்டிருக்கும் இளங்கோவுக்கு திருமணம்... அதற்காகத்தான் அவர்கள் வந்திருந்தார்கள்.. பாவனாவிடம் அவன் பத்திரிக்கையை நீட்டியபோது.. அவள் சிடுசிடுப்புடன் பத்திரிக்கையை வாங்கிக் கொண்டாள்...

“இவன் இப்போ எதுக்காகடி கல்யாணத்துக்கு அவசரப் படறான்..?” என்று அவன் போன பின்பு காவ்யாவிடம் கோபப்பட்டாள்..

காவ்யா அவளை விசித்திரமாகப் பார்த்தாள்...

“அவன் கல்யாணம் பண்ணிக்கிட்டா உனக்கென்னடி..?”

“ம்ப்ச்.. இந்தக் கடையில வேலை பார்க்கிற பேச்சலர்ஸில.. இவன் ஒருத்தன்தான் கொஞ்சமாவது பாக்கறமாதிரி இருக்கான்...”

“அதுக்கு..?”

“இவனும் கல்யாணம் பண்ணிக்கிட்டா.. யாரை நான் சைட் அடிக்கிறது..?”

“அடிப்பாவி...”

இப்படிப்பட்ட நியாயத்தை காவ்யா எங்கேயும் கேட்டதில்லை..

“அடிப்பாவியா..? ஏண்டி கேக்க மாட்ட.. நீ மட்டும் ஹீரோவ சைட் அடிக்கலாம்.. நான் இளங்கோவ சைட் அடிக்கக் கூடாதாக்கும்..?”

“அபாண்டமாய் பேசாதே பாவனா.. நான் யாரையும் சைட் அடிக்கலை...”

தந்நெஞ்சறிய பொய் சொன்னாள் காவ்யா.. அவள் நெஞ்சம் ‘பொய்’ என்று கூவியது...

பாவனா.. அப்படிக் கூவாமலே.. உன்னை எனக்குத் தெரியாதா என்ற ரீதியில் நம்பாத பார்வையினைப் பார்த்து வைத்தாள்...

"நிஜமாத்தான் பாவனா.. இருந்திருந்தும் இந்த அலட்டல் கேஸ் கிட்டயா நான் மயங்குவேன்..?"

"அப்படியா..?"

"இது பேச்சும்.. சிரிப்பும்.. மனசுக்குள்ள என்னவோ மன்மதன்னு நினைப்பு..."

"நீ ரதின்னு நினைச்சுக்கற போல..."

"போடி நீ வேற.. எனக்கொன்னும் ரதியாக வேணாம்.. இஸ்ஸெல்லாம் ஒரு ஆளு.. இஸ்ஸைப் போய் நான் சைட் அடிக்கிறேன்.. ஏண்டி எரிச்சலைக் கிளப்பற...?"

இப்படிக் கேட்ட காவ்யாவின் முகத்தில் எரிச்சலின் சாயல் துளிக்கூட இல்லை.. மாறாக.. ஒர்விதமான கிறக்கம் பரவிப் படர்ந்திருந்தது...

"என்னைப் பாத்தா உனக்கு எப்படித் தெரியுது..? கேணச்சியைப் போலத் தெரியுதா..? 'இஸ்ஸீ.. இஸ்ஸீ'ன்னு சொல்லிக்கிட்டே நீதான் இஸ்ஸைப் போல.. ஒரு மார்க்கமா முழிக்கற.. நீ ஹீரோவை சைட் அடிக்கலை..! உன் மனசில காதல் இல்லை..! ம்ஹீம்.. நம்பிட்டேன்.."

"இப்பல்லாம் நீ என்னை நம்பறதே இல்ல பாவனா.."

"இப்பத்தான் நீ டோட்டலா மாறிப் போயிருக்கியே.."

“என்னவோ போ.. நீ எதையெதையோ சொல்லுவ.. அதுக்கு நான் ஆளில்ல.. ஆமாம்.. உனக்கு அந்த இளங்கோவப் பிடிச்சிருந்தா அவன்கிட்டச் சொல்லியிருக்க வேண்டியதுதான...?”

“எதை..?”

“உன் மனசில இருக்கிற காதலை..”

இப்படிச் சொன்னவளை வெட்டவா.. இல்லை குத்தவா.. என்பதைப் போல பார்த்தாள் பாவனா...

‘ஏன் இப்படிப் பார்க்கிறா..?’ காவ்யாவுக்குப் புரியவில்லை...

“என் சம்பளத்தில முக்கால்வாசிகூட வாங்க மாட்டான்.. பிளஸ் ஒன்னைக்கூடத் தாண்டத் துப்பில்லாதவன்.. இவன்கிட்டப் போயி நான் காதல் சொல்லறதா..? ஏண்டி உனக்கிந்த கொலைவெறி..? ஆனானப் பட்ட ஹீரோகிட்டயே காதல் சொல்லாத ஆளு நீ.. என்னைப் போயி இவன்கூட கோர்த்து விடப் பாக்கறியே.. நான் உனக்கு என்ன கெடுதல்டி பண்ணினேன்..?”

“பாவனா..? !” காவ்யா அயர்ந்து விட்டாள்..

“இந்தப் பக்கம் லொக்கு.. லொக்கு ஏகாம்பரம்.. வாசல்பக்கம் கிழட்டுக் கந்தசாமின்னு.. பாலைவனம் போல இருக்கிற ஆபிசில இவன் கொஞ்சம் இளம் வயசா.. கொஞ்சூண்டு லட்சணசமா.. பாலைவனச் சோலை போல இருந்தான்.. சரிதான்னு.. நினைச்சா நீ காதல் வரைக்கும் போய் நிக்கிற...?”

பாவனாவின் வியாக்கினத்தில் காவ்யா கையெடுத்து கும்பிட்டு விட்டாள்..

“அம்மா.. தாயே.. இனி உன் விசயத்தில நான் வாயைத் திறக்கவே மாட்டேன்டி.. இப்பக் கேட்டதே ஆயுசு முழுக்க என் காதுல ஒலிச்சுக்கிட்டே இருக்குடி...”

“அஃது.. அந்த பயம் இருக்கட்டும்.. என் விசயத்தில எந்தக் கணக்கையும் போடாத..”

“இனிப் போடுவேனா..? யாரு நீ..? கணக்கில அடங்காத ஆளில்ல...”

“இளங்கோ போனா என்னடி..? அடுத்த ரேங்கில கவிக்கோ இருக்கானில்ல..”

“கவிக்கோவா..?”

“ம்ம்ம்.. நம்ம தங்க ராசுவத்தான் சொல்றேன்..”

“அவன் எப்படி கவிக்கோவா ஆனான்...?”

“அதுவா காவ்யா.. அவன் ஒருநாள் என்னைப்பத்தி கவிதை எழுதி காகிதத்தை நீட்டிப்புட்டாண்டி...”

“நிஜமாவா சொல்ற..? அவன் கவிதை எழுதினானா..?”

“காகிதத்தில எழுதியிருந்தான்.. அவ்வளவுதான்.. அதை கவிதைன்னு அவன்தான் சொல்லிக்கிட்டான்..”

“பார்றா.. அப்படி என்னதான் எழுதியிந்தாண்டி..?”

“அன்பே...! உன் பேரு பாவனா..? உன்னோடு வாழாம நான் சாவேனா..?”

“என்னடி இது..?”

“கவித.. இன்னும் கேளு.. நம்ம ஊரில ஓடுது வைகை.. நீ என்னோட கை மேல உன் கையை வை..”

“அடிச்சுப் பல்லைக் கழட்டியிருக்கனும்டி...”

“அது எதுக்கு..? என்னதான் இருந்தாலும் காவ்யா.. அவனோட அறிவுக்கு இது அதிகமான முயற்சிதானே..? இதைப் பாராட்ட வேணாமா..?”

“எப்படித்தான் இப்படி இருக்கியோ...”

“என்னமோ இருக்கேன்.. அதைவிடு.. அடுத்த வரியைக் கேளு... மதுரையில வரப்போகுது மீனாட்சி கல்யாணம்.. எப்போ நமக்கு கல்யாணம்...?”

“ஸ்ஸ்ஸ்.. ஆத்தாடி...”

“இப்பவே கண்ணைக் கட்டினா எப்புடி..? கவிதையில இன்னும் ஒருவரிதான இருக்கு..?”

“முடியலடி பாவனா.. சோதிக்காதே...”

“சோதனையைச் சந்திச்சவளே சும்மாயிருக்கேன்.. ஊம் போட்டு கேட்டவளுக்கு ஏண்டி உனக்கையா கோவம் வருது..?”

“அப்ப.. விட மாட்ட..?”

“மாட்டேன்.. யான் பெற்ற துன்பம்.. பெறுக இந்தக் காவ்யாவும்...”

“சொல்லித் தொலை..”

“ஒன்னும் ஒன்னும் ரெண்டு..”

“என்னடி... கணக்கைச் சொல்றான்..?”

“இல்லைடி.. கவித சொல்றான்.. ஒன்னும் ஒன்னும் ரெண்டு.. ஆனா நாம ரெண்டு பேரும் ஒன்னு.. எப்புடி..? பிய்ச்சு உதறிட்டானில்ல..?”

“உனக்கு அவன்தாண்டி லாயக்கு...”

“ஊஹீம்.. ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப் பூதான் சக்கரை.. உன் ஹீரோ கிடைக்காத பாவனாவுக்கு.. தங்கராசோட மொக்கைதான் கவிதை..”

“ஏய்ய்..” காவ்யாவுக்கு கோபம் வந்துவிட்டது..

அந்தக் கோபம் பாவனாவின் எக்குத்தப்பான ரசனைக்கான வந்ததல்ல.. அர்ஜீனின் மீது அவளுக்கிருந்த மோகத்தை வெளிப்படையாக அவள் சொன்னதினால் வந்தது என்பதில் காவ்யாவுக்குள் கலவரம் மூண்டது...

# 32

*ஊரறியாத என் மனதை...*
*நீயறிய ஆசைகொண்டேன்...*

**கா**வ்யாவுக்குள் இருந்த ஏக்கம் நிறைந்த ஆசையை நினைத்துப் பார்க்கவும் அவளுக்கு துணிச்சல் வரவில்லை.. கோடு தாண்டாமல் வாழ வேண்டிய வாழ்க்கையைத்தான்

அன்னபூரணி மகளுக்குக் கற்றுக் கொடுத்திருந்தாள்.. இன்றோ அந்தக் கோட்டுக்கு அந்தப் பக்கம் அர்ஜீன் நிற்கிறான்.. இந்தப் பக்கம் காவ்யா நிற்கிறாள்.. கோட்டைத் தாண்டச் சொல்லி அவளின் உள்ளம் தூண்டுகிறதே...

'இது நான்தானா..?' தூக்கம் வராமல் புரண்டாள் காவ்யா...

*"நானே.. நானா..?*
*யாரோதானா..?*
*மெல்ல மெல்ல..*
*மாறினேனா..?*
*தன்னைத் தானே.. மறந்தேனே..*
*என்னை நானே.. கேட்கிறேன்.."*

அவளின் தலையணையின் ஓரமாக கிடந்த கைரேடியோவின் எப்.எம்மில் பாடல் ஒலித்தது...

காவ்யாவுக்கு பாட்டுக் கேட்கப் பிடிக்கும்.. இரவு உணவுக்குப் பின்னால்.. தூங்கப் போகும் போது பாடலை ஒலிக்க விட்டு தலையணைக்குப் பக்கத்தில் வைத்துக் கொள்வாள்.. பாடலைக் கேட்டபடி.. கண்களை மூடி.. மெல்லத் தூங்கிப் போவாள்.. இரவின் மடியில் இதமான பாடலின் தாலாட்டோடு தூங்கிப் பழக்கப்பட்டவள் அவள்..

*"ஒருவன் நினைவிலே...*
*உருகும் இதயமே...*
*இதோர் துடிப்பு..."*

காவ்யாவின் மனதை படம் பிடித்துக் காட்டியது அந்தப் பாடல்... அந்தப் பாடல் சொன்ன உண்மையில் காவ்யாவின் இதயமும் துடித்தது...

*"உலர்ந்த உதடுகள்..*
*தனிமைக் கவிதைகள்...*
*இதோர் தவிப்பு..."*

தலையணையில் தலையை உருட்டித் தவித்தாள் காவ்யா...

*"பருவ வயதிலே...*
*இரவும் பகலும்..*
*நிலவும் நரகம்...*
*சலனம்.. சலனம்..."*

சட்டென்று எழுந்து அமர்ந்த காவ்யாவின் மனம் அவளைச் சுட்டது...

இந்தச் சலனம்தான் அவளை ஆட்டிப் படைக்கிறதா..?

எங்கிருந்தோ வந்தவனால் அவளுக்குள் மூண்ட ஆசையின் கனலில் அவள் துடித்துத் தவித்தாள்...

பாவனா அர்ஜீனைப் பற்றிப் பேசினால்.. இவளுக்கு எதற்காக கோபம் வரவேண்டும்..?

'வேண்டாம் காவ்யா.. விட்டுவிடு.. உன் மனதை இழுத்துப்பிடி..'

கண்களை மூடியவள்.. திரும்பத் திரும்ப மனதுக்குள் நினைத்தபடி தூங்கிப் போனாள்...

**இள**ங்கோவின் திருமணம் அழகர் மலையில் நடப்பதாக இருந்தது.. கடையில் வேலை செய்தவர்களை அர்ஜீனின் அறைக்கு வரும்படி அவன் அழைப்பு விடுத்தான்..

"என்னவா இருக்கும்...?"

ஆளாளுக்கு சந்தேகம் கேட்டபடி அவர்கள் அர்ஜீனின் முன்னால் கும்பலாக நின்றார்கள்.. பாவனா காவ்யாவின் அருகே போய் உட்கார்ந்து கொண்டாள்...

'இதுதான் சாக்குன்னு இவ இவனை சைட் அடிக்க ஆரம்பிச்சிருவாளே...'

என்னதான் இரவு முழுவதும் ஜெபித்தாலும்.. விடியற்காலையில் இது போன்ற எண்ணம் வந்து சேருவதை காவ்யாவினால் தடுக்க முடியவில்லை..

வந்திருந்தவர்களை தோரணையாய் பார்த்த அர்ஜீன்.. டேபிளின் மீதிருந்த உருண்டை வடிவத்திலான கண்ணாடி டேபிள் வெயிட்டை உருட்டியபடி பேச ஆரம்பித்தான்...

அதை பாவனா ரசித்து.. காவ்யாவின் காதோரமாக ரசனையைப் பகிர்ந்து கொண்டாள்...

"வாவ்..! என்னமா பில்ட் அப் கொடுத்து பேச ஆரம்பிக்கிறான்டி.. சூப்பர் ஸ்டார் கூட இந்த மாதிரி போஸ் கொடுத்திருக்க மாட்டார்..."

‘நீ இதுக்குத்தான் வந்திருக்க...’ காவ்யா பல்லைக் கடித்தாள்..

“நம்ம கடையில வொர்க் பண்ற இளங்கோவுக்கு கமிங் வெனஸ்டேயில மேரேஜ் நடக்கப் போகுது.. இது உங்க எல்லாருக்கும் தெரிந்த விசயம்தான்...”

அர்ஜீன் நிதானமாக பேசியபடி காவ்யாவை ஓர் பார்வை பார்த்துக் கொண்டான்.. அவள் உடலில் மின்சாரம் பாய்ந்தது...

“இவன் எதுக்குடி இப்ப உன்னைப் பாத்து வைக்கிறான்..?” பாவனா சந்தேகம் கேட்டாள்...

‘விட மாட்டியே..’ காவ்யாவுக்குள் எரிச்சல் வந்தது..

“ஏண்டி.. எல்லோரையும் பாத்துத்தான பேச முடியும்..?”

“அந்த எல்லோருமில.. நானும் ஒருத்திதான..? என்னை ஏன் பார்க்கலை..?”

“அதை அங்கே கேளு...”

காவ்யா அர்ஜீனின் பக்கம் கை காட்ட.. சரியாக அதே சமயத்தில் காவ்யாவை பார்த்து வைத்த அர்ஜீனின் கண்களில் காவ்யாவுக்கான பிரத்யேக மின்னல் வந்தது...

“அந்த மேரேஜீக்கு நாம் போகனும்...” அர்ஜீன் காவ்யாவை பார்த்தபடி பேச்சைத் தொடர்ந்தான்..

“ஆமாம் சார்...” எல்லோரும் ஒன்று போல தலையாட்டினார்கள்..

“எப்படிப் போவிங்க..?”

அர்ஜீனின் கேள்வியில் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

“அவங்கவங்களுக்கு எப்படித் தோதோ... அப்படிப் போவோம்சார்...” தங்கராஜ் சொன்னான்..

“அப்படின்னா..?”

“சைக்கிள் வைச்சிருக்கவங்க சைக்கிள்ல போவாங்க.. டிவிஎஸ் பிப்டி வைச்சிருக்கவங்க அதில போவாங்க.. ரெண்டும் இல்லாதவங்க பஸ்ஸில போவாங்க..” கந்தசாமி விளக்கினார்..

“லேடிஸ் எப்படிப் போவாங்க..?” அர்ஜீன் காவ்யாவின் பக்கம் முழுவதுமாக திரும்பி விட்டான்...

“உன் பக்கம் திரும்பிக்க இவனுக்கு இது ஒரு சாக்கு...” பாவனா பொறாமைப் பட்டாள்...

“ஸ்ஸ்.. உளராம அங்கே கேட்கிறதுக்கு பதிலைச் சொல்லு...”

“அதுவும் சரிதான்.. மதுரையோட வரலாற்றைப் பற்றிக் கேட்டாத்தானே என்னால சொல்ல முடியாது..? இதுக்குப் பதிலை சொல்லனும்னா.. அல்வா சாப்பிட்டதைப் போலல்ல இருக்கும்...”

மகிழ்ந்து போன பாவனா.. காவ்யாவிடம் அர்ஜீன் கேட்டதற்கான பதிலைச் சொன்னாள்...

“நாங்க ரெண்டு பேரும் ஆட்டோ பிடிச்சு போய் வந்திருவோம் சார்.. அவ்வளவு தூரத்துக்கெல்லாம்.. டூவீலர்ல போய் வாரதுக்கு காவ்யா வீட்டில சம்மதிக்க மாட்டாங்கசார்...”

பாவனாவின் பேச்சிலிருந்து காவ்யாவின் கட்டுக் காவலை புரிந்து கொண்டவனுக்கு அவள்மீது இரக்கம் சுரந்தது.. அவன் உலகமே வேறு.. அங்கே ஆண்.. பெண் என்ற பாகுபாடில்லாமல் எல்லோரும் இரவு பகல் பார்க்காமல் ஓடிக் கொண்டிருப்பார்கள்...

அப்படிப்பட்ட வாழ்வை வாழ்ந்து கொண்டிருப்பனுக்கு.. சில கிலோ மீட்டர் தொலைவுக்கு கூட.. தனிமையில் செல்ல முடியாத காவ்யாவைப் பார்த்து ஆச்சரியம் வந்தது...

“ஓகே.. நான் சொல்ல வந்தது இதைத்தான்.. யாரும் தனித்தனியாப் போக வேண்டாம்.. சேர்ந்தே போகலாம்...”

“முதலாளி..? !...”

“யெஸ் கந்தசாமி.. நம்ம வொர்க்கர்ஸ் இளங்கோவுடைய மேரேஜீக்கு போய் வருகிறதிற்காக.. வேன் ஒன்றை அரேன்ஜ் பண்ணிரலாம்.. நானும் உங்ககூட வரப்போகிறேன்.. ஸோ... வேனில் எல்லா வசதியும் இருக்கனும்.. காவ்யா...”

“சார்...?”

“ஏதாவது ஒரு டிராவல்ஸீக்கு போன் பண்ணி.. இருக்கிறதிலேயே பெஸ்ட் குவாலிஃபைடா ஒரு வேனை புக் பண்ணுங்க.. க்விக்...”

அர்ஜீன் சொன்னதைச் செய்தாள் காவ்யா.. அழகான சொகுசு இருக்கைகள் கொண்ட.. ஏஸி வேன் ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது.. கடையில் வேலை செய்தவர்கள் குஷியாகிப் போனார்கள்.. அழகர்மலைக்கு சுற்றுலா போவதைப் போன்ற உற்சாகம் அவர்களுக்குள் தொற்றிக் கொண்டது...

“அசத்தறாண்டி...”

அதற்கும் பாராட்டி.. காவ்யாவின் கடுப்பைக் கிளப்பினாள் பாவனா...

அனைவரையும் அவரவர் வீட்டு வாசலுக்கே சென்று அழைத்துக் கொள்ளலாம் என்று அர்ஜீன் சொல்ல.. அவசரமாக அதை மறுத்தாள் காவ்யா...

“நான் பாவனாவோட வீட்டுக்கு வந்திடறேன் சார்..”

‘ஏன்..? இவ வீட்டுக்கு நான் போகக் கூடாதா..?’

அர்ஜீனின் முகம் கருத்தது.. புருவங்கள் முடிச்சிட்டன.. அவளை கோபப் பார்வை பார்த்தான் அவன்.. காவ்யா அசைந்து கொடுக்கவில்லை..

“இவளுக்கு பிராப்ளமிருக்கு சார்.. வேனில நாம எல்லாரும் போயி நின்னா.. இவ அம்மா.. இவளை நம்மகூட

அனுப்பிவைக்க மாட்டேன்னு சொல்லிருவாங்க..” பாவனா அவனை சமாதானப் படுத்தினாள்...

அவளை அழைத்துச் செல்லும் சாக்கில் காவ்யாவின் வீட்டில் உள்ளவர்களிடம் அறிமுகம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அர்ஜீனின் எண்ணம் நிறைவேறவில்லை.

“ஓகே.. உங்க விருப்பம்...” ஏமாற்றத்தை மறைத்து தோள் குலுக்கினான் அவன்..

“என்ன ஸ்டைல்..!” பாவனா ரசித்தாள்...

இளங்கோவின் திருமண நாளும் வந்தது.. என்னவோ அர்ஜீனுடன் இன்பச் சுற்றுலாவிற்குப் போகப் போவதைப் போன்ற பரபரப்பில் காவ்யா இரவு முழுவதும் தூங்கவே-யில்லை.. மறுநாள் விடிவதற்கு முன்னாலேயே எழுந்து.. குளித்து முடித்து.. கேரளாப் பக்கத்து புடவைகளை நினைவுறுத்தும்.. சந்தன நிற வெண்மையும்.. ஜரிகைக் கரையிட்ட பார்டருமான அழகிய சேலையை உடுத்திக் கொண்டாள்...

அவளுக்கு அந்தச் சேலையை பிடிக்கும்.. அவளின் சிவந்த நிறத்திற்கு.. அழுத்தமான வண்ணம் கொண்ட சேலைகள்தான் பாந்தமாக பொருந்தியிருக்கும் என்று அன்னபூரணி சொல்லுவாள்.. ஆனாலும்.. காவ்யாவின் பார்வை லேசான வண்ணங்களின் மீதே இருக்கும்...

உடல் முழுவதும் ஜரிகைப் புள்ளிகளைக் கொண்ட புடவைக்கு பொருத்தமாக.. ஜரிகையின் வண்ணத்திலேயே கைப்பகுதியில் ஜரிகைக்கரை கொண்ட ஜாக்கெட்டை

அணிந்திருந்தாள்.. தலைமுடியை தொய்வாகப் பின்னி.. முதல்நாள் மாலையில் தொடுத்து வைத்திருந்த மல்லிகைப் பூச்சரத்தை வைத்துக் கொண்டாள்.. நெற்றியில் அரக்கு வண்ணத்திலான ஸ்டிக்கர் பொட்டு.. வேறு நிறங்களில் வைத்துக் கொண்டால்... அன்னபூரணி பிலுபிலுவென்று பிடித்து ஆய்ந்து விடுவாள் என்பதால் காவ்யா நெற்றிப் பொட்டிற்கு வேறு வண்ணங்களை நினைத்துப் பார்ப்பதில்லை..

நகையில்தான் காவ்யாவுக்குள் லேசான மனச்சிணுங்கல் இருந்தது.. அவளது நகைகள் அனைத்தும் அன்னபூரணியின் பொறுப்பில் இருந்தன.. உறவினர் வீட்டு விசேசங்களுக்கு போகும் போது மட்டுமே அவற்றை காவ்யா அணிந்து கொள்ள வேண்டுமென்று அவள் கட்டளையிட்டிருந்தாள்.. உடன் வேலை பார்ப்பவனின் திருமணத்திற்கு காவ்யாவை அவள் போக அனுமதித்ததே பெரிது.. அந்த அனுமதியும் கண்ணதாசனின் சிபாரிசினால் கிடைத்திருந்தது...

“போயிட்டு வரட்டுமேம்மா.. கூடவேலை பார்க்கிற பிரண்ட் கூடத்தான போறா.. ஆட்டோவில போயிட்டு ஆட்டோவிலேயே திரும்பி வந்திரப் போறாங்க.. இந்தா இருக்கிற அழகர் கோவிலுக்குக்கூட அவ போகக் கூடாதுன்னு சொன்னா எப்படிம்மா..?”

காவ்யாவுக்கு வேதனை எழும்பத்தான் செய்தது.. இன்னும் எத்தனை காலத்திற்கு பெண்கள் அவர்களின் சுதந்திரத்தை இன்னொருவர் பிச்சையிட பெற்றுக்

கொள்வார்கள் என்ற வேதனை அவளுக்குள் மண்டியது.. பாதுகாப்பு என்ற போர்வையில் பெண்கள் சிறை படுகிறார்களே.. அதிலிருந்து மீட்சியே கிடையாதா என்ற துக்கம் அவளுக்குள் பொங்கியது...

“என்னமோ போடா கண்ணா.. டெல்லியில ஒரு பொண்ணு கூடப்படிச்ச பையனோட வெளியில் போயிட்டு ஆஸ்டலுக்குத் திரும்பினாளாம்.. அவளுக்கு வந்த கதியைப் பாத்தியா.. முந்தாநாள்கூட திருச்சிப் பக்கம் அதைப் போலவே நடத்திருக்கு.. பொம்பளப்புள்ளயப் பெத்துப்-புட்டு.. வயித்தில நெருப்பக்கட்டிக்கிட்டு பொழப்பு நடத்த வேண்டியிருக்கேடா தம்பி.. காலம் கெட்டுக் கிடக்குதே.. இவ வீட்ட விட்டு வெளியில போனா.. திரும்பி வாரவரைக்கும் வதக்கு வதக்குன்னு மனசுக்குள்ள பயம் வந்து அடிச்சுக்குதுடா மகனே.. என் பயத்த யாருகிட்டப் போயி சொல்லுவேன்.. இதுக்குத்தான் காலாகாலத்தில இவளுக்கு ஒரு கல்யாணத்தப் பண்ணிப்புடுன்னு சொல்றேன்.. அதுக்கப்புறம் இவ பாடு.. இவ புருசன் பாடு..”

‘அதானே.. என்னப் பாடுபடுத்தற புருசனாப் பாத்துத்தான நீ கட்டி வைப்ப..’ மனதுக்குள் வெந்து போனாள் காவ்யா..

இனிமையான கனவு கலைந்ததைப் போல இருந்தது அவளுக்கு.. கிட்டாதாயின் வெட்டென மறக்க வேண்டும் தான்.. அந்த மறக்கிற வேலையை மெதுவாக செய்து கொண்டால் ஆகாதா என்று கேட்டது அவள் மனம்..

# 33

*நினைவாலே பயனில்லையென்றாலும்...*
*உனை நினைக்க ஆசைகொண்டேன்...*

எட்டாத உயரத்துக்கு ஆசைப்படக் கூடாதுதான்.. அதற்காக அதை நினைத்துப் பார்க்கவும் கூடாதா...?

கனவுகள் எதற்காக இருக்கின்றன..? நடக்க முடியாத நிகழ்வுகளை கனவுகளில் வாழ்ந்து மகிழத்தானே இருக்கின்றன..?

தொட்டு விட முடியாது என்று நினைத்திருந்தால் அன்று சூடிக் கொடுத்த சுடர்கொடி.. கார்மேக வண்ணன் மீது ஆசை கொண்டிருக்க மாட்டாளே.. எட்டாத உயரம் என்று பரந்தாமனை அவள் நினைத்தாளா..? அந்த ஆண்டவனையே தன் காதலால் ஆண்ட அந்த ஆண்டாள் கனாக் கண்டாளே.. அந்தக் கனாக்களுக்கு பெரியாழ்வார் தடை விதித்தாரா..?

வாரணமாயிரம் சூழ வலம் வந்து.. நாராயணனை நம்பி அவள் கனவில் நடந்தாளே.. அந்தக் கனவுக்கு யாரிடம் அவள் அனுமதி கேட்டாள்..? எழில் பூரணமாய்

பெற்குடமும் கண்டாளே.. அந்தக் கனவின் நிறைவை யாரால் கொடுக்க முடியும்..? தோரணம் ஆடிட அவள் கண்ட கனவை.. அதிலிருந்த காதலின் நிச்சயத்தை அந்த பரமாத்மா உணர்ந்ததினால்தானே.. தன்னுடன் அவளைச் சேர்ந்துக் கொண்டான்...

காவ்யா ஆண்டாளில்லைதான்.. ஆண்டாளிடம் இருந்த மாறாத காதல்.. நாராயணனின் மீது அவள் கொண்டிருந்த நேசம்.. காவ்யாவிடம் இல்லைதான்.. அது போன்ற தீவிரமான காதலை அவள் அர்ஜீனின் மீது வைக்க வில்லைதான்...

அவளுக்குத் தெரியும்.. அவன் வேறு.. அவள் வேறு என்பது.. மனதை அதன் போக்கில் விட்டு விடக் கூடியவள் அவளல்ல.. நிறைவேறாது என்ற தெரிந்த பின்பும்.. நிச்சயமில்லாத ஆசைகளை நெஞ்சுக்குள்ளே பூட்டி வைத்துக் கொள்வதால் யாதொரு பலனும் ஏற்படப் போவதில்லை என்பதை அவள் அறிவாள்...

ஆனாலும்.. எங்கிருந்தோ ஆசைகள் வந்து அவளது இளம் மனதில் மையம் கொள்வதை அவளால் தடுக்க முடியவில்லை...

அர்ஜீனின் ரகசியப் பார்வைகளைச் சந்திக்கும் போது அவளின் காதுமடல் சூடாவதின் காரணத்தை அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை...

அவன் அருகில் வந்தால் அவளின் உடலில் ஏற்படும் நடுக்கத்தை அவளால் இனம் காண முடியவில்லை...

அவளே சொல்வதைப் போல அவள் மதுரையில் பிறந்து வளர்ந்த மதுரைக்காரி.. நேர்கொண்ட பார்வையுடன் இருந்த தைரியசாலி.. இளம்வயது ஆண்களுடன் அதிகமாக பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாமல் விலகி நிற்கும் அழுத்தக்காரி...

அப்படிப்பட்ட காவ்யா.. அர்ஜீனின் வரவை ரகசியமாக மனதுக்குள் எதிர்பார்க்கிறாள்.. அவனின் பார்வைகளில் உடல் சூடேற.. கன்னம் சிவக்கிறாள்.. அவன் பார்வைகளுக்கான பதில் பார்வைகளை அனுப்பியும் வைக்கிறாள்.. அவன் அருகில் வந்தால் கிறங்கிப் போகிறாள்.. அவளது தோற்றத்தை ரசிக்கும் அவனின் பிரத்யேக மையல் பார்வையில் மயங்கிப் போகிறாள் என்றால்.. இதை என்னவென்று அவள் சொல்லுவாள்..?

அவனுடன் சேர்ந்து வெளியில் செல்லப் போகும் சில மணி நேரங்களுக்காக.. இரவு முழுவதும் அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லையென்றால்.. இந்தக் கொடுமையை அவள் யாரிடம் போய் சொல்லுவாள்..?

அன்னபூரணியிடம் சொன்னால்.. அவள் அடுத்த நொடியிலேயே மகளை வீட்டுக்குள் சிறைவைத்து.. ஏதாவது ஒரு மீசைக்கார மாப்பிள்ளையின் கையில் அவளைப் பிடித்துக் கொடுத்து விடுவாள்...

கண்ணதாசனிடம் சொன்னால்.. அவன் ஒரு பார்வையிலேயே நீயா இதைச் செய்தது..? இதற்காகவா நான் உனக்காக போராடி நீ வெளியில் சென்று வர அனுமதி வாங்கித் தந்தேன் என்று கேட்டு அவளைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விடுவான்..

சிவதாணுவிடம் சொன்னால்.. அவர் திருக்குறளிலிருந்து அந்தச் சூழ்நிலைக்கு பொருத்தமான குறளைச் சொல்லி உபதேசம் பண்ண ஆரம்பித்து இதற்கு அன்னபூரணியின் அராஜகமே தேவலை என்று நினைக்க வைத்து விடுவார்...

இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் பயந்துதான் காவ்யா அவள் மனதை இறுக்கிப் பூட்டி வைத்திருந்தாள்.. அதன் திறவுகோல் அர்ஜீனின் வசத்திலிருக்கும் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லையே...

அவள் மனதை திறக்கும் வல்லமை படைத்த ஆண்மகனை அதுநாள் வரை அவள் சந்தித்ததே இல்லை.. அப்படிப்பட்ட கம்பீரத்தோடு அர்ஜீன் மகராஜன் வந்தாலும் வந்தான்.. காவ்யாவின் பஞ்சு போன்ற மென்மையான மனதில் காதல் தீ பற்றி விட்டது...

அவள் அதை உணர்ந்தும்.. உணராதவளைப் போல மனதை இறுக்கிப் பிடிக்க முயன்றாள்.. அது அகப்படுவேனா என்று சண்டித்தனம் செய்தது.. மெல்ல.. மெல்ல.. மனதை தன் வசப்படுத்துவதற்குப் பதிலாக.. மனதின் வசம் அவள் அகப்பட்டுக் கொண்டிருந்தாள்..

*'யாரோ ஒருவன்.. புரவியில் வந்தான்...*
*என் மனதைப் புரட்டிப்போட்டு...*
*தீயாய் அதை ஆக்ரமித்தான்...*
*அந்தத் தீயின் வெம்மையில்..*
*என் மனம் கருகாமல்.. சருகாக ஆகாமல்..*
*மலர்ந்து சிலிர்க்கிறதே.. ஏன்..?'*

அவள் மனதின் ரகசிய உணர்வுகளை.. மிக.. மிக.. ரகசியமாக டைரியில் வடித்தாள்.. ஏதோ தவறு செய்து விட்டவளைப் போல அதை புடவைகளுக்கு அடியில் ஒளித்து வைத்தாள்...

இதையெல்லாம் அன்னபூரணி அறிவாளா..?

அப்படிப்பட்ட ஒருவனுடன் அருகிலிருக்கும் அழகர் கோவில்வரை போய்விட்டு வருவதை மகள் எந்த அளவுக்கு விரும்புகிறாள் என்பதை அறியாமல் அவள் அனுமதி கொடுத்து விட்டாள்...

"பாத்து.. சூதானமா போயிட்டு வரனும்.. பொம்பளப் புள்ளகள பொத்தி வளக்கிறது.. உங்களுக்கெல்லாம் தப்பாத்தான் தோனும்.. பொழுது விடிந்து... பொழுது போகிறவரைக்கும்.. நாட்டுக்குள்ள நடக்கிற ஆக்கிரமத்தில முக்காவாசி.. பொம்பளப் புள்ளகளுக்கு நடக்கிற கொடுமதான்.. அதனால சுதந்திரம் அது இதுன்னு பினாத்தாம.. வெள்ளனாவே வீடு வந்து சேரப் பாரு..." அன்னபூரணி தீர்மானமாகச் சொல்லி விட்டாள்...

பலாத்காரத்தில் இறந்து போன பெண்களைப் பற்றிச் சொல்லிச் சொல்லியே.. திரும்பவும் பெண்களை வீட்டுக்குள் சிறை வைக்க ஆரம்பித்து விட்டார்கள்.. என்று வேதனையுடன் நினைத்துக் கொண்டாள் காவ்யா...

இன்னும் எத்தனை காலம்தான் இந்தக் கொடுமை நீடிக்கும் என்ற நினைவோடு.. கையிலிருந்த சொற்ப நகைகளைப் போட்டுக் கொண்டு கண்ணாடியில் பார்த்தாள்.. தேவதை போல் தெரிந்தாள்...

அன்னபூரணியிடம் சொல்லிக் கொண்டபோது.. அவள் மகளின் அதீத அழகைக் குறித்த கவலையில் ஆழ்ந்தாள்.. கண்ணதாசன் விழிகளில் யோசனையுடன் தலையை அசைத்தான்...

“பாவனா வீட்டிலே டிராப் பண்ணவா..?” என்று கேட்டான்..

மறுத்தால் அவன் ஏதாவது நினைத்துக் கொள்வான் என்ற பயத்துடன் காவ்யா சம்மதமாக தலையை அசைத்தாள்..

அவளுக்கா அவளுடைய அண்ணனின் மனம் தெரியாது..? காவ்யா பாவனாவுடன்தான் அழகர் கோவிலுக்குப் போகப் போகிறாளா என்பதை அவன் உறுதி படுத்திக் கொள்ள முனைகிறான்...

அவன் ஆசையைக் கெடுப்பானேன் என்ற எண்ணத்துடன் தான் காவ்யா கண்ணதாசனின் காரில் ஏறிக் கொண்டாள்.. அவள் நினைத்ததுதான் நடந்தது..

கண்ணதாசன் வாசலோடு போய் விடாமல் பாவனாவின் வீட்டுக்குள்ளேயே வந்து விட்டான்..

“வாங்க.. வாங்க..” பரபரப்பாக வரவேற்றாள் பாவனா..

அவள் கண்களில்.. கண்ணதாசனின் இனத்தில் பிறக்காமல் போய் விட்டோமே என்ற ஆற்றாமை அப்பட்டமாகத் தெரிந்தது..

“காவ்யாவும்.. நீங்களும் பழமுதிர்சோலைக்குப் போகப் போறிங்களாமே.. காவ்யா சொல்லுச்சு..” என்றான் கண்ணதாசன்..

“பழமுதிர்சோலையில்லையே.. அழகர் கோவில்...” என்றாள் பாவனா...

“ரெண்டும் ஒன்னுதானே.. மலையடிவாரத்தில் அழகர் கோவில்... மலையேறினா பழமுதிர்சோலை.. நீங்க இன்னமும் ஓசுர்காரங்களாவே இருக்கறிங்க போல..” கண்ணதாசன் லேசாகச் சிரித்தான்...

“மதுரைக்காரியாய் மாறனும்னும்கிற ஆசை.. மலையளவுக்கு என் மனசில இருக்குது.. அதுக்கான கொடுப்பினைதான் எனக்கு இருக்கா.. இல்லையான்னு தெரியலை..” பூடகமாக பேசி வைத்தாள் பாவனா...

கண்ணதாசன் உடனே கைக்கடிகாரத்தை பார்த்து வைக்க.. காவ்யாவுக்கு சிரிப்பு வந்தது...

‘இவன் இதுக்கெல்லாம் மசிய மாட்டான்.. பாவனா மத்தவங்களப் போல இவனையும் நினைச்சிட்டா போல..’

“என்ன சார் வாட்சைப் பாக்கறிங்க..?” ஏமாற்றத்துடன் கேட்டாள் பாவனா...

“வாட்சை எதுக்குப் பார்ப்பாங்க..? டைம் பாக்கத்தான பாப்பாங்க...” கண்ணதாசன் புருவங்களை உயர்த்தினான்..

“உட்காருங்க.. அம்மா.. அப்பாவைக் கூப்பிடறேன்..”

“அவங்களை எதுக்காக சிரமப் படுத்தறிங்க..?”

“இது ஒரு சிரமமா..?”

“வேண்டாம்.. அவங்களை டிஸ்டர்ப் பண்ணாதீங்க.. நான் கிளம்பறேன்.. காவ்யா பத்திரம்..”

“கவலையே படாதீங்க.. உங்க தங்கையை என் கண்ணுக்குள்ள வைச்சு நான் பாத்துக்கறேன்..”

“அதெல்லாம் வேணாம்ங்க.. உங்களுக்கு கண் வலிக்கும்.. கண்ணுக்கு பக்கத்திலேயே வைச்சுப் பாத்துக்கங்க..” சிரிக்காமல் சொன்னான் கண்ணதாசன்..

“அட... உங்களுக்கு ஜோக் அடிக்கக் கூடத் தெரியுமா..?” இமை கொட்டி விழித்தாள் பாவனா..

இதற்கெல்லாம் நான் அயரமாட்டேன் என்பதைப் போல அழுத்தமான பார்வையொன்றை வீசிய கண்ணதாசன்..

“ஆட்டோவிலதான போறிங்க..?” என்று இயல்பாக கேட்பதைப் போலக் கேட்டு விட்டான்...

கண்ணதாசனிடம் பேசிக்கொண்டிருக்கும் உற்சாகத்தில் பாவனா உண்மையைச் சொல்லி விடாமலிருக்க வேண்டுமே என்று காவ்யா கவலைப் பட்டுப் போனாள்...

நல்ல வேளையாக பாவனா எவ்வளவுதான் கடலை போட்டாலும்.. தோழியைக் காப்பாற்றுவதில் சுதாரிப்பாக இருந்து வைத்தாள்..

“ஊம்..? அதானே எங்க பிளான்..?” என்று கேட்டு காவ்யாவின் வயிற்றில் பாலை வார்த்தாள்...

“நான் வேணும்னா காரில் உங்களை டிராப் பண்ணவா..?” கண்ணதாசன் காவ்யாவை கதிகலங்க வைப்பதிலேயே குறியாக இருந்தான்...

எதனால் அவனுக்கு இவ்வளவு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்று காவ்யாவிற்குத் தெரியும்..

முதல்நாள் இரவில் அவள் பூஜையறையில் இரண்டு சீட்டுக்களைக் குலுக்கிப் போட்டு.. எடுத்துப் படித்தாள்.. அது அவளின் வழக்கம்.. முடிவெடுக்க முடியாமல் மனது அலைபாயும் போது காவ்யா அந்த முறையைத்தான் எப்போதும் கையாள்வாள்...

இரு வேறுபட்ட முடிவுகளை காகிதங்களில் எழுதி சுருட்டி கடவுள்களின் திருவுருவங்களின் முன்னிலையில் குலுக்கிப் போட்டு விடுவாள்.. கண்மூடி கடவுள்களிடம் சரியான முடிவைக் கொடு என்று வேண்டி விட்டு... ஒரு சீட்டை எடுத்துக் கொள்வாள்.. கண்திறந்து கையில் எடுத்த சீட்டைப் படித்துப் பார்ப்பாள்.. அதில் வரும் முடிவு எதுவாக இருந்தாலும்.. அதை அப்படியே ஏற்றுக்கொள்வாள்...

முதல் நாளிலும் அவள் அதைப் போல சீட்டுக் குலுக்கிப் போட்டு.. ஒன்றைக் கையில் எடுத்த போது.. கண்ணதாசன் அங்கே வந்துவிட்டான்... அவள் கையிலிருந்த சீட்டை எட்டிப் பார்த்தான்...

'போகலாம்...' என்ற வார்த்தை அதிலிருந்தது...

புருவங்கள் முடிச்சிட.. எடுக்கப்படாமலிருந்த இன்னொரு சீட்டை எடுத்துப் பிரித்துப் படித்தான்...

'போக வேண்டாம்...' என்றிருந்தது...

"என்னம்மா..?" என்று கேட்டான்...

பூஜையறையில் நின்று கொண்டு பொய் சொல்ல காவ்யாவினால் முடியவில்லை.. அவள் தடுமாற்றத்துடன்..

"நாளைக்கு அழகர் கோவிலுக்கு போகிறதா.. வேணாமான்னு சீட்டுக் குலுக்கிப் பாத்தேன்.." என்று சொன்னாள்...

"சின்ன விசயம்.. இதுக்கு எதுக்காக சீட்டுக் குலுக்கிப் போடனும்..?" கண்ணதாசனின் புருவங்கள் உயர்ந்தன..

"சும்மாதான்..."

அதற்குமேல் வார்த்தைகளை வளர்க்காமல் காவ்யா விரைந்து விட்டாள்...

ஆனால் கண்ணதாசன் சமாதானமடைந்து விடவில்லை.. விடிந்த பின்னாலும் தங்கையின் தடுமாற்றம் எதனால் வந்தது என்பதை துப்பறியத் துடிக்கிறான்...

"நீங்க கேட்டா.. நான் மாட்டேன்னா சொல்லுவேன்..?" பாவனா பதிலுக்கு கண்ணதாசனை கலங்கடித்தாள்..

"தோ.. ஒன் அவர்ல கிளம்பி வந்துருவேன்.. நீங்க சோபாவில உக்காரலாம்.. டிவி பார்க்கலாம்.. இல்லேன்னா.. வீட்டைச் சுத்திப் பார்க்கலாம்.. எதை வேணும்னாலும் செய்யுங்க.. இது உங்க வீடு மாதிரி..."

இதை ஒரு மாதிரியான குரலில் அவள் சொன்ன பின்பும் அங்கே உட்கார கண்ணதாசன் என்ன முட்டாளா..? அவன் தங்கைக்காக ஒரு மணிநேரம் என்ன.. பலமணி நேரம் கூடக் காத்திருப்பான்தான்.. அதை பாவனாவின் வீட்டில் உட்கார்ந்து கொண்டு செய்ய மாட்டான்...

# 34

*ஓரிடத்தில் நிற்காத உன்மனதில்...*
*நான்மட்டும் உட்கார ஆசைகொண்டேன்..*

**த**ங்கையை விட்டுவிட்டு கண்ணதாசன் அவன் அலுவலகத்திற்கு ஓடோடி விட்டான்...

"ம்ஹீம்.. கடைஞ்ச மோரில கூட நெய்யெடுத்திரலாம் போல.. உன் அண்ணன் மனசிலதான் இடம் பிடிக்க முடியாது போல..." பாவனா அலுத்துக் கொண்டாள்...

“இப்ப இதான் முக்கியம்.. கிளம்புடி...”

“இந்த ஜாதியை யாருடி கண்டு புடிச்சது..?”

“நிச்சயமா நான் கண்டு பிடிக்கலை...”

“ஆமாம்.. அர்ஜீன் என்ன ஜாதி..?”

காவ்யாவின் முகம் மாறிவிட்டது.. அவள் அடிமனதில் எதை நினைத்துப் பயந்து கொண்டிருக்கிறாளோ.. அதையே பாவனாவும் கேட்டுவிட்டதில் அவள் மௌனம் சாதித்தாள்..

“பேச மாட்டியே...” அலுத்துக் கொண்ட பாவனா.. உடை மாற்றிக் கொள்வதற்காக உள்ளே போனாள்...

அவள் வரும்வரை பார்த்துக் கொண்டிருக்கலாமே என்று காவ்யா டி.வியை உயிர்ப்பித்தாள்...

*“காதலுக்கு ஜாதியில்லை...*
*மதமுமில்லையே...*
*கண்கள் பேசும் வார்த்தைகளில்..*
*பேதமில்லையே...*
*வேதமெல்லாம் காதலையே..*
*மறுப்பதில்லையே.*
*அது வேதம் சொன்ன முனிவரையும்..*
*விடுவதில்லையே...”*

கருப்பு வெள்ளைத் திரைப்படக் காட்சியில் கதாநாயகி பாடிக் கொண்டிருந்தாள்...

‘ம்ஹீம்.. இதையெல்லாம் எழுதறதுக்கும்.. படிக்கிறதுக்கும் நல்லாத்தான் இருக்கும்.. யதார்த்தத்தில் இதையெல்லாம் நினைச்சுப் பார்க்க முடியுதா..?’ காவ்யா டிவியின் சேனலை மாற்றினாள்...

“ஏன்..? பாட்டு நல்லாத்தானே இருந்தது..?”

அவள் காதுகளில் விழுந்த கேள்வியில் உள்ளம் துள்ள நிமிர்ந்து பார்த்தாள்.. அங்கே அவளை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தபடி அர்ஜீன் நின்று கொண்டிருந்தான்...

காவ்யாவின் அதீத அழகில் அவனுக்குள் எழுந்த மயக்கத்தை அவன் விழிகள் பிரதிபலித்தன.. அவன் கண்களில் தெரிந்த தாகத்தில் காவ்யா தடுமாறிப் போனாள்.. அந்த தடுமாற்றத்தை அவதானித்தபடி அவன் நிதானமாக நடந்து வந்து அவளருகில் அமர்ந்தான்.. அதை எதிர்பார்த்திராத காவ்யா அவசரமாக எழுந்து கொள்ளப் போனாள்...

அது நீண்ட சோபா.. அதன் ஒரு கோடியில் காவ்யா உட்கார்ந்திருந்தாள்.. மறுகோடியில்தான் அவன் உட்கார்ந்தான்.. அதற்கே பதறிப் போய் எழுந்து கொள்ளப் போனவளை...

“ம்ப்ச்.. இப்ப எதுக்கு எழுந்துக்கற..?” என்று முகச்சுளிப்புடன் தடுத்தான்...

“பாவனா கூப்பிடறா...”

“எனக்குக் கேட்கலையே...”

“எனக்குக் கேட்டுச்சே...”

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருந்த போது பாவனா வந்து விட்டாள்..

“என்னடி..?” என்றபடி இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள்...

“நீங்க இவங்களைக் கூப்பிட்டிங்களா..?” அர்ஜீன் விசாரித்தான்...

காவ்யா அவசரமாக சைகை காட்ட முயன்றதை அவன் பார்த்துவிட.... அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. பாவனாவோ அவளின் சைகையை கவனிக்காதவளாக..

“இல்லையே...” என்று சொல்லிவிட்டாள்...

அர்ஜீனின் பார்வை காவ்யாவை ஊடுறிவியது.. ஆரம்பமே இப்படி அமைய வேண்டுமா என்று காவ்யா நொந்து போனாள்...

“என்னவாம்..?” பாவனா அவள் காதருகே கேட்டாள்..

“டக்குன்னு என் பக்கத்தில உட்கார்ந்திட்டான்டி.. நான் எழுந்திருச்சா.. ஏன்னு கேக்கறான்..? அதான் நீ கூப்பிட்டேன்னு சமாளிச்சுக்கிட்டு இருந்தேன்.. நீ வந்து காரியத்தை கெடுத்துட்ட...”

“ஏண்டி.. இதுவே நீள சோபா.. இந்தக் கோடியில நீயிருந்தா.. அந்தக் கோடியில அவன் உட்காரக் கூடாதுன்னு ஏதும் சட்டமிருக்கா...?”

“ஐயையே.. பக்கத்திலே உட்கார்றதா..?”

“உன்னைத் திருத்தவே முடியாதுடி.. இப்படிச் செஞ்சா.. அவன் முறைக்காம என்ன பண்ணுவான்..? உனக்கும் அவனுக்கும் இடையில ஒரு மீட்டர் தூரம் இருக்குடி...”

தாழ்ந்த குரலில் அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது பாவனாவின் அம்மாவும்.. அப்பாவும் வந்து விட்டார்கள்.. அதிகாலையின் தூக்கம் கெட்டுவிட்ட வருத்தம்.. அவர்கள் முகத்தில் தெரிந்தது...

“வாங்க.. வாங்க.. வணக்கம்..” பாவனாவின் அப்பா சுந்தரம் வரவேற்றார்...

“ரிலாக்ஸ் சார்.. நான் வந்து ரொம்ப நேரமாச்சு..” இலகுவாகச் சொன்னான் அர்ஜீன்..

“ஏர்லி மார்னிங் எழுந்துக்க முடியலை..” சங்கடத்துடன் சொன்னார் சுந்தரம்..

“நானும் அப்படித்தான்.. இன்றைக்கு அழகர் கோவிலுக்கு போகனும்கிறதால சீக்கிரமா கிளம்பிட்டேன்..” அர்ஜீன் சமாதானமாகப் பேசினான்...

பாவனாவின் அம்மா காபியுடன் வந்தாள்...

“சாருக்கு காபி பிடிக்குமான்னு கேட்டுக்கிட்டியா ஷோபா..?” என்று கடிந்து கொண்டார் சுந்தரம்...

“பாவனாகிட்டக் கேட்டேங்க.. எங்க பாஸ் காபிதான் குடிப்பார்ன்னு அவதான் சொன்னா...” ஷோபா புன்னகையுடன் காபி கப்பை நீட்டினாள்...

அந்தச் சூழலில் காவ்யாவுக்கு பொறாமை வந்தது.. அவள் வீட்டில் இதுபோல இயல்பாக அர்ஜீனை வரவேற்று உபசரிப்பார்களா என்ற ஏக்கம் அவளுக்குள் எழுந்தது..

ஷோபா சுந்தரத்தின் பக்கத்தில் உட்கார்ந்து அர்ஜீனிடம் இயல்பாக பேச ஆரம்பித்ததில் காவ்யாவுக்குள் ஒர்விதமான தனிமையுணர்வு எழுந்தது...

ஷோபா பட்டப் படிப்பை படித்திருந்தாள்.. சரவணன் மத்திய அரசாங்கத்தில் ஆபிசராக வேலை பார்த்தார்.. பல ஊர்களுக்கு மாறுதல் ஆகி.. அங்கேயெல்லாம் வசித்து வந்ததில் ஏற்பட்டிருந்த வெளியுலக அனுபவத்தை ஷோபாவின் முகம் பிரதிபலித்தது.. பாவனா அவர்களுக்கு ஒரே மகள் என்பதில் அவர்கள் காட்டிய செல்லம் கலந்த அக்கறையை அர்ஜீன் உணர்ந்து கொண்டதில் காவ்யா சஞ்சலம் கொண்டாள்..

அவள் வீட்டில் இப்படியில்லை.. ஷோபாவைப் போல அன்னபூரணி படித்திருக்கவில்லை.. எழுதப்படிக்கத் தெரியும் அவ்வளவுதான்.. வீட்டிற்குள் அந்நியர்களை அவள் அனுமதித்ததில்லை.. அப்படியே யாராவது சிவதாணுவைத் தேடியோ... அல்லது கண்ணதாசனைத் தேடியோ.. வீட்டிற்கு வந்தாலும்.. அவர்கள் முன்னாடி அவள் வரமாட்டாள்.. தவிர்க்க முடியாமல் காபி கொண்டு போக நேர்ந்தாலும் ஏதும் பேசாமல் காபியை மட்டும் குடுத்து விட்டு வந்து விடுவாள்.. ஷோபா உட்கார்ந்து பேசுவதைப் போல பேசமாட்டாள்...

சிவதாணு ஸ்டேட்கவர்ண்ட்மென்டில் வேலை செய்தார்.. கண்ணதாசனோ.. அதே கவர்ண்ட்மென்டில் மிக உயர்ந்த பதவியை வசித்துக் கொண்டிருந்தான்.. இருந்தும் அவள் வீட்டில் ஒரு கிராமியச் சூழலே நிலவியது.. பாவனாவின் வீட்டில் இருப்பதைப் போன்ற.. நகர்புறத்து நாகரிகத்தின் சூழல் நிலவியதில்லை..

காவ்யாவின் முகத்தையே பார்த்தபடி பேசிக் கொண்டிருந்த அர்ஜீன் சட்டென்று எழுந்து விட்டான்...

"என்ன அவசரம்..?" என்ற சுந்தரத்தின் கேள்விக்கு..

"மத்தவங்களை பிக் அப் பண்ணிக்கனுமே.." என்று காரணம் சொன்னான்...

வேனுக்குள் ஏறிய போது.. பாவனா பெற்றவர்களிடம் விடை பெறுகிறேன் வேர்வழியென்று பின்தங்கிவிட.. காவ்யாமட்டும் வேனுக்குள் ஏறினாள்.. டிரைவர் பாவானாவைப் பார்த்தபடி நின்றுவிட.. அர்ஜீன் காவ்யாவின் காதோரமாக முணுமுணுத்தான்...

"பாவனா உனக்குத்தான் பிரண்ட்.. எனக்கில்லை.."

இப்படி சந்தடி சாக்கில் ரகசியம் பேசுவான் என்பதை நினைத்தும் பார்த்திராத காவ்யா இமை படபடக்க அவனைப் பார்த்தாள்.. அவன் இமை மூடித் திறந்தான்...

"உனக்காகத்தான் நான் உட்கார்ந்து பேசினேன்..."

அதற்குள் பாவனா வேனுக்குள் ஏறிவிட.. அர்ஜீன் அவனருகில் இருந்த சீட்டில் அமர்ந்து விட்டான்...

அவனைப் பார்க்கும்படி உட்கார விரும்பிய காவ்யாவிடம்

“நகர்ந்துக்கடி.. எனக்கு ஜன்னலோர சீட் வேணும்..” என்று வசதி பண்ணிக் கொடுத்தாள் பாவனா...

அர்ஜீன் திரும்பிய வாக்கில் அமர்ந்து அவளை விழுங்கி விடும்படி பார்க்க ஆரம்பித்தபோது வேன் கிளம்பியது.. அதற்குப் பின்னால்.. கடையில் வேலை பார்த்த மற்றவர்களின் வீட்டின் முன்னால் வேன் நின்றதையோ.. அவர்கள் வேனுக்குள் ஏறி.. வணக்கம் சொல்லி விட்டு அமர்ந்ததையோ அர்ஜீன் கவனிக்கவே இல்லை.. அவன் கவனித்ததெல்லாம் காவ்யாவை மட்டும்தான்..

காவ்யாவுக்கு வானத்தில் பறப்பதைப் போல இருந்தது.. இதுபோன்ற ஒர் அனுபவத்தை அதற்கு முன்னால் அவள் உணர்ந்ததில்லை.. கடையிலும் அவன் அருகில்தான் உட்காருகிறாள்.. இருந்த போதும்.. அது வேறு.. இது வேறாக இருந்தது...

அது வேலை செய்த இடம்.. எப்போதும் ஒர் பொய் முகமூடியின் பின்னாலே காவ்யா ஒளிந்து கொள்ள வேண்டிய நிர்பந்தம் அங்கு இருந்தது.. எந்த நொடியிலும் கடையில் வேலை செய்பவர்கள் அர்ஜீனைத் தேடி வந்து விடுவார்கள் என்பதால்.. சின்னச் சிரிப்பைக் கூடச் சிந்தி.. தன்னைக் காட்டிக் கொடுத்து விடாமல் காவ்யா கண்ணியம் காக்க வேண்டியிருந்தது...

அப்போது.. அந்தத் தளைகளெல்லாம் இல்லாமல் சுதந்திர வானில் சிறகடிப்பதைப் போல அவள் உணர்ந்தாள்.. அவளுக்கு முன்னால் அமர்ந்திருந்த அந்த அர்ஜீனனாகப் பட்டவன்.. யாரைப் பற்றியும் கவலைப்-படாமல் அவளைப் பார்வையிலேயே கவர்ந்து கொண்டிருந்ததில்.. அவளுடைய பெண்மை கர்வம் கொண்டது...

*"என் மனது ஒன்றுதான்...*
*உன்மீது ஞாபகம்...*
*வான்நிலவு ஒன்றுதான்..*
*வான்மீது சத்தியம்..."*

வேனில் பொருத்தப்பட்டிருந்த எப்.எம் இசைத்தது.. அது கூறிய பொருளில் அர்ஜீனின் மனது புரிய.. காவ்யா.. காந்தத்தைக் கண்ட இரும்பாகிப் போனாள்.. அவனின் பார்வையின் ஈர்ப்புக்கு அவள் பார்வை இழுபட்டது...

லேசாக இமை உயர்த்தி அவனைப் பார்ப்பதும்.. அவன் பார்வையைச் சந்தித்த உடனேயே வெட்கி வேனின் தரை பார்ப்பதுமாக அவள் புதியதோர் உலகத்தில் புகுந்திருந்தாள்...

ஊடே பாவனா பேசிய பேச்சுக்கள் ஏதும் அவள் செவிகளில் ஏறவில்லை...

'என்னடா இது.. இவ பதில் பேசாம இருக்கா...'

காரணம் கேட்பதற்காக திரும்பிய பாவனாவின் கண்களில் அந்தப் பார்வை நாடகம் தட்டுப்பட்டுவிட..

அவள் வாயை மூடிக்கொண்டு ஜன்னல் வழியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டாள்...

*"பார்வை ஒன்றே போதுமே...*
*பல்லாயிரம் சொல் வேண்டுமா..?*
*பேசாத கண்ணும் பேசுமா..?*
*பெண் வேண்டுமா..*
*பார்வை போதுமா..?*
*பார்வை ஒன்றே போதுமே.."*

பாடல் மாறியதும் பாவனா திரும்பிப் பார்த்தாள்.. பார்வையிலேயே அர்ஜீனும்.. காவ்யாவும் ஒருவரையொருவர் சாப்பிட்டுக் கொண்டிருக்க...

"ம்ஹீம்.. பொருத்தமான பாட்டுத்தாண்டி.." என்று காவ்யாவிடம் சொல்லி வைத்தாள்..

மோன நிலை போன்றதொரு மாய வலைக்குள் சிக்கியிருந்த காவ்யா...

"என்.. என்.. என்னது..? என்னடி சொன்ன..?" என்று தடுமாறினாள்..

"உன் பக்கத்திலே.. காதோடுதான் நான் பேசுவேன்னு ஒட்டிக்கிட்டு உக்காந்திருக்கேன்.. என்னவோ.. ஏழுகடல்.. ஏழுமலைக்கு அந்தப்பக்கமா இருக்கிறவ பேசினது உன் காதில விழுகாத மாதிரியில்ல ஆக்ட் கொடுக்கிற..? ஏண்டி.. நான் என்ன சொன்னேன்னு உண்மையிலேயே உனக்குத் தெரியாதா..?" பாவனா சண்டைக்கு வந்தாள்...

"என்ன சொன்ன..?" காவ்யா திருதிருத்தாள்..

"கிழிஞ்சது போ.. வெறும் பார்வைக்கே இந்த மயக்கம்ன்னா.. போகப்போக என்னாகுமோ..." என்று பாவனா சொல்லி வாய் மூடுவதற்குள்...

*"போகப் போகத் தெரியும்..*
*இந்த பூவின் வாசம் புரியும்..."*

என்று பாடல் மாறி ஒலித்தது..

"எப்.எம் மில ஆள் பிடிச்சிருக்கியா..?" பாவனா சந்கேப்பட..

"அடச்சீ.. வாயை மூடு.." என்று கடிந்து கொண்டாள் காவ்யா...

அவர்களின் பேச்சை ரசித்த புன்முறுவலுடன் அர்ஜீன் காவ்யாவைப் பார்க்க வாகாக திரும்பி அமர்ந்து கொண்டான்..

"வியு பார்த்து உட்காருகிறாண்டி.." என்றாள் பாவனா..

எது எப்படியோ.. காவ்யா.. அவளைச் சுற்றிப் போட்டிருந்த வேலிகளைத் தகர்த்து.. அன்று மட்டும் வெளிவந்திருந்தாள் என்பதை மட்டும் பாவனாவால் புரிந்து கொள்ள முடிந்தது...

# 35

*விட்டுச் செல்லும் நினைவின்றி...*
*நீ தொடர்ந்து வர ஆசைகொண்டேன்...*

**இள**ங்கோவின் திருமணம் நடந்து கொண்டிருந்தது.. ஐயர் மந்திரங்களை ஓத.. மாப்பிள்ளை கோலத்தில் இருந்த இளங்கோ அதை ஒப்பித்துக் கொண்டிருந்தான்...

"இந்தப் பெண்ணைக் கட்டறதுக்கா இவ்வளவு அலட்டிக்கிட்டான்..? பொண்ணு நல்லாவே இல்லைடி.. சுமார்தான்.." என்றாள் பாவனா...

"வாயை வைச்சுக்கிட்டு சும்மா இருக்க மாட்டியா..?" காவ்யா சுற்றுமுற்றும் பார்த்தாள்..

"என்னடி பாக்கிற..?"

"நீ பேசினதை பொண்ணு வீட்டுக்காரங்க யாராச்சும் கேட்டுட்டாங்களோன்னு பாக்கறேன்.."

"முன்னெச்சரிக்கை..?"

"பின்னே..? மகராசி.. உன் பக்கத்திலே நின்னுக்கிட்டிருக்கேனே.. நீதான் வாயைத் திறந்தாலே வில்லங்கமாய் பேசி வைக்கறியே.."

“வாயின்னு இருந்தா நாலு வார்த்தை பேசித்தான் ஆகனும்...”

“இப்படிப் பேசக்கூடாது...”

பாவனாவைக் கடிந்து கொண்டிருந்த காவ்யாவின் பக்கத்தில் வந்து நின்ற அர்ஜீன்..

“கோவில் அழகாயிருக்கு..” என்று சொன்னான்...

“அழகர் இருக்கிற கோவில்.. அழகாத்தான் இருக்கும்..” என்றாள் காவ்யா..

“உனக்கு இந்தக் கோவில்ன்னா பிரியம் போல இருக்கே...”

“ம்ம்ம்.. இங்கே இருப்பது கள்ளழகர்.. எங்கள் நாராயணப் பெருமாள்.. சித்திரைத் திருவிழாவில் இவர் மீனாட்சி கல்யாணத்தில சீர் செய்ய வருவார்...”

“அது எதுக்கு..?”

“நல்லாக் கேட்டிங்களே ஒரு கேள்வி.. இவர்தானே மீனாட்சிக்கு அண்ணன்..!”

“அப்படியா..?”

“என்ன அப்படியா..? கம்யூட்டரைக் கட்டிக்கிட்டு இருந்தா மட்டும் போதாது.. நாம இருக்கிற நாட்டில.. காக்கிற கடவுள்களைப் பத்தியும் கொஞ்சம் தெரிஞ்சு வைச்சுக்கனும்..”

"இதுவரைக்கும் தெரியாம இருந்திட்டேன்.. இனிமே தெரிஞ்சுக்கிறேன் நீ சொல்லு.. இவர் மீனாட்சிக்கு அண்ணன்.. அப்புறம்..?"

"அப்புறமென்ன..? மீனாட்சி கல்யாணத்தில தங்கைக்கு சீர்செய்ய எங்க கள்ளழகர் கிளம்பி வருவாரு.. இவர் ஆத்தில இறங்கி வாரதைத்தான் அழகர் ஆத்தில இறங்கி வர்ற விழாவா நாங்க சிறப்பாக கொண்டாடறோம்."

"ஆத்திலன்னா..?"

"ஆறு சார்.. வைகை ஆறு..."

"ஓ.. பெண்டாஸ்டிக்..."

"அன்னைக்குப் பாத்தீங்கன்னா.. வைகையாத்தில கடுகு போடக்கூட இடமிருக்காது.. அவ்வளவு கூட்டமிருக்கும்.."

காவ்யா கண்கள் பிரகாசிக்க சொல்லிக் கொண்டிருந்த போது இளங்கோ மணமகளின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.. அட்சதையை போட்டு மணமக்களை ஆசிர்வதித்து விட்டு.. அவர்கள் இறங்கி கோவிலை நோக்கி நடந்தார்கள்.. பாவனா அந்த ஓரமும்.. அர்ஜீன் இந்த ஓரமுமாக நடந்துவர.. காவ்யா நடுவில் நடந்தாள்..

அழகரை வணங்கிவிட்டு.. அம்பாளைத் தரிசனம் செய்தார்கள்.. கண்மூடிப் பக்திப் பரவசத்துடன் நின்ற காவ்யாவைப் பார்த்தபோது..

‘இவளுக்குள் இருக்கும் குணங்களெல்லாம் ஒட்டு மொத்த தமிழகப் பெண்களின் கலாச்சாரத்தின் வார்ப்பாக இருக்கிறது..’ என்று நினைத்துக் கொண்டான் அர்ஜீன்...

கோவிலின் முன்புறமிருந்த மண்டபத்தில் பந்திப்பாய் விரிக்கப்பட்டிருந்தது.. தயங்காமல் அர்ஜீன் அதில் அமர்ந்ததில் இளங்கோவைப் பெற்றவர்களின் முகங்கள் மலர்ந்து விட்டன...

“அசத்தறாண்டி...” காவ்யாவின் மயக்கத்தை அவள் கண்கள் சொல்லின.. வழக்கமாக இதை பாவனாதான் சொல்லுவாள்.. அன்று காவ்யா அதைச் சொன்னதில் அவளுக்கு கோபம் வந்துவிட்டது..

“இதென்ன புதுசா..?” பாவனா அலட்சியமாக தோள் குலுக்கினாள்...

சாப்பிட்டு முடித்தவர்கள் மலையேற வேண்டும் என்று சொன்னார்கள்...

“அங்கே என்ன இருக்கு..?” அர்ஜீன் விசாரித்தான்...

“பழமுதிர்சோலை இருக்கு..” என்றாள் காவ்யா...

“பழமுதிர்சோலை..? முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றாச்சே...”

“பரவாயில்லையே... இதைத் தெரிந்து வைச்சிருக்கீங்களே...”

காவ்யா போலி வியப்பைக் காட்ட.. அர்ஜீன் அவளுக்கு மட்டும் கேட்டும் படியாக..

“ஒரேயடியாய் கம்யூட்டரைக் கட்டிக்கிட்டு இருக்கலைன்னு இப்பவாவது ஒப்புக்கிறயா..?” என்று கேட்டான்...

அந்த ரகசியப் பேச்சில் காவ்யாவின் மனம் நனைந்தது... அவர்கள் வேனில் ஏறிக் கொண்டார்கள்.. வேன் மலைப் பாதையில் ஏற ஆரம்பித்தது...

“இங்கேதானே முருகன்.. வள்ளியைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டார்..?” அர்ஜீன் கேட்டான்...

“இது மட்டும் நினைப்பில் இருக்குமே...” மற்றவர்கள் அறியாத வண்ணம் காவ்யா முணுமுணுத்தாள்...

“தெரிஞ்சாச் சரி...” அவள் பாணியிலேயே பதிலுக்கு முணுமுணுத்தான் அர்ஜீன்...

வள்ளி.. முருகனைத் தரிசனம் செய்து விட்டு.. மீண்டும் மலையேறினார்கள்.. தீர்த்தத் தொட்டியிலிருந்த தீர்த்தத்தை மற்றவர்கள் தங்கள் மீது தெளித்துக் கொண்டிருக்க.. அதையறியாத அர்ஜீன்.. அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்...

காவ்யா தண்ணீரைத் தெளித்துக் கொள்ளும்படி ஜாடை காட்டினாள்.. அவனுக்கு அது புரியவில்லை..

புருவங்களை அவன் உயர்த்திய போது.. வேறு வழி தெரியாதவளாய் அவன் மீது காவ்யாவே தண்ணீர் தெளித்து விட்டாள்...

“வாட் இஸ் திஸ்..?” அர்ஜீன் வினவினான்...

“இது தீர்த்தம்.. புண்ணியமானது.. இதைத் தலையில் தெளித்துக்கனும்...” காவ்யா விளக்கம் சொன்னாள்...

“எனக்குத் தெரியாதே..”

“அதான்.. நானே தெளிச்சு விட்டுட்டேன்...”

அவர்கள் படியிறங்கியபோது.. காவ்யா தடுமாறி விழப் போனாள்.. அர்ஜீன் சட்டென்று கை கொடுத்து அவளைத் தாங்கிக் கொண்டான்.. முதன் முதலாக அவனது ஸ்பரிசத்தை உணர்ந்தவளுக்கு படபடவென்று இருந்தது.. வலிமையான அவன் கரங்களின் ரோமங்களின் மீது அவள் பார்வை பதிந்தது.. வெட்கத்துடன் பார்வையை விலக்கிக் கொண்டு அவளும் விலகிக் கொண்டாள்...

‘கடையில வேலை பாக்கிறவங்க பாத்திருப்-பாங்களே...’

பதட்டத்துடன் காவ்யாவின் விழிகள் சுழன்ற போது..

“அவங்கள்ளாம் அப்பவே போயிட்டாங்க அம்மணி.. அதனால உங்க லவ் சீன்.. யார் கண்ணிலயும் பட்டுவிடல.. நிம்மதியா வந்து சேரு..” என்று கடுகடுத்தாள் பாவனா...

“லவ் சீனா...?” காவ்யா ஆட்சேபித்தாள்...

“இல்லைன்னு வேசம் போட்டேன்னு வை... மகளே.. உன்னை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவேன்.. பார்வையிலேயே பசைபோட்டு ஒட்டிக்கிறதை உன்கிட்டத்தாண்டி நான் பாத்தேன்.. இதில இவளுக்கு அவன்மேல லவ் வரலியாம்...”

“சேச்சே... எதையெதையோ பேசாதே...”

“இவ பண்ற அழும்பைத் தாங்க முடியலையே.. இப்படின்னு தெரிஞ்சிருந்தா.. இந்த இளங்கோப் பயபுள்ள கல்யாணத்துக்கு வாரதைப் பத்தி யோசிச்சுக்கூடப் பாத்திருக்க மாட்டேனே...”

“விடுடி.. விடுடி...”

பாவனா விடவில்லை.. அவளைப் போன்ற வயதுப் பெண்ணை பக்கத்தில் வைத்துக் கொண்டு.. அர்ஜீன் காவ்யாவைப் பார்க்கும் ரகசியப் பார்வை சரியில்லை என்று புகார் சொன்னாள்...

“அதையேண்டி என்கிட்டச் சொல்ற...? அவன் கிட்டயே சொல்லு...” என்று காவ்யா கழன்று கொண்டாள்..

“அவன்கிட்டச் சொல்லிட்டாலும்...” பாவனா அலுத்துக் கொண்டாள்...

“முடியலைன்னா விட்டுத்தள்ளு.. எனக்கென்னவோ நீ அபாண்டமாய் பேசறேன்னு தோணுது பாவனா...”

“அபாண்டமாய் பேசறேனா..? நானா..? ஏண்டி.. அவன் உன்கிட்ட கடலை போடுவான்.. நீ அதைக் கண்டும் காணாம குளிர் காய்வ.. நான் மட்டும் உங்க ரெண்டு பேரையும் வேடிக்கை பாத்து வயிறெரியனுமா..?”

“தோ பாரு.. பாவனா.. அவன் என்னைப் பாத்தானா இல்லையான்னு எனக்குத் தெரியாது...”

“அடிப்பாவி..! உனக்கா தெரியாது..?”

“ஆமாம்.. எனக்குத்தான் தெரியாது.. அவன் பாத்தா நான் என்ன பண்ணுவேன்.. பதிலுக்கு நான் அவனைப் பாத்திருந்தா.. நீ ஏன்னு கேக்கறதில ஒரு நியாயம் இருக்கு...”

“நியாயத்தைப் பத்தியெல்லாம் நீ பேசாதே.. பதிலுக்கு நீ பாக்கவே இல்லையா...”

“இல்லைங்கறேனில்ல..”

காவ்யா முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்து.. பாவனாவை லபோதிபோவென்று அலற வைத்தாள்.. ஒரு வழியாக அவர்கள் அனைவரும் வேனுக்குள் அடைந்த போது.. பிற்பகலைத் தாண்டியிருந்தது.. எல்லோரையும் அவரவர் வீடுகளில் இறக்கி விட்ட வேன்.. கடைசியாக பாவனாவின் வீட்டை நோக்கி விரைந்தது...

காவ்யாவின் மனதில் மிட்டாயைத் தொலைத்து விட்ட சிறுமியின் ஏக்கம் எழுந்தது... காலையிலிருந்து அர்ஜீனின் கண் பார்வைக்குள் சுற்றிக் கொண்டிருந்தவள்..

அந்தப் பார்வை வட்டத்தை விட்டு விலகி வீட்டுக்குப் போக வேண்டும் என்பதில் அவளுக்குள் சோர்வு வந்தது...

கைவிரல்களைக் கோர்த்துப் பிரித்தபடி சோர்வுடன் அமர்ந்திருந்தவளைப் பார்த்தான் அர்ஜீன்.. அழகான ஓவியம் போல இருந்தாள்... அவளின் விரல்களை நீவி விட வேண்டும் போல மனதில் தோன்ற.. பாவனாவின் நினைவில் அதை அடக்கிக் கொண்டான்...

பாவனாதான் வேன் பாதை மாறிப் போவதை முதலில் கண்டு பிடித்தாள்..

“எங்க வீட்டுக்குப் போகிறவழி இது இல்லை சார்..”

“உங்க வீட்டுக்குப் போகலை...” நிதானமாகச் சொன்னான் அர்ஜீன்...

“வாட்...?” பாவனா புருவங்களை சுருக்க.. காவ்யா கேள்வியுடன் நிமிர்ந்து பார்த்தாள்...

“ஒரு கப் காப்பி சாப்பிட்டுட்டு போகலாம்...”

பாவனா அதை ஆட்சேபிக்கவில்லை.. காவ்யாதான் மறுத்தாள்...

“எனக்கு வீட்டுக்குப் போகனும் பாவனா..”

“காப்பி சாப்பிடலாம்ன்னு நான்தான் சொன்னேன்.. பாவனா சொல்லலை...”

“எனக்கு காப்பி வேணாம்...”

“எனக்கு வேணும்..”

“அப்ப நீங்க மட்டும் காப்பி சாப்பிடப் போங்க.. எங்களையும் சேர்த்து ஏன் கூப்பிடறிங்க..?”

“எங்களையும்ன்னு பாவனாவையும் கூட்டுச் சேர்க்காதே.. ஆல்ரெடி.. அவங்க காபி சாப்பிட வர ஒப்புக்கிட்டாங்க.. உனக்கு வேணாம்ன்னா நீ வேனில் இரு.. நாங்க காப்பி சாப்பிட்டுட்டு வர்றோம்...”

அவளைப் புறக்கணித்த அந்த வார்த்தைகளில் தனக்கான தனி இடம் பறிபோவதைப் போல உணர்ந்தாள் காவ்யா.. ரோசத்துடன் முகம் திருப்பிக் கொண்டவள் காபி சாப்பிட இறங்கவேயில்லை...

“வாடி..” பாவனா வற்புறுத்தினாள்...

“விடுங்க பாவனா.. வேண்டாம்ன்னா இங்கேயே இருக்கட்டும்.. இதுக்கெல்லாம் நாம ஒன்றும் பண்ண முடியாது.. நீங்க வாங்க.. டிரைவர்..! நீங்களும் வாங்க.. டிபன் காபி சாப்பிட்டுட்டு வரலாம்...”

காவ்யாவை அம்போவென்று விட்டு விட்டு.. அவர்கள் மூவரும் இறங்கிச் சென்று விட்டார்கள்.. காலையிலிருந்து விரித்திருந்த சிறகு அறுபட்டுப் போனதைப் போல உணர்ந்தாள் காவ்யா...

‘நான் அவனுக்கு முக்கியமில்லையா..? நானில்லாம பாவனாவுடன் காபி டிபன் மொக்கப் போவானா..?’ அவளால் தாள முடியவில்லை...

முன் சீட்டின் கம்பியின் மீது தலையைச் சாய்த்து கவிழ்ந்திருந்தவளின் தலைமுடியை விரல் கோதும் ஸ்பரிச உணர்வில் அதிர்ந்து நிமிர்ந்தாள் அவள்...

அவளுக்கு வெகு அருகில்.. முடி கோதியபடி நின்றிருந்தான் அர்ஜீன்.. காவ்யாவின் விழிகள் விரிந்தன..

'இவன் மட்டும் எப்படி தனியாய் வந்தான்..? பாவனாவும்.. டிரைவரும் எங்கே..?' அவள் கண்கள் துழாவின..

"முட்டாள்..! உன்னை விட்டுட்டு வேறொருத்தி கூடக் காப்பி சாப்பிட நான் போவேனா..? எனக்கு உன்கூடப் பேசனும் காவ்யா.. அதுக்கு தனிமை வேணும்.. அதான்.. அவங்க இரண்டு பேருடன் டிபன் சாப்பிடப் போவதைப் போல உள்ளே போனேன்.. தெரியாமல் கை பட்டதைப் போல சட்னியை சட்டை மேலே தீற்றிக்கிட்டேன்.. வாஷ் ரூம் போய் வாஷ் பண்ணிட்டு வந்துடறேன்னு சொல்லிட்டு.. நான் மட்டும் வந்திருக்கேன்..." அர்ஜீனின் கண்களில் காதல் வழிந்தது...

"ஆனா.. அது எதுக்கு..?" காவ்யா திணறிப் போனாள்..

"எதுக்கா..? ஐ லவ் யு.. அதுக்காகத்தான்..."

அர்ஜீனின் கரங்கள் முரட்டுத்தனத்துடன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டன. அவள் முகம் நோக்கிக் குனிந்தவன் அவள் இதழ்களில் முத்தமிட்டான்..

- இரண்டாம் பாகத்தில் தொடரும் -


லட்சுமி பாலாஜி பதிப்பகம்